
# வித்தியா தீபம்

# විද්‍යා දීපම්

CELEBRATING 25 Years



Vavuniya National College of Education

2017

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Anushan
Primary B
V.N.C.O.E

# வித்தியா தீபம்

Vavuniya National College of Education

Be Explorer for Competency

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி,
பூந்தோட்டம்,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஞ்சிகை விபர அட்டவணை


| | |
|---|---|
| சஞ்சிகை | : வித்தியா தீபம் |
| வெளியீடு | : வித்தியா தீபம், மலர்க்குழு-2017<br>வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, |
| ஆலோசனையும் வழிகாட்டலும் | : திரு.கு.சிதம்பரநாதன் - பீடாதிபதி |
| மலர்க்குழு | : 1.திரு.ந.பார்த்தீபன்<br>2.திரு.வே.ஞானசம்பந்தன்<br>3.திரு.பொ.சத்தியநாதன்<br>4.திரு.மி.சூசைதாசன்<br>5.திருமதி.ஜெ.பத்மாவதி<br>6.திரு.எஸ்.பற்றிக் ஜெராட்<br>7.திருமதி.நி.அரவிந்தன்<br>8.திருமதி.ஹ.சுபிதா |
| பதிப்பு ஆண்டு | : 2017 |
| பக்கஅளவு | : B5 |
| பக்கங்கள் | : xxviii+123 |
| எண்ணிக்கை | : 600 பிரதிகள் |
| அச்சுப் பதிப்பு | : அகரம் பிறிண்டேர்ஸ், வவுனியா.<br>024 2223772 |

| | |
|---|---|
| Author | : Vidya Deepam |
| Address | : Vidya Deepam Magazine Committee - 2017<br>Vavuniya National College of Education |
| Guided by | : Mr.K.Sithamparanathan - President |
| Edition | : 2017 |
| Size | : B5 |
| No of Page | : xxviii+123 |
| No of Copies | : 600 |
| Printers | : Akaram Printers, Vavuniya. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 01. மன அழுத்த முகாமைத்துவம் | 01 |
| 02. வினைத்திறன் மிகு வினவுதலும் வகுப்பறை மட்டக் கலந்துரையாடலும் | 06 |
| 03. சகபாடி மதிப்பீடும் வாண்மை விருத்தியும் | 11 |
| 04. மேன்மை நோக்கிய முகாமைத்துவம் | 14 |
| 05. அரங்கக்கலைகளின் செயற்பாடு | 16 |
| 06. இராவண காவியம் | 18 |
| 07. முகாமைத்துவப் பரிச்சயம் | 20 |
| 08. தேகாரோக்கியமாக வாழ சுற்றாடலைப் பாதுகாப்போம் | 22 |
| 09. பேர்டன் ரஸ்ஸலின் (Bertrand Russell - 1872 - 1970) கல்வி பற்றிய கோட்பாடு | 25 |
| 10. இசையும் வகுப்பறையில் அழகியலுணர்வும் | 29 |
| 11. நன்னூலார் நவிலும் நல்லாசிரியர் | 33 |
| 12. கல்வியின் புதிய போக்கு | 38 |
| 13. மொழியியலும் இலக்கணமும் | 40 |
| 14. மாணவர் முன்னேற்ற அறிக்கை | 42 |
| 15. சுய மதிப்பீடும் வாண்மைத்துவ விருத்தியும் | 47 |
| 16. இலக்குகளும் சுயமுகாமைத்துவமும் | 50 |
| 17. திருமுறைப் பாடல்களுக்குப் பொருள் காணும் உத்திகளைக் கற்பிப்பது எப்படி? | 54 |
| 18. இயற்கைவாதமும், கற்பித்தல் முறையும் | 59 |
| 19. இந்து மதமும் மனித மேம்பாடும் | |
| 20. ஆசிரியரும் கற்றல் கற்பித்தல் முறைகளும் | 65 |
| 21. இன்றைய வகுப்பறைகளில் கற்பித்தல் நுட்பமுறைகளின் முக்கியத்துவம் | 67 |
| 22. செய்து காட்டல் முறை -ஓர் அறிமுகம்- | 69 |
| 23. கற்றல் கற்பித்தலில் வினைத்திறன் அடைய | 71 |
| 24. பாடசாலைகளின் பண்புசார் விருத்தி | 72 |
| 25. கணித பாடம் கற்பித்தலின் அவசியம் | 73 |
| 26. ஆசிரியர் | 74 |
| 27. புத்தகம் | 75 |
| 28. கல்லூரிப்பயணம் | 76 |
| 29. தாங்கும் தெய்வம் | 77 |
| 30. கல்வியியல் அணுகுமுறைகள் | 78 |
| 31. ஆசிரியரும் கட்டுரை வகைச் சோதனையும் | 80 |
| 32. பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டம் | 81 |
| 33. உள இயக்கம் சார் ஆட்சி கல்வி இலக்குகளின் பகுப்பியல் | 83 |
| 34. ஆசிரியர் ஆளுமையும் அளவீட்டின் முக்கியத்துவமும் | 84 |
| 35. ஒழுக்க வீழ்ச்சி நம்பிக்கையின் பலவீனத்தையே காட்டும் | 85 |
| 36. அல்லாஹ்வின் குடும்பத்துடன் ஒன்றிணைந்திருப்போம் | 86 |
| 37. பாடசாலையில் கல்வி வழிகாட்டல் ஆலோசனையின் வளர்ச்சி | 88 |
| 38. ஆசிரியத்துவத்தின் வெற்றிக்கு கல்வி வழிகாட்டல் ஆலோசனைகளின் பங்களிப்பு | 90 |
| 39. கல்வியும் விழுமியங்களும் | 92 |
| 40. ஜோன் டூயியும் தற்காலக் கல்வி முறைகளும் | 93 |
| 41. Google | 94 |
| 42. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் தகவல் தொழில்நுட்பம் | 95 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. மனிதனும் சமூகமும் 97
44. கல்வியும் சமூக நகர்வும் 99
45. சமூகமயமாக்கலின் குடும்பத்தின் பங்கு 101
46. தனிநபர் கணினி என்பது என்ன? 103
47. நவீன தொடர்பியலும் ஊடகங்களும் 104
48. வகுப்பறை முகாமைத்துவ உளவியல் நுட்பம் 106
49. விளையாட்டு உளவியல் 107
50. உள்மனதும் பழக்கவழக்கங்களும் 109
51. நீரின் சுழற்சி 110
52. அன்றாட வாழ்வில் உளவளத்துணை 112
53. மதிப்பீடு -ஒரு சுருக்க அறிமுகம்- 115
54. இலங்கைக் கல்வி வரலாறு -சுருக்க அறிமுகம்- 116
55. ஆசிரியரும் கணினியும் 118
56. ஜீன் பியாஜேயின் அறிவு வளர்ச்சிக் கொள்கையும் வகுப்பறை பிரயோகமும் 120
57. A See through on the Performance of Candidates Obtained at the G.C.E O/L, A/L Examinations at Provincial and District Level. 121

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக்கீதம்

**இராகம் : ஹம்சத்வனி**
**தாளம் : சதுஸ்ரஏகம்**

வாழிய வாழியவே
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
வாழிய வாழியவே
பூந்தோட்டமாகிப் புகழ்பெறு பதியில்
சேர்ந்தமைந் திருக்கும் சீரிய தாய் நீ
(வாழிய...)
அடங்காப் பற்றாம் அன்னை மடியில்
இடங்கொள் கல்லூரி எங்கள் உயிராம்
திடங்கொள் தேடல் தேவைகள் மேவி
இடர்தனை வென்று எழுந்திடு வன்னியில்
மடமை மாய்த்து மாண்புறு வழியில்
கடமை கலந்த கண்ணியங் காத்து
(வாழிய...)
இந்து கிறிஸ்தவ சமயக் கல்வியும்
இனிதே உடல்நல ஒழுக்க நெறியும்
விந்தை நிறைவிவ சாயம் விஞ்ஞானம்
விரும்புறு மனையியல் ஆரம்பக்கல்வியும்
சிந்தை சிறப்புறு தொழில்நுட்பம் அழகியல்
செந்தமிழ் சிங்களம் ஆங்கில விருத்தியில்
(வாழிய...)
ஒழுக்கம் நிறைஉயர் ஒற்றுமைச் சமூகமே
விழுப்பம் விளைத்து வேதனை விலக்கும்
பயிற்றுநர் பயிலுநர் சேவகர் பரஸ்பரம்
முயற்சியில் மூழ்கி உழைப்புட னுயர்ந்து
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
அவனியில் ஆளுமை ஆக்க விருத்தியில்
(வாழிய...)

**இயற்றியவர் : தமிழ்மணி அகளங்கன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from the Chief Commissioner Teacher Education

I am really honoured and privilege in giving this message to "Vidya Deepam - 2017", of this magazine which is successfully entered her 25th jubilee year.

Learning to be a teacher is a long journey with full of excitement and challenge. good teachers are one who contributes towards the formation of the children by the inculcating values along with information and experience.

As the Chief Commissioner of Teacher Education, greeting former presidents, vice presidents, lectures, non academic staff and student teacher who have worked for a long time for quality teacher education and presently who have tendere their excellent and commitment service to the Vavuniya National College of Educations. I have learned that Vavuniya NCoE shown her valuable contribution to the District and the Nation.

I wish to express my greetings to Mr.K.Sithamparanathan, (President), and vice presidents, lecturer coordinators, teacher Educators and non academic staff and student teachers for effective contribution to produce multi personality teachers for the nation.

I pray to the almighty god for working education community who has the superior aim of being any change should be brought through education.

*K.M.H.Bandara*
*Chief Commissioner (Teacher Education)*
*Ministry of Education,*
*Issurupaya, Battaramulla.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Chief Commissioner



K.M.H.Bandara
Chief Commissioner (Teacher Education)
Ministry of Education,
Issurupaya, Battaramulla.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பீடாதிபதி



## திரு.குமாரசாமி சிதம்பரநாதன்

B.Sc (University of Jaffna), PGDE - Merit (University of Jaffna),
M.Ed (NIE, Maharagama), M.Ed in Science (University of Malaya),
PGDM- Merit (NIE, Maharagama),
Diploma in Human Rights (Human Rights, Colombo)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பீடாதிபதி அவர்களின் வாழ்த்துச் செய்தி

என் தாயை நான் வாழ்த்துகிறேன். இருபத்தைந்தாவது ஆண்டிலும் அழகும், பொலிவும், ஆற்றலும் மிகுந்து விளங்கும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஓங்கு புகழோடு விருட்சம் போல வளர்ந்தும் பரந்தும் நற்செயல்கள் செய்தும் சமூகத்திற்கு ஆரோக்கியமான முன்னுதாரணமாகவும் மிளிர வேண்டும்.

நாட்டின் கல்விக்கு எது தேவையோ நாட்டின் கல்விப்பூட்கைகள் எவ்வாறானவையோ அதனைப் புரிந்து எதிர்காலக் கல்வி வளர்ச்சியின் தேவைக்காய் இது பாடுபடல் வேண்டும். நாட்டின் கல்விப்போக்கு பல்வேறு விடயங்களில் வீழ்ச்சியடைவதாக பலதரப்பிலிருந்தும் தகவல்கள் வருகின்றபோதும் அவற்றை நேரான போக்கில் வளரச் செய்வதற்காய் இக்கல்லூரியின் கல்விசார் உத்தியோகத்தர்கள் மற்றும் கல்விசாராஉத்தியோகத்தர்கள் பாடுபடுவது வரவேற்கத்தக்கது. நேரத்தை உணர்த்தி, பண்பாட்டு அம்சங்களை உள்வாங்கி, நேர்த்தியான கற்றல் கற்பித்தல் செயன்முறைகளைக் கடைப்பிடித்து, கலாசார நிகழ்வுகளுக்கு போதிய சந்தர்ப்பம் வழங்கி மாணவ ஆசிரியர்களின் தனிமனித தேவைகளை உள்வாங்கி கல்லூரியின் வளர்ச்சிப் போக்கு அமைவது நோக்கற்பாலது. மனம், வாக்கு, காயம் மூன்றினை நோக்கியும் கல்லூரிச் செயற்பாடுகள் நடைபெறுவது கவனிக்க வேண்டியது. எல்லா பயிலுநர்களையும் சம நோக்கோடு பார்ப்பதையும் தராதரம் பாராதுஎல்லோர் பணியிலும் கவனம் செலுத்துவதும் இக்கல்லூரியின் பண்பாகும்.

பாடநேரம் முழுவதையும் அர்த்தம் உள்ளவகையில் பயனுறுதி மிக்கதாக மாற்றுவது கல்லூரியின் செயல்சார் இலக்காகும். சமூக விழிப்புணர்வு நோக்கிய செயல்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. மாணவர் உரிமைகளில் போதிய விழிப்புணர்வோடு செயற்படுவது, ஒவ்வொரு ஆசிரிய பயிலுநர்களும் கல்வியாளர்களும் உயர்மட்ட முன்மாதிரிகளாக இருப்பது முக்கியம் என்பது உணரப்பட்டிருப்பது நல்ல அம்சமாகும். ஒழுக்க விழுமியங்களுக்காக எல்லோரும் கைகோர்க்கிறார்கள். தூரநோக்கும் ஆளுமை விருத்தியும் முக்கியத்துவம் பெறுகிறது.

வீண் பேச்சுக்களைத் தவிர்த்து வகுப்பறைகள் இலட்சிய தன்மை உள்ளதாக அமைவது வலியுறுத்தப்படுகிறது. சிறந்த அறிவும் திறன்களும் உயரிய மனப்பாங்குகளும் மிளிர வேண்டும் என்பது எமது கல்லூரித்தாயின் அவா.

மேற்சொல்லப்பட்ட ஆராய்ந்தெடுத்த அணிகலன்களுடையதாய் என்னுடன், எம்முடன் இருக்கும் போது எல்லோருக்கும் நல்வாழ்வு தந்தாள். அவை நீங்கும் போது என்னுயிர்க்குத் தாழ்வைத்தருகிறாள். உண்மை அதுவேயாகும்.

"வாழ்தல் உயிர்க்குஅன்னள் ஆயிழை சாதல்
அதற்குஅன்னள் நீங்கும் இடத்து"

என்ற பொய்யாமொழிப் புலவரின் சிந்தனையை நினைவு கூர்ந்து என் தாயை மீண்டும் வாழ்த்துகின்றேன்.

**திரு.கு.சிதம்பரநாதன்**
**பீடாதிபதி**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உபபீடாதிபதி (நிதி நிர்வாகம்) அவர்களின் வாழ்த்துச்செய்தி

இருபத்தைந்து ஆண்டுகால வரலாற்றை பதிவுசெய்து கொண்டிருக்கும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் வெள்ளிவிழா வித்தியாதீபம் சஞ்சிகைக்கு வாழ்த்துச்செய்திகளை எழுதுவதில் அதன் உறுப்பினர் என்றவகையில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆசிரிய கல்வி வழங்கி, ஆசிரியர்களை உருவாக்கும் நிறுவனம் என்ற வகையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் சேவை தேசிய மட்டத்தில் விரிந்த பரப்புடையதாகும். நாடெங்கிலும் இங்கு கற்றவர்கள் ஆசிரியர்களாதல், மேலும் பல்வேறு கல்விச் சேவைகளில் இணைந்து பணியாற்றுபவர்களாகவும் உள்ளனர். நாட்டின் நிலப்பரப்பில் பெரும்பாலான இடங்களில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் உருவாக்கங்கள் கல்விக்காக தம்மை அர்பணித்துக் கால்பதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது எம்மைப் பெருமை கொள்ள வைக்கும் மற்றுமொரு செய்தியாகும்.

எத்தனையோ பெற்றோர்கள், தமது பிள்ளைகள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்க வேண்டும் எனவும் எத்தனையோ பாடசாலை அதிபர்கள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்ற மாணவ ஆசிரியர்கள் தமது பாடசாலைக்கு வந்து கடமையாற்ற வேண்டும் என தெரிவிக்கும் விருப்பங்கள், எமது பிரதிபலிப்பை மேலும் ஆழமாக்குகின்றன.

அவ்வப்போது சில விமர்சனங்கள் எழுந்தபோதும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, கல்விசார், கல்விசாரா பணியாளர்கள், தமது உத்வேகமூட்டும் இலக்குகளுடன் கடமையில், பொறுப்பில் அக்கறைபோட்டு இருப்பது வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு புகழ் சேர்க்கும் மற்றுமொரு விடயமாகும்.

மற்றுமொரு கோணத்தில் பார்க்கும் போது சக்திமிகு, அர்பணிப்புமிகு, ஆற்றல் மிகுதலைமைத்துவம் வவுனியா தேசியகல்வியியற் கல்லூரியின் நிலைத்திருப்பிற்கு ஓர் காரணமாக அமைகிறது எனலாம்.

உயரிய தொலைநோக்குடன் ஒன்றிணைந்த பணி இலக்கோடு மிளிரும் எமது வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கௌரவமும், புகழும் மேலோங்க என்னோடு ஒன்றிணைந்து உழைக்க திடசங்கற்பம் கொள்ளும் ஒரு நாளாக எமது கல்லூரித்தினம் அமைய இறைவனை பிரார்த்திக்கின்றேன்.


எமது அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய பீடாதிபதி திரு.கு.சிதம்பரநாதன் அவர்களின் வழிகாட்டலின் கீழ், வெளிவரும் வித்தியாதீபத்திற்கும், அதனை வெளிக்கொணருவதில் பாடுபட்ட அனைவருக்கும் என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.க.சுவர்ணராஜா**

**உபபீடாதிபதி**

**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உபபீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்) அவர்களின் வாழ்த்துச்செய்தி

இலங்கைத் தமிழாசிரியர் கல்விப் புலத்தில் கணிசமான ஆசிரியர்களை உருவாக்கி இன்னும் அதன் பணியைச் செவ்வனே செய்ய முனைந்து கொண்டிருக்கும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதியாக வாழ்த்துச்செய்தியினை வழங்குவதையிட்டு பெருமையடைகின்றேன்.

கல்வித் தலைமைத்துவங்களால் சமூக நீதியை ஏற்படுத்த வேண்டுமென்ற சிந்தனை முகிழ்விற்கு செயல்வடிவம் கொடுப்பதில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியும் ஓர் எடுத்துக்காட்டு. தரமான கல்விக்கு தரமான ஆசிரியர் என்ற பதம் இன்று கல்விப்புலத்திலுள்ள எல்லோராலும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. அதற்கான முன்னெடுப்புக்கள் பேராசிரியர்கள் மட்டத்திலிருந்து ஆசிரியர்கள் வரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தரமான ஆசிரியர் என்பது அவரது தொழில் இலக்கை எய்துவதற்காக அவரிடம் காணப்படும் உறுதிப்பாடாகும். ஆனால் தரமான ஆசிரியர் என்றால் என்ன என்பது பற்றிய முறையான தேடுதல்கள் மேலெழுகின்றது. அண்மைய காலங்களில் நாடுகளின் கல்வித்தரம் பற்றி பேசப்படுகின்ற வேளைகளில் எல்லாம் ஆசிரியர் கல்வி பற்றியும் கூடவே பேசப்பட்டு வருகின்றது. நாடுகளின் கல்வியின் தரம் விருத்தி செய்யப்படுவதற்கும் கல்வி முறைகளில் ஏற்படுத்தப்படும் சீர்திருத்தங்களும் சரியான முறையில் நடைமுறைப்படுவதற்கும் அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் விளைவுகளை முழுமையாக அடைவதற்கும் ஆசிரியர்கல்வி, ஆசிரியர்களின் தொழில்வாண்மை தேவைகளுக்கேற்ப விருத்தி செய்யப்படவேண்டும் என கருத்துக்கள் கூறப்படுகின்றன.

மாற்றங்கள் என்பது சாதாரணமாக ஏற்பட்டுவரும் மாற்றங்களின் தேவையை உணர்ந்து செயற்படுவது ஆசிரியரின் முன்னுள்ள பாரிய சவாலாகும். ஆசிரியர்களின் பணி மிகவும் பயனுள்ளது. அறிவியல் நமது வாழ்கைத் தரத்தை உயர்த்தியுள்ளது போல் கல்வியின் தரத்தையும் பண்புத்தரத்தையும் உயர்த்தவேண்டும். ஆனால் கல்வியின் தரம் பற்றிய விமர்சனங்கள் மாறுபட்ட கருத்தைக் கொண்டதாகவே காணப்படுகின்றது. கல்வியில் அறிவியலுக்கு மட்டுமே முக்கியத்துவம் வழங்கப்படும்போது தரம் பற்றிய சிந்தனையும் செயல்வடிவமும் முன்னுரிமையற்றுப் போகின்றது.

இந்நிலையில் தரமான ஆசிரியர்களை உருவாக்கி சமூகத்திற்கு வழங்கி வரும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி 1993ம் ஆண்டு ஐப்பசி மாதம் 18ம் திகதி கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இலங்கையில் இன்று 19 தேசிய கல்வியியற் கல்லூரிகள் காணப்படுகின்ற நிலையில் அவற்றில் ஆறு தமிழ் மொழி மூலமான தேசிய கல்வியியற் கல்லூரிகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்றாக சிறப்பான அடையாளங்களுடன் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டு மொழிமூலமான மாணவர்களையும் சகல இனத்தவர்களையும், சகல மதத்தவர்களையும் தேசிய ரீதியாக உள்வாங்கும் ஒரே ஒரு கல்லூரியாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி காணப்படுகின்றமை சிறப்பானதாகும். இக்கல்லூரியின் 24 வருடகால வரலாற்றில் மூன்று பயிற்சிநெறிகளுடன் தமிழ் சிங்கள, முஸ்லீம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனமாணவர்களுடன் ஆரம்பித்து இதுவரையில் ஒன்பது பயிற்சி நெறிகளை கொண்டிருக்கும் கல்லூரியாக அமைகின்றது.

தற்போது எமது கல்வியியற் கல்லூரியில் 30 நிரந்தர விரிவுரையாளர்களும் 01 இணைப்பு விரிவுரையாளரும் 10 வருகைதரு விரிவுரையாளர்களும் கடமையாற்று கின்றனர். எனினும் இங்கு ஆசிரிய கல்வியியலாளர்களுக்கு நீண்டகாலமாக நிலவிவந்த பற்றாக்குறை இதுவரை நிறைவு செய்யப்படாத போதிலும், எமது ஆசிரிய கல்வியியலாளர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையின் மூலம் திருப்திநிலையில் உள்ளமையை குறிப்பிட்டேயாக வேண்டும். உண்மையிலேயே இந்த ஆசிரிய கல்வியியலாளர்களும், வருகைதரு விரிவுரையாளர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

கல்லூரி எதிர்நோக்கிய சவால்களில் கல்விசாரா பணியாளர்களும் பங்கெடுத்துக் கொண்டமை குறிப்பிடக் கூடியதாகும். முன்புபோலவே கல்விசாரா பணியாளரின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக நிர்வாகக் காரியாலயத்தில் பதிவாளருடன் 10 முகாமைத்துவ உதவியாளர்கள் பணியாற்ற வேண்டிய நிலையில் இரு முகாமைத்துவ உதவியாளர் மட்டுமே பணியாற்றிவருகிறனர். பதிவாளர், இரு முகாமைத்துவ உதவியாளருடன் ஏனைய ஆய்வுகூட உதவியாளரும் பாடசாலைப் பணியாளர்களும் இணைந்து முழுப்பணிகளையும் உரிய காலத்தில் செய்துமுடிக்கின்றமை பாராட்டுக்குரியதாகும்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் 25வது வருட ஆரம்பகாலப்பயணத்தில் அடைந்து கொண்ட முன்னேற்றகரமான செயலாற்றுகைகளும் எதிர் நோக்கிய சவால்களும் பல. இவற்றையெல்லாம் வெற்றிகொண்டு தனது அடையாளத்தை தக்கவைத்துக்கொண்டிருக்கும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்த முன்னாள் பீடாதிபதிகள் திரு.செ.அழகரெத்தினம், திரு.க.பேர்ணாட் ஆகியோரையும் கடந்தகாலங்களில் கடமையாற்றிய கல்விசார்பணியாளர்களையும், கல்விசாராப்பணியாளர்களையும், தற்போதைய பீடாதிபதி திரு.கு.சிதம்பரநாதன் அவர்களையும் அவரோடிணைந்து பணியாற்றும் கல்விசார், கல்விசாரா பணியாளர்களையும், மாணவ ஆசிரியர்களையும் இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்தி நிற்கின்றேன்.

இவ்வாண்டு (2017) பெப்ரவரி மாதம் 09 ம் திகதியுடன் எனது ஆசிரியர் கல்வியியலாளர் சேவை 16 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது. இந்த 16 வருட காலம் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராக, இணைப்பாளராக, உபபீடாதிபதியாக, பணியாற்றக் கிடைத்தமை மனநிறைவையும் மனமகிழ்ச்சியையும் தருகின்றது. வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் வாழ்க்கைப் பயணத்தில் என்னோடு இணைந்து பணியாற்றிய, பணியாற்றி வருகின்ற அனைத்து நல்ல உள்ளங்களையும் நன்றியோடு வாழ்த்தி எதிர்கால பயணத்திலும் இணைந்து கொள்ளுமாறு அன்புடன் அழைத்து நிற்கிறேன்.

அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது,
அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கிறது, ஆனால்
அதிகம் செயற்படுபவனையே கைகூப்பித் தொழுகிறது.

நன்றி

**சு.பரமானந்தம்,**
**உப பீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்)**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உபபீடாதிபதி (தொடருறு கல்வி) அவர்களின் வாழ்த்துச் செய்தி

நிறுவனங்கள் வினைத்திறனுடன் இயங்க அடிப்படையான உபாயம் இயைபாக்கம் (Coordination) எனவும் இந்த இயைபாக்கம் மேலிருந்து கீழாகவன்றி நிறுவனத்தின் கிடையான பிரிவுகளுக்கிடையே காணப்படவேண்டும் எனவும் போலற் (Follette) என்ற கல்வியியலாளர் குறிப்பிடுகின்றார். நிருவாக நடைமுறைகளில் மனித உறவுகள் முக்கியமானவை எனவும் முகாமையாளர்கள் உற்பத்திப்பொருள், அதன் தராதரம் என்பவற்றில் மிதமிஞ்சிய அக்கறை செலுத்துவதானால் அதனை விட மிஞ்சிய அக்கறை ஊழியர்களின் வேலையின் சமூக , மனித அம்சங்களில் செலுத்த வேண்டும் எனவும் இவர் வலியுறுத்துகின்றார். மேலும் பணியாளர்களிடையே இயைபாக்கம் பணியாளர் பல்வகைமைக்கு அப்பால் "தோழமை" உணர்வுடன் இயைபாக்கம் செய்யப்படவேண்டும் என்பது முக்கியமானதாகும்.

இந்த வகையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியும் ஒரு நிறுவனம் என்றவகையில் தனக்கே உரித்தான வகையில் வளர்ச்சி பெற்று வவுனியா மாவட்டத்திற்கு மட்டுமல்லாது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தனது சேவையை வழங்கி வருகின்றது. எமது கல்லூரியின் வெற்றிக்கு அடித்தளமாக அமைந்த காரணிகளுள் ஒன்று எமது பணியாளர்களிடையேயான தோழமை உணர்வுடனான இயைபாக்கமாகும்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரித் தாய் தனது இருபத்தைந்தாவது அகவையில் காலடிவைக்கிறாள் என்பது நாம் எல்லோரும் பெருமையடையக்கூடிய ஒரு வரலாற்றுச்சாதனையாகும். இந்த இருபத்தைந்து ஆண்டுகளில் சுமார் பதினேழு வருடங்களாள இக்கல்லூரித்தாய்க்கு சேவை புரிய வாய்ப்புக் கிடைத்தமையையிட்டு நானும் ஒருவனாக பெருமிதம் கொள்கின்றேன்.

தனது வரலாற்றுக் காலத்தில் பல சோதனைகளையும் தாண்டி சாதனைகள் படைத்து நிற்கும் இக்கல்லூரியின் உயர்ச்சிக்கு காரணமாக அமைந்தது அதன் பணியாளர்களின் கூட்டுணர்வுடனான உழைப்பு எனின் அது மிகையாகாது. கல்லூரியின் கல்விசார் பணியாளர்கள் தமது தொழில்வாண்மை மற்றும் சமூகப்பொறுப்பு மற்றும் கடமை என்பவற்றுக்கு அப்பால் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியுள்ளமையே இலங்கையின் ஏனைய கல்விக்கல்லூரிகளிலிருந்து வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி தனித்துவமான தகைமை பெற்று நிமிர்ந்து நிற்கின்றது.

கல்லூரியின் வளர்ச்சியில் நிறைந்த பங்களிப்பினை வழங்கிய பீடாதிபதிகள் பலரை இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூர்வது சாலப்பொருத்தமானதாகும் கல்லூரித்தாயின் செவிலித்தாயாக திரு.செ. அழகரத்தினம் அவர்கள் வளர்தெடுக்க தொடர்ந்து பணியாற்றிய திரு.கா.பேர்ணாட் அவர்கள் பல சவால்களுக்கு மத்தியிலும் மிளிரச் செய்தார். தொடர்ந்து தற்போது பீடாதிபதியாக பணியாற்றிவரும் திரு.கு.சிதம்பரநாதன் அவர்கள் கல்லூரித்தாயை தன் இயல்பான நட்புணர்வான எளிமையான ஆளுமை மூலம் வளப்படுத்திக்கொண்டுள்ளார் இவர்களிடம் காணப்பட்ட பல்வகை ஆளுமைகள் கல்லூரியின் பல்வகை வளர்ச்சியை உறுதிப்படுத்தியதோடு ஆசிரியகல்வியியலாளர்களையும் விருத்தியடையச் செய்தன என்பதை எவரும் மறுக்க முடியாது.

இன்றைய ஆசிரியர்கள் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றத் தயங்குகின்றார்கள் எனவும் ஆசிரியர்கள் பின்தங்கிய பிரதேசப் பிள்ளைகளின் கல்வியுரிமையை பறிக்கின்றார்கள் என்றும். "வசதியான பாடசாலை" தேடி ஓடி வேலைக்கு ஆள் தேடுவதைவிடுத்து ஆளுக்கு வேலை தேடுகின்றார்கள் என்றும்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பரவலாக குரல்கள் ஒலிக்கின்றன. அவ்வாறான ஆசிரியர்களுக்கெல்லாம் மாதிரிகளாக (Models) செயற்பட்டு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை என்று பல மாவட்டங்களில் இருந்தும் கல்லூரித்தாய்க்கு தொடர்ந்து சேவையாற்றும் ஆசிரிய கல்வியியலாளர்கள் இன்றும் எமது கல்லூரியில் ஒற்றுமையுடன் பணியாற்றுகின்றார்கள். அவர்களை கல்லூரித்தாய் மனமுவந்து என்றும் ஆசிர்வதிப்பாள் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. வார இறுதி நாட்களில் மட்டும் தமது குடும்பத்தவர்களுடன் இணைந்து கொண்டு வார நாட்களில் நெஞ்சில் உறவுகளைச் சுமந்து கொண்டு கனத்த இதயங்களுடன் பணியாற்றும் அவர்களது சேவையை பெருந்தன்மையை விதிகளுக்கப்பால், சட்டங்களுக்கப்பால் எவரும் கண்டு கொள்வதில்லை என்பது ஒரு துரதிஷ்டமான நிலை என்றே எண்ணத் தோன்றுகின்றது. எனினும் மானிடர்களுக்கப்பால் உள்ள கடவுளின் சக்தி அவர்களை அரவணைக்கும்.

வீதியில் உள்ள உராய்வு எவ்வாறு வாகனமொன்று பாதையில் உறுதியாக நகர்வதற்கு அவசியமோ அவ்வாறே சிறிய சிறிய முரண்பாடுகள் நிறுவனச் செயற்பாடுகளின் உறுதியான வளர்ச்சிக்கு அவசியமானவையாகும். எச்சிறிய முரண்பாடும் பெரியதாகின் அது நிறுவனத்தை அழித்து விடும். அந்த வகையில் சிறிய முரண்பாடுகளை பெரிதாக்கிவிடாது தமது உளவளத்தின் உதவியுடனும் பெருந்தன்மையுடனும் சகித்தும் பொறுத்தும் சேவையாற்றி கல்லூரித்தாயை வெள்ளிவிழாக்காண அழைத்திருக்கும் கல்விசார்பணியாளர்களையும் பதிவாளர் உள்ளிட்ட கல்விசாராப்பணியாளர்களையும் வாழ்த்துவதில் உபபீடாதிபதி என்ற வகையில் மனமகிழ்வடைகின்றேன்.

இந்த வளர்ச்சியின் ஒரு பதிவாக வெளிவரும் "வித்தியாதீபம்" இருபத்தைந்தாவது ஆண்டின் தொடக்கத்தில் புதிய பிரவாகத்துடன் ஒளிர்வதையிட்டு பேருவகை அடைவதுடன். அதன் இதழாசிரியர் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ந. பார்த்தீபன் உள்ளிட்ட மலர்க்குழுவினர்க்கும் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

நன்றி

**திரு.தி.ஜெயகாண்டீபன்**
**உபபீடாதிபதி**
**தொடருறுகல்வி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஓய்வுநிலைப் பீடாதிபதி திரு.செ.அழகரெத்தினம் அவர்களின் வாழ்த்துச்செய்தி

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி எனது கல்விப்புல வாழ்வின் அதிமுக்கிய உயிரோட்ட அம்சமாக அமைந்துள்ளது. ஏறத்தாழ பத்து ஆண்டுகள் அங்கு பணிபுரியும் வசதி வாய்ப்புக்களையும், நல்ல கல்வி உள்ளங்களுடன் உறவாடும் உன்னத சந்தர்ப்பங்களையும் இக்கல்லூரி எனக்கு அளித்ததில் வியப்பேதுமில்லை. இக்கல்லூரியில் கடமையாற்றிய காலம் இன்றும் என்றும் என்மனதில் பசுமரத்தாணி போல் பதிந்து பசுமைநிறை நினைவுகளை நெஞ்சில் நிரப்பி நிற்கும். கல்லூரியின் வெற்றிவிழா இவ்வருடத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும் வேளையில் எனது அகநிறை ஆசிகளையும் அளிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னருள்ள காலச்சூழலை இன்று என் கண்முன் கொணர்ந்து சற்று மீட்டுப்பார்க்கின்றேன். அரைகுறை கட்டிடத் தொகுதிகளுடன், அடிப்படை வசதி வளங்கள் பல அற்ற நிலையில், பெரும் சவால்களுக்கு மத்தியில், கடினமான சுற்றுச்சூழல் அமைவில் கல்லூரியைக் கையேற்ற காலமது. அப்போது ஒருசில கல்விசார், கல்விசாரா ஊழியர்களின் உதவியுடன், கலப்பு அதிகார அரசியல் ஆதரவுடன் குறிப்பாக யுத்தகாலச் சூழலில் இக்கல்லூரியினைக் கட்டியெழுப்ப வேண்டிய கடினமான கடப்பாடும், பொறுப்பும் என்னிடம் என்னைச்சார்ந்த சிலரிடமும் கையளிக்கப்பட்டிருந்தது. ஆரம்ப காலத்திலிருந்து நான் ஓய்வுபெறும் காலம் வரையும் (18.10.1993 - 12.06.2002) கல்லூரியின் உள்ளும் புறமும் அளிக்கப்பட்ட ஆதரவுகளுக்கும், அர்த்தமற்ற எதிர்வுணர்வுகளுக்கும் இடையில் இக்கல்லூரியை மனச்சான்றுக்கு மாறில்லா வகையில் என்னாலான அனைத்துச் செயற்பாடுகளையும் செய்யக்கூடிய மனவுறுதி, சுயநம்பிக்கை, உடல் வளம், உரிய உதவிகளை வழங்கிய இறைவனுக்கு முழுமுதல் நன்றிகள்.

இக்கல்லூரி இன்று இருபத்தைந்து வாலிப வயதின் வளர்ச்சியில்நன்கு வளர்ந்து வருவதற்குக் கணிசமான காலவளவு பங்களிப்புச் செய்த மனநிறைவு எனக்கும் இருப்பது குறித்து முழு மனத்திருப்தியும், மிகு உள நிறைவும் பெறுகின்றேன்.

இக்கல்லூரி தோற்றம் பெறுவதற்குத் துணையாக இருந்த முன்னைநாள் கல்வி இராஜாங்க அமைச்சரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அமரர்.திருமதி.இராஜமனோகரி புலேந்திரன், முன்னைநாள் கல்விப்பிரதிப் பணிப்பாளர் நாயகமும் கல்வி ஆலோசகருமான திரு.வெற்றிவேல் சபாநாயகம், முன்னைநாள் கல்விக்கல்லூரிகள் பிரதம ஆணையாளர் திரு.குமாரசிறி போன்றோர் குறித்தும் நன்றியுடன் நினைவுகூருகின்றேன். இதே நேரத்தில் அக்கால கட்டத்தில் நெருங்கி நின்று பல உதவிகள் புரிந்த விரிவுரையாளர்கள் திரு.த.ம.தேவேந்திரன், திரு.இன்பதேவராஜா, திருமதி.சண்முகநாதன், திரு.யோகநாதன், திரு.இராஜகருண, திரு.அமரதாச, ஜனாப்.சகாப்தீன், திரு.சிதம்பரநாதன், திரு.பேணாட், திரு.ஜெயந்த பெரேரா, திரு.பயிசே பீரிஸ், திரு.அருட்பிரகாசம், திரு.விபுலரட்ண, திரு.ஆதர் விக்ரர் ஆகியோரையும் என்னால் மறந்துவிட இயலாது. அதே போன்று கல்விசாரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியர்களான வை.கணேஸ்வரன், ஜனாப் கரீம், திரு.கேதீஸ்வரன், திரு.இராஜேந்திரன், திருமதி.நாகேஸ்வரி, திரு.இராமஜெயம், திருமதி.சியாமசுந்தரம், திரு.கந்தசாமி, திரு.விபுலசேன, திரு.மோட்டி, திருமதி.திலகேஸ்வரி, செல்வி.நாகலிங்கம், திரு.சிவபாலன், திரு.இரவீந்திரன், திருமதி.ரமணி அல்விஸ், செல்வி.பாலகுமாரி, திரு.செல்லப்பிள்ளை, திரு.எஸ்.மனோகரன், திரு.சிவஞானம், திருமதி.பிரேமலாதா, திருமதி.ரமணி, செல்வி.வனிதா, திரு.உதயகுமார், திரு.வீ.மனோகரன் போன்ற பலரையும் எண்ணிப் பார்க்கின்றேன். இவர்களுக்கும் பிற்காலக்கட்டங்களில் கல்லூரியில் இணைந்து எனக்கு உதவியாக இருந்த கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்வுறுகின்றேன்.

தமிழ், சிங்கள, முஸ்லீம் மூவின இந்து, பௌத்த. இஸ்லாம், கிறிஸ்தவ நான்மத மாணவ ஆசிரியர்கள், கல்விசார், கல்விசாரா அலுவலர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து ஒரு ஒற்றுமையுள்ள குடும்பமாக காலத்தேவைக்கமைய சமூகம் சார்ந்ததாக கல்லூரியின் கல்விச் செயற்பாடுகளை செவ்வனே செய்து வரும் பண்பும் பாங்கும் சேர்ந்து நாட்டுக்கே ஓர் எடுத்துக்காட்டான கல்லூரியாக இக்கல்லூரி இருந்து வந்துள்ளது. இன்று இலங்கையில் தனக்கென ஒரு தனித் தடத்தைப் பதித்து ஆசிரியர் கல்வி பயிலும் பயிற்சியிலும் அர்த்தமுள்ள அபரித சேவை ஆற்றி தலை நிமிர்ந்து மிளிர்ந்து இக்கல்லூரி இருப்பது இக்கல்லூரியின் பங்குதாரர்களும் பயனாளிகளும் பெருமைப்படக்கூடிய ஒரு விடயமே.

இக்கல்லூரி தரத்திலும் தகுதியிலும் தன்மையிலும் திறத்திலும் சிறப்பிலும் இன்னும் ஏற்றம் பெற வேண்டிய நிலைப்பாடும் தேவையும் இருக்கின்றன. அக்காலத்தில் என்னுடன் இருந்த திரு.சிதம்பரநாதன் அவர்கள் தொடர்ந்து பணியாற்றி இன்று இதன் பீடாதிபதியாக வெள்ளிவிழாவை ஒருங்கமைத்துக் கொண்டாடும் அரிய வாய்ப்பினைப் பெற்றிருப்பது அவருக்குக் கிடைத்துள்ள ஓர் அற்புத அரிய அதிஷ்டம் எனலாம்.

இக்கல்லூரியை மேலும் உரமூட்டி உயரிய நிலைக்கு உயர்த்துவதற்கு கல்விசார், கல்விசாரா ஊழியர்கள் பலர் இன்று இருக்கின்றனர். இவர்கள் குறித்துச் சுட்டிப்பாகக் கூறத்தேவையில்லை.

இவர்கள் மனம் வைத்து சுய விமர்சனத்தையும், திடசங்கத்தையும் வெளிப்படுத்தி முயன்று சேவையாற்றுவார்களேயாயின் இக்கல்கல்லூரி இன்னும் ஏற்றம் பெற்றுப் போற்றப்பெறும்.

குறிப்பாக வவுனியா சுற்றுச்சூழல் கல்விச் சமூகத்தினர், கல்லூரியின் கல்விசார், கல்விசாரா அலுவலர்கள், நிகழ் பயில்நிலை மாணவ ஆசிரியர்கள், பழைய மாணவ ஆசிரியர்கள், நலன்விரும்பிகள், அரசியல்வாதிகள் அனைவரதும் ஆக்கபூர்வ பங்களிப்பும் சமகால விமர்சனங்களும் உரிய உதவிகளும் இன்னும் வேண்டப்படுகின்றன.

இக்கல்லூரி மேலும் நீண்டகாலம் நிலைபெற்று எமது நாட்டின் ஆசிரியர் கல்வி, ஆசிரியர் பயிற்சிப் பணியில் மென்மேலும் மெருகூட்டம் பெற்று மிளிர வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனடியை மனதார வேண்டி விரும்பி நிற்கின்றேன்.

**திரு.செ.அழகரெத்தினம்**
**29/2, மத்திய வீதி,**
**உவர்மலை, திருகோணமலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**திரு.க.சுவர்ணராஜா**
உப பீடாதிபதி (நிதி நிர்வாகம்)




**திரு.தி.காண்டீபன்**
உப பீடாதிபதி (தொடருறுகல்வி)



**திரு.சு.பரமானந்தம்**
உப பீடாதிபதி (கல்வியும் தரமேம்பாடும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது முன்னாள் பீடாதிபதி



## திரு.செ.அழகரெத்தினம்

BA, MA, SLEAS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது முன்னாள் பீடாதிபதி



## திரு.K.பேணாட்

B.Sc. (Hons),PGDE, M.Ed (Australia),
SLTES - 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அவர்களின் வாழ்த்துச் செய்தி

வவுனியா தேசியகல்வியியற் கல்லூரி வெகுசிறப்பாக இயங்கி இருபத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்து வெள்ளிவிழா கொண்டாடுவதை இட்டு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இலங்கையின் ஆசிரிய கல்வி வரலாற்றில் தேசிய கல்வியியற் கல்லூரிகளின் தோற்றம் ஒருமைற் கல்லாகும். இவ்வகையில் வடமாகாணத்தில் முதன்முதலாக 1993 ஆம் ஆண்டு இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

கல்வி முறையில் மிக முக்கியமான ஊடாட்டம் ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே நிகழ்கின்றது. மாணவர்களின் மகிழ்ச்சிகரமான கற்றல் முறைகளுக்கு ஏற்ப ஆசிரியர்களின் கற்பித்தல் முறைகள் இசைந்து செல்லக் கூடிய நிலையிலேயே கல்வி பயனுடையதாகும். இதற்கு ஆசிரியர்கள் முழு நிறை ஆளுமையுடையவர்களாக இருக்க வேண்டும். இவ்வாறான ஆசிரியர்களை கடந்தகால் நூற்றாண்டுகளாக வவுனியா தேசியகல்வியியற் கல்லூரி வழங்கி வருகின்றது. இதற்குத் தம்மையே அர்ப்பணித்த முதற் பீடாதிபதி திரு.S.அழகரத்தினம், இரண்டாவது பீடாதிபதி திரு.K.பேணாட் மூன்றாவது பீடாதிபதி திரு. சிதம்பரநாதன் மற்றும் உபபீடாதிபதிகள், கல்வியியலாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் உயர்வாகக் கடமையாற்றுகின்றனர். இந்நேரம் அவர்களின் பணிகள் உயர்வானவையும் நினைவு கூரத்தக்கவையுமாகும்.

21ஆம் நூற்றாண்டின் எதிர்காலக் கல்விக்கு ஈடுகொடுக்கும் நவீன ஆளுமையுடைய ஆசிரியர்களை எமது மண்ணுக்குத் தற்போது வழங்கி வரும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி திரு. கு.சிதம்பரநாதன் அவர்கள் சிறந்த முறையிலே இக்கல்லூரியை இயக்கி வருகின்றார். ஆசிரியர்களுக்கே உரித்தான ஒழுக்கம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடைய முகிழ்நிலை ஆசிரியர்களை உருவாக்கிவரும் அவருக்கும் அறுபதாவது அகவையில் மணிவிழா வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய ஆளுமை, ஆற்றல், சேவை தொடர்ந்து எமது மண்ணுக்குக் கிடைப்பதாக.

வெள்ளிவிழாக் காணும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி தொடர்ந்தும் சிறப்பாக இயங்கவும் பீடாதிபதி, உபபீடாதிபதிகள், இணைப்பாளர்கள், கல்வியியலாளர்கள், முகிழ்நிலை ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் நல்வாழ்வு வாழவும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. S. அமிர்தலிங்கம்**
**பீடாதிபதி,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதிஅவர்களின் வாழ்த்துச்செய்தி

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 25 ஆவது ஆண்டில் கால் பதிப்பதை முன்னிட்டு வெளிவரும் இவ்விஷேட மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

அகில இலங்கையில் 09 வது கல்விக்கல்லூரி ஆகவும் வடமாகாணத்தில் முதலாவது கல்விக்கல்லூரி ஆகவும் 1993 ஆம் ஆண்டு இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

இக்கல்லூரி உருவாக்கத்தின் போது தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகள் ஊடாகவும் கற்கைநெறிகள் நடைபெற்றன. இது இக்கல்லூரிக்கு கிடைத்த ஒரு சிறப்பம்சமாகும். இதனூடாக இன நல்லிணக்கத்தையும், ஐக்கியத்தையும் உருவாக்க முடியும் என எதிர்பார்க்கப்பட்டது.

கல்வியின் மூலம் புதிய இளைஞர் படையொன்றை உருவாக்கி அதன் மூலம் இன்றைய நவீன விஞ்ஞான, தொழில்நுட்ப சவால்களை எதிர் கொள்ளும் வகையில் மாணவ சமூதாயத்தை உருவாக்கும் உன்னத கொள்கையை தலைமேல் சுமந்து உழைக்கின்ற ஒரு கல்வி நிறுவனமான வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி, இன்று 25 வருடங்கள் தன்னடக்கத்தோடு கல்வி பணி புரிந்து வெள்ளி விழா கொண்டாடுகின்றது. மேலும் பல வெற்றி விழாக்களைக் கொண்டாட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இக்கல்லூரியின் நிருவாகக் குழாமும், கல்வியியலாளர்களும் மிகுந்த புரிந்துணர்வோடு ஐக்கியமாக சமூக மேன்பாட்டை முன்னிருத்தி நல்நோக்கோடு உழைத்து வருகின்றனர். அந்த கூட்டு உழைப்பின் அறுவடைதான் இன்று வெள்ளி விழாவாக வெற்றி நடைபோடுகிறது. அந்த வெள்ளி விழாவின் பதிவாக வெளியிடப்படும் இம்மலர் ஓர் உற்சாகமாகவும் உந்து சக்தியாகவும் அமையும் என்பதனை எதிர்பார்க்கின்றேன்.

எதிர்காலத்தை மிகத் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கு நிகழ்கால செயற்பாடுகள் உறுதுணையாகும் என்பதற்கு இம்மலரும் ஓர் அத்தாட்சி. இம்மலரோடு இக்கல்விக்கல்லூரியின் செயற்பாடுகள் வெற்றி நடைபோடுவதற்கு எனது பூரண ஒத்துழைப்பையும், ஆசிர்வாதத்தினையும் வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**ஜனாப்.எம்.ஐ.எம். நவாஸ்,**
**பீடாதிபதி,**
**அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தர்காநகர் தேசிய கல்வியியற்கல்லூரி பீடாதிபதி அவர்களின் வாழ்த்துச்செய்தி

இலங்கையில் ஆசிரிய கல்வியில் முன்சேவைப் பயிற்சியினை வழங்கிக் கொண்டிருக்கின்ற நிறுவனங்களாகத் தேசிய கல்வியியிற் கல்லூரிகள் விளங்குகின்றன. இவ்வாறு ஆசிரியர் கல்வியில் முன்சேவைப் பயிற்சியை வழங்குகின்ற தமிழ்மொழி மூல நிறுவனங்களில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஒரு மூத்த நிறுவனம் ஆகும். இந்நிறுவனம் ஒக்டோபர் 18ஆம் திகதி தனது (25ஆவது ஆண்டில்) வெள்ளிவிழா ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது. இது பெருமைக்கும் பாராட்டுக்கும் உரிய விடயமாகும்.

எந்தவொரு நிறுவனத்தினதோ தனிநபர் அல்லது சமூகத்தினதோ வெற்றி கடந்த கால வரலாற்றில் பதிவு செய்து வைத்துள்ள சாதனைகளிலும் வெளியீடுகளிலும் புகழிலும் பெருமையிலும் தங்கியுள்ளது. இவ்வகையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியினதும் கடந்த கால வரலாற்றினை நோக்கின் வெளிப்படையாகத் தெரிகின்ற பிரதிமைகள் பற்பல உள்ளன. அவை பாடம் சார்ந்த செயற்பாடுகளுக்கு, அப்பால் விளையாட்டு, அழகியல், சமூகம், பண்பாடு, கலாசாரம் சார்ந்தவையாக உள்ளன. இவற்றுக்கெல்லாம் காரணம் இந்த நிறுவனத்தில் இடம்பெற்ற, இடம்பெற்று வருகின்ற திட்டமிடப்பட்ட செயற்பாடுகளும் அயராத உழைப்பும், அர்ப்பணிப்புகளுமே ஆகும். இவற்றை இங்கு பணிபுரிகின்றவர்களும் ஏற்கெனவே பணிபுரிந்தவர்களுமான கல்விசார் பணியாளர்களும், கற்பித்தல் சாராப் பணியாளர்களும் செவ்வனே தமது கடமைகளை ஆற்றியுள்ளமை யாவரும் தெளிவாக அறிந்த விடயமே.

வெள்ளிவிழா நோக்கிப் பயணிக்கும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் நிர்வாகம் இப்போது மூன்றாவது தலைமைத்துவத்தின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இம்மூன்றாவது தலைமையான பீடாதிபதி கு.சிதம்பரநாதன் அவர்களும் இந்நிறுவனத்தினது ஆசிரிய கல்வியியலாளர்களும் சேவைக் காலத்தில் வெள்ளிவிழா காலத்தில் பயணிப்பது இங்கு சிறப்புக்குரியதாகும்.

காலமாற்றமும் நகர்ச்சியும் எப்போதும் எதிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது யாவரும் புரிந்து கொள்ளும் உண்மையே. இவ்வகையில் வவுனியா தேசிய கல்வியியியற் கல்லூரியும் இக்காலமாற்றத்துக்குட்பட்டு வேண்டியன தெளிந்து தெரிந்து உள்வாங்கி வெள்ளிவிழாப் பயணத்தை ஆரம்பித்திருக்கின்றது. இக்காலத்தில் இந்நிறுவனத்தில் வெளியிடப்பட உள்ள கல்லூரிச்சஞ்சிகையின் இருபத்தைந்தாவது ஆண்டு மலர் "வித்தியாதீபத்தில்" எனது எண்ணத்தையும் பதிவு செய்யக்கிடைத்த வாய்ப்பை எண்ணி மகிழ்வடைகின்றேன்.

வாழ்க வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி வளம்பெறுக; யாவும் வளர்க; கல்விச் செயற்பாடுகள்.அன்புடன் வாழ்த்துகின்றேன்.

**திரு.தி.அறிவழகன்**
**பீடாதிபதி**
**தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மட்டக்களப்பு தேசிய கல்வியியற்கல்லூரி பீடாதிபதி அவர்களின் வாழ்த்துச்செய்தி

இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த் தண்சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

-பாரதி-

கல்வியின் இசைவாக்கம் இல்லாமல் சமூகத்தில் எந்த வித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது என்பது சமூக விஞ்ஞானிகளின் முடிவாகும். அத்தகைய கல்வி வெறுமனே மனனஞ் செய்யும் மந்திரங்களாகவோ கற்பனைக் கதைகளாகவோ இருக்க முடியாது. கல்வி வாழ்க்கைக்கு பயனுடையதாகவும் விஞ்ஞான கண்ணோட்டம் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும். கற்கின்ற ஒவ்வொருவரும் தனக்கும் தனது சூழலுக்கும் என்ன நடக்கின்றது அதனால் என்னென்ன விளைவுகள் ஏற்பட்டுள்ளன எதிர்காலத்தில் நடக்கப்போவது யாது போன்ற விடயங்களை அறிவுப்பூர்வமாக விளங்கிக் கொள்ளவும் பாதகமான அம்சங்களுக்கெதிராக குரலெழுப்பவும் போராடவும் தேவையான அறிவு ஆற்றல்களை கல்வி வழங்க வேண்டும். கல்வி செயலுக்கான ஊக்கத்தினை வழங்க வேண்டும்.

ஆசிரியர்களுக்கான பயிற்சியினை வழங்கும் நிறுவனங்களுக்கான பொறுப்பு, வகை கூறல் மிக அதிகமானதாகும். புதிய சிந்தனை, புதிய வாழ்வு, புதிய பண்பாடு ஆகியவற்றுக்கான பயிற்சி அனுபவங்களை வழங்குவது அவசியமாகின்றது. ஆழ்ந்த அறிவு, செயலூக்கம், அர்ப்பணிப்பு, தலைமைத்துவம் ஏற்றல் போன்ற ஆற்றல்களை வளர்த்துக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுத்தல் கல்வியியற் கல்லூரிகளின் நிகழ்ச்சித் திட்டத்தில் முன்னுரிமை வழங்க வேண்டிய அம்சங்களாக உள்ளன. அரசியல், பொருளாதாரம், சமூகவியல், பண்பாடு குறித்த விடயங்களை கல்வியியற் கண்ணோட்டத்தில் நோக்கி குறைபாடுகளை களைவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஆற்றல்களை முகிழ்நிலை ஆசிரியர்களிடம் வளர்த்தெடுப்பதும் அவசியமாகின்றது.

இதன் அடிப்படையில் கடந்த இருபத்தைந்து வருடங்களாக ஆசிரியர்களுக்கான சேவை முன் பயிற்சியினை வழங்கி வரும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பல்வேறு சாதனைகளை நிலை நாட்டியுள்ளது. நாட்டில் அமைதியற்ற யுத்த சூழலிலும் பயிலுநர்களுக்கான கல்விசார் செயற்பாடுகளை சிறந்த வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் முன்னெடுத்து வந்துள்ளது.

வலுத்தன நிலைக்கும் ஏனையன செத்தழியும் என்ற வாழ்வியல் தத்துவத்தை முழுமையாக விளங்கிக் கொண்டு தமிழ் பேசும் மக்களின் வாழ்வியலை நிலை பெறச் செய்வதற்கான பணிகளை இக்கல்லூரி தொடர்ந்து முன்னெடுத்து வருவதை கண்டுள்ளேன். முறையாகத் திட்டமிடப்பட்ட பாட இணைச் செயற்பாடுகளின் மூலம் இது சாத்தியமாக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் கல்விப் புலம் சார்ந்த சமூக பொறுப்புள்ள ஒரு வெள்ளி விழா சஞ்சிகையினைப் படைப்பது என்பது இலகுவானதல்ல. இதனை ஆற்றல் மிக்க ஆசிரிய கல்வியியலாளர்களும் பயிலுநர்களும் வெற்றி கொண்டுள்ளனர். இவ்வாக்கப் படைப்பில் கூறப்படும் கருத்துக்களை மாணவர்களின் அறிவு தளத்துக்குள் கொண்டு செல்வதும் பாரிய பணியாகவே அமையும். அதிலும் இவர்கள் வெற்றி காண்பதோடு புதிய இலங்கையைப் படைப்பதற்கான முயற்சியிலும் முன்னோக்கி பயணித்து சாதனைகள் படைக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன். வெற்றிகளுக்கு வாழ்த்துகள்.

வேலைகளினூடே வெற்றி காண்போம்.

**திரு. சிவ. இராஜேந்திரன்**
**பீடாதிபதி**
**மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி, தாழங்குடா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்களின் இதயத்திலிருந்து....

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி கால்நூற்றாண்டு கல்விப் பாரம்பரியத்தைத் தன்னகத்தே கொண்டு வளர்ந்து நிமிர்ந்து வெள்ளிவிழாக் கண்டு அகமகிழ்ந்து நிற்கின்றது. வன்னிப் பெருநிலப்பரப்பின் இன்றியமையாத கல்விக் கூடமாய்ச் செழித்து வளர்ந்துள்ளது. தான் வாழ்ந்த காலத்தே சாதனைகளை நிலை நிறுத்தி வாழும் காலத்தும் புத்துயிராய் புத்தறிவு பெற்று கைந்தாயாய் எமை வளர்க்கின்றாள்.

ஆசிரியர் கல்வி வழங்கி நல்லாசிரியர்களை உருவாக்கும் நிறுவனம் என்ற வகையில் இக்கல்லூரித்தாய் தேசிய மட்டத்திலே தனது பணியினைச் செய்து வருகின்றாள். இலங்கைத்தீவு முழுவதும் இக்கல்லூரியிலிருந்து வெளியேறும் கற்பித்தலில் தேசிய டிப்ளோமாப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் செம்மையாகத் தம்பணியினை ஆற்றிவருகின்றனர். இவர்களது ஆளுமையினை வளர்த்து சிறந்த பயிற்சியினை வழங்கி மேலும் உயர்வதற்கான வாய்ப்புக்களையும் வசதிகளையும் இக்கல்லூரி அவர்களுக்கு வழங்குகின்றது.

மேலும் இக்கல்லூரித்தாய் காலந்தோறும் பிரசவிக்கும் குழந்தையாம் வித்தியாதீபத்தை இந்நாளில் அருமருந்தன்ன மகவாய் ஈன்றிருப்பதில் மிக்க மகிழ்ச்சி. வெள்ளி விழாச் சிறப்பு மலராய் "வித்தியா தீபம்" வெளிவருகின்றமை எல்லோரையும் அகம் குளிரச் செய்யும். காலத்தின் தேவை கருதி பல்வேறுபட்ட ஆளுமைகளின் பல்தரத்து ஆக்கங்களைச் செம்மையான மொழியிலே கோர்த்திருக்கின்றோம்.

எம் கல்லூரியின் அரவணைப்பில் வளரும் பிள்ளைகளாகிய நாம் எல்லோரும் ஒன்றிணைந்து நற்றாய்க்குச் சேவகம் செய்கின்றோம். கூட்டுறவால் கூட்டுணர்வால் "வித்தியா தீபம்" சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றது.

உபபீடாதிபதிகளதும், விரிவுரையாளர்களதும், மாணவ ஆசிரியர்களதும் ஆளுமைகளைத் தாங்கி வித்தியா தீபம் சுடர்விட்டு ஒளி கொடுக்கின்றது. அறிவுக் கொழுந்தாய் வித்தியா தீபம் உங்கள் கைகளில். இதற்கு அடிநாதமாய்த் திகழ்ந்த பீடாதிபதி அவர்கள், உபபீடாதிபதிகள், சக விரிவுரையாளர்கள், மாணவ ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மலர்க்குழுவினர் மற்றும் இவ்விதழினை அழகுற அச்சிட்ட அகரம் பிறின்டேர்ஸ் அனைவரையும் நன்றிப் பருக்கோடு நெஞ்சில் நிறைக்கின்றோம்.

"தாம்இன் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

**இணை ஆசிரியர்கள்**
**ந.பார்த்தீபன்**
**வே.ஞானசம்பந்தன்**
**(மலர்க்குழு சார்பாக)**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீடாதிபதியின் அறிக்கை

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி தனது வெற்றிகரமான தொலைநோக்குடன் கூடிய பயணத்தில் வெள்ளிவிழா ஆண்டுக்குள் நுழைவதையிட்டு இக்கல்லூரியின் பீடாதிபதி என்ற வகையில் பெரு மகிழ்வடைகின்றேன். கல்லூரி ஆரம்பித்த காலம் தொடக்கம் அதன் அங்கத்தவராக வாழ்ந்து கடந்த மூன்று வருடங்களாக பீடாதிபதியாக எனது பணியைச் செவ்வனே ஆற்றிய நிலையில் எமது வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் கடந்த கால சில முக்கிய பதிவுகளை, நிகழ்ச்சிகளை, சாதனைகளை, புள்ளிவிபரங்களை தங்கள் முன்னே அறிக்கையாக சமர்ப்பிக்க விழைகின்றேன்.

**கல்வியியற் கல்லூரியின் தோற்றம்**

1985ஆம் ஆண்டு கல்விக் கல்லூரிகள் சட்ட மூலத்திற்கேற்ப இலங்கையிலே கல்விக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. 1992 ஆம் ஆண்டு வடக்கில் தமிழ் மக்களுக்கான கல்விக் கல்லூரி ஒன்று அமைப்பதற்கான முயற்சியில் ஐக்கிய தேசிய கட்சியின் அரசின் கல்வி இராஜாங்க அமைச்சராக இருந்த வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.இராஜமனோகரி புலேந்திரன் அவர்களின் அரசியல் சமூக வெளிப்பாட்டுணர்வாக இக்கல்லூரியை வவுனியா பூந்தோட்டம் பகுதியில் அமைக்க முடிவு செய்யப்பட்டது. ஆனாலும் ஆரம்பத்தில் வவுனியாவிற்கு 14Km தூரத்தில் உள்ள ஓமந்தை பகுதியில் அமைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன.

1992ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி அதிமேதகு ஆர்.பிரேமதாஸ அவர்களின் அனுமதியுடன் வவுனியா பூந்தோட்டத்தில் குளக்கரையை அண்டியதாக ஏறத்தாழ 50 ஏக்கர் கொண்ட நிலப்பரப்பில் அத்திவாரக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) உதவியால் 266 மில்லியின் செலவில் கட்டிட நிர்மாண வேலைகள் உயர்கல்வி அமைச்சின் கட்டிட பிரிவால் "சாமுவேல் அன் சன்ஸ்" நிறுவனத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது. கட்டட வேலைகள் முற்று முழுதாக முடிவுறாத நிலையில் 1993.10.18 அன்று வெகுசிறப்பான முறையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி. இராஜமனோகரி புலேந்திரன் அவர்களினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

**பாட நெறி பற்றிய விபரம்**

எமது கல்லூரியில் 1993ஆம் ஆண்டில் ஆரம்பக் கற்கைநெறி (தமிழ்மொழி/ சிங்கள மொழி மூலம்), விஞ்ஞானக் கற்கைநெறி (தமிழ்மொழி/ சிங்கள மொழி மூலம்), உடற்கல்வி ஆகிய 3 பாடநெறிகள் காணப்பட்டன.

பின்னர் 1994ம் ஆண்டில் சிங்கள மொழி மூலமான விஞ்ஞான கற்கை நெறி மாணவர் பற்றாக்குறையினால் நீக்கப்பட்டு ஏனைய மூன்றுபாடநெறிகளும் 1997ஆம் ஆண்டு வரை நடைபெற்று வந்தன. 1999ஆம் ஆண்டு தமிழ்மொழி மூல விஞ்ஞான கற்கை நெறியும் இங்கு இடைநிறுத்தப்பட்டு இதற்கு மேலதிகமாக மனைப் பொருளியல், விவசாய விஞ்ஞானம், இந்துசமயம் ஆகிய கற்கைநெறிகள் புதிதாகச் சேர்க்கப்பட்டன. பின்னர் 2000ஆம் ஆண்டு முதல் கிறிஸ்தவ பாடநெறி ஆரம்பிக்கப்பட்டது. 2003ஆம் ஆண்டுவரை ஆரம்பக் கல்வி (தமிழ்மொழி/சிங்கள் மொழி மூலம்), கிறிஸ்தவம், இந்துசமயம், உடற்கல்வி கற்கைநெறி, விவசாய விஞ்ஞானம், மனைப்பொருளியல் ஆகிய கற்கை நெறிகள் காணப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004ஆம் ஆண்டு மனைப்பொருளியல் பாடநெறி இடைநிறுத்தப்பட்டதுடன் மாற்றீடாக மீண்டும் விஞ்ஞான பாடநெறி இணைக்கப்பட்டது. 2005ஆம் ஆண்டு கற்கை நெறிகளில் தகவல் தொழில்நுட்பப்பாடம் இணைக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டு இரண்டாம் தேசிய மொழியாக சிங்கள மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கும் பயிற்சி நெறியும் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் முன்பு நிறுத்தப்பட்ட உணவு தொழில்நுட்பப் பாடநெறி மீள ஆரம்பிக்கப்பட்டது. 2006 இல் ஆரம்பக்கல்வி (சிங்களம்), ஆரம்பக்கல்வி, உடற்கல்வி, விஞ்ஞானம், விவசாயம், இந்துசமயம், உணவு தொழில்நுட்பம், கிறிஸ்தவசமயம், தகவல் தொழில்நுட்பம் (ஆங்கிலம்), இரண்டாம் தேசிய மொழி ஆகிய பாடநெறிகள் காணப்பட்டன.

2006-2008 வரை அனுமதிக்கப்பட்ட சிங்கள மொழி மூலமான மாணவர்கள் வேறு கல்வியியற் கல்லூரிகளுக்கு இடமாற்றப்பட்டனர். 2007ஆம் ஆண்டு ஆரம்பக்கல்வி (சிங்கள மொழி மூலம்) இரண்டாம் தேசிய மொழியாக சிங்கள மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கும் பயிற்சியும் இடைநிறுத்தப்பட்டது.

2008 ஆம் ஆண்டு கணிதம், சமூகக்கல்வி ஆகிய பாடநெறிகள் புதிதாக இணைக்கப்பட்டு ஆரம்பக்கல்வி, உடற்கல்வி, விவசாயம், விஞ்ஞானம், கணிதம், சமூக விஞ்ஞானம், இந்துசமயம், உணவுத்தொழில்நுட்பம், கிறிஸ்தவம், தகவல் தொழில்நுட்பம் ஆகிய 10 கற்கைநெறிகள் எமது கல்லூரியில் காணப்பட்டன.

2009, 2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேசிய கல்வியியற் கல்லூரியானது உள்ளூரில் இடம்பெயர்ந்தோரின் நலன்புரிநிலையமாக பயன்படுத்தப்பட்டமையாலும் விடுதிகள் மாணவ ஆசிரியர்கள் தங்குவதற்கு பொருத்தமில்லாததாலும் புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்ள முடியாமல் போனதையடுத்து புதிய மாணவர்களை சேர்த்துக் கொள்ள முடியாமல் போனதையடுத்து 2011ஆம் ஆண்டு கணிதம், சமூக விஞ்ஞானம், தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம், உணவுத் தொழிநுட்பம் ஆகிய பாடநெறிகள் எமது கல்லூரியில் இடைநிறுத்தப்பட்டதுடன் வர்த்தகப்பாடம் புதிதாக சேர்க்கப்பட்டு ஆரம்பக்கல்வி, இந்துசமயம், கிறிஸ்தவம், உடற்கல்வி, விவசாயம், வர்த்தகம் ஆகிய பாடநெறிகளை மீள ஆரம்பிக்க முடிந்தது.

2012ஆம் ஆண்டு மாணவ ஆசிரியர்களுக்கான இருப்பிட வசதி ஏற்பாடுகள் செய்யப்பட்டமையைத் தொடர்ந்து கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகள் இணைக்கப்பட்டு மொத்தமாக ஆரம்பக்கல்வி, இந்துசமயம், கிறிஸ்தவம், உடற்கல்வி, விவசாயம், வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம்ஆகிய 08 பாடநெறிகள் காணப்பட்டன.

2012 தொடக்கம் 2014 வரையான காலப்பகுதியில் எமது கல்லூரியில் எட்டு பாடநெறிகள் காணப்பட்டதுடன் 2015ஆம் ஆண்டு மனையியல் பாடம் மீண்டும் சேர்க்கப்பட்டு ஆரம்பக்கல்வி, இந்துசமயம், கிறிஸ்தவம், உடற்கல்வி, விவசாயம், வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம், மனையியல் என ஒன்பது பாடநெறிகள் நடைபெற்றன.

2016ஆம் ஆண்டு வர்த்தக பாடநெறி இடைநிறுத்தப்பட்டு மொத்தமாக இன்று ஆரம்பக்கல்வி, இந்துசமயம், கிறிஸ்தவம், உடற்கல்வி, விஞ்ஞானம், கணிதம், மனையியல், விவசாயம் ஆகிய எட்டுபாடநெறிகள் தற்போது காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வருடாந்த மாணவர் அனுமதி:**

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் வருடாந்த மாணவர் அனுமதியை பின்வரும் அட்டவணை எடுத்துக்காட்டுகின்றது.

வருடாந்த மாணவர் அனுமதி விபரம்

| ஆண்டு | மொத்தம் | மொழி மூலம் | | கற்கை நெறி | | | | | | | | | | | | | | ஆங்கில மொழி மூலம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சிங்களம் | தமிழ் | ஆரம்பக்கல்வி - சிங்களம் | ஆரம்பக்கல்வி - தமிழ் | விஞ்ஞானம் - சிங்களம் | விஞ்ஞானம் - தமிழ் | உடற்கல்வி | மனைப்பொருளியல் | விவசாய விஞ்ஞானம் | இந்து சமயம் | கிறிஸ்தவ சமயம் | தகவல் தொழில்நுட்பம் | சிங்களம் 2ம் தேசிய மொழி | கணிதம் | சமூக விஞ்ஞானம் | வர்த்தகம் | |
| 1993 | 104 | 31 | 83 | 17 | 59 | 4 | 14 | 10 | - | - | - | - | - | - | - | - | - | - |
| 1994 | 77 | 22 | 55 | 22 | 49 | - | 6 | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| 1995 | 42 | 11 | 78 | 11 | 28 | - | 25 | 25 | - | - | - | - | - | - | - | - | - | - |
| 1996 | 151 | 42 | 109 | 42 | 29 | - | 28 | 52 | - | - | - | - | - | - | - | - | - | - |
| 1997 | 202 | 54 | 138 | 54 | 52 | - | 35 | 61 | - | - | - | - | - | - | - | - | - | - |
| 1998 | 232 | 66 | 166 | 66 | 74 | - | 36 | 56 | - | - | - | - | - | - | - | - | - | - |
| 1999 | 239 | 62 | 177 | 62 | 88 | - | - | 26 | 17 | 11 | 35 | - | - | - | - | - | - | - |
| 2000 | 239 | 56 | 173 | 56 | 64 | | - | 27 | 7 | 31 | 30 | 14 | - | - | - | - | - | - |
| 2001 | 241 | 62 | 179 | 62 | 63 | - | - | 30 | 11 | 32 | 29 | 14 | - | - | - | - | - | - |
| 2002 | 268 | 58 | 210 | 58 | 79 | - | - | 35 | 6 | 30 | 30 | 30 | - | - | - | - | - | - |
| 2003 | | | | | | - | - | | | | | | - | - | - | - | - | - |
| 2004 | 263 | 63 | 127 | 63 | 61 | - | 29 | 31 | - | 20 | 31 | 25 | - | - | - | - | - | - |
| 2005 | 237 | 53 | 184 | 53 | 62 | - | - | 33 | 5 | 29 | 27 | 28 | - | - | - | - | - | - |
| 2006 | 255 | 50 | 187 | 32 | 40 | - | 20 | 30 | 30 | 18 | 30 | 19 | 18 | 18 | - | - | - | 18 |
| 2007 | 188 | - | 179 | - | 62 | - | 16 | 28 | 7 | 20 | 23 | 23 | 9 | - | - | - | - | 9 |
| 2008 | 186 | - | 167 | - | 26 | - | 16 | 29 | 14 | 20 | 22 | 20 | 19 | - | 8 | 12 | - | 19 |
| 2011 | 165 | - | 165 | - | 42 | - | - | 20 | - | 30 | 21 | 22 | - | - | - | - | 30 | - |
| 2012 | 174 | - | 174 | - | 30 | - | 16 | 15 | - | 20 | 15 | 16 | - | - | 12 | - | 50 | - |
| 2013 | 209 | - | 209 | - | 59 | - | 14 | 29 | - | 28 | 15 | 21 | - | - | 13 | - | 30 | - |
| 2014 | 193 | - | 193 | - | 30 | - | 24 | 49 | - | 30 | 15 | 20 | - | - | - | - | 25 | - |
| 2015 | 258 | - | 258 | - | 46 | - | 16 | 25 | 15 | 50 | 28 | 37 | - | - | 16 | - | 25 | - |
| 2016 | 220 | - | 220 | - | 51 | - | 15 | 30 | 20 | 30 | 30 | 30 | - | - | 11 | - | - | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கடமையாற்றி ஓய்வு பெற்ற மற்றும்
இடமாற்றம் பெற்றுச் சென்ற கல்விசார் ஆளணியினரின் விபரம்

## ACADAMIC STAFFS DURING( 1993-2017)

1 MR.S .ALAGARATNAM
2 MR. K. BERNARD
3 MR.R.M.W. RAJAKARUNA
4 MR.S.K.YOGANANTHAN
5 MR.W.L.D.S.G.PERERA
6 Dr.T.KAMALANATHAN
7 MR.T.INBATHEVARAJAH
8 MR.H.A.JAYANTHA PERERA
9 MR.S SAHABDEEN
10 MRS.S SHANMUGANATHAN
11 MR.N.AMARADASA
12 MR.A.S.YOGARAJAH
13 MR.T.M.DEVENDRAN
14 MR.K.A.GUNAPALA
15 MR.H.PIYASENA PIERIS
16 MR.G.D.WIMALARATNA
17 DR.N.RAVEENDRAN
18 MRS.C.THIYAGARAJAH
19 REV.K.ANANDHAMOORTHY
20 MR.I.G.WIPULARATHNA
21 MR.K.SARATH VICTOR
22 MR.C.S.ARULPRAGASAM
23 MR.W.DOLAPIHILLA
24 MR.D.M.PIYATHILAKA
25 MR.K.ARTHOR
26 MR.P.P.RAJARATHNA
27 MR.P.KAMALASINGHAM
28 MR.KULATHILAKA
29 MRS.G.SIVARAJAH
30 MISS.B.D.M.SAMARANAYAKA
31 MRS.G.SIRIYAWATHI
32 MRS.V.RAVEENDRARAJA
33 MR.PARAMESHWARAN
34 MR.C.MAHENDRAN
35 MR.V.SELVARAJ
36 MRS.P.JEYAKUMAR
37 MRS.V.MURUGEDPILLAI
38 MR.M.GOWRIKANTHAN
39 MR.T.ELANKUMARAN
40 MR.B.MURALITHARAN
41 MR.GANESHWARAN
42 MR.B.BALAGANESAN
43 MRS.SUGENTHY ANTRANY
44 MR.GBATHMARAJA
45 MR.A.J.PIERIS

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கடமையாற்றி ஓய்வு பெற்ற மற்றும்
இடமாற்றம் பெற்றுச் சென்ற கல்விசாரா ஆளணியினரின் விபரம்

## Non ACADAMIC STAFFS DURING( 1993-2017)

1 MR..S.A Mariyaratnaseelan
2 MISS.Y Shyamasundaram
3 MISS.Ponnampalam
4 MR.E. Kailayapillai
5 MRS .N. Kalayarasi
6 MR.R.Ramajeyam
7 MR.A.K.Jeyasekaram
8 MR.J.K.Ranasingha
9 MR.G.R.Mahindapala
10 MRS.K.Nagarani
11 MR.R Subaharan
12 MR.G.Gunawardana
13 MR.K.Punithawathi
14 MRS.R.M.Karunawathy
15 MR.D.A.L.Disanayaka
16 MRS.V.Vanitha
17 MR.V.Raviharan
18 MR.A.Sivagnanm
19 MRS.K.Vasantharani
20 MR.a.Kulathungha
21 MR.Sathees
22 MRS.B.Lalithawathi
23 MR.D.Keerthirathna
24 MRS.U.B.Premwathi
25 MR.S.Amarasiri
26 MRS.R.Ramachandran
27 MR.J.K.Ranasingha
28 MR.U.R.Thilakaratna
29 MR.A.Udayakumar
30 MR.P.Samanthakumar
31 MR.D.M.S.Manawarada
32 MR.R.M.H.Karunathilaka
33 MR.E.S.P.Ekanayaka
34 MR.A.Kulathunga
35 MRS.K.Natkunasingham
36 MR.V.Raveendran
37 MISS.Ramani Alwis
38 MRS.Deepani Wimalasiri
39 MRS.R.Nagamma
40 MR.M.C.W.Divukwewa
41 MISS.S Vijitha
42 MR.M.Udayakumar
43 MRS.K.Chandrani
44 MR.K.Kathikamanadan
45 MRS.Sheela David
46 MRS.V.T.Robert
47 Mrs.N.K.Dharmadhasa
48 Mr.N.Anoton Roy
49 Mr.S.R.Ubeybala
50 Miss.C.Sayanthini



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017 இல் நடைபெற்ற நிகழ்வுகள்

| திகதி | நிகழ்வு | ஒழுங்கமைப்பு |
|---|---|---|
| 07.01.2017 | இஸ்லாமிய மாநாடு -2017 | இஸ்லாமிய மன்றம் |
| 20.01.2017 | தைப்பொங்கல் விழா 2017 | இந்து மாமன்றம் |
| 21.01.2017 | News forum competition | ஆங்கில மன்றம் |
| 21.01.2017 | அறிவிப்பாளர் போட்டி | வணிக மன்றம் |
| 25.01.2017 | Vision care நிறுவனத்தினது கண், காது பரிசோதனையும் விழிப்புணர்வும் | கலாசார மன்றம் |
| 28.01.2017 | அறிவுக்களஞ்சியப் போட்டி | வணிக மன்றம் |
| 02.02.2017 | News Forum Competition | ஆங்கில் மன்றம் |
| 04.02.2017 | சுதந்திர தினம் | சமூக விஞ்ஞான மன்றம் |
| 04.02.2017 | முத்தமிழ் விழா 2013 | தமிழ் மன்றம் |
| 10.02.2017 | கட்டுரைப்போட்டி அறிவுக்களஞ்சியப் போட்டி | வணிக மன்றம் |
| 11.02.2017 | விளம்பரப் போட்டி அறிவிப்பாளர் போட்டி | வணிக மன்றம் |
| 24.02.2017 | சிவராத்திரி | இந்து மாமன்றம் |
| 08.03.2017 | மகளிர் தினம் | சமூக விஞ்ஞான மன்றம் |
| 11.03.2017 | Action Song Competition | ஆங்கில மன்றம் |
| 09.05.2017 | புத்த ஜெயந்தி வெசாக் கூடு அமைத்தல் போட்டி | அழகியல் மன்றம் |
| 18.05.2017 - 20.05.2017 | கல்விச் சுற்றுலா | கலாசார மன்றம் |
| 27.05.2017 | Social Drama | ஆங்கில மன்றம் |
| 29.05.2017 | விவசாய விழா விளையாட்டுப்போட்டி | விவசாய மன்றம் |
| 31.05.2017 | விரிவுரையாளர் செல்வி.இந்திரா செல்வநாயகம் அவர்களின் சமகால உளவியல் நூல் வெளியீடு | தமிழ் மன்றம் |
| 01.06.2017 | விவசாய விழாவிற்கான கயிறு இழுத்தல் போட்டி | விவசாய மன்றம் |
| 05.06.2017 | சுற்றாடல் தினம் | சுற்றாடல் மன்றம் |
| 15.06.2017 | வயல்விழா 2017 | விவசாய மன்றம் |
| 17.06.2017 | Debate Competition | ஆங்கில மன்றம் |
| 18.06.2017 | நற்கருணை நாதர் திருவிழா (Feast) | கிறிஸ்தவ மன்றம் |
| 19.06.2017 | பசுமை அரங்கு | உடற்கல்வி மன்றம் |
| 20.06.2017 | 2016/18 புதிய மாணவ ஆசிரியர்களை திசைமுகப்படுத்தல் | |
| 23.06.2017 | கலாநிதி அகளங்கள் அவர்களின் "ஞானப்பழம்" புத்தக வெளியீடு | இந்து மாமன்றம் |
| 24.06.2017 | செல்வன் ச.பிரதீப் மாணவ ஆசிரியர் "இந்து இல்லம்" நூல் வெளியீடு | இந்து மாமன்றம் |
| 01.07.2017 | 2016/18 மாணவ ஆசிரியர்களின் திசைமுகப்படுத்தல் நிறைவு நாள் | |
| 10.07.2017 | நூல் வெளியீடு - மாணவ அசிரியர்கள் நுண்ணறிவு -செல்வி.வாசுகி, சமகால சர்வதேசம் - செல்வன் A.L.M. அஸீம் | தமிழ் மன்றம் |
| 15.07.2017 | 2014/16 கற்பித்தல் தேசிய டிப்ளோமா - நிறைவு நாள் | |
| 22.07.2017 | Literature Drama | ஆங்கில மன்றம் |
| 28.07.2017 | இந்திய துணைத்தூதுவர் ஸ்ரீமான் நடராசன் வருகை தந்தார். | |
| 29.07.2017 | 2016/18 இற்கான News reading Copetition | ஆங்கில மன்றம் |
| 31.07.2017 | 2016/18 மாணவ ஆசிரியர்களுக்கான வரவேற்பு விழா | கலாசார மன்றம் |
| 03.08.2017 | விரிவுரையாளர் திருமதி.அன்டனி குருஸ் "பாட்டுப்பாடவா" நூல் வெளியீடு | தமிழ் மன்றம் |
| 16.09.2017 | 2016/18 - Action Song | ஆங்கில மன்றம் |
| 21.09.2017 | 2016/18 அணிநடைப் போட்டி | உடற்கல்வி மன்றம் |
| 23.09.2017 | வணிக தினம் 2017 | வணிக மன்றம் |
| 30.09.2017 | வாணி விழா<br>சிறுவர் தினம் | இந்து மாமன்றம்<br>ஆரம்பக் கல்விப்பிரிவினர் |
| 06.10.2017 | உலக ஆசிரியர் தினம் | கலாசார மன்றம் |
| 10.10.2017 | சர்வதேச உளநலதினம் (Dr.சிவதாஸ்) | கலாசார மன்றம் |
| 11.10.2017 | திருமதி.வேணி றொனால்ட் "உடற்பயிற்சியும் தொழிற்பாடும்" நூல் வெளியீடு | உடற்கல்வி மன்றம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2017 ஆம் ஆண்டு தேசிய கல்வியியற் கல்லூரி:**

தற்போது வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி இவ்வருடத்தில் பல்வேறு உட்கட்டுமான பணிகள் இடம்பெற்றன. இருந்தபோதிலும் மேலும் பல்வேறு திருத்த வேலைகளை எதிர்பார்த்து நிற்கின்றோம். விசேடமாக கட்டடங்களின் கூரைகளில் ஏற்பட்டுள்ள நீர்க்கசிவு பெரும் சவாலாக தொடர்ந்திருக்கின்றது. மேலும் கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையும் தொடர்ச்சியாக இருந்து வருகின்றது. இப்பற்றாக்குறையின் மத்தியில் கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவையினால் தரமிக்க சேவைகளை வழங்கி வருகின்றோம்.

**முடிவுரை:**

கல்லூரியின் 25 ஆண்டுகால வரலாற்றில் நானும் கூட இருந்திருக்கின்றேன். அத்துடன் இக்கல்லூரியின் மூன்றாவது பீடாதிபதியாக எனது சேவையை கடந்த 2014ஆம் ஆண்டு மே மாதம் ஐந்தாம் திகதி தொடக்கம் ஆற்றிவரும் நான் இவ்வருடத்துடன் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற இருக்கின்றேன். எனது மரியாதைக்குரிய ஆசிரிய கல்வியியலாளர்களும் அன்புக்குரிய மாணவ ஆசிரியர்களும் எனக்கு அளித்த ஒத்துழைப்பும், ஊக்கமும் நன்றிக்குரியதாகும். கல்லூரிக்குள் மாணவர்களாக நுழைகின்ற ஒவ்வொருவரும் நல்ல ஒழுக்கமும் பண்பாடும், பழக்கவழக்கங்களும் கொண்ட தரமான சமூகத்தை பொறுப்பேற்கும் முழுமையான தரமான ஆசிரியர்களாக வெளியேற வேண்டும் என்பதும் இந்த மாணவர்களை உருவாக்கும் ஒவ்வொரு ஆசிரிய கல்வியியலாளரும் வெற்றியாளராக மாறவேண்டும் என்பதும் எனது பேரவாவாகும்.

எதிர்வரும் காலங்களில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி தரம் மிக்க சேவையுடன் சாதனைகள் புரிய வாழ்த்துகின்றேன்.

**திரு. கு. சிதம்பரநாதன்,**
**பீடாதிபதி,**
**வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Academic Staff – 2016/2017

| | | |
|---|---|---|
| 1. | K.Sithamparanathan | B.Sc,PGDE(Merit),PGDEM(Merit),M.Ed in Science (University of Malaya), M.Ed(Srilanka),Diploma in Human Rights. |
| 2. | Mr.K.Suwarnarajah | B.Com.PGDE,M.Ed,Sch Management(U.S.A), MA in Teacher Edu, PGDEM (Merit) |
| 3. | Mr.T.Jeyakandeepan | B.Sc.(Hons),PGDE,PGDEM (Merit),SpTr in IT(Singapore), MA in Teacher Edu. |
| 4. | Mr.S.Paramanantham | B.A,PGDE(Merit),MSc in Edu(U.K),Intel Teacher (U.K), Maths Sp in Trained,PGDEM. |
| 5. | Mrs.S.Sathiyaseelan | B.Sc,PGDE(Merit),M.Ed |
| 6. | Mr.G.Kamalakumar | B.A,PGDE(Merit),M.A(Sociology),Cert. in.sosci(U.K),Com(SP Td), Scout(CLT),MA in Teacher Edu,PGDEM |
| 7. | Mrs.K.Yogarajah | B.A,PGDE(Merit),BharathaNatiya Kala vithahar, MA in Teacher Edu, PGDEM (Merit) |
| 8. | Mr.S.Pavananthan | B.A,PGDE(Merit),Hinduism Special Trained,M.A in Teacher Edu, PGDEM |
| 9. | Mr.N.Parthiepan | B.A,PGDE,M.A(Tamil),M.A in Teacher Edu,PGDEM. |
| 10. | Mr.P.Sathiyanathan | B.A,PGDE,(Merit),M.A in Teacher Edu,PGDEM. |
| 11. | Mr.M.Soosaithasan | B.A(Hons),PGDE(Merit),M.Ed(Jaff),M.A(Pub.Admin) |
| 12. | Miss.I.Selvanayagam | B.A(Hons)Spe,TrdPrimary, PGDE(Merit), Dip in Spe.Edu, M.Ed, PGDEM (Merit) |
| 13. | Mr.k.Senthilkumaran | B.Sc(Hons)Agri,PGDE,M.Sc in Science Edu,M.A in Teacher Edu, Diplomain Human Rights,PGDEM. |
| 14. | Mr.N.Manoranjithan | B.A(Hons),PGDE(Merit),M.A, M.Ed,PGDEM(Merit). |
| 15. | Mrs.N.Antony Cross | B.A,PGDE(Merit),MATE. |
| 16. | Mrs.S.Sivalosani | BSc,PGDE(Merit) M.Ed,PGDEM. |
| 17. | Mr.K.Hariharasakthy | SpeTrd(Tamil),B.A, PGDE(Merit),M.A in Teacher Edu, PGDEM(Merit) |
| 18. | Mrs.L.Thunaivan | B.A(Hons),PGDE(Merit),PGDEM(Merit)Sp.Tr in tamil, M.A in Teacher Edu, |
| 19. | Mr.S.Kuhananthan | B.Sc(Hons),PGDE(Merit),Sp.Tr in tamil, M.A in teacher Edu. |
| 20. | Mr.S.PartricJerad | B.A(Eng),PGDE,M.Ed,Teacher technologist(OUSL),PGDEM. |
| 21. | Mr.C.Kularathan | B.A(Eng) Dip in Eng,PGDE,ITP(EFLU),M.Ed,M.Phil(Reading),PGDEM. |
| 22. | Mrs.S.Hariharasakthy | B.A,PGDE(Merit),M.A in Teacher Edu, Dip in Teaching,MATE. |
| 23. | Mrs.R.Arunthathy | M.A(Music),M.Phil,PGDE(Merit) |
| 24. | Mr.V.Gnanasampanthan | B.A(Hons),Dip in Edu,M.A(Dis) in Tamil, Dip.in.S.M, M.Phil in Tamil |
| 25. | Mr.N.Aravinthan | B.Com(Hons),PGDE(Merit),M.Ed |
| 26. | Mr.T.Saravanan | B.ScAgri(Hons),MSc,PGDE(Merit) |
| 27. | Mr.M.W.C.P.Wijayasinghe | BEd.Sinhala Special Trained,Dip in Counselling,Dip in Tamil |
| 28. | Mrs.P.Jeyachandran | B.A(Hons)Dip.in.Edu,M.Ed |
| 29. | Mr.K.Sivakumar | B.Ed ,B.A, PGDE,MEd.M.A in Sociology,NDT(Merit),PGDEM (Reading) |
| 30. | Mr.A.Stany | B.A(Hons),PGDE (Merit),M.Ed(Merit) |
| 31. | Mrs.K.RonaldSrikanth | B.A,PGDE,B.Ed. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Non Academic Staff – 2016/2017

| | Name | Designation |
|---|---|---|
| 1 | Mrs.S.Shivagaran | Registrar |
| 2 | Mrs.T.Thavarasasingam | Management Asst. |
| 3 | Mrs.V.Thugirtha | Management Asst. |
| 4 | Ms.N.Nagalingam | Librarian |
| 5 | Mr.V.Ganeswaran | Hostel Suprintant |
| 6 | Mrs.A.H.T.Kamani Nishanthi De Silva | Asst. Hostel Suprintant |
| 7 | Mrs.R.Ramani | Asst. Hostel Suprintant |
| 8 | Mr.J.Jenigarshithan | Asst. Hostel Suprintant |
| 9 | Mr.B.Thevaraj | Driver |
| 10 | Mr.A.Alosiyas | Electrician |
| 11 | Mr.U.B.Srisena | Carpenter |
| 12 | Mr.A.Nagarajah | Pump Operator |
| 13 | Mrs.K.B.Anularanjani | Cook |
| 14 | Mr.M.Muthukumar | Cook |
| 15 | Mr.A.Lowrance | Cook |
| 16 | Mrs.G.Premalatha | Cook |
| 17 | Mr.E.Sellepillai | Cook |
| 18 | Mrs.G.G.Ranjani Mankalikka | Cook |
| 19 | Mrs.Y.Suwarnalatha | Cook |
| 20 | Mrs.J.Mahendran | Cook |
| 21 | Mr.M.Yesinthan. | Cook |
| 22 | Miss.V.Ponmalar | Cook |
| 23 | Mr.V.Thanushanth | Cook |
| 24 | Mr.T.Varatharasa | Lab Att. |
| 25 | Mr.M.W.S.Kumara | Lab Att. |
| 26 | Mrs.K.Mallika | Lab Att. |
| 27 | Miss.S.Thamilarasi | Lab Att. |
| 28 | Mrs.T.Jeyarani | Library Att. |
| 29 | Mr.M.Sivapalan | Watcher |
| 30 | Mr.P.B.I.Priyatharsana | Watcher |
| 31 | Mr.I.Sooriyakumar | Watcher |
| 32 | Miss.M.D.Samanthi | Sick Att |
| 33 | Mr.V.Manoharan | Sick Att |
| 34 | Mr.S.Manoharan | School Labourer |
| 35 | Mrs.K.Thilakeswary | School Labourer |
| 36 | Miss.R.Keerthana | School Labourer |
| 37 | Mrs.M.Nageswary | Sanitory Labourer |
| 38 | Mrs. S. Nesarani | Sanitory Labourer (Casual Staff) |
| 39 | Mrs.P.Sasidevi | Sanitory Labourer (Casual Staff) |
| 40 | Mr.V.Vinayagamoorththi | Garden Labourer (Casual Staff) |
| 41 | Mr.S.Balan | Garden Labourer (Casual Staff) |
| 42 | Mr.L.Denish | Sanitory Labourer (Casual Staff) |



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எமது கல்விசார் உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கல்விசாரா ஊழியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துசமயப்பிரிவு - 2ம் வருடம்



## உடற்கல்விப்பிரிவு - 2ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்பப்பிரிவு "A" - 2ம் வருடம்



## ஆரம்பப்பிரிவு "B" - 2ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயப்பிரிவு "A" - 2ம் வருடம்



## விவசாயப்பிரிவு "B" - 2ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்தவப்பிரிவு - 2ம் வருடம்



## மனைப்பொருளியற்பிரிவு - 2ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வர்த்தகப்பிரிவு - 2ம் வருடம்



## உடற்கல்விப்பிரிவு - 1ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைப்பொருளியற்பிரிவு - 1ம் வருடம்



## விஞ்ஞானப்பிரிவு - 1ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரம்பப்பிரிவு "A" - 1ம் வருடம்



## ஆரம்பப்பிரிவு "B" - 1ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துசமயப்பிரிவு - 1ம் வருடம்



## கிறிஸ்தவப்பிரிவு - 1ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயப்பிரிவு - 1ம் வருடம்



## கணிதப்பிரிவு - 1ம் வருடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து மாமன்றம்



## கலாசார மன்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாய மன்றம்



## ஆங்கில மன்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மன்றம்




## உடற்கல்வி மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அழகியல் மன்றம்



## வணிக மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்தவ மன்றம்



## மஜ்லிஷுல் இஸ்லாமிய மன்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக விஞ்ஞான மன்றம்




## சிங்கள மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றாடல் மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன அழுத்த முகாமைத்துவம்

திரு.சு.பரமானந்தம் – உப பீடாதிபதி
(கல்வியும் தரமேம்பாடும்) – வ.தே.க.க

பல்வேறு பாடசாலைகளிலும் கல்வி கற்கின்ற மாணவ மாணவிகளுக்கிடையே தவறான பழக்க வழக்கங்களுடன் கூடிய அநாகரிகமான செயல்களும் மன உளைச்சல் நிலைப்பாடுகளும் அதிகரித்திருப்பதன் காரணத்தினால் விசேட ஆலோசனை வழிகாட்டல் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளத்திட்டமிடப்பட்டுள்ளது. விதவிதமான போதைப்பொருள் விநியோகம், காதல் வயப்பட்டு தற்கொலைக்குச் செல்லுதல், பாலியல், ஆபாசம் சம்பந்தப்பட்ட தொடர்புகள், தொலைத் தொடர்பாடல் கருவிகளின் தவறான உபயோகம் போன்றன முன்னெப்போதுமில்லாத அளவுக்கு இப்போது அதிகரித்துக் காணப்படுகின்றன.

(பத்திரிகைச் செய்தி)

வன்னிப்பேரவலம் - வடகிழக்கில் நடைபெற்ற போராட்டங்கள் இன்று பல ஆயிரக்கணக்கான பாடசாலை மாணவர்களின் உளநலம், உடல்நலம், அவர்களின் உளச் சமூகநல விருத்தி போன்றவற்றில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக யுத்தம்சார் பிரச்சினைகளுக்கு சிறுவர் முதல் பெரியவர் வரை ஏதோ ஒருவகையில் முகம் கொடுத்தவர்களாகவே காணப்படுகின்றனர். இவர்களுக்கான நலனோம்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாய தேவையையும் ஆசிரிய சமூகம் கொண்டுள்ளது.

(வலயக்கல்விப்பணிப்பாளர் ஒருவர்)

இந்த இருவிதமான பிரச்சினைகளுக்கும் எமது தமிழ்பேசும் ஆசிரியர்களும் பாடசாலை மாணவர்கள் சிக்கியிருப்பது யாவரும் அறிந்ததே. இந்நிலையில் எந்தவொரு சமுதாயத்திலும் பிள்ளைகளின் வாழ்க்கை முறையிலும், உடல் உள சமூக நிலைகளிலும் அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தும் நிறுவனமாக பாடசாலைகளே காணப்படுகின்றது. மன உளைச்சலுக்குள்ளான அல்லது உளச் சமூகப் பாதிப்பிற்குள்ளான பிள்ளைகளுக்கு நிபுணத்துவம் வாய்ந்த உள ஆரோக்கிய பராமரிப்பிற்கு பாடசாலைக் கல்வியூடான பங்களிப்பே அதிக பயன் தருநிலையைக் கொண்டிருக்கும். அந்தவகையில் மன வடுக்களை முகாமை செய்தல் தொடர்பான தேடல்களும் வழிகாட்டல்களும் இன்று ஆசிரியர்களிடமும் கல்விப்புலத்திலுள்ளவர்களினாலும் முன்னெடுக்கப்படவேண்டிய தேவையுள்ளது. மனிதனுக்கு ஏற்படும் 75% முதல் 90% வரையான நோய்கள் மன அழுத்தங்களினால் ஏற்படுவதாக ஆராய்ச்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன (DR.SANJAY CHUGH). இதுவே மன அழுத்தத்தை கையாள்வதன் அவசியத்தை குறித்து நிற்கின்றது. சகபாடிகள் மீதான அக்கறையும், விழிப்புணர்வும் ஆத்மார்த்தமான புரிந்துணர்வும், தமது கடமைக்கான செயலாற்றல்கள், கடமையுணர்வு குறைவடைந்து சுயநலச் சிந்தனைகள் முன்னெழும் போது அடுத்தவர்மீதான பயவுணர்வும், போட்டிநிலையும் மன அழுத்தங்களை அதிகரிக்கச் செய்கின்றது.

இவ்வாறான மன அழுத்தங்களில் இருந்து விடுபடுவதற்கான ஏற்பாடுகளும் நுட்பங்களும் கல்வியினூடாகவே கொண்டுவரப்படுவது சிறந்ததாகும். தற்போதைய சூழமைவை மாற்றியமைத்தபின் இவற்றிற்கான தேடலை மேற்கொள்வதா அல்லது தற்போதைய சூழமைவிலேயே அவற்றை மேற்கொள்வதா என்ற வினாக்களும், சமூக நிலையேற்பட்டதன் பின்தான் இவ்வாறான செயற்பாடுகள் பயன்தரும் என்ற வாதங்களும், இது உடனடித்தேவை என்ற வாதங்களும் ஒரு புறமிருக்க மன அழுத்தங்களிலிருந்து சுயமாக விடுபடுவதற்கான நுட்பங்களும் முறைகளும் மாணவர்களுக்கு கல்வியினூடு பழக்கப்படுத்துதல் மிகவும் பயனுள்ளதாக அமையுமெனவும் அவ்வாறான செயற்பாடுகளுக்கு அதிக அழுத்தம் கொடுக்கப்பட வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன அழுத்தம் (Stress) என்றால் என்ன என்பதற்கு வாழ்க்கை மாற்றங்களுக்கு ஏற்ப மனமும் உடலும் கொண்டிருக்கும் பிரதிபலிப்பு அல்லது வெளிப்படுத்துகை எனக் குறிப்பிடப்படுகின்றது. ஸ்ரீபன் கோவே (Stephen Covey) என்பவரின் 90-10 கோட்பாட்டின் படி வாழ்க்கைச் செயற்பாடுகளில் 10%மானவை இயல்பாக நடைபெறுவதென்றும் மிகுதி 90%மானவை அவரவர்களினால் சுயமாக ஏற்படுத்தப்படுவதாகவும் குறிப்பிடுகின்றார். அதாவது 10% வீதமானவை எமது கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவை. உதாரணமாக பாடசாலை செல்லும்போது மழை பெய்தால் - நனையவேண்டும் அல்லது மழைபடாத இடங்களில் ஒதுங்கவேண்டும். மழையை எம்மால் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் மழையில் நனைவதா அல்லது ஒதுங்குவதா என்பதை தீர்மானிப்பது நாம் தான். மழைவருமென்று தெரிந்து குடையை எடுத்துச் செல்வதும் எம்மிலேயே தங்கியுள்ளது. திடீரென மோட்டார் சைக்கில் பழுதாவதை, பேருந்து காலதாமதமாகி வருவதை, இன்னொருவர் வாகனத்தில் முந்திச் செல்வதை எம்மால் தடுக்கமுடியாது. அதாவது எமது சக்திக்கு அப்பாற்பட்ட விடயங்களினால் ஏற்படும் விளைவுகளையும், மாற்றங்களையும் உள்வாங்குவதும் பிரதிபலிப்பை வெளிக்காட்டுவதும் அவரவர் ஆளுமைக்குட்பட்ட விடயங்களாகவே உணரப்பட்டுள்ளது.

குறிப்பாக பாடசாலை மாணவர்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொருவகையான பின்புலத்தைக் கொண்டிருப்பர். ஒவ்வொருவிதமான பிரச்சினைகளைக் கொண்டிருப்பர். எனவே பிரச்சினைகளை பொதுமைப்படுத்துவதைவிட ஒவ்வொருவரும் தனது பிரச்சினைக்கு தானே பரிகாரம் காணக்கூடிய வகையில் வழிப்படுத்துவதே சிறந்தாகக் கருதப்படுகின்றது. இதற்கு நேர்வகைச் சிந்தனை அல்லது உடன்பாடான மனப்பாங்குடன் நோக்குதல் அதிக மன அழுத்தங்களில் இருந்து விடுபடுவதற்கான உபாயமாகக் கருதப்படுகின்றது.

இவ்வாறு நோக்கும் போது வாழ்க்கை மாற்றங்களுக்கு ஏற்ப மனமும் உடலும் கொண்டிருக்கும் பிரதிபலிப்பு, பதிற்குறி அல்லது வெளிப்படுத்துகை பற்றி மாணவர்களிடத்தில் பழக்கப்படுத்துதல் முக்கியமாகக் கருதப்படுகின்றது. பிள்ளைகளின் வாழ்க்கைத்தரம், கற்றலுக்கான ஊக்கல், கல்வி அடைவு, வாழ்க்கை அனுபவங்கள் பெற்றுக்கொள்ளவதில் பெற்றோர், குடும்பத்தாரிற்கு அடுத்த நிலையில் ஆசிரியரின் பங்களிப்பு முக்கியமாகின்றது. மன அழுத்தங்கள் பற்றிய ஆய்வுகளில் மருத்துவர்கள் குறிப்பிடுகையில் எதிர்பாராத சூழலுக்குள் ஒருவர் தள்ளப்படும்போதே அதிக மனவழுத்தத்திற்கு உள்ளாகின்றானர். எனக்குறிப்பிடுகின்றனர். குழந்தைகளிடம் எதிர்பார்ப்புக் குறைவாகக் காணப்படுவதால் அவர்கள் மகிழ்வுடன் இருப்பதாகவும் வளர வளர அவர்களின் எதிர்பார்ப்புக்கள் அதிகரிப்பதால் மன அழுத்தங்களுக்கு உள்ளாவதாகவும் குறிப்பிடப்படுகின்றது. ஆகவே மன அழுத்தமென்பது பொதுவான ஒரு மனித செயற்பாடாகவே கருதப்படவேண்டியுள்ளதை அவதானிக்கலாம். மன அழுத்தம் நல்ல செயற்பாடுகளினாலும் ஏற்படுவதாக ஆராய்ச்சிகள் சுட்டிக்காட்டுகின்றன. இந்த நிலையில் மாணவர்களிடம் கற்றல் சார்பான மன அழுத்தங்களே அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றன. ஒவ்வொரு நிகழ்வும் பற்றிய உடன்பாடான மனப்பாங்கானது ஆசிரியரின் அல்லது மாணவரின் உளரீதியான பிரதிபலிப்பை பயன்தருவகையில் வலுவூட்டக்கூடியதாக அமையும். அதேசமயம் மரநிழல்களிலும், தற்காலிகக் கொட்டில்களிலும் உள்ள மாணவர்களிடம் எவ்வாறு நேர்வகையான சிந்தனையை அல்லது உடன்பாடான மனப்பாங்கை ஏற்படுத்தலாம் என்று வினா எழுப்பலாம். அந்தச் சூழலை, பாடசாலைக்கு வரும் சந்தர்ப்பத்திலாவது மாணவருக்கு தன்னம்பிக்கையை வளர்க்கும் செயற்பாடுகளில், மகிழ்வூட்டும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதற்கு முயலவேண்டும். அணுகுண்டினால் அழிக்கப்பட்ட யப்பானிய நகரமக்களின் எழுச்சியை நல்ல உதாரணமாகக் கொள்ளலாம்.

**பாடசாலைகளில் மாணவர் எதிர்கொள்ளும் மனஅழுத்தங்கள்:**

பாடசாலைகளைப் பொறுத்தவரையில் மன அழுத்தங்கள் இரண்டு வகையானதாக வெளிப்படுத்தப்படுகின்றது.

1. மன அழுத்தம் அகக் காரணிகளில் இருந்து:
   உடல் தோற்றம், சந்தோசமற்ற புலக்காட்சி, சுய நம்பிக்கையீனம் எதிர்வகையான மனப்பாங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மன அழுத்தம் புறக்காணிகளில் இருந்து:

2.1 சுற்றாடல் - சூழல்

குடும்பம், பாடசாலை, நண்பர் /சகபாடிகள், சமூகத்தினர், ஏனையோர்

2.2 உடலியல் - அழுத்தம்

அதிகளவான பாடசாலை நேரம், அதிகளவான வகுப்பறை மாணவர் எண்ணிக்கை

போக்குவரத்து, வளி மாசடைதல், அதிக இரைச்சல், போக்குவரத்து நெருக்கடி குறைவான காற்றோட்ட வசதி, பொருத்தமற்ற இருக்கை/ தளபாடம்

2.3 உளவியல் - அழுத்தம்

பாகுபாடு, பாடசாலை மாற்றம், ஆசிரியருடனான முரண்பாடு, அதிக போட்டிநிலை மீளக்கற்றல், வகுப்பறையில் அதிகநேரம் இருத்தல், கற்றல் குழப்பம் - பின்நிலை

விசேட தேவைகள்- அங்கீகாரம் அற்ற நிலை

2.4 சமூக உளவியல் - அழுத்தம்

உறவுகள்- தொடர்பாளர்கள், சகபாடிகள், பெற்றோர் நண்பர்களுடனான முரண்பாடுகள், தகவல் ஊடகங்கள் - இன்ரநெற், இரகசிய வாழ்க்கை

தற்போதைய காலகட்டத்தில் மாணவர்களின் அகக்காரணிகளில் இருந்தான மன அழுத்தங்களை விட புறக்காரணிகளில் இருந்தான மன அழுத்தங்களே அதிகமாகக் காணப்படுகின்றது. எனினும் புறக்காரணிகளில் இருந்தான தாக்கங்களின் பிரதிபலிப்பு அல்லது பதிற்குறி அகக்காரணிகளிலேயே தங்கியுள்ளதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. எனவே ஒரு தகைப்பின் அல்லது மன அழுத்தத்தின் வெளியீடானது பின்வரும் 3 நிலைகளினூடு நோக்கப்படுகின்றது. முரண்நிலை - மனவெழுச்சி - வெளிப்பாடு (பதிற்குறி). மாற்றங்களுக்கான பிரதிபலிப்பின் தன்மையிலேயே மன அழுத்தத்தின் அளவும் அது எவ்வாறு பாதிக்கும் என்பதும் தங்கியுள்ளதாகையால், மன அழுத்தத்தில் இருந்து பாதிப்படைவதும் அதிலிருந்து விடுபடுவதும் அவரவர் மனதிலேயே தங்கியுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் எமது கல்விக்கோட்பாடுகளுக்கும், சூழமைவுக்கும் இடையே காணப்படும் பாரிய இடைவெளியானது மாணவர் மட்டத்திலும், ஆசிரியர்கள் மட்டத்திலும் தன்னம்பிக்கையற்ற நிலையையும், எதிர்காலம் பற்றிய பயத்தினையும் ஏற்படுத்தியுள்ளது. எனினும் வெறுமனே இவைபற்றிய கருத்தாடல்களில் இருந்து விலகி தற்போதுள்ள சூழமைவிற்கேற்ப மாணவர்களை எவ்வாறு கல்விசார் செயற்பாடுகளினூடாக வழிப்படுத்தலாம் என்பதே உடனடித் தேவையாகின்றது.

பாடசாலை மாணவர்களைப் பொறுத்தவரையில் மன அழுத்தம் என்பது மனித இயல்பு என்பதை உணர்ந்துகொள்ளச் செய்ய வேண்டும். வெறுமனே மன அழுத்தம் ஒவ்வொருவருக்குமான விசேட தன்மையோ குறைபாடோ அல்ல என்பதை தெளிவுபடுத்த வேண்டும். மன அழுத்தத்தை இல்லாது செய்ய முயற்சிப்பதாலேயே அதிகமானோர் மன அழுத்தத்தைக் அதிகப்படுத்திக் கொள்ளுகின்றார்கள், எனவே மன அழுத்தங்களை முகாமை செய்துகொள்ள பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்கு ஒரே இலகுவான வழி நேர் சிந்தனையாகும். நேர்வகையான சிந்தனையுள்ளவர்கள் எல்லாவற்றையும் நல்ல விதமாகப்பார்க்கிறார்கள். உதாரணமாக அதிகநேரம் பயணம் செய்யவேண்டியிருந்தால் அந்த நேரத்தில் புத்தகத்தை வாசிக்கலாம், அல்லது காட்சிகளைப் பார்க்கலாம் போன்ற சிந்தனைகள் உதிக்க வேண்டும். வகுப்பறையில் எல்லா மாணவர்களும் முதன் நிலையை அடையவேண்டுமென்ற எதிர்பார்ப்பு சாத்தியப்படாது. ஆக மாணவர் தன்னிலையில் தன்னை மதிப்பிடுவதற்கான திறவுகோலாக பரீட்சையை கருத வேண்டும். இன்னொன்றையும் நோக்கலாம்: குடும்பத்தினருடன் காலை உணவு உண்ணும்போது மகள் தேநீர் கோப்பையை தவறுதலாக தட்டிவிடுகிறார் மேல்சட்டை மீது அது பட்டு விடுகின்றது இதனை எம்மால் தடுக்க முடியாது. ஆனால் இனி என்ன நடக்குமென்பதை எம்மால் தீர்மானிக்க முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சினம் கொள்ளுதல், மகளுக்கு ஏசுதல் மகள் அழுதல், மனைவிக்கு மேசை விளிம்பில் வைத்ததற்காக ஏசுதல் - தர்க்கப்படல்

2 தவறுதலாக நடந்துவிட்டது. இனிமேல் அவதானமாக நடக்கும்படி மகளுக்கு அறிவுரை கூறிவிட்டு உடையை மாற்றி அலுவலகத்திற்கச் செல்ல ஆயத்தமாதல்.

இதில் இரண்டாவது செயற்பாடு நேர்வகைச் சிந்தனையைக் காட்டுகின்றது. எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நிகழாதிருக்க உதவும். இவ்வாறு நேர்வகையான சிந்தனையை வளர்த்தெடுப்பதற்கு ஆசிரியர் என்ன செய்ய வேண்டுமென்பதே இன்றுள்ள பிரதான பணியாகும். ஆசிரியர் முதலில் நேர்வகை சிந்தனையாளராக இருக்க வேண்டும். அதற்கான தேடல்களையும் பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். சமூக ஆய்வறிக்கைகளின் படி மன அழுத்தங்கள் (Stress) ஒருவரின் செயலாற்றலில் (Perfomance) தாக்கம் செலுத்துகின்றது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதால் மன அழுத்தமும் தேவையென்பது உணரப்பட்டுள்ளது. இதனை சாதாரண ஒருவர் தனது செயலாற்றல்களுடன் ஒப்பிட்டு மீள்பார்வைசெய்யும் போது உணர்ந்துகொள்ள முடியும். ஆய்வாளர்களினால் முன்வைக்கப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள வரைபு ,தனை வெளிப்படுத்துகின்றது.




1. குறைந்த மனஅழுத்தம்- குறைந்த செயலாற்றல்
2. சராசரி மன அழுத்தம் - உத்தம செயலாற்றல்
3. அதிக மன அழுத்தம் - குறைந்த செயலாற்றல்

மேற்படி வரைபிலிருந்து மன அழுத்தம் என்பது தேவையானது என்று உணரப்படுகின்றது. எனவே எம்மிடமுள்ள மன அழுத்தங்களை உடன்பாடான மனப்பாங்கு ரீதியில் முகாமை செய்ய முயற்சிக்கவேண்டும். இதற்காக மாற்றங்களை இயன்றவரை உடன்பாட்டுடன் உள்வாங்குதல், பொருத்தமான தொடர்பாடல் நுட்பங்களை பயன்படுத்துதல், மற்றவர் செயற்பாடுகளை அங்கீகரிப்பதற்கு அல்லது உணர்ந்து கொள்வதற்கு கற்றுக்கொள்ளுதல், பொது இலக்கு பற்றிய தெளிவான விளக்கத்தைக் கொண்டிருத்தல், பொருத்தமான உதவிகளை பொருத்தமானவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல், பாலுணர்வு தொடர்பான விளக்கங்களை பெற்றோரிடம் அல்லது துறைசார் நிபுணர்களிடம், துறைசார்ந்த ஆசிரியர்களிடம் பெற்றுக்கொள்ளுதல், கற்றல் சிரமங்கள் பற்றி ஆசிரியர்களுடன், சகபாடிகளுடன், பகிர்ந்துகொள்ளுதல், அளவுக்கதிகமான வேலைகளை ஏற்றுக்கொள்ளாதிருத்தல், உணர்வுகளை பதிவுசெய்து கொள்ளுதல் (எழுதுதல், வரைதல்), வாழ்வியல் நிகழ்வுகளை மகிழ்வுடன் எதிர்கொள்ளுதல், அன்றாடச் செயற்பாடுகளை முன்னுரிமைப்படி பட்டியலிட்டு திட்டமிட்டுக்கொள்ளுதல், ஓய்வுநேரங்களில் விளையாடுதல், இசை, நடனம், கலை நிகழ்ச்சிகள், வீட்டலங்காரம் செய்தல் போன்ற செயற்பாடுகளை, மேற்கொள்ளப்பழகுதல், சுய திறன்களை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்களை பயன்படுத்திக்கொள்ளுதல், ஒழுங்கான உடற்பயிற்சி, தியானம், விளையாட்டுப் பயிற்சிகளை மேற்கொள்ளுதல், விதிவிலக்கான சில சம்பவங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாகக் கொள்வதை தவிர்த்தல், மற்றவர் கருத்துக்களை செவிமடுத்தல், தமது பிரச்சினைகள் தொடர்பாக திறந்த மனதுடன் பகிர்ந்துகொள்ளுதல். வாசிப்பு பழக்கங்களை மேம்படுத்தல், போன்ற செயற்பாடுகள் பற்றி மாணவர்களுக்கு தெளிவுபடுத்துதல் அவசியமாகும்.

மன அழுத்தம் யாவருக்கும் பொதுவானது. ஆனால் அதனை ஏற்படுத்தும் காரணிகள் வேறுபாடானவை, அதனை இல்லாமல் செய்வதற்கு முயற்சிப்பது நீண்டகாலமெடுக்கும் என்பதால் அதனை முகாமை செய்து நல்ல விளைவுகளை பெற்றுக்கொள்வதற்கு மாணவர்களை வழிப்படுத்துவதே இன்று நம்முன்னுள்ள பிரதான எழுவினாவாகும். இவற்றிற்கு சிறந்த வழியாக நேர்வகையான சிந்தனை, நேர்வகை மனப்பாங்கு, இசைந்துடன்படும் தன்மை போன்றவை மிகவும் பயனுள்ளதாக அமையும் எனக் கருதப்படுகின்றது.

The only difference between a diamond and a lump of coal is that the diamond had a little more pressure put on it. - Anonymous

வவுனியா கல்வியியற் கல்லூரியின்
25ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வித்தியா தீபமும் சிறப்புற
எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்

HONDA

HONDA

AHUJA
PUBLIC ADDRESS SYSTEMS

Authorised Dealer

N.S.RATNAM & BRO'S

#6, First Cross Street, Vavuniya.
T.P: 024 2221237 Fax: 024 2222116

E.Mail: nsratnambros@yahoo.com



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வினைத்திறன் மிகு வினவுதலும் வகுப்பறை மட்டக் கலந்துரையாடலும்.

திரு.க.சுவர்ணராஜா – உபபீடாதிபதி
(நிதி – நிர்வாகம்) – வ.தே.க.க

வினவுதல் என்பது இயற்கையானதொரு விடயம். நாம் உரையாடும் போது ஒருவருக்கொருவர் வினவுதலும் விடைபெறுதலும் இயற்கையாகவே நடைபெறும் ஒரு தொழிற்பாடு ஆகும். அத்துடன் வினவுதல் என்பது உள்ளுணர்வு சார்ந்த ஒரு விடயமாகும். அதாவது உடனடியாக ஏற்படும் ஒரு வகை மன உணர்ச்சியாகும்.

கற்றல் கற்பித்தலின் போது ஆசிரியர் பாடம் தொடங்கியது முதல் பாடம் முடியும் வரை மாணவர்களிடம் வினவுகின்றனர். அத்துடன் மாணவர்களும் ஆசிரியர்களிடம் வினவுகின்றனர்.

கற்றல் கற்பித்தல் செயன்முறையின் போது வினவுதல் மாணவர்கள் சிந்திப்பதற்காக விடுவிக்கப்படும் அழைப்பாக அமைகிறது. விரிவுரை முறையிலான கற்றல் கற்பித்தலின் போது, மாணவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கான உரைநடையில் வினவுதல், வினாக்களை எழுப்பி ஆசிரியரே விடையளித்தல் ஒரு நுட்பமாக அமைகின்றது. ஒரு நாளில் ஆசிரியர்கள் சராசரியாக தினமும் 400 வினாக்களை முன்வைப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன.

ஆசிரியர் வினவுதலை கற்பித்தலில் ஒரு நுட்பமாகக்கையாளும் போது மாணவர்களின் ஆர்வம், கற்றலுக்கான முன்வைப்பு, என்பன நிலைநிறுத்தப்படுவதோடு, துடிப்பான கற்றலை தோற்றுவிக்க முடிகின்றது. அத்துடன் ஆசிரியர்களின் வினவுதலானது மாணவர்களை தொடர்ச்சியாகக் கணிப்பிடவும் கற்றல்- கற்பித்தல் தொடர்பான பின்னூட்டலைப் பெறவும் உதவியாகஅமைகிறது.

வினவுதல் மூலமான பின்னூட்டலிலிருந்து ஆசிரியர் தனது கற்பித்தல் பாணியை மாற்றியமைத்தல், கற்பித்தல் ஒழுங்கை மாற்றியமைத்தல், கற்றலில் மாணவருக்கு உதவுவதற்கான நுட்பத்தை உட்படுத்தல் என்பனவற்றை உடனுக்குடன் செயற்படுத்த முடிகின்றது. அத்துடன் மாணவர்களின் கற்றலுக்குரிய சிறப்பான கற்பித்தல் நுட்பத்தையும் இனங்காணமுடிகின்றது.

கற்றல்- கற்பித்தலின் போது இடம் பெறும் வினவுதல், ஆசிரியர்களிடையேயும், மாணவர்களிடையேயும் தனிப்பட்ட சிந்தனை திறன்களை விருத்தியாக்குவதோடு, ஏனையோரின் சிந்தனைகளை ஒரு முகப்படுத்தி தர்க்க ரீதியாகச் செயற்படும் திறன்களையும் விருத்தியாக்குகிறது. வினவுதலுக்காக ஆயத்தமாகுதல், திட்டமிடல், வினாவை முன்வைத்தல் என்பன 0.9 விநாடிகளில் இடம்பெறுவதாக ஆய்வுகள் எடுத்துரைக்கின்றன. ஆகவே சரியாக வினவுதல் என்பது அதிஉயர் திறனாக கருதப்படுகின்றது.

வினவுதலின் போது ஒருவரின் வினாவுக்கு கிடைக்கும் விடை தொடர்பாக ஏனையோர் சிந்திக்கவும் அதனோடு இணைந்து செயற்படவும் தூண்டப்படுவதால் கற்றலினை ஈடுபாடும் அதிகரிக்கின்றது எனலாம். சிந்தித்தலிலும் அது தொடர்பாக ஈடுபாடும், கற்றலுக்கு தேவையான அடிப்படை விடயமாகும்.

மரபுரீதியாக ஆசிரியர்கள் கற்றல்- கற்பித்தல் செயன்முறையின் போது என்ன கற்கப்பட்டது? மாணவர்களுக்கு எந்தளவு விளங்கியுள்ளது? ஏற்கனவே கற்கப்பட்ட விடயங்கள் மாணவர்களின் ஞாபகத்தில் உள்ளதா? மாணவர்கள் விளங்கிக் கொள்ள இடர்படும் விடயங்கள் எவை? என்பவற்றுக்காக மாணவர்களிடம் வினவுதல் இயல்பானதாகும்.

மாணவர்களின் முன் அனுபவங்களைமீட்டிக் கொண்டு பாடத்தை ஆரம்பித்தல் ஆசிரியர்களின் வழக்கமாகும். பொதுவாக முன் அனுபவங்களை மீட்டுவதற்கு வினவுதலே பெரும் உத்தியாக கைக்கொள்ளப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் காரணங்களுக்காக ஆசிரியர்கள் வினவுதலைஆசிரியர்கள் வகுப்பறையில் கையாளுகின்றனர் அவையாவன:

1. கற்றல்- கற்பித்தல் செயன்முறையினை நீரோட்டம் போன்று தொடர்ச்சியாக பேணுவதற்காக
2. மாணவர்களின் கற்றல் ஈடுபாட்டினை அதிகரிப்பதற்காக
3. எதனை மாணவர்கள் கற்றுக் கொண்டனர். எதனைநன்குவிளங்கிக் கொண்டனர். எதனை நன்கு விளங்கிக் கொள்ளவில்லை எனக் கணிப்பிடுவதற்கு
4. மாணவர்களின் ஞாபகசக்தியை, கிரகிக்கம் ஆற்றலை பரிசோதிப்பதற்கு
5. புதிய தகவல்கள் தொடர்பாக, தனியாகவும், குழுவாகவும் இணைந்தும் சிந்திக்கும் திறமை மேம்படுத்துவதற்கு
6. மாணவர்களின் நோக்குகள்,அபிப்பிராயங்கள் என்பவற்றை அவதானிப்பதற்கும் கேட்டறிவதற்கும்
7. ஆக்கபூர்வ சிந்தனை, கற்பனையாற்றல், புதுமையாக்கல் என்பவற்றை ஊக்குவிப்பதற்கு
8. தமது கருத்துக்களை மாணவர்கள் சகபாடியிடம் பகிர்ந்து கொள்வதற்கு. அவர்களுடன் ஆக்கபூர்வமமாக விவாதிப்பதற்குமான சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு
9. மாணவர்கள் கருதுகோள்களை உருவாக்குதல், எண்ணங்களை முன்வைத்தல், அபிப்பிராயங்களை உருவாக்குதல், முன்னுரைத்தல் என்பவற்றுக்காக தூண்டலை ஏற்படுத்துவதற்கு
10. கற்றவற்றை பகிர்வதற்கான உணர்வுகளை வளர்த்தெடுப்பதற்கு
11. சவால்களை ஏற்கும் மனப்பாங்கினை உருவாக்குவதற்கு
12. உயர்மட்ட சிந்தனைகளை விருத்தியாக்குவதற்கு
13. பொருத்தமாக பதிலளிக்கும் திறனை மேம்படுத்துவதற்கு
14. பயமின்றி விடையளிக்கும் அல்லது கலந்துரையாடும் திறனை மேம்படுத்துவதற்கு மாதிரியாக ஆசிரியர் திகழுதல் வேண்டும்.

**வினவுதல் நுட்பங்கள்**

கற்றல்- கற்பித்தல் செயன்முறையின் போது வினவுதலை பல்வேறு வகையில் திட்டமிட்டுச் செயற்படுத்தலாம். அவையாவன

| அணுகுமுறை | செய்முறை | நன்மைகள் |
|---|---|---|
| சிந்திப்பதற்கான நேரம், வினா வழங்கப்பட்டுள்ள மாணவர் சிறிது நேரம் அமைதியாக சிந்தித்து பின்னர் விடையளித்தல் | மாணவர்கள் முன் வினாவை வைத்தல். அவர்கள் அவசரப்பட்டு விடையளிக்காமல் நன்கு சிந்தித்து விடையளிக்க அறிவுறுத்தல் | விடையளிக்க முன் ஆழமாக சிந்திக்கும் பழக்கம் விருத்தியாகுதல் ஒரு வினாவுக்கு விடையளிக்கவும் பல்வேறு எண்ணங்கள் உருவாகுவதற்கும் சந்தர்ப்பம் எல்லோருக்கும் கிடைத்தல் |
| சிந்திப்பதற்கும், சக பாடியுடன் பகிர்வதற்கும் நேரம் ஒதுக்குதல் | வினாவிற்கான விடையினை மாணவர் சிந்தித்து சகபாடியுடன் பகிர்ந்து பின்னர் விடையளித்தல் | மாணவர்கள் சிந்திப்பதற்கு நேரத்தை ஒதுக்குவர். தாம் சிந்தித்தவற்றை சகபாடியுடன் பகிர்ந்து பின்னர் சரியான விடையை தெரிவு செய்து முன் வைப்பர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| விடையளிக்க கை உயர்த் தாத நிலை | ஆசிரியர் வினாவை முன் வைத்தவுடன் விடைய ளிப்பதற்கு ஒருவரும் கை உயர்த்த மாட்டார்கள். எல்லோருக்கும் சிந்திப் பதற்கு நேரம் ஒதுக் கப்படும். ஆசிரியர் பெயர் குறிப்பிடும் ஒருவரின் விடையளிப்பார். | மாணவர்கள் எல்லோரும் விடையளிக்க ஆயத்தமாக வேண்டும். மற்றவர்களின் விடை பற்றி கவலைப்படா மல் தமது சொந்த எண்ணங்களை வெளிப் படுத்தும் வாய்ப்பு கிடைக் கும். |
| கூடைப்பந்தாட்ட வினவுதல் முறை | ஆசிரியர் ஒவ்வொரு மாணவனும் விடை யளிக்க தூண்டுவார். ஒரு மாணவனின் விடையோடு ஏனைய மாணவர்களின் விடைகளையும் ஒப்பிட்டுக் கருத்து தெரிவிப்பார் | மாணவர்கள் விடை யளிக்க ஈடுபாடு காட்டு வார். மாணவர்கள் விடையளிப் பதற்கான தூண்டுதல் உருவாகும். விடையளிப்பதற்கான அடிப்படை ஆதாரங்கள் ஒவ்வொரு மாணவனுக்கும் கிடைக்கும். |
| கட்டாயமாக விடைய ளித்தலும் தன்னார் வத்துடன் விடைய ளித்தலும் | தாமாகவே முன்வந்து விடை யளித்தோரின் விடை களையும்,விடையளிக்காது இருந்தவர்களை கட்டாயப் படுத்தி பெற்ற விடயங் களையும் தொகுத்து ஆசிரியர் சரியான விடையை முன்வைப்பார். | மாணவர்கள் எல்லோ ரினதும் ஈடுபாடு அதி கரிக்கும் சவால்களை ஏற்றுக் கொள்ள மாணவர் களை தூண்டப் படுவர். |
| நண்பர்க்கு அழைப்பு விடுத்தல் (Phone A friend) | ஆசிரியர் முன்வைத்த வினாவிற்கு விடையளிக்க அழைக்கப்பட்ட மாணவர் தனக்கு விடை தெரியா விட்டால் தனது நண்பர் ஒருவரிடம் உதவி கோருதல் | முழு வகுப்பு மாணவர் களின் அவதானத்தை ஈர்க்க முடியும். மாணவர்களின் அழுத் தத்தை குறைக்க முடியும். சுயமதிப்பு உருவாகும். |
| ஒருவரை முன் அழைத்து வினவுதல் ( Hot Seating) | ஆசிரியர் தாம் முன் வைத்த வினாவிற்கு விடையளிக்க ஒரு மாணவனை வகுப் பறையின் முன்னே வருமாறு அழைத்தல் | தனிப்பட்ட சவாலை ஏற்கும் மனப்பாங்கு உருவாகும். ஏனையோர் முன் தயங் காது பதில் அளிக்கும் தன்னம்பிக்கை உரு வாகும். |
| மேலங்கி அணிந்து நிபுணர் போல் நின்று விடைய ளித்தல் ( Man the & The Expert) | மேலங்கி அணிந்த ஒரு மாணவன் நிபுணர் போல் முன்வந்து ஏனைய வகுப்பு மாணவர்களின் வினாக் களுக்கு விடையளித்தல் | சுயமதிப்பு உருவாகும். தன்னிடமுள்ள அறிவை மற்றவருடன் பகிர்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும். |
| முன்னோட்ட வினாக்கள் | பாடத்தை தொடங்கும் முன்னர் வினாவை முன் வைத்தல் அல்லது காட்சிப் படுத்தல் | பாடத்தை கற்கும் போதே வினாக்களுக்கு விடை யளிக்க ஆயத்தப் படுத்தும் திறன் உருவாகும். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சோடி சேர்ந்து விடைய ளித்தல் | மாணவர்களை சோடியாக சேர்ந்து விடைகளை கண்டறிந்து முன்வைத்தல் | மாணவர்கள் இடைத்தாக்கம் அதிகரிக்கும்.<br>ஈடுபாடு அதிகரிக்கும்.<br>ஆழமான கற்றல் உரு வாகும். |
| முறைவாக வினாக்களை வழங்குதல் | ஒருவருக்கு வழங்கிய வினா மற்றவர்க்கு தெரியாது | வித்தியாசமான ஆக்க பூர்வமான விடைகள் வெளிவரும். மற்றவர் விடையில் சார்ந்திருக்கும் தன்மை குறைவடையும் |
| 5W மாதிரி வினாக்களை வழங்குதல் | Who - யார்<br>What - என்ன<br>Where -எங்கு<br>When -எப்போது<br>Why - ஏன்<br>ஒரு வினாவிற்கு மேற் கண்டறிய அடங்கியவாறு விடையளிக்க தூண்டுதல் | பிரதிபலிப்புஉருவாக்கும் கிரகித்தல் திறன் அதிகரி க்கும்.<br>கண்டறிந்து கற்கும் ஆற்றல் உருவாகும்<br>கற்பனை திறன் அதிகரிக் கும்.<br>கருத்துக்களை உருவாக் கும் திறன் அதிகரிக்கும். |
| உயர் சவால் வினாக்கள் | அறிவு மட்ட விருத்தியின் அடிப்படையில் வினவுதல்<br>புளூமின் கல்வி இலக்கு பகுப்பாய்வை பயன்படுத் தலாம். | உயர் மட்ட சவால் உருவாகும் அவரவர் அறிவு மட்டத்திற்கு ஏற்ற வினாக் கள் வழங்கப்படுவதால் கற்றலின் சலிப்பு நிலை நீக்கும். |
| தரத்திற்கு ஏற்ற வரிசைக் கிரமமாக வினாவுதல் | எளிய மட்ட வினாவிலிருந்து உயர்மட்ட வினாவுக்குச் செல்லல்.<br>மாணவர்களின் தரத்திற் கேற்ப வினாக்களை முன்வைத்தல் | எல்லோரும் விடையளிக்கும் சந்தர்ப்பம் உருவாகும்.<br>பாடத்தினை படிப்படியாக விளங்கிக் கொள்ள வாய்ப்பு ஏற்படும்.<br>மாணவர் துலங்கலின் அறிவு அதிகரிக்கும் தனது நிலை பற்றிய சுய மதிப்பிடு மாணவரிடையே உருவா கும். |
| பெரிய வினாக்கள் (கிளரும் வினாக்கள்) | வினாவை முன்வைத்தவுடன் விடையளிக்க முடியாதவை பாடத்தின் ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்டு பாட முடிவில் விடையளிக்க முடியுமானவை.<br>முழுப் பாடத்தினையும் அவதானிக்காவிட்டால் விடை அளிக்க முடியாது. | இவ்வகையான வினாக்கள் மாணவர்களிடையே ஆழமான பரந்த அறிவை உருவாக்குகின்றன.<br>பெரும்பாலும் அறநெறி சார்ந்த விடயங்களை கணிப்பிடுவதற்கு இவ்வகை வினாக்கள் பொருத்த மானவை.<br>மாணவரிடையே சுயமாக ஒரு விடயத்தை விவரிக்கும் ஆற்றல் உருவாகும். |
| குவியப்படுத்தப்பட்ட வினவு தல் | பெரிய வினாக்களுக்கு அல்லது சிக்கலான வினாக் களுக்கு விடையளிக்க | படிப்படியாகவிடையளிக்கும் சுயநம்பிக்கை மாணவரி டத்தே உருவாகும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | மாணவர்கள் இடருறும் போது குவியப்படுத்தப்பட்ட வினாக்கள் மூலமாக ஆசிரியர் மாணவர்கள் படிப்படியாக விடையளிக்கும் ஆற்றலை தூண்ட முடியும். | மாணவர்கள் தமது இயலாமைக்கேற்ப சிந்தித்து பின் அதனை விரிவுபடுத்தும் திறன் உருவாகும். |
| ஆகக் குறைந்தளவு விடயங்களை உள்ளடக்கி விடையளிக்க வேண்டிய வினாக்கள் | மாணவர் ஆகக் குறைந்தளவு விடயங்களை உள்ளடக்கி விடையளிக்க வேண்டுமென வரையறுத்தல். உதாரணமாக ஆகக் குறைந்தது ஐந்து விடயங்கள் விடையில் காணப்படல் வேண்டும். | பேச்சாற்றல் மற்றும் பிரச்சினை தீர்க்கும் ஆற்றல் விருத்தியாகும். பொருத்தமான சொற்களை தொழினுட்ப சொற்களை கொண்டு விடையளிக்கும் திறன் உருவாகும். |
| மூடப்பட்ட வினாக்கள் திடமான விடைகள் கொண்டவை | மாணவர் ஆம் / இல்லை என விடையளிக்கக் கூடிய வினாக்கள் அல்லது திடமான விடைகள் கொண்டவை | குறைந்த மட்ட சவால் விடைகளுக்கு காரணம் கூறத் தேவையில்லை. அறிவு மற்றுத் கிரகிப்பு மட்டத்தை கொண்டவை. மாணவர்கள் இலகுவாக விடையளிக்கும் ஊக்கம் ஏற்படும். |
| சைகையுடைய வினாக்கள் அல்லது தூண்டலுடன் கூடிய வினாக்கள் | மாணவர்கள் வினாக்களுக்கு விடையளிக்க உதவி வழங்கப்படும். ஆசிரியர் மாணவர்கள் விடையளிக்க துணைக் குறிப்புக்களை, வழி காட்டலை வழங்குவார். | மாணவர்களிடம் பொதிந்துள்ள அறிவை பாடத்துடன் இணைக்கும் வாய்ப்பு உருவாகும். வழங்கப்பட்ட தூண்டல்களுடன் விடையளிக்க வேண்டிய கட்டாய நிலை உருவாகுவதால் எல்லா மாணவர்களும் விடையளிக்க முயற்சி செய்வார்கள். |
| ஒரு பகுதி விடையளிக்க வேண்டிய வினாக்கள் | முன்வைக்கப்பட்ட வினாவுக்கு மாணவர்கள் பகுதி பகுதியாக நிதானித்து பொறுமையுடன் விடையளிப்பின் கூட்டு ஈடுபாட்டுடன் விடையளிப்பார். | ஒருவர் விடையளித்த பகுதியின் அடுத்துவரம் பகுதியை அடுத்த கூறுதல் வேண்டும். அவதானம் நிதானமாக பதிலளித்தல் என்பன உருவாகுதல். |
| திறவுகோல் வினாக்கள் | ஆசிரியர் முன் வைத்த வினாக்களில் தாம் விரும்பிய வினாக்களுக்கு மட்டும் மாணவர் விடையளிப்பர். | வினாக்களை முன்னுரிமைப் படுத்தி விடையளிக்கும் ஆற்றல் மாணவரிடையே உருவாகும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகபாடி மதிப்பீடும் வாண்மை விருத்தியும்

திரு.தி.ஜெயகாண்டீபன் – உபபீடாதிபதி
(தொடருறுகல்வி) – வ.தே.க.க

"கல்வியில் தரவிருத்தி" என்ற எண்ணக்கரு மேலோங்கி நிற்கின்ற இக் காலகட்டத்தில் கல்வி பற்றிய புதிய சிந்தனைகள் ஒவ்வொரு நிலையிலும் கல்வியில் பண்பு தர விருத்தி பற்றியே அதிகம் பேசப்படுகின்றது. இந்தநிலையில் தரமான கல்விக்கு தரமான ஆசிரியர்கள் என்ற முன்மொழிவு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் தொடர்ச்சியாக தரமான ஆசிரியர்களுக்கு தரமான பயிற்சி என்ற சிந்தனையும் முன்வைக்கப்டுவது சாதாரணமானதாகும்.

இலங்கையில் ஆசிரியர் சேவை முன்பயிற்சியில் தேசிய கல்வியியற் கல்லூரிகள் முக்கியத்துவம் 1985ம் ஆண்டிலிருந்து படிப்படியாக செல்வாக்குப் பெற்று வருகின்றமை வெளிப்படையானதொன்றாகும். இவ்வாறான நிலையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளினால் வழங்கப்படும் பயிற்சியின் பண்புதர விருத்தி உறுதிப்படுத்தல் பற்றிய நடவடிக்கைகளும் காலத்துக்குக் காலம் புத்தாக்கம் செய்யப்பட்டு வருகின்றது. தேசிய கல்வியியற் கல்லூரிகளின் பயிற்சி முறைமையில் நிறுவனத்தில் வதிவிடப் பயிற்சி காலத்தில் வழங்கப்படும் கற்பித்தல் பயிற்சியிலும் மூன்றாவது ஆண்டில் உள்ளக பயிற்சிக் காலத்தில் முழுமையாக களப்பயிற்சியாக வழங்கப்படுகின்ற கற்பித்தல் பயிற்சியிலும் பண்புதர விருத்தி தொடர்பாக அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

உள்ளகப் பயிற்சியின் தரமேம்பாட்டிற்கான தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரிய கல்வியலாளர்களாலும் உள்ளக மேற்பார்வைமுறைகள் நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வரப்படுகின்றது. உள்ளக மேற்பார்வையை மேலும் வலுவுள்ளதாக்குவதற்கு புதிய புதிய நுட்பங்கள் அவ்வவ் போது அறிமுகப்படுத்தப்படுவதும் கையாளப்படுவதும் இயல்பானதொன்றாகும். அதே முயற்சியில் ஆசிரியருக்கு ஆசிரியர் முறை சகபாடி மேற்பார்வை முறை போன்ற நுட்பங்களை அறிமுகப்படுத்தும் முயற்சி ஆசிரியர் பயிற்சி முறையில் கையாளப்பட்டு வரப்படுகின்றது. இம் முறைகளில் ஒன்றை தேசிய கல்வியியற் கல்லூரிகளின் உள்ளகப் பயிற்சி முறையில் வலுவுள்ளதாக்குவதற்கு எடுத்துக் கொள்ளும் முயற்சி அவசியமாக உள்ளது.

ஏதாவது ஒரு தொழிலுக்கு அமர்த்தப்படுவர்கள் அத்தொழில் தொடர்பான விருப்பு சார்பான மனப்பாங்குடையவர்களாக அமையும் போது அத் தொழிலில் அவர்கள் ஈடுபடுத்தப்படும் போது அது வினைத்திறன் விளைத்திறனுடையதாக அமையும். ஆனால் இலங்கையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு அனுமதி பெறுவோரில் பெரும்பாலானோர் ஆசிரியர் தொழிலில் விருப்புடையவர்களாகவராமல் இருப்பது ஒரு துரதிஸ்ரவசமான நிலையாகும். பெரும்பாலானவர்கள் தொழில் வாய்ப்பை நோக்காகக் கொண்டே தேசிய கல்வியியற் கல்லூரிகளில் அனுமதி பெறுகின்றனர்.

அதனால் அவர்களது மனப்பாங்கு பயிற்சிக்கு சார்பானதாக அவ்வளவாக அமைவதில்லை. வெறுமனே பரீட்சை நோக்கத்திலேயே பயிற்சி பெறுவதாக அமைத்து வருகின்றமையால் பயிற்சியாளர்கள் தமதுதொழில் வாண்மை விருத்தியில் சுயமாக செயற்படும் பண்புக்கு முக்கியத்துவம் அளிப்பதாக அமையாது போய்விடுகின்றது. கல்வியியற் கல்லூரிகளில் தொழில் வாண்மை விருத்தியை ஏற்படுத்துவதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்ற போதும் சுயமாக தொழில் வாண்மை விருத்தி ஏற்படுத்திக் கொள்வதில் நாட்டமின்மை ஆசிரியர் தொழில் வாண்மை விருத்திக்கு தடையாகவும் அமைந்து விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி பெறும் மாணவ ஆசிரியர்கள் தமது தொழில் வாண்மை விருத்தியை விடபரீட்சையில் தேர்ச்சியடைவதற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்து செயற்படுகின்றனர். அதனால் எல்லாவித செயற்பாடுகள் தகவல்களும் தமது ஆசிரிய கல்வியலாளர்களையே எதிர்பார்க்கின்றனர். அத்துடன் சுய தேடல்களுக்கும் இடமின்றிபோய் விடுகின்றது. இவ்வாறான நிலை தொழில் வாண்மை விருத்திக்கு சாதகமாக அமையமாட்டாது.

சுயமாகதொழில் வாண்மை விருத்திக்கு முயற்சிக்கின்ற போதே அது அதிக பயனுடையதாக அமையும்.

ஆசிரிய கல்வியலாளர்களால் முழுமையாக மாணவ ஆசிரியர்களது எதிர்பார்க்கைகளை நிறைவு செய்ய முடியாதிருக்கும். இதற்கு தேசிய கல்வியியற் கல்லூரிகளில் காணப்படுகின்ற ஆசிரிய கல்வியியலாளர்களின் பற்றாகுறையும் ஏனைய வளங்கள் உள்ளீடுகளின் பற்றாக்குறையும் காரணமாக அமைகின்றபோது மாணவ ஆசிரியர்களது சுயமுயற்சி சுயதேடல் சுயஈடுபாடு ஆகியன சுயமான தொழில் வாண்மை விருத்திக்கு இட்டுச் செல்வதுடன் அத்தகைய வளப்பற்றாக்குறைகளால் ஏற்படக் கூடிய தடைகளை நிவர்த்தி செய்யக் கூடியதாகவும் அமையும்.

ஆசிரிய கல்விக்கான கலைத்திட்டங்கள் தயாரிக்கப்படுகின்ற போது அங்கு சுயமான தொழில் வாண்மை விருத்திக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பட்டறிவு பயிற்சி தொடர் மதிப்பீடு சுயமதிப்பீடு சகபாடி உதவுதல் போன்ற முறைகள் ஆசிரிய கல்விகலைத்திட்டத்தில் முக்கியம் பெறுகின்றமை இங்கு ஆதாரமானவையாகும். எனவே ஆசிரியர் கல்வி கலைத்திட்ட நோக்கங்களை நிறைவு செய்து கொள்வதிலும் சகபாடி மூலமான தொழில் வாண்மை விருத்தி முக்கியம் பெறுகின்றது.

ஆசிரிய மாணவர்களின் சுயமான தொழில் வாண்மை விருத்தியில் காட்டுகின்ற குறைவான அக்கறையை அதிகரிக்க வேண்டிய தவிர்க்க முடியாத தொழில் வாண்மை விருத்திக்கு இட்டுச் செல்கின்றது. சகபாடிகள் மூலமான கற்பித்தற் பயிற்சி மேற்பார்வை பற்றிய சிந்தனைப் போக்குகள் அதிகரித்துச் செல்வதற்கு மேற்கூறப்பட்ட நியாயங்கள் முக்கியமானவையாக காணப்படு:கின்றன.

ஆசிரியர்கள் கல்வி பற்றிய நீண்ட வரலாறு காணப்படுகின்றது. ஆசிரியர் கல்வி நேரம் பற்றி பேசப்படுகின்றபோ தெல்லாம் ஆசிரியர் கல்வி பற்றி பேசப்படுவது வழமையாகி விட்டது. அபிவிருத்திக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதிலும் தரமான கல்வியை உறுதிப்படுத்துவதிலும் முக்கியமானவர்கள் ஆசிரியர்கள் என்று வரலாறு உணர்த்தி நிற்கின்றது. (National Foundation for the Important in Education USA 1996) அந்தவகையில் ஆசிரியர்கள் இன்று கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் முக்கிய பாத்திரம் எடுக்க வேண்டியவர்களாக் காணப்படுகின்றனர்.

மறுபக்கமாக ஆசிரியர்கள் தமது தொழில் வாண்மையை விருத்தி செய்து கொள்ள வேண்டும் என ஆசிரியர் கல்வி வரலாறுகள் உணர்த்தி நிற்கின்றன. ஒவ்வொரு நாடுகளிலும் ஆசிரியர் வாண்மை விருத்தி பற்றிய ஆய்வுகளும், அதன் அவசியம் பற்றிய கருத்துக்களும் வளர்ந்து வலுப்பெற்றும் வருகின்றன. அதிகம் ஆசிரியர் முன்னேற்ற பயிற்சிபற்றி (Initial Teachers Education) அதிகம் சிந்திக்கப்படுவது பற்றிய வரலாறுகள் அண்மைய காலங்களில் அதிகம் காணப்படுகின்றன. இவ்வாறான சிந்தனைப் போக்கில் ஏனைய வாண்மைக் தொழில்கள் போன்று ஆசிரியத்துவமும் ஒரு வாண்மை தொழிலாக கொள்ளப்பட்டு ஆசிரியர் வாண்மை விருத்தி பற்றிய சிந்தனைகளின் வளர்ச்சியும் ஆசிரியக் கல்வி வரலாற்றில் இடம்பெறுகின்றன. இவ்வாறான வரலாற்றுப் பதிவுகளில் ஆசிரியர் முன் கல்வி பற்றிய சிந்தனைகளும் வாண்மைக்கு ஆயத்தமாகுதல் பற்றிய கருத்துக்களும் அதிகமாக முன்வைக்கப்படுகின்றன. அதிகம் ஆசிரியர் சேவை முன்கல்வி பற்றிய கவனத்தில் கற்பித்தல் பயிற்சி பற்றிய கவனம் அதிகரித்து வந்திருக்கின்றன.

ஆசிரியர் கல்வியில் பல்வேறு கோபாட்டு ரீதியான - நடைமுறை ரீதியான கலைத் திட்டங்கள் உள்ளடக்க அவ்வப்போது மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை ஆசிரியர் கல்வியில் முக்கிய பகுதியாக கற்பித்தல் பயிற்சியிலும் அதன் அபிவிருத்தி முன்னேற்றத்திலும் அதிகளவிலான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வந்திருப்பதையும் வரலாறுகள் பதிவுகளாக்கியுள்ளன. கற்பித்தல் பயிற்சிக்கு முக்கியமாக அமைவது மேற்பார்வையும் சரியான வழிகாட்டல்களுமாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கருதப்பட்டு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றமை வெளிப்படையானதாகும். கற்பித்தல் பயிற்சி மாணவ ஆசிரியர்களுக்கு ஆசிரியர் கல்வி நிறுவனங்களில் அல்லது ஆசிரியர் கற்கை நெறிகளில் பெற்றுக் கொண்ட கோட்பாட்டு ரீதியான விடயங்களை பாடசாலைகளில் களத்தில் நின்று மாணவர்களுடான ஏனைய ஆசிரியர்களுடான இடைத் தொடர்புகளுடன் பரீட்சித்துப் பார்த்து பயிற்சி பெறுவதற்கு உதவுகின்றது. இவ்வாறுகற்பித்தல் பயிற்சி எந்தளவுக்கு முக்கியத்துவம் பெறுகின்றதோ அந்தளவுக்கு கற்பித்தல் பயிற்சி மீதான மேற்பார்வையும் முக்கியத்துவம் பெற்று வந்திருக்கின்றது.

கற்பித்தல் பயிற்சி மேற்பார்வைக்கு ஆசிரியர் கல்வி வரலாற்றில் பல்வேறு முறைகளும் நுட்பங்களும் அவ்வவ்போது அறிமுகப்படுத்தப்பட்டு கையாளப்பட்டு வரப்பட்டிருக்கின்றது. கற்பித்தல் பயிற்சி மேற்பார்வையில் வாண்மைக்கான வழிகாட்டல், தீர்மானமெடுத்தல் ஆதரவு உதவியளித்தல் ஆகிய மூன்று முக்கிய அம்சங்கள் இடம்பெறுகின்றன. இம்மூன்று அம்சங்களுக்காக கற்பித்தல் பயிற்சி மேற்பார்வையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டோருக்கிடையில் இடம் பெறும் முக்கிய செயற்பாடாக அவை அமைகின்றன. இவ்வாறான முக்கிய கற்பித்தல் பயிற்சி மேற்பார்க்கு கையாளப்படும் நுட்பங்களில் அண்மைக் காலங்களில் சகபாடி மேற்பார்வை பற்றிய கருத்துக்கள் வளர்ச்சி பெற்று வருகின்றன சகபாடி மேற்பார்வை என்பதை விட சகபாடி உதவியளித்தல் (Peer coaching) அல்லது சகபாடி ஆதரவளித்தல் (Peer Support) என்ற பதப் பிரயோகங்கள் அர்த்தமுடன் பயன்படுத்தப்படுகின்றன. சகபாடி மேற்பார்வையில் சகபாடி உதவி, ஆதரவு, ஊக்குவிப்பு ஆகிய முக்கிய விடயங்கள் கற்பித்தல் பயிற்சி முன்னேற்றத்திற்கு உதவுகின்றன.

சகபாடி மேற்பார்வை என்னும் செயற்பாட்டில் சகபாடிபயிற்சியளித்தல் (Peer Coaching)என்னும் கருத்தும் செயற்பாடும் ஆய்வாளர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு ஆசிரியர் கல்விவரலாற்றில் முக்கியத்துவம் பெற்றுவருகின்ற சகபாடி மேற்பார்வை நுட்பம் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய நன்மைகள், விளைவுகள் இலங்கையிலும் உள்ள ஆசிரியர் கல்வி நிறுவனங்களிலும் அவற்றின் பாடநெறிகளிலும் பயன்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்பது சார்பிலக்கிய வரலாறு காட்டும் ஆதாரத்துடனான முடிவாக கொள்ளமுடியும்.

ஆசிரிய முன்கல்வியில் இன்று இலங்கையில் முக்கியத்துவம் பெற்றிருக்கின்ற தேசிய கல்வியியற் கல்லூரிகளில் உள்ளகப் பயிற்சியின் போது (Internship) சகபாடி மேற்பார்வை பலவழிகளிலும் உதவியளிக்கக் கூடியதாக பயனுடைய விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்து தரமான கல்விக்கும் ஆசிரியர் வாண்மை விருத்திக்கும் வழியேற்படுத்தக் கூடியதாக அமையும்.

உசாவியவை :.


1. https://cft.vanderbilt.edu/guides-sub-pages/peer-review-of-teaching/
2. https://www.nmu.edu/ctl/peer-evaluation-teaching
3. https://www.crit.umich.edu/resources/peer-review
4. https://ctl.yale.edu/Peer-Eval-Teaching
5. https://www.flinders.edu.au › ... › Teaching evaluation gateway › Peer Evaluation of Teaching
6. https://oregonstate.edu/cla/sites/default/files/mentoring/peer-evaluation.pdf
7. https://facultycenter.byu.edu/sites/default/files/files/peer_review_of_teaching.doc
8. https://academicaffairs.uoregon.edu/peer-review-and-evaluation-teaching
9. https://ctl.sdsu.edu › Resources
10. https://www.oecd.org/edu/school/44568106.pdf
11. https://Adwww.info.com/




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேன்மை நோக்கிய முகாமைத்துவம்

திரு. பொ. சத்தியநாதன்
விரிவுரையாளர் இணைப்பாளர்
(நிதி நிர்வாகம்)– வ.தே.க.க

முகாமையாளர் ஒருவர்,தான் கடமையாற்றும் சூழலில் சிறப்பான கருமங்களை ஆற்ற வேண்டும் என்பது, நிறுவன ஒழுக்கம்,தொழில் தொடர்பான விதிகள், சட்டங்கள் என்பவற்றால் தீர்மானிக்கப்படுபவையாக இருந்தபோதும் குறிப்பிட்ட முகாமையாளரின் மனப்பாங்கில் அதிகளவு தங்கியிருக்கின்றது. எந்த நிறுவனங்களாயினும், தொழில் இடங்களாயினும், அவை வகுக்கப்பட்ட சட்ட திட்டங்கள், வரையறைகள், இயலுமைகள் என்பவற்றிற்கு அமைய இயங்க வேண்டியது தவிர்க்க முடியாத நிலைமையாகும். அதேபோல நிறுவனம் ஒன்று அமைந்துள்ள சூழலின் சமூக, கலாசார நிலைமைகளால் உருவாக்கப்பட்ட சமூக நிலைமைகள், சமூகவிதிகள், சம்பிரதாயங்களும் கூட குறிப்பிட்ட நிறுவனத்தின் இயக்கத்தின் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இருந்தபோதும் இவை யாவற்றையும் முழுமையாக ஆக்கிரமிக்கும் தன்மை ஒரு நிறுவனத்தின் முகாமையாளர் கொண்டுள்ள மனப்பாங்குடன் தொடர்புபட்டுக் காணப்படுகிறது என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய உண்மையே.

மேன்மைநோக்கியமுகாமைத்துவம் என்பது அமெரிக்கா முகாமைத்துவ கோட்பாடுகளில் இருந்து ஆசிய நாடுகளுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியது. இதன்படி நிறுவனம் ஒன்றின் கருமங்களைச் சிறப்பாக ஆற்றுவதற்கு இம் முகாமைத்துவம் உதவிபுரியும். நிறுவனங்கள் பலவற்றில் இன்னமும், முகாமையாளர், தான் சுமை மிக்கவராகவும், வேலைப்பளு உடையவராகவும் இருப்பதாக நொந்து கொள்ளும் நிலையினை நீக்குவதற்கு மேன்மை நோக்கிய முகாமைத்துவம் வாய்ப்பளிக்கும்.

மேன்மைநோக்கியமுகாமைத்துவம் தன்னுள் விதிவிலக்கு அடிப்படையிலான முகாமைத்துவக் கோட்பாட்டை உள்ளடக்கியிருக்கிறது. அதாவது முகாமையாளர் ஒருவர் தனது நிறுவனத்தின் எல்லா வேலைகளையும் தானே கண்காணிக்க வேண்டுமென்ற நிலையில் இருந்து விலகி ஊழியர்களால் ஆற்றப்படக் கூடுமென்ற வேலைகளை ஊழியர்களே கண்காணித்துக் கொள்ளச் சந்தர்ப்பம் வழங்குவதாகும். இவ்விதிவிலக்கு முகாமைத்துவதத்துவம் மேன்மை நோக்கிய முகாமைத்துவத்துக்கு ஆதாரமாகின்றது. ,ங்குஊழியர் சுயாதீனத்துக்கு இடம் உண்டு. இந்நிலை, முகாமைத்துவத்தில் சிறப்பான காரியங்களை ஆற்ற வழிவகுத்து மேன்மை நோக்கிய முகாமைத்துவத்தை உருவாக்குகின்றது. "மேன்மை நோக்கிய முகாமைத்துவம்" என்பதை ரொம்பீற்றர் (Tom peter) என்பவர் அறிமுகப்படுத்தினார். இவர் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு இம்முகாமைத்துவக் கொள்கையின் இன்றியமையாமையை வலியுறுத்தி, அதற்கான எட்டுக் கருத்துக்களைக் குறிப்பிடுகின்றார். அவைபின்வருமாறு :

- செயல் நோக்கியஆய்வு : இதன்படி நிறுவனங்கள் ஆய்வுசெய்வதும் அதனை நிச்சயம் செயல்வடிவம் பெறவும் செய்யவேண்டும்.
- வாடிக்கையாளர் தேவைகளுக்கு மதிப்பளித்தல் : பொருட்களையும், சேவைகளையும் பெற்றுக் கொள்கின்ற வாடிக்கையாளர்களை முதன்மைப்படுத்தல்.
- முயற்சியாண்மையும் சுயாதீனமும் : சவால்களை எதிர்கொள்ளத் தயாராயிருத்தலும் ஊழியர்களின் சுயாதீனத்தை அனுமதிப்பதும் ஆகும்.
- தொழிலாளரூடாக உற்பத்தித் திறன் : பௌதீக வளங்களை விட ஊழியர்கள் மீதே அதிக அக்கறை காட்டவேண்டும் என்பதாகும்.
- சரியெனக் கருதுவதை முன்னெடுத்தல் : சரியெனவும் அவசியம் எனவும் கருதுவதைக் காலம் தாழ்த்தாது முன்னெடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எளிமையான நிர்வாகம் : நிறுவனத்தின் நிர்வாகத்தைஊழியர்கள் யாவரும் எளிமையாகப் புரிந்து கொள்ளச் செய்தல் வேண்டும்.
- ஊழியர் உறவைஅதிகரித்தல் : ஊழியர்களுடனான முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ள நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளல். தேவையேற்படின் ஊழியர்களுக்கு பேரம் பேசவும் வாய்ப்பளித்தல்
- பரவலாக்கமும் மையப்படுத்தலும் : தீர்மானம் எடுத்தலில் மேல் மட்டத்திற்கும்,கீழ் மட்டத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டிருத்தல்

றொம்பீற்றர் (Tom peter) என்பவரால் குறிப்பிடப்படும் இந்த எட்டு விடயங்களையும் ஒரு நிறுவனம் முன்னெடுக்குமாயின் அங்கு முகாமைத்துவம் மேன்மை நோக்கியதாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

இன்றைய சூழலில் சிலநிறுவனங்கள் பல்வேறு காரணங்களைக் கருத்தில் கொண்டு, முகாமையாளரது தனிப்பட்ட எண்ணக்கள், விருப்பு வெறுப்புக்களுக்கு இடங்கொடுத்து மேன்மைநோக்கில் முகாமைத்துவப் பண்புகளை உள்வாங்கத் தவறுகின்றன. இவை முகாமைத்துவம் தொடர்பான நவீன உளவியல் சிந்தனைகளை உள்வாங்கத் தவறுகின்றமையாலும், நவீனகோட்பாடுகளைக் கருத்தில் கொள்வது போதாமையாலும், நெருக்கடி மிக்கதான வாழ்க்கை முறைகளாலும், இயந்திர சாதனங்களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தாலும் ஏற்படுகின்றன எனக் கொள்ளலாம்.

மேன்மை நோக்கிய முகாமைத்துவப் பண்புகள் எப்போதும் மேன்மையான பொருட்களையும் சேவைகளையும் தேவையானவர்களுக்கு வழங்குவதோடு, நிறுவனத்தில் ஒரு தொடர்ச்சியான மேன்மைநிலையையும் உருவாக்கும்.

இன்றைய காலத்தில் எந்தநிறுவனமாயினும் குறிப்பாக கல்வியோடு தொடர்புபட்ட அமைப்புக்கள் யாவும் தமது அடைவினை அதிகரித்துக் கொள்வதற்கும் சிறந்த விளைதிறன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் மேன்மை நோக்கிய முகாமைத்துவ எண்ணக்கருவில் கவனம் செலுத்தவேண்டும். இதன் மூலம் மகிழ்ச்சியானதும் நீடித்த உறவு மிக்கதுமான ஒரு சிறந்த உறவு நிலையை முகாமையாளரால் தனது நிறுவனத்திற்குள் உருவாக்கிக் கொள்ளமுடியும் எனவே மேன்மை நோக்கிய முகாமைத்துவத்தை எமது கல்வி நிறுவனங்களுக்குள் கொண்டுவந்து மேன்மை மிக்க விளைவுகளை பெற்றுக் கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரங்கக்கலைகளின் செயற்பாடு

திருமதி.கி.யோகராாஜா.
விரிவுரையாளர் இணைப்பாளர்
(தொடருறு கல்வி) – வ.தே.க.க

நாடகம், நடனம், இசை போன்றவை அரங்கக் கலைகள் என அழைக்கப்படுகின்றன. இவை கல்விச் செயற்பாடுகளின் ஊடாகக் கற்பிக்கப்படுகின்றன. இக்கலைகள் பல்வேறு உணர்வுகளையும் கருத்துக்களையும் பல்வேறு மொழிப்பிரிவினருக்கு வழங்கும் ஊடகமாகத் திகழ்கின்றன.

மேலும் மேடைக்கலைகளான நடனம், நாடகம் பற்றிய கல்விப்பாட ஏற்பாடு கலைஞனை மட்டுமன்றி இரசிகர்களையும் கருத்தில் கொண்டு அமைகின்றன. நடனக்கலை தொடர்பான கல்வி நிகழ்ச்சிகள் மாணவனுடைய முழுமையான வளர்ச்சியையும் நலனையும் கருத்திற்கொள்கிறது. மாணவர்களின் உடல்நலம், உடலியல் திறன், ஆளுமைத்திறன், நன்மனப்பாங்கு, தைரியம் தலைமைத்துவம் போன்றவற்றை வளர்ந்தெடுக்கும் சிறந்த ஊடகமாக இக்கலைகள் விளங்குகின்றன.

இன்றைய மாணவ சமுதாயத்தில் ஒருசாரார் பிரதான பாடமாக இவ்வரங்கக்கலைகளை கற்று கலைஞர்களாக சமூகத்திற்கு பல அரங்க செயற்பாடுகளை நிகழ்த்துகின்றனர். ஒரு பகுதியினர் பகுதி நேரக்கலையாக கற்றுக்கொண்டு இதனை தமது நல்வாழ்விற்கு உறுதுணையாக்கிக் கொள்கின்றனர்.

இன்றைய உலகில் ஒவ்வொரு நாட்டிலும் பிரதேசங்களிலும் பல விதமான வைபவங்களை சிறப்பாகிக் கொள்வதற்கு அரங்கக்கலைகளே எடுத்துக் கொள்ளப்படுகினறன. இவை அவ்வவ் சமூகத்தின் பண்பாட்டையும் அவைக்கே உரித்தான கலை அம்சத்தையும் பிரதிபலிப்பதாக அரங்கக் கலைகள் அமைகின்றன.

1970களில் நடனக்கலை படிப்படியாக ஒரு கலைப்பாடமாக உருவெடுத்து 1972 ஆண்டு பாடசாலை கலைத்திட்டத்தில் அமுலாக்கம் செய்யப்பட்டது. இந்நூற்றாண்டில் நாடகமும் அரங்கியலும் ஒரு பாடமாக பாடசாலை மாணவர் கற்பதற்காக கலைத் திட்டத்தில் புகுத்தப்பட்டது.

இருந்த போதிலும் மாணவ சமுதாயம் இவ் அரங்கக்கலைகளான நடனம், நாடகம், இசை என்பவற்றை போதிய பயிற்சி பெற்று திறமை அடைவதற்கான நேர அவகாசம் பாடவேளைகளில் போதுமானதாக அமைவதில்லை. கலை என்பது படிப்படியாக நீண்ட நேரம் பயிற்சி செய்யும் விடயமாகும். அதே சமயம் இவ் அரங்கக்கலைகளை பயிற்றுவிக்கும் கலை ஆசிரியர்கள், கலை விரிவுரையாளர்கள் ஒவ்வொரு விழாவிற்கும் வைபவங்களிற்கும் சமூகத்திற்கும் பற்பல விதமான கலைநிகழ்வுகளை அவர்களின் தேவைக்கும் விருப்பத்திற்கும் ஏற்றவாறு வழங்க வேண்டியவர்களாக உள்ளதால் பல்வேறுப்பட்ட சவால்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன் பல்வேறுப்பட்ட சவால்களின் மத்தியில் அரங்கச் செயற்பாடுகளை நிகழ்த்தும் கலைஞர்களிற்கு உகந்த வெகுமதிகளும் முழுமையாகக் கிடைப்பதில்லை. கலைஞர்கள் ஊக்குவிக்கப்பட்டாலே புத்தாக்கங்கள் மேலும் மேலும் பிறக்கும்.

அழகியற் கலைளை கற்பதன் நோக்கம் மாணவர்களின் ரசனை உணர்வை வளர்ப்பதற்கும் அழகை ரசிப்பதற்கும் மொத்தத்தில் எத்துறையிலும் எச்சந்தர்பங்களிலம் பண்பாடாக நடந்து கொள்வதற்குமே. அழகியற்கலைகளில் ஒன்றே நாட்டியக்கலை. பெண்களுக்கெனச் சிறந்த ஆடற்கலை மரபுக்குரியவர்களான நாம் எமது பெண்பிள்ளைகளை பரதக்கலை பயில அனுப்புதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடற்கலை மேடைக்கலை என்பதால் அடிக்கடி மேடைகளில் தோன்றி நாட்டியக்கலை பங்கெடுத்துக் கொள்வதன் மூலம் தாம் கற்ற ஆடல் நுணுக்கங்களை பிரயோகப்படுத்த வாய்ப்பு ஏற்படுகின்றது. அதில் சிலர் தனியாட்டத்தில் சிறந்து விளங்கக் கூடிய தகைமையைப் பெற்று தனிப்பரதம் ஆடுவதில் சிறப்புப் பெறுகின்றனர். மற்றும் கலை பயிலும் மாணவர்களின் குழு நடனங்கள் மூலமும் நாட்டிய நாடகங்கள் மூலமும் அரங்கக் கலைச் செயற்பாடுகளை செவ்வனே செய்ய வாய்ப்புக்கள் கிடைக்கின்றன.

இவற்றைத்தவிர நாட்டிய நாடகங்களில் ஈடுபடுவதால் மாணவிகள் வேறு பயன்களையும் பெறுகின்றனர். நாட்டிய நாடகமென்பது பலர் கூடி மேடையில் ஆடிக்காட்ட வேண்டிய தொன்று. நாடகமே உலகம் என்பதற்கமைய வாழ்விலும் தமது சமுதாயத்தின் நலன்களை சிந்தித்துப்பழகிக் கொள்கின்றனர்.

நாடகமேடையும் உண்மையில் ஒரு கல்விக்கூடமே. நாட்டிய நாடகங்களில் பங்கெடுக்கும் மாணவிகளுக்கு நாட்டிய கலை பற்றி சுயமாக சிந்திக்கும் ஆற்றலும் தன்னம்பிக்கையும் ஏற்படுகின்றது. கலையை ரசித்து தன்னிறைவுடன் ஆடும் போது தான் பாவம் என்பது இயல்பாகவே வெளிப்படுகின்றது.

இன்று பொதுத் தொடர்பு சாதனங்களில் ஏற்பட்டுவரும் நவீன அபிவிருத்தியில் புதிய கலை வெளிப்பாட்டு வடிவங்களில் புதிய வளர்ச்சியினை ஏற்படுத்தியுள்ளன. வீடியோ, படச்சுருள், படப்பிடிப்பு, கம்பியூட்டர், இலத்திரனியல் சாதனங்கள் தற்காலச் செயற்பாடுகளில் பல தாக்கங்களையும் முன்னேற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளன.

பாரம்பரிய கலை வடிவங்களைப் பார்க்க விரும்பும் இரசிகர் தொகை அதிகரிப்புக்கும் இத்தொழில்நுட்ப முன்னேற்றம் வழிவகுத்துள்ளது.

மேலும் தற்போது பல்வேறு கலாசாரங்களுக்கிடையிலான இடைத்தாக்கம் பாடசாலைகளிலும் சமூக வாழ்க்கையிலும் இடம்பெறுவதால் கலைச் செயற்பாடுகள் இனத்துவ பண்பாட்டு வரம்புகளைக் கடந்து பல பொதுத்தன்மைகளையும் பெற்று வருகின்றன. இவ்வாறு தொழில் நுட்பத்துறையிலும் கலாசாரத் துறையிலும் ஏற்பட்டு வரும் மாற்றங்களும் முன்னேற்றங்களும் கல்விச் செயற்பாட்டில் அரங்கங்கங்களுக்கு உரிய பங்கு அவற்றின் நோக்கங்கள் பற்றிய ஒரு புதிய வரையறையின் தேவையை உணர்த்தியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராவண காவியம்

திருமதி.நெலோமி அன்ரனி குரூஸ்
விரிவுரையாளர் – வ.தே.க.க

இராமாயணத்தைப் பற்றி அறியாதவர் எவருமில்லை. இதன் சுவைபற்றிக் கற்றவர்கள் சொல்லச் சொல்ல சொக்கிப் போய் நிற்கின்றோம். அதற்கு நிகரான காவியம் எதுவுமில்லை என்று இறுமாந்து நிற்கின்றோம். ஆரிய இராமநாதன் புகழைக் கூறுவதன் மூலம் திராவிடப் பரம்பரையை, நாகரிகமும் கல்வியறிவும் பெற்றவர்களாய் விளங்கிய தென்னகத்தே வாழ்ந்த திராவிடர்களை, இலங்கையில் வாழ்ந்த இராவணனை அவனின் உறவுகளை அசுரர்களாய், அரக்கராய், மிருகங்களாய் சித்திரித்ததன் மூலம் திராவிடர்களுக்கு இழிவையும், ஆரியர்களுக்கு பெருமையையும் சேர்த்துக் கொண்ட காவியம் அது என்பது ஆய்வாளர்கள் சிந்தனையாளர்களின் கருத்தாகும். ஆனால் திராவிடர்களின் பெருமையையும், மகிமையையும், இராவணன் என்னும் மன்னனின் புகழையும், நெறி தவறாது ஆண்டஅவன் மேன்மையும் கூறும் காவியமாக மலர்ந்தது தான் ,ராவண காவியம். இது 1946ஆம் ஆண்டு புலவர் குழந்தை என்பவரால் எழுதப்பட்டு வெளியிடப்பட்டு இரண்டு ஆண்டுகளின் இந்திய அரசால் 1948ஆம் ஆண்டு தடை விதிக்கப்பட்டது. 23 ஆண்டுகள் இராவண காவியம் தீண்டத்தகாத நூலாக, தமிழர்கள் பார்க்கவோ படிக்கவோ கூடாத நூலாக தடை செய்யப்பட்டது. ஆனால் 1972அல் கலைஞர் கருணாநிதியின் ஆட்சியில் தடைநீக்கம் செய்யப்பட்டது. ஆரிய இராமனையும் ஆரியர்களையும் கம்பன் எந்தளவுக்கு உயர்த்திப் பாடினானோ அந்தளவுக்கு திராவிடர்களை குறிப்பாக இலங்காபுரியின் தமிழ் வேந்தன் இராவணனை தன் இலக்கியத்தினால் புலவர் குழந்தை அவர்கள் உயர்த்திவிடுகின்றார். அதிலும் ஒரு வரையறையைக் கடைப் பிடித்துள்ளார். இராமனைக் கடவுளின் அவதாரம் என்று கம்பன் உயர்த்தியளவுபுலவர் குழந்தையவர்கள் இராவணனை இராவண காவியத்தில் அப்படிச் செய்யவில்லை. அவரை வழிநடத்திக் கொண்டு இருந்த பகுத்தறிவுவாதம் இதனைத் தவிர்த்தது. கம்பன் தன் காவியத்தில் தமிழ்ப் பரம்பரையை இழிவுபடுத்தியமைக்கு இவர் நேரெதிர்க் கருத்துக்களை வழங்கியிருப்பதன் மூலம் தமிழினம் பெருமைப்படக் கூடிய விதத்தில் இராவண காவியம் புனையப்பட்டுள்ளது. ஆனால் கம்பன் கவிச்சுவையினை எந்த விதத்திலும் குறைத்து எடைபோடாத விதத்தில் கருத்துக்கு எதிரான குரலாக மட்டுமே இக்காவியம் இயற்றப்பட்டுள்ளது. புலவர் குழந்தை காட்டும் இராவணன் கொலை வேள்வியைத் தடுத்த, துடிதுடிக்க உயிர்களைக் கொல்வதைத் தடுத்த இரக்கமுள்ள ஒருவன். பழந்தமிழ் அரச குடும்பத்தில் பிறந்து ஒரு தமிழ்ப் பரதேசத்தை ஆண்ட தமிழரசியே சூர்ப்பனகை எனப்படும் காமவல்லி, அவளைக் குணத்தில் இழிந்தவள், கொடிய அரக்கி இழிந்தவள், அவளுக்கு உறுப்பு ஒறுப்புச் செய்தது சரியே என்று நியாயப் படுத்தப்பட்டது தவறு என்றும் அவள் கைம்மை நோன்பு நோற்றிருந்த தமிழ் மகள் என்றும் இராவணகாவியம் கூறிநிற்கின்றது. தங்கையை உருக்குலைத்தவனை அக்காட்டிற்குச் சென்று பொருது அழிக்காது வெட்சிநிரை கவர்தல் என்னும் புறப்பொருள் இலக்கணபபடி பகைவர்களின் ஆடுமாடுகள் மற்றும் இன்றியமையாத செல்வங்களையும் கவர்ந்து வந்து பாதுகாத்து அப்பகைவர் தேடிவரின் நல்லறிவு புகட்டி அனுப்புதலோ அல்லது பொருது வெல்லுதலோ செய்யும் தமிழர் போர் மரபுப்படி இராவணன் சீதையை எடுத்து வந்து இலங்கையில் வைத்துப் பாதுகாத்தானேயன்றி அவள் மீதுகாதல் கொண்டு எடுத்து வரவுமில்லை அவளை வற்புறுத்தவுமில்லை அங்ஙனம் செய்ய எண்ணியிருந்தால் அவனுக்கு அதுமுடியாததும் அல்ல.

கோசிக முனிவனின் ஆசைப்படி இராமனால் கொல்லப்பட்ட தாடகையென்னும் அரக்கியானவள் விந்தச் சாரலிலில் அமைந்திருந்த ஒரு நாட்டை ஆண்டு செங்கோல் செலுத்திய தமிழிச்சி. ஒழுக்கமே உருவானவள் கொலைவேள்வியை மறுத்தவள். அத்தகையவளின் ஆட்சிக்குட்பட்ட தமிழ் நாட்டில் ஆரியர்கள் அவள் உடன்பாடின்றி வந்தது மட்டுமல்லாமல் கொலைவேள்வியையும் செய்தனர். அதை மறுத்துத் தடுத்தவளை அரக்கியாக்கி அத்தமிழ் மூதரசியை கொலையும் செய்தனர் என்கிறது இராவண காவியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணன் பெருந்தலைவன், விந்தம் முதல் குமரிவரை ஒரு மொழி வைத்து ஆண்ட பழந்தமிழன், தண்டமிழ் வேலித் தமிழகத்தே ஆரியத் தொற்றுநோய் புகாமல், பரவாமல் தடுத்து நின்ற காவலன். வாலி, சுக்கிரீவன் முதலியோரும் குரங்குகளல்லர். தமிழர்களே. இராவணன் முதலியோரை அசுரர்கள் என்றது போல வாலி முதலானோரை குரங்குகள் என்பதற்கு சான்றாக, நேரு அவர்கள் தமது மகள் இந்திராகாந்திக்கு எழுதிய கடிதத்தில் 117ஆம் பக்கத்தில் இராமாயணப் போர் ஆரியதிராவிட போரேயாகும். தென்னாட்டில் வாழ்ந்த திராவிடர்களைத் தான் குரங்குகள் என்றனர் என குறிப்பிடுகின்றார் என்பதை புலவர் குழந்தை ஆதாரமாகக் காட்டுகின்றார்.

தமிழர்களை அரக்கர்கள் என்ற தோடு அமையாது, ஆரிய வான்மீகியார் தமிழ் அரச குடும்பத்தினரை சூர்ப்பனகை, மண்டோதரி, கும்பகர்ணன் போன்ற இழி பெயர்களால் பழித்துரைத்துள்ளார். சூர்ப்பு என்பது முறம் ,அதாவது சுளகு, நகை-சிரிப்பு, ஆகவே சுளகு போன்ற பற்களையுடையவள் என்றும், மண்டு- பெரிது, உதரம்-வயிறு ஆகவே மண்டோதரி என்பது பெருவயிறாள் என்றும் பொருள்படுகின்றது. இன்னும் கும்பம்- குடம், கர்ணம்-செவி, ஆகவே கும்பகர்ணன் என்பது குடச் செவியன் என்றும் இழித்து உரைக்கப்படுகின்றது. வான்மீகி இராமாயணத்தின் பாத்திரங்களை கதையோட்டத்தை தமிழர் பண்பாட்டிற்கமைய மாற்றி இராமனை புருசோத்தமனாக உயர்த்திய கம்பன், தமிழ் அரசகுடும்பத்திற்கு வான்மீகி இட்ட இழி பெயர்களை மட்டும் மாற்றவில்லை என்பது புலவர் குழந்தையின் குற்றச்சாட்டு. இவை போன்றே குடி, கொலை வேள்வி போன்ற ஆரியர் செயல்களை, ஆதிக்கத்தை எதிர்த்த பொன்னன் என்பானை இரணியன் என்றும், பொற்கண்ணன் என்பானை இரணியாக்கன் என்றும், மாவலி என்பானை மகாபலி என்றும், மாந்தரன் என்பானை நரகாசுரன் என்றும் இழிபெயரிட்டு அழைத்ததுடன் சூரன், சாம்பரன் என்னும் தமிழ் மன்னர்களையும் கொடியவர்கள் ஆக்கினர் ஆரியர். சாம்பரன் அசுரன் அல்லன். அவன் பாண்டியன் எனப்படுகின்றது. முன்னூலிலே சம்பராசுரன் மீனக் கொடியோன் என குறிப்பிடப் பட்டிருக்கின்றது. மீன் கொடிபாண்டியனுக்கு உரியது. எனவே சம்பரன் அசுரன் என நிந்திக்கப்பட்ட பாண்டிய மன்னன் என கூறுகின்றது இந்நூல்.

அனுமன், சுக்கிரீவன், வீடணன் போன்ற தமிழர்களின் இரண்டகச் செயலால் காட்டிக் கொடுப்பு என்னும் கழுத்தறுப்புச் செயலால் தான் ஆரிய அரசன் இராமனால் தமிழ்ப்பேரரசன் இராவணனைக் கொல்ல முடிந்தது என்கிறது இராவண காவியம். தமிழர் பண்பாடு, நாகரிகம், மணமுறை, வாழ்க்கைமுறை, ஆட்சிமுறை, வீரம், கொடை, மேம்பாடு, ஒழுக்கம், பழந்தமிழ் நாட்டின் வரலாறு, தமிழ் வரலாறு, தமிழர் உலகமுதல் மக்களாய் வாழ்ந்தமை, ஆரியர் வருகை, நாகரிகம், சூழ்ச்சி போன்ற பல பழந்தமிழ் வரலாறுகளை எல்லாம் இன்றைய தமிழ் மக்கள் அறிந்து தமிழின உணர்ச்சியுறவும், வான்மீகியாலும், கம்பராலும் வேண்டுமென்றே இட்டுக்கட்டப்பட்ட பொய்க்கூற்றுகளை அகற்றவும், இயற்கைக்கு ஒவ்வாப் புனைகதைகளைப் போக்கவும் இராமாயணத்தின் உண்மை வரலாற்றை உணர்ந்து கொள்ளவுமே இராவண காவியம் பாடப்பட்டது. இராவண காவியத்தின் கருத்து வேறுபாட்டை ஏற்றுக் கொள்ளாவிடினும் அதன் காவியச் சுவையை, தமிழினிமையை கம்பராமாயண அறிஞர்களே போற்றிப் புகழத் தவறவில்லை. தமிழ் அறிஞர் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளையவர்கள் - தேனினும் இனிய செந்தமிழ்க் குழந்தை- நான் கம்பராமாயணக் கவிச்சுவையில் கட்டுண்டு கிடந்தனன், தங்கள் இராவண காவியம் அக்கட்டை அவிழ்த்து விட்டது என்றும், கம்பராமாயண அன்பரான புலவர் ஐயன் பெருமான்கோனார் என்பவர் இனியொரு கம்பனும் வருவானோ, இப்படியும் கவி தருவானோ

கம்பன் வந்தான் அப்படி கவிதையும் தந்தான்-ஆனால் கருத்து மாறுபட்டு விட்டது என்றும் தம்மை மறந்து புலவர் குழந்தை அவர்களையும் இராவண காவியத்தையும் புகழ்ந்துள்ளார். துணிச்சலும் திறமையும் உள்ளபுலவர் குழந்தையையும் அவரியற்றிய காவியத்தையும் வியந்துபாராட்டாமல் இருக்கமுடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவப் பரிச்சயம்

திரு.கு.கமலகுமார்
விரிவுரையாளர் – வ.தே.க.க

பௌதிக வளம், மனித வளம் என்பவற்றை வினைத்திறனூடாக சிறந்த விளைதிறனையும் ஏற்படுத்தும் வகையில் தேவையான போது முறையாகவும் எதிர்கால சந்ததிக்கு பயன்படும் வகையிலான நிலைத்து நிற்கும் முறையில் அமைவதை முகாமைத்துவம் எனப்படுகிறது. இவை பற்றி ஹென்றி பயோல் குறிப்பிடும் போது,

1. திட்டமிடல்
2. ஒழுங்கமைத்தல்
3. ஊழியரிடல்
4. வழி நடத்துதல்
5. ஒருங்கிணைத்தல்
6. வரவு செலவு திட்டம் தயாரித்தல்

என்றவாறாக அமைக்கப்படும் போது முகாமைத்துவம் சிறந்ததாக அமையும் வாய்ப்பு ஏற்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும் முகாமையாளர் கொண்டிருக்க வேண்டிய பண்புகளாக

1. முகாமை தொடர்பான ஆழ அறிவு உடையவர்
2. முகாமைக்கான கருமங்களை நிறைவேற்றுவார்
3. மாற்றங்களுக்கு ஏற்ப தன்னை மாற்றுபவர்
4. முகாமைத்துவ மாற்றங்களுக்கு தயாராக இருத்தல்
5. உடல், உள ஆரோக்கியம் கொண்டவர்
6. பொது விவேகம், அறிவு என்பவற்றுடன் மனித நேயம் உள்ளவர்
7. தனது நிறுவனத்தின் நோக்கம் பற்றிய தெளிவான சிந்தனை உள்ளவர் போன்ற பண்புகள் வெளிக்காட்டப்படல் வேண்டும் என பார்த்து முன்வைத்துள்ளார்.

இலங்கையில் அதிகளவு ஆளணி மற்றும் பரந்த நிறுவனமாக பாடசாலைகள் காணப்படுவதுடன் அவற்றின் முகாமைத்துவ அலகுகளும் சிறப்பு வாய்ந்தவையாகவும் காணப்படுகின்றன. எனினும் ஒழுங்கமைப்பு என்பன பொதுவான ஒரு முறையைக் கொண்டுள்ள போதும் அவற்றின் தலைமை தாங்கும் தலைவரின் தனிப்பட்ட திறன்களைக் கொண்டு செயற்படுவதாக அவதானிக்க முடிகின்றன. இவற்றுக்கு அயற் சமூகத்தின் பங்கும் காணப்படுகின்றது.

முகாமைத்துவச் செயன்முறையானது செயற்பாடு அடிப்படையில்

1. பதவி வழி முகாமைத்துவம்
2. அதிகார முகாமைத்துவம்
3. பங்குபற்றுதல் முகாமைத்துவம்

என்றவாறு நோக்க முடியும். இதில் பதவிவழி என்பது தாபனக்கோவை விதி இரண்டுக்கு அமைய சேவை மூப்பு, தகைமை என்ற அடிப்படையில் நிறுவனங்களுக்கு தலைமை அல்லது முகாமை செய்வதைக் குறிக்கும்.

அதிகார முகாமைத்துவம் என்பதில் தலைவர் தன்னிடத்தில் காணப்படும் விசேட திறமைகள் அல்லது அயற்புறத்திலிருந்து கிடைக்கும் செல்வாக்குகள் மூலமாக முதன்மைச் செயல்களில் ஈடுபடுவதாகும். இதில் அரசியல் செல்வாக்கு, தனிப்பட்ட முறையிலான அதிகாரம், பணப்பலம் மற்றும் அச்சுறுத்தல் மூலமாக பதவியைக் கைப்பற்றுவதைக் குறிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குபற்றுதல் என்பது மேற்கூறப்பட்ட இரு விடயங்களுடன் இணைந்து பங்குகொள்ளும் ஆளணியின் ஈடுபாட்டுடன் பொறுப்புடன் செயலாற்றுவதைக் குறிக்கின்றது.

முகாமைத்துவம் தொடர்பான செயல் ஒழுங்குகளையும் அவற்றின் திட்டங்களும் காலத்திற்குகாலம் கொண்டு வரப்படுகின்றன. எனினும் தற்போது பாடசாலை மட்ட முகாமைத்துவம் "அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" என்பன முக்கியமான திட்டங்களாகும். இதன் கீழ் ஆளணி , பௌதிக வளங்கள், தொழில்நுட்ப பயிற்சி, திட்டமிடல் என்பன வழங்கப்பட்டு வருகின்றன. அது மட்டுமல்லாது பெருமளவு நிதிகளும் வழங்குவதற்கான முனைப்புக் காட்டப்படுகின்றன.

எவ்வாறாயினும் அதிபர் மட்டுமல்லாமல் ஆசிரியர்கள், பெற்றோர் நலன்விரும்பிகள் என்போரின் ஒத்துழைப்பு என்பன மானசீகமாக அமையாத போது எத்திட்டமும் வெற்றிபெறும் வாய்ப்பு அரிதாகவே இருக்கும். இலங்கையில் அதிகளவான பாடசாலைகள் கிராமப்புறத்திலேயே அமைந்துள்ளன. அதற்கான போக்குவரத்து வசதி, மின்சார வசதி என்பவையும் குறைவாகவே காணப்படுகின்றன. அத்துடன் தூர இடங்களில் இருந்து வந்து கடமையாற்றுபவர்கள் அதில் களைப்படைந்து விடுவதால் நிர்வாக செயற்பாட்டின் கீழ் அதிக கவனம் செலுத்த முடிவதில்லை. அவ்வாறே அங்கு பயிலும் மாணவர்களும் கற்றலில் அதிக நாட்டம் காட்டுவதில்லை. தமது விவசாய நடவடிக்கைகள், கூலி வேலைகளுக்கே முக்கியத்துவம் கொடுப்பதாக அமைந்து விடுகின்றன. அவ்வாறே சில கிராமங்களில் பெண் பிள்ளைகளை இருபது வயதிற்கு மேல் வைத்திருப்பதை (திருமணம் செய்யாது) அவமானமாகக் கருதுகின்றனர்.

நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் அரசியற் தலையீடு அதிகளவு காணப்படுகின்றது. இவற்றை விட பணத்தின் பலம், இன, மத சாதியின் சாயல்கள் என்பனவும் திறமையான நிர்வாகத்திற்கு தடையாக அமைந்து விடுகின்றன. இலங்கையின் முகாமைத்துவ வரலாறுகளை நோக்கின் ஆரம்ப காலத்தில் மிகத்திறமையான அதிகாரிகள், முகாமையாளர்கள் காணப்பட்டனர். அவர்களும் தமது காலத்திலேயே சிறப்பாக செய்ய வேண்டும் என்பதற்காக முகாமைத்துவத்தின் மூன்றாம் மட்டத்தில் இருப்பவர்களின் ஆதரவையே அதிகளவு நம்பியிருந்தனர். அத்துடன் இதனால் இரண்டாம் கட்ட முகாமையாளர்கள் தோல்வி அடைந்தவர்களாக தமது ஆற்றல்களை இழந்துவிட முதலாம் கட்ட முகாமையாளர்கள் இளைப்பாறும் போது மூன்றாம் நிலையாளர்கள் இடர்பட்டு தங்களை கவனிப்பர் என எண்ணி அவர்களிடம் ஒப்படைக்கப்படுவதனால் அந்நிறுவனத்தின் செயற்பாடுகள் குன்றி வருவதுடன் அவர்கள் தமது பதவியை நிலைநாட்ட அரசியலை நாட வேண்டியுள்ளது. இவை நிறுவன முகாமை மிகப் பெரிய பின்னடைவை ஏற்படுத்தி விடுகின்றன.

முகாமை என்பது சட்டம், தகுதி என்பவற்றின் கட்டுப்பாட்டில் இருக்கும் வரையுமே அதன் சிறப்பு காணப்படும். ஏனைய செல்வாக்குகளை செலுத்தும் போது அவற்றின் வினைத்திறன் விளைதிறன் என்பன வீழ்ச்சியடைந்து செல்வது திண்ணம்.

**உசாவியவை:**


- மன்சூர் MK (2008) பாடசாலை முகாமைத்துவம், சொந்த வெளியீடு
- மாற்ற முகாமைத்துவம் 9ஆவது தேசிய கல்வி நிறுவகம்
- பாடசாலை மட்ட முகாமைத்துவம் (PGD in Edu. Management) (2015)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேகாரோக்கியமாக வாழ
# சுற்றாடலைப் பாதுகாப்போம்

திருமதி.சுபீதா
விரிவுரையாளர் – வ.தே.க.க

பாடசாலை என்னும் புண்ணிய பூமியில் நாம் காலூன்றிய நாள் தொடக்கம் பல்வேறு அம்சங்களைக் கற்றுக் கொண்டிருக்கின்றோம். தாய், தந்தையரையும், ஆசிரியரையும், முதியோரையும் தெய்வீகமாகக் கண்ணியப்படுத்தவும், தேசம் மக்கள் அத்துடன் மதம் என வணக்கத்திற்குரிய மூன்றினையும் எந்நேரமும் முதல் நிலையில் வைத்துப் போற்றவும் பழகிக்கொண்டுள்ளோம். இவற்றுக்கெல்லாம் மூலாதாரமாக திகழ்வதும் இயற்கை எனப்பெறும் சுற்றாடலே. பாடசாலையில் ஒரு பாடமாகவும் சுற்றாடல் போதிக்கப்படுகிறது. ஏனைய பாடங்களைப் போன்றல்லாது, சுற்றாடல் பாடசாலையிலிருந்து வெளியேறினாலும் கைவிட முடியாத பாடமாகும். சுற்றாடல் எனும் பாடத்தில் காணப்படும் சிறப்பே இதற்கு காரணமாகும்.

அனைத்தினதும் சிருஷ்டிகருத்தா சுற்றாடலே. சுற்றாடல் அனைத்தையும் போஷிப்பது மட்டுமன்றி அனைத்தையும் தாங்கி பொறுத்தாள்கிறது. எம் அனைவரையும் பாதுகாக்கிறது. ஈற்றில் அனைத்தையும் பொறுப்பேற்கிறது. மாறாக சுற்றாடலைப் பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும். வேறு எவரிலும் சுமத்த முடியாத கடமையாகும்.

அந்தவகையில் பூகோளம் வெப்படைதலால் முழு உயிரினங்களும் மோசமான சூழல் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். அதாவது வெப்பத்தை உறிஞ்சும் வாயு வகைகள் வளிக்கோளத்தில் படிப்படியாக அதிகரிப்பானது புவியின் வெப்பம் உகந்த மட்டத்தை விட அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உயிரினங்கள் தாங்கிக் கொள்ள முடியாத அளவு வெப்பம் அதிகரிப்பதே காரணமாகும்.

நவீன கைத்தொழில் செயன்துறையில் பச்சைவீட்டு வாயுக்கள் அதிகரித்திருப்பது இதன் தொடக்க கட்டமாகவே கருதப்படுகிறது. பச்சைவீட்டு வாயுக்களின் அளவுகள் வளிக்கோளத்தில் வெப்படையும் போது கதிர்ப்புச் செயன்முறையின் மூலம் சுற்றாடலின் வெப்பம் முற்றாக அதிகரிக்கின்றது. இத்தகைய பச்சைவீட்டு வாயுக்களாக காபனீரொக்சைட்டு ($Co_2$), நைதிரஸ்ஒக்சைட் ($N_2O$), மீதேன் ($CH_4$), குளோரோ புளோரோ காபன் (CFC), ஹெலோன் (Ha), என்பவற்றைக் குறிப்பிடலாம்.

நிலக்கரி தகனமடைதல், காடுகளுக்குத் தீ மூட்டுதல், எரிபொருள்களையும் பல்வேறு தேவைக்காவுள்ள இயற்கை வாயு வகைகளையும் பயன்படுத்தி புதிய வாயுக்களைத் தயாரித்தல், தொழிற்சாலைகளில் எரிபொருள் தகனமடைதல், மீதேன், நைத்திரஸ்ஒக்சைட் முதலிய வாயுக்களைப் பயன்படுத்தி செய்யப்படும் உற்பத்திகள், சதுப்பு நிலங்கள் அல்லது கழிவுகளால் நிரப்பப்படும் காணிகள், விலங்கின வளர்ப்பு வயல் நிலங்கள் முதலிய விவசாயக் காணிகள் போன்ற செயற்பாடுகளினால் பச்சைவீட்டு வாயுக்கள் உருவாகின்றன.

பச்சைவீட்டு விளைவுகளால் பல சமூக தாக்கம் சுற்றாடலை வந்தடைகிறது. அந்தவகையில் காபன் படிவதன் மூலம் சுவாச நோய்கள் ஏற்படுகின்றன. தோல் புற்றுநோய். கடுமையான ஒற்றைத்தலைவலி என்பன ஏற்படுகின்றன.

சுற்றாடல் எம்மைக் காக்கும். நாம் சுற்றாடலைக் காக்க வேண்டும். பிரபஞ்சத்தில் காணப்படும் கிரகங்களில் உயிர்ப்புடைய ஒரே கிரகமாக புவி உள்ளது. புவி மேற்பரப்பில் 75 சதவீதமான பகுதி அதாவது 3/4 நீரால் சூழப்பட்டுள்ளதோடு எஞ்சிய 1/4 பகுதி ;நிலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அதிலும் 30 சதவீதம் காடுகளாகும். புவியில் காணப்படும் சுத்தமான நீரின் அளவு 2.5 சதவீதமாகும்.

உயிரினங்களின் ஒரே இருப்பிடமான புவி உயிரினங்களின் இருப்புக்கு சுத்தமான காற்று, நீர் மற்றும் ஆரோக்கியமான இருப்பிடமும் இன்றியமையாதது. மனிதனுக்கும், சுற்றாடலுக்கும் இடையிலான தொடர்பு இதேபோன்ற சூழலமைவிலே கட்டியெழுப்படுகிறது.

எவ்வாறாயினும் மனிதனின் அறிவை விருத்தி செய்ததன் விளைவாக ஏற்பட்ட விஞ்ஞானத்தின் அதிக வளர்ச்சியும், கைத்தொழில் புரட்சியும் காரணமாக மனிதனுக்கும், சுற்றாடலுக்கும் இடையில் காணப்பட்ட சமநிலை தகர்க்கப்பட்டு சுற்றாடல் மாசடைய ஆரம்பித்தது. புவியின் வெப்பம் அதிகரித்தல், காலநிலை மாற்றம், நீர் மாசடைதல், வளி மாசடைதல், மண் வளங்குன்றுதல், காடழிப்பு கடுமையான வரட்சி மற்றும் பாலைவனங்கள் உருவாகும் போன்ற பல்வேறு சுற்றாடல் சார்ந்த பிரச்சினைகளை எதிர்கொள்ள நேர்ந்திருப்பதாலும் நாளுக்கு நாள் அவை தீவிரடைவதும் நாம் இன்றளவில் எதிர்நோக்கியுள்ள விளைவுகளாகும்.

இன்றளவில் இலங்கையர்களாகிய நாமும் இப்பிரச்சினைகள் சில நேரங்களில் அதிகமாகவும் சில நேரங்களில் குறைவாகவும் எதிர்கொண்டுள்ளோம். எனவே சுற்றாடல் பாதுகாப்புக்களை நிலைத்து நிற்கும் தீர்வுகளைத் தேடும் உன்னதமான பணியில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை தனது அர்ப்பணிப்பை செலுத்தி வருகிறது.

இதனடிப்படையில் பாடசாலையில் இச்செயற்பாட்டை முன்னெடுக்க பல திட்டங்களை வகுத்துள்ளனர். அவை வருமாறு:






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றைப் பாடசாலையில் ஆரம்பப்பிரிவுகளில் நடைமுறைப்படுத்திச் செயற்படுத்தும் போது சுற்றாடல் பழக்கத்தின் ஆரம்பமாக செயற்பட வைக்க ஏதுவாகின்றது. இதன் மூலமும் ஆரோக்கியத்தையும் பேண முடியும். அவை வருமாறு:

- உடற்திணிவு குறியீட்டுச் சுட்டியைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்
- அளவான உப்புப்பாவனையை கடைப்பிடித்தல்: வளர்ந்த நபரொருவருக்கு நாளொன்றில் தேவைப்படும் உப்பின் அளவு ஒரு தேக்கரண்டி ஆகும்.
- அளவான சீனிப்பாவனை: நாளொன்றில் ஆறு (6) தேக்கரண்டிக்கும் அதிகமாக சீனியை நுகரக்கூடாது.
- சாதாரண உடற்பயிற்சியில் ஈடுபடல்: நாளொன்றுக்கு 30 நிமிடம் வீதம் வாரமொன்றிற்கு குறைந்த பட்சம் 5 நாட்கள் வேகமாக நடத்தல், விளையாடுதல், நீந்துதல், சைக்கிள் ஓடுதல் போன்ற உடற்பயிற்சியில் ஈடுபடல்
- நாளொன்றிற்கு ஐந்து வகையான மரக்கறிகள் மற்றும் பழ வகைகள் உண்ண வேண்டும். நபரொருவர் நாளொன்றுக்கு 400g மரக்கறி, பழ வகைகள் உண்ண வேண்டும்.
- இதய நோய்களை உண்டாக்கும் மாற்றுக் கொழுப்புடைய உணவுகளை தவிர்த்தல்
- குருதி அமுக்கத்தை 140/90 பெறுமானத்திற்கு குறைவாகப் பேணுதல்

உசாத்துணைகள்:
மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கையேடுகள்
வாராந்தப் பத்திரிகைகள்

வவுனியா கல்வியியற் கல்லூரியின்
25ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வித்தியா தீபமும் சிறப்புற
எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்

A.M.J Fish Shop

குருமன்காடு,
வவுனியா.
024 5617778



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேர்டன் ரஸ்ஸலின் (Bertrand Russell - 1872 - 1970) கல்வி பற்றிய கோட்பாடு

திரு.க.சிவகுமார்
விரிவுரையாளர் – வ.தே.க.க

பேர்டன் ரஸ்ஸல் இங்கிலாந்தில் 1872 இல் உயர் குடும்பத்தில் பிறந்தார். நான்கு வயதில் இரு பெற்றோர்களையும் இழந்து பாட்டனார்களின் பராமரிப்பில் வளர்ந்தார். அவரது இளமைக்கால அறிவு, ஆர்வம் பௌதீகவதீதத்தையும், ஒழுக்கவியலையும் சார்ந்ததாக இருந்தது. எனினும் இளமைக்காலம் முதல் அவரது பிரதான விருப்பார்வத்துக்குரிய துறை கணிதமாகும். 1894 இல் இருந்து 1907 வரை ரஸ்ஸல் கேம்பிரிஜ் திரித்துவக் கல்லூரியில் பட்டப்படிப்பை மேற்கொண்டார். அங்கு அவர் கணிதத்தையும் மெய்யியலையும் பயின்றார்.

ரஸ்ஸல் அறுபதுக்கு மேற்பட்ட நூல்களையும் எண்ணற்ற கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவரது நூல்கள் மெய்யியலையும் மெய்யியற் பகுப்பாய்வையும் மட்டுமன்றி பல்வேறு துறைகளைச் சார்ந்தனவாகவும் இருந்தன.

01. சமூக மீள்கட்டுமானக் கோட்பாடுகள்
02. அணு பற்றிய அடிப்படை
03. சார்புக்கோட்பாட்டின் அடிப்படை
04. கல்வி பற்றியது.
05. சடப்பொருட்களின் பகுப்பாய்வு
06. கணிதக் கோட்பாடுகள்
07. தத்துவம் பற்றிய மேலோட்டமான கருத்துக்கள்
08. திருமணமும் அறமும்
09. மகிழ்ச்சியைத் தேடிக் கண்டறிதல்
10. கல்வியின் சமூக ஒழுங்கமைப்பு
11. வலு பற்றிய நூல்
12. பொருளும் உண்மையும் பற்றிய தேடல்
13. மானிட அறிவு
14. சமூகத்திறன் மீது விஞ்ஞானத்தின் பயன்

போன்றவற்றை எடுத்துக்காட்டுக்களாகக் குறிப்பிடலாம். இந்நூல்கள் யாவும் அவரது பொதுச் சிந்தனைகள். இவை அவரது சமூகவியல், அரசியல், கல்வி, சமயம் பற்றிய நோக்குகளைப் பிரதிபலித்தன.

இருபதாம் நூற்றாண்டின் மெய்யியலில் ஆழமான செல்வாக்குச் செலுத்திய சக்தியாக பேர்ட்ரண்ட் ரஸ்ஸல் விளங்கினார். பொதுப்பிரச்சினைகள், அரசியல், உலக மக்கள் எதிர்நோக்கிய போர் அபாயம், அணு ஆயுதக் கெடுபிடி ஆகியன பற்றி மனிதாபிமானக் கருத்துக்களை உலக அளவில் உருவாக்குவதற்கு அவர் முயற்சிகளை எடுத்தார். 1914 இல் முதலாம் உலகப்போர் மூண்ட போது அதை அவர் எதிர்த்தார். இதனால் அரசு அவரைக் கடுமையான நடத்தியது. அவர் விரிவுரையாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதோடு 1918 இல் அவர் சிறையில் அடைக்கப்பட்டார்.

இவருடைய கோட்பாடு அணுநிலைத் தருக்கவாதம் (Logical Atomism) இவ்வாதம் தொடர்பாக அவர் லண்டனிலும் மினகோட்டா பல்கலைக்கழகத்திலும் தொடர்சியான பல விரிவுரைகளை நிகழ்த்தினார். இவர் ஒரு கணித மேதையாக இருந்தபடியால் கணித நோக்கிலே மெய்யியலை ஆழப்படுத்தினார். விஞ்ஞானத்தின் அரசி கணிதம் என்றார். அளவையியலில் கணித முறைமையைப் புகுத்தியவர். அணு என்பதற்கு இவர் கொடுத்த விளக்கம். மேற்கொண்டு அதற்கு மேல் ஒரு விடயத்தை பகுப்பாய்வு செய்ய முடியாது. மேற்கொண்டு அதற்கு மேல் பகுப்பாய்வு செய்வது சாத்தியமற்றது. அணுநிலைத் தருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதத்தினூடாக எந்தப் பொருளையும் ஆழமாகப் பகுத்தறிந்து ஆய்வு செய்ய வேண்டிய தேவையை வலியுறுத்தினார். மெய்மையை அல்லது உண்மையை அறிந்து கொள்வதற்கு அணுநிலைத் தருக்க வாதம் அவசியம் என வலியுறுத்தினார்.

ஒவ்வொரு மனிதரிடத்திலும் காணப்படுகின்ற ஆக்கத்திறன்களை முழுமையாக வெளிக்கொணர்தல் வேண்டும். மகிழ்ச்சி என்பது ஆக்க மலர்ச்சியின் வெளிப்பாட்டுடன் ஒன்றிணைந்தது. குடும்ப வாழ்க்கை, கல்வி வாழ்க்கை அனைத்தும் ஆக்க மலர்ச்சியுடன் ஒன்றிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என ரஸ்ஸல் வலியுறுத்தினார். கல்வியானது ஒருவரிடத்தில் காணப்படுகின்ற முழுமையான ஆக்க மலர்ச்சியைத் தூண்டுகின்ற கருவியாக இருத்தல் வேண்டும்.

கல்வி ஆக்கத்திறன் கொண்ட சமூகத்தை இனங்காண்பதற்குத் தூண்டுதல் வேண்டும். கல்வியும் ஆக்கத்தூண்டலும் இன்றி தனிமனிதனிலோ சமூகத்திலோ முன்னேற்றம் ஏற்படாது என்பது இவரது வலுவான கருத்து. கல்வி உசாவல் விருப்பத்தைத் தூண்ட வேண்டும். ஆசிரியர் தத்துவவியலாளராக இருக்க வேண்டும் என்பதையும் இவர் முன்வைத்தார்.

முதலாம் உலகப்போரைத் தொடர்ந்து கல்வியியல் தொடர்பான பல கருத்துக்களை இவர் முன்மொழிந்தார். சமூக மீள் கட்டுமானக் கோட்பாடுகள் என்ற நூலில் கல்வி தொடர்பான இவரது சிந்தனைகள் வெளிப்படுகின்றன. ஒவ்வொரு மனிதரதும் ஆக்க மலர்ச்சியை முழு நிறைவாக வெளிப்படுத்தும் பொழுதுதான் சமூகத்தை தனிமனிதனை உன்னத நிலைக்கு இட்டுச்செல்ல முடியும் என்பது இவரது கருத்து. கல்வியானது இந்நோக்கம் நிறைவேறத் தேவையான அறிவு, நம்பிக்கைகள், மதிப்புகள், பண்புகள், திறன்கள் ஆகியவற்றைக் குழந்தைகளிடம் வளர்த்தல் வேண்டும். மாணவர்களது நடத்தையில் கல்வியால் தோற்றுவிக்கப்படும் மாற்றங்கள் சமூக அமைப்புக்குட்பட்டு இதனை மேம்படுத்தும் வகையில் இருத்தலின் அவசியத்தை ரஸ்ஸல் சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கு கல்வியறிவானது மாணவர்களது சுயசிந்தனையினின்றும் பெறக்கூடியதாக இருத்தலை ரஸ்ஸல் வலியுறுத்துகிறார்.

கற்பிக்கும் முறைகளை ஆராய்ந்து அறியும் முன்னரே எத்தகைய கல்வி சிறந்தது என்பதனையும், அக்கல்வியின் மூலம் எதைச் சாதிக்க முடியும் என்பதனையும் தெரிந்திருத்தல் அவசியம் என்பது ரஸ்ஸலின் கல்விக் கோட்பாடாகும்.

மாணவர்கள் கல்விக் கொள்கையின் இலக்காகக் கொள்ளப்பட வேண்டும். அவர்களை ஒரு கருவியாக பயன்படுத்தக்கூடாது. மாணவர்பால் உள்ளார்ந்த அன்பு கொண்ட ஆசிரியரால் மட்டுமே அவர்களது அறிவையும் குணநலன்களையும் வளர்த்திட முடியும்.

பொதுவான சில அடிப்படைத் தன்மைகளை வளர்ப்பதற்கேற்ப கல்வித்திட்டம் அமைக்கப்பெறுதல் வேண்டும் என்பது இவரது கொள்கையாகும். ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவான முறையில் கல்வித் திட்டம் அமையலாம். எனினும் பெண்களுக்கெனத் தனித்துறையில் பயிற்சிகளும் சிறப்புத் திட்டங்களாக அமைக்கப்படுதல் சிறந்தது.

சிறந்த பண்பினை உருவாக்குவதற்கான நான்கு முக்கிய குணநலன்களாக உற்சாகம், தைரியம், விடயங்களை எளிதில் கிரகித்துக் கொள்ளும் திறன், அறிவுக்கூர்மை ஆகியவற்றை ரஸ்ஸல் குறிப்பிடுகிறார். குழந்தைகளின் உடல், உள அறிவு வளர்ச்சியினைப் பேணுவதன் மூலம் இத்தகைய குணநலன்களை வளர்க்கலாம் என்பது இவரது நம்பிக்கையாகும்.

எல்லாக் குழந்தைகளுக்கும் பாகுபாடற்ற முறையில் கல்வி கற்பிக்கச் செயற்படும் திட்டமே ஒரு சீரிய கல்வித் திட்டமாகும். இம்முறையினால் நாட்டின் விஞ்ஞான பொருளாதார முன்னேற்றங்கள் தடைப்படுதல் கூடாது. அனைவருக்கும் பொதுவான கல்வி முறையே திருப்திகரமானதாக அமைய முடியும் என்கிறார் ரஸ்ஸல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி என்பது அலங்காரப் பொருளாக எண்ணப்படாமல், உபயோகமானதாக உபயோகிக்கக் கூடியதாகக் கருதப்பட வேண்டும். கற்பிக்கப்படும் கல்வி ஒரு சீரிய இலக்கை நோக்கி மாணவர்களை நடத்திச் செல்ல ஒரு கருவியாக அமைதலே உபயோகமான கல்வி எனப்படும்.

போதனைமுறை, நன்நடத்தை, நற்குணங்களை வளர்த்தற்குரியனவாக இருத்தல் அவசியம். கல்விமுறை மனோதத்துவத்தையும் நீதி நூல்களையும் அடிப்படையாகக் கொண்டு அமைதல் வேண்டும் என்கிறார் ரஸ்ஸல்.

முற்காலத்தில் ஒழுங்கும் கட்டுப்பாடும் மாணவரைத் தண்டிப்பதன் மூலமே நிலைநிறுத்தப்பட்டது. தற்போது பல்வேறு புதிய முறைகளைக் கடைப்பிடித்தலின் மூலம் கட்டுப்பாடு வலியுறுத்தப்படுகிறது. ஆசிரியர் சரியான முறையில் பொறுமையோடு செயற்பட்டால் சுயகட்டுப்பாட்டினை மாணவரிடையே வளரக்கலாம் என்பது ரஸ்ஸலின் கொள்கையாகும்.

ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள் சரியான முறையில் கையாளப்பட வேண்டுமெனில் அவர்களின் அறிவு வளர்ச்சியே முக்கியமானதாகக் கொள்ளப்பட வேண்டும். அறிவு வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு விரும்பத் தகுந்த குணநலன்களும் வளர்க்கப்படலாம்.

ஒரு குழந்தை உண்பது, உறங்குவது போன்ற செயல்களைத் தனக்காகச் செய்ய வேண்டுமே தவிர, மற்றவரை மகிழ்ச்சிப்படுத்தச் செய்யும் காரியமாகக் கருதக்கூடாது. கல்விப் போதனாமுறையில் இந்த உளவியல் தத்துவம் பின்பற்றப்பட வேண்டும்.

முதலில் குழந்தையின் அறிந்து கொள்ளும் ஆர்வம் தூண்டப்பட்டு அதன் பின்பு அதற்குத் தேவையான அடிப்படை அறிவு கொடுக்கப்பட்டால், குழந்தையின் இறுக்கம் தளர்ந்து குழந்தையின் கவனம், கட்டுப்பாடு கல்வியை நோக்கித் திரும்பும். இத்தகைய சூழ்நிலையை உருவாக்கிட வேண்டும்.

பாடத்திட்டம் பற்றிக் கூறுகையில், என்ன கற்றுத்தரப்பட வேண்டும், எப்படிக் கற்றுத்தரப்பட வேண்டும் என்ற இரு கேள்விகளுக்கும் நெருங்கிய தொடர்புள்ளது எனக் குறிப்பிடுகிறார். சீரிய முறையில் கல்வி கற்பிக்கப்பட்டால் கற்றல் எளிதாகின்றது. பாடங்கள் முதலில் இலகுவானதிலிருந்து பின்னர் கடினமானது வரை ஒரு குறிப்பிட்ட ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்ட பின்னரே கற்றுத்தரப்படுதல் வேண்டும்.

ஆரம்பப் பாடசாலைகளில் சிறிது நேரம் நடனத்திற்காக ஒதுக்கப்பட வேண்டும்.இது கலையுணர்வைத் தூண்டுவதோடு உடலுக்கு நல்ல பயிற்சியையும், ஆரோக்கியத்தையும் அளிக்கிறது. குழு நடனங்கள் மாணவரிடையே ஒருமைப்பாட்டை வளர்க்க உதவுகின்றன. பொதுவாகக் குழந்தைகள் பாடுவதில் விருப்பமிக்கவர்கள். ஆதலால் பாடல்கள் ஆரம்பத்திலேயே கற்றுத்தரப்பட வேண்டும்.

நல்ல இலக்கியங்களுக்குக் குழந்தைகளை அறிமுகப்படுத்த வேண்டும். இது அவர்களின் எழுத்து வன்மையினை வளர்ப்பதோடு எண்ணத்திட்டத்தையும் பெருக்கும். நல்ல பல இலக்கியப் பகுதிகளை மனனஞ் செய்தல், இலக்கியத்தோடு நெருங்கிய தொடர்பு ஏற்படக் காரணமாகிறது. மனனஞ் செய்தல் நடித்தலோடு இணைக்கப்படும் போது குழந்தைகள் ஆனந்தத்தோடு இலக்கியத்தைக் கற்க வழிவகுக்கிறது.

ஆரம்பப் பாடசாலைகளில் மொழியைக் கற்பிப்பது அவசியம். மொழி விளையாட்டு முறையிலேயே கற்பிக்கப்பட்டால் குழந்தைகளால் எளிதாகக் கற்றுக்கொள்ள முடியும்.

கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்கள் பன்னிரண்டு வயதிலிருந்து தான் கற்பிக்கப்படல் வேண்டும். பதின்னான்கு வயதிற்குள் மாணவர்க்கு இப்பாடங்களிலுள்ள ஆர்வம் கணக்கிடப்பட்டு அவர்களது விருப்பத்திற்கு ஏற்றாற் போல் கல்விமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றியமைக்கப்பட வேண்டும். பாடசாலையில் கல்வி போதித்தல் தொடர்ந்து நடைபெறும் போதே, வெளியுலகின் வாயிலாக மாணவர் பெறும் கல்வியும் இணைந்து வளர்வது அவசியம். வெளியுலகக் கல்வி என்னும் போது அதில் வேளாண்மை பற்றிய அறிவு, மிருகங்கள், தாவரங்கள் பற்றிய ஆய்வு தோட்டவேலை இவை அடங்கும்.

பதினைந்து வயதிற்கு மேற்பட்ட மாணவர்க்கும், அவர் விரும்பும் பாடங்களில் சிறப்பான கல்வி வழங்கப்படலாம். அதை விரும்பாத மாணவர் தொடர்ந்து பல்துறைக்கல்வி பயிலலாம். இப்பருவத்தில் பாடசாலைப் பாடங்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. புராதன இலக்கியங்கள்
2. கணிதமும் விஞ்ஞானமும்
3. நவீன மானிடவியல்

இவை தவிர வாழ்க்கைக்குப் பயன்தரக்கூடிய முக்கிய பாடங்களும் அனைவருக்கும் பயிற்றுவிக்கப்பட வேண்டும். மனித உடலியல், சுகாதார ஆரோக்கிய முறைகள் முதலியன இன்றியமையாத பாடங்களாகும். பாராளுமன்றம் பற்றியும் அரசியல் நிர்ணய சட்ட அமைப்புப் பற்றியும் சொல்லித்தரப்படலாம். ஆனால் இக்கல்வி அரசியல் பிரசாரமாக அமையக்கூடாது.

பாடத்திட்டங்களை விடப் பயிற்றுவிக்கப்படும் முறையே அதிமுக்கியமானதாகும். கற்பித்தலை எளிதான ஒரு வேலை எனக் கருதாமல் ஆசிரியர் ஆர்வத்தோடு இதனைச் செய்தல் வேண்டும்.

கல்வி கற்கும் காலத்தில் பயிற்சியின் தொடக்கம் மாணவரிடமிருந்துதான் ஆரம்பமாக வேண்டும். அதற்கெனத் தனிப்பயிற்சிகள், செய்முறைகள் மாணவருக்கு வழங்கப்பட வேண்டும். நூல் நிலையங்களும், ஆய்வுகூடங்களும் இடவசதி மிக்கவையாகவும், மாணவர் தனிப்பயிற்சியினைத் தொடர்வதற்கான வசதி படைத்தனவாகவும் இருத்தல் அவசியம்.

தற்போதைய அரசியல், சமூக, சமய நிகழ்ச்சிகளைப் பற்றி மாணவர் ஆர்வத்துடன் கேட்டறியத் தூண்டப்பட வேண்டும். கருத்துப் பரிமாறல், பேச்சுப்போட்டி இவற்றின் மூலம் பேச்சு வன்மையை, செயலாற்றலை வளர்த்துக் கொள்ள வகை செய்ய வேண்டும்.

விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஆர்வத்தினை மாணவர்க்குத் தூண்டுதல் வேண்டும். திறம்படச் செயலாற்றிய மாணவர் பாராட்டப்படுதலும், தவறு புரிந்தவர் மென்மையாகக் கண்டிக்கப்படுதலும் அவசியமாகும். அறிவின்மையைச் சுட்டிக்காட்டி மாணவரை அவமதித்தலை ஆசிரியர் கைவிடுதல் வேண்டும். கற்கும் கல்வியினால் பெறும் அறிவுக்கும், நடைமுறை வாழ்வுக்கும் உள்ள தொடர்பு மாணவருக்குச் சுட்டிக்காட்டப்படுதல் வேண்டும். கல்வி அறிவின் மூலம் உலகினையே மாற்றியமைக்க இயலும் என்ற எண்ணத்தை வளர்த்தல் வேண்டும். ஆசிரியர் மாணவரின் எதிரி எனத் தோற்றமளிக்காமல் நல்ல நண்பனைப் போல் இணைந்து பணியாற்ற முயல வேண்டும் என்கிறார் ரஸ்ஸல்.

இவற்றை தொகுத்து நோக்கின் பேர்டன் ரஸ்ஸலின் கல்வி பற்றிய கோட்பாடானது விஞ்ஞான பூர்வமானதாகவும் நிகழ்காலக் கல்விப் புலத்திற்குப் பொருத்தமானதாகவும், நடைமுறைச் சாத்தியமானதாகவும் காணப்படுகிறது. இன்றைய இலங்கைக் கல்வி ஏற்பாட்டில் ரஸ்ஸலின் கல்விக்கோட்பாடுகள் பெரும்பாலும் உள்ளடக்கப்பட்டிருத்தலைக் காணமுடிகிறது.

**உசாத்துணை நூல்கள்**

1. அனஸ்.எம்.எஸ்.எம். (2006), மெய்யியல், குமரன் பத்தக இல்லம், கொழும்பு - சென்னை.
2. சந்தானம்.எஸ். (2007), கல்வியும் சமூகமும், சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை
3. சிவகுமார்.க (2010) கல்வித் தத்துவவியலாளர்களும் தத்துவங்களும், சுபாஸ் பிறிண்டர்ஸ், வவுனியா,
4. பங்கஜம்.பு (2007) கல்வியும் சமுதாயமும், சாரதா பதிப்பகம், சென்னை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையும் வகுப்பறையில் அழகியலுணர்வும்

திருமதி.அருந்ததி இரவீந்திரன்
விரிவுரையாளர் – வ.தே.க.க

ஓர் உயிரியோ, ஒரு செயலோ, ஒரு பொருளின் வடிவமோ அல்லது வேறு எந்த உருவமாயிருந்தாலும் அவைகள் காலத்தால் மெல்ல மெல்ல வளர்ந்தே வளர்ச்சி நிலையைக் கண்டடைய முடியும். இது அனைவரும் அறிந்த உண்மை. இந்த உண்மைக்கு மாறாக எந்த வரலாறு எழுதினாலும் அல்லது எழுதப்பட்டிருந்தாலும் அது ஏற்புடையதல்ல என்பதே நிதர்சனம். அந்த வகையில் இசை எவ்வாறு வளர்ச்சியுற்றது என நோக்குவோம்.

ஆதியில் மனிதன் நாகரிகம் வளர்ச்சியடையாத காலத்தில் ஆடு, மாடுகளை மேய்ப்பதே அவர்களின் தொழிலாக இருந்து வந்துள்ளதை வரலாற்றின் வாயிலாக அறிய முடிகிறது. அந்த வகையில், இடையர்கள் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் போது, வண்டு துளைத்த மூங்கில் துளையிலிருந்து இனிய ஓசை வெளிப்பட்டதைக் கண்டு, மூங்கிலை வெட்டியெடுத்து ஓரிரு துளையிட்டு அதில் ஊதி இசையை வெளிப்படுத்தினர் என்ற ஆரம்ப இசையின் பிறப்பை அறிய முடிகிறது.



அடுத்து பழங்காலத்தில் மனிதன் வேட்டையாடும் தொழிலையும் கொண்டிருந்தான் என்றும் வரலாற்றின் வாயிலாக அறிகிறோம். அவன் வில்லில் அம்பை வைத்து எய்யும் போது வில்லின் நரம்பிலிருந்து வெளிப்பட்ட ஓர் இனிய ஒலியைக் கண்டான். அந்த ஒலியால் கவரப்பட்ட மனிதன் இங்கே மேலே உள்ள படத்தில் கண்டது போல் பல நரம்புகளை வில்லின் வளைவு வரை வரிசையாகக் கட்டி மீட்டும் போது அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் ஒலி வீச்சை வெளிப்படுத்தியதைக் கண்டு ஆனந்தப்பட்டான். இங்கு வில் நரம்பின் நீளம் குறையக் குறைய ஒலியின் வீச்சு அதிகமாவதைக் கண்டான். பிறகு காலப்போக்கில் நரம்புகளையும் ஒலி வீச்சையும் ஒழுங்குபடுத்தி கீழிருந்து மேல் நோக்கி நரம்பை மீட்டிச் செல்லும் போது ஏறுவரிசையில் அதன் இசை ஒலி அதிகரித்துச் சென்றதையும், அதை அப்படியே இறங்கு வரிசையில் மீட்டி வரும் போது ஒலி வீச்சு அதே அளவில் குறைந்து வருவதையும் உணர்ந்துள்ளான். ஆகவே இது பிற்காலத்தில் ஏழு ஸ்வர அமைப்பாகக் கொண்டு ஏறுவரிசையில் ஸ ரி க ம ப த நி என்றும் இறங்குவரிசையில் நி த ப ம க ரி ஸ என்றும் மாற்றம் பெற்றுள்ளதைக் காண முடிகிறது.

இத்தகைய இசையானது அசையாத கல்போன்ற மனங்களையும் கரைய வைக்கின்ற வியத்தகு அற்புதம் உடையது.

"Such songs which brings
Fire in the heats of men and
Tears in the eyes of women"

..... Long fellow



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை பருவ நிலைக்கு ஏற்ப உடல்நிலையும், மன நிலையும் மாற்றங்கள் அடைவது போல இயற்கை ஒலி அலைகளும் உடலில் உள்ளத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. வானத்தின் இடியோசை, கடலின் அலையோசை, இருதயத் துடிப்போசை, மரங்களின் அசைவோசை, மிருகங்களின் காலடியோசை, வண்டுகளின் ரீங்காரம், மூச்சுக்காற்று சப்தம், கைதட்டல் ஓசை, வண்டு துளைத்த மூங்கில் வீசும் தென்றல் துணையோடு எழுப்பிய ஓசை, சில்லோசை, மழைக்கால தவளையின் ஓசை, சுண்டு வண்டின் தட்டல் ஓசை போன்றவை ஆதி மனிதனின் தாள உணர்வையும், சுருதி மற்றும் இசை உணர்வைத் தூண்டியவைகளாக இருந்திருக்க வேண்டும். இவ்விதம் இயற்கையோடு இசைந்த உணர்வைத் தூண்டியவைகளாக இருந்திருக்க வேண்டும். இவ்விதம் இயற்கையோடு இசைந்த நாதமானது இயற்கையின் அங்கமான உடலோடும் இசைவாகிறது.

மனித உணர்வுகளைப் பரவசப்படுத்தி தன் வசப்படுத்தும் ஆற்றல் கொண்ட அழகியல் உணர்வு ஒருவனின் சாதாரண ஆக்கங்களில் புலப்படுத்தப்படும் போது அவை கலைப்படைப்பாக பரிணமிக்கின்றன. இசையில், நடனத்தில், ஓவியங்களில், நாடகத்தில் மட்டுமன்றி இலக்கியப்படைப்புகளிலும் அழகியலைக் காணும் மனிதன் இன, மொழி, நிற பேதங்களுக்கு அப்பால் நின்று அதனை இரசிப்பதைக் காண முடிகிறது. மனிதனிடம் இயல்பாகவே உள்ள அழகை விரும்பும் மனப்பாங்கும் அழகுக்கலைக்கு ஒரு பெறுமானத்தை வழங்கி நோக்கும் தன்மையும் அக்கலைப்படைப்புக்களை மதித்துக் காக்கும் மரபையும் அவனிடம் ஏற்படுத்தியுள்ளன.

சுவையான அழகுற அமைந்த பாடத்தை கற்கும் போது மாணவர்களுக்கு ஏற்படும் உணர்ச்சியே இரசனை உணர்வாகும். அறிவையும், திறன்களையும், மனப்பாங்குகளையும் மாணவர்கட்கு ஊட்டுவதுடன் பாடத்தில் ஓர் இரசனைச் சுவையை ஏற்படுத்தி சிறந்த மாணவர்களை உருவாக்குவதும் ஆசியர்களின் முக்கிய செயற்பாடுகளாகவுள்ளன. சங்கீதக் கச்சேரி, நாடகம், நடனம், சித்திரக் கண்காட்சி. இயற்கையை இரசித்தல் போன்ற அழகியலுணர்வு சார்ந்த விடயங்களில் ஈடுபடும் போது உள்ளம் புத்துணர்ச்சி பெறுகின்றது. உள நெருக்கீடுகள், மன இறுக்கங்கள், அழுத்தங்கள் இல்லாமல் போகின்றன. இதனால் ஆளுமை வளர்ச்சியடைகின்றது.

வேகமாக ஓய்வில்லாமல் இயந்திர வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் மனத்தாங்கல்களுக்கு உட்படும் இன்றைய பாடசாலைகள் சமூகச் சூழலிலேயே ஆறுதலையும் உள விருத்தியையும் ஏற்படுத்தும் ஒரே ஊடகம் கலையாகும். கலையை இரசிக்கும் மனிதன் முரடனாக இருக்க மாட்டான். அவனது நடை, உடை, பாவனை அழகாக இருக்கும். அழகியல் பற்றிய அறிவுடன் இரசனை அனுபவமும் அவனை வளப்படுத்தும். இரசனை அனுபவத்தை ஆசிரியர்கள் எதிர்காலச் சந்ததிகளான மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.

இதுமட்டுமல்ல, "சாதாரண மனிதன் அழகிய பொருட்களை விரும்புகின்றான். ஆசிரியரான ஞானி அழகை விரும்புகின்றான்" என கிரேக்க அறிஞர் பிளேட்டோ கூறுகின்றார். "அழகியலுணர்வு (Esthetic Sense) மனிதப் பண்புகளை, ஆளுமைகளை வளர்க்கும்" என்றார் இரவீந்திரநாத்தாகூர். இவ்வாறு நோக்கினால் அழகை விரும்பும் சமூகம் ஒன்றை உருவாக்க அழகியலுணர்வு இரசனை என்பன முதலில் ஆசிரியர்களிடம் வளர்க்கப்பட வேண்டும்.

அழகியற் கலைகளை இரசித்தல் இன்பத்தைத் தோற்றுவிக்கின்றது. யாதேனும் நிகழ்வு புலன்களை வருடுவதால் ஒருவருள் ஏற்படும் மானசீகமாக திருப்தியும் இன்பமும் இரசித்தலாகப் பரிணமிக்கின்றது. இன்பத்தைத் தோற்றுவிக்கும் ஆற்றல் உலகில் எல்லாப் பொருள்களுக்கும் உண்டு. புலன்களை வருடும் எல்லாம் இவற்றைக் கொண்டுள்ளன. இன்பத்தைத் தோற்றுவித்தலின் ஆரம்பம் புலனுணர்வாகும். ஐம்புலன் உணர்வுகளினூடாகச் சுவைகள் தோற்றுகின்றன. புலன்களை வெளிப்படுத்தும் உணர்வுகள் காரணமாக மனம் அழகியலனுபவங்களை பெறுகின்றது. இத்தகைய அனுபவங்களைப் பெற ஆர்வமுள்ளவர்களுக்கு காதில் விழும் பாடல் கவிதை, கண்முன்னே விழும் சித்திரம், நடனம், நாடகம், சங்கீதப் பாடல்கள் என்பன புலன்களைத் தூண்டி அழகியலுணர்வையும், இரசிப்பையும் வெளிப்படுத்துகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வாழ்க்கையில் தெரிந்தோ, தெரியாமலோ அழகியலானது பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. குழந்தைகள் அனேகமாக, தாயின் வயிற்றில் கருவாக இருக்கும் போதே ஓசையை உணர்கின்றன. பிறந்த பின்பு தாயின் தாலாட்டுப் பாடல்கள், தேவதைக் கதைகள் என்பனவற்றுக்கு குழந்தைகள் ஆர்வம் காட்டத் தொடங்குகின்றன. அத்தோடு எமது வீட்டில் பூச்சாடிகளை வைத்தல், ஜன்னல்களுக்கு திரைச்சீலை இடுதல், வீட்டைச் சுத்தமாக வைத்திருத்தல், அழகான ஓவியங்களை சுவர்களில் மாட்டுதல், மேசை விரிப்புகளை வைத்திருத்தல், காலப்போக்கில் வீட்டுத் தளபாடங்களை மாற்றுதல் உட்பட அனைத்துச் செயற்பாடுகளிலும் அழகியலை காண முடியும்.

அழகியல் என்பது அழகான பொருட்களைக் காணும் போது அல்லது அழகான முறையில் ஒரு கருத்தினை வெளிப்படுத்தும் போது ஏற்படும் உணர்ச்சி ஆகும். அழகு என்பது ஒவ்வொரு நபருக்கும் அவர்களுடைய மனங்களில் ஈடுபடுகின்ற தன்மையின் வெளிப்பாடு ஆகும். இங்கு அழகியல் என்னும் பதமானது முதன்முதலாக 1750 இல் பவும் கார்தேன் (Baumgarten) என்னும் ஜேர்மன் மெய்யியலாளரின் உபயோகிக்கப்பட்டது.

ஒருவரின் சமநிலையான ஆளுமை விருத்திக்கும் அழகியல் பாடங்களோ, அழகியல் சார்ந்த செயற்பாடுகளோ, அழகியல் பாடம் சார்ந்த கற்பித்தல் நுட்பங்களோ அத்தியாவசியமாகின்றன. அழகியற்கலைகளின் மூலம் மாணவர்களின் ஆக்கத்திறனையும், கற்பனாசக்தியையும், செயல்நுட்பத்திறனையும், இரசித்தல், நயத்தல் திறனையும் நேர்மனப்பாங்கு விருத்தியையும் ஏற்படுத்த முடியும்.

இன்றைய சமுதாயத்தினை நோக்கினால், தற்கொலை, வீட்டினுள் முரண்பாடு, மதுபானம் பாவித்தல், கொலை செய்தல், கொள்ளை அடித்தல், களவெடுத்தல், பொய் சொல்லுதல், பெரியோர்கள் - முதியோர்களை மதிக்கும் மனப்பாங்கு இல்லாதிருத்தல், அதே போல் சிறுவர்களுக்கும் உரிமைகள் வழங்கப்படாமை போன்ற பிரச்சினைகள் செறிந்திருக்கின்றன. இவை போன்ற சூழ்நிலைகளுக்குச் சாதகமாக அமைவது ஒருவருள் உள்ளடங்கிய உணர்வுகள், நடத்தைகள் என்பவற்றை ஏற்ற முறையில் மாற்றி அமைக்க இயலாமையாகும். இதனால் ஒவ்வொருவருக்கும் உடல், உள இயக்கம், அறிவு, மனவெழுச்சி ஆகியவற்றைத் திட்டமிட்டு ஒழுங்கு முறையில் நடைமுறைப்படுத்தவும் அழகியல் பாட கற்பித்தல் நுட்பங்கள் உதவுகின்றன என்பதில் ஐயமில்லை.

வகுப்பறையிலும் மாணவர்கள் மனவெழுச்சிப் பிரச்சினைகள், குறைபாடுகள் காரணமாக தம்மைப் பற்றி கரிசனை காட்டாமை, அன்றாடப் பணிகள் பற்றி கவனம் செலுத்தாமை, பகற்கனவு காணல், நீண்ட நேரம் ஒன்றைப் பார்த்தபடி இருத்தல், மனக்குழப்பமடைதல், அடிக்கடி துக்க இயல்புகளை வெளிக்காட்டல், களவெடுத்தல், சிறு விடயங்களுக்கும் கலவரப்படல், தாழ்வுச்சிக்கல், முரட்டுச்சுபாவம் போன்ற இயல்புகளை வெளிக்காட்டுபவர்களுக்கு அழகியல் பாட கற்பித்தல் நுட்பங்கள் மூலம் முகாமை செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே பேரானந்த அழகை விரும்பும் கல்விச்சமூகம் ஒன்றை உருவாக்க வேண்டுமெனின் அழகிலுணர்வு, இரசனை என்பன மாணவர்களிடம் வளர்க்கப்பட வேண்டும். தினமும் வகுப்பறையில் மாணவர்கள் சிலர் பாடத்தினை கற்பதில் ஆர்வமுடையவர்களாகவும், சிலர் விருப்பமின்றியும், நோய்வாய்ப்பட்ட நிலையில் சோர்வாக இருப்பவர்களாகவும், இன்னும் சிலர் வீட்டின் நிலைமைகளால் ஏற்படும் மன மாற்றங்களுடனும் துன்பங்களை மறைத்து சிரித்துக் கொண்டிருப்பவர்களாகவும் இன்னும் பல வகைப்பட்டவர்களாகவும் இருப்பர். இவ்வாறு வெவ்வேறு சூழ்நிலைகளில் இருந்து பாடசாலைக்கு கற்க வரும் மாணவர்களது மனங்களை ஒருங்கிணைப்பதில் அழகியல் பாட கற்பித்தல் நுட்பங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. மாணவர்களது மனநிலைகளை மாற்றி கற்றலின் பால் ஊக்குவிக்கவும் மாணவர்களை கற்றலில் தயார்ப்படுத்தவும் அழகியல் செயற்பாடுகளை செயற்படுத்த வேண்டியுள்ளது. அதாவது மாணவர்களை மகிழ்விக்கக்கூடிய பாடல்கள், நகைச்சுவைத் துணுக்குகள் (ஜோக்ஸ்), சிறு அபிநயங்கள், அழகாக கதை கூறுதல் போன்ற அழகியல் செயற்பாடுகளை செய்விப்பதனூடாக மாணவர்களது மனங்களை ஒன்றிணைத்து வெற்றிகரமாக கற்றல் கற்பித்தல் செயன்முறைகளை முன்னெடுக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரின் கடமை என்பது குறித்த பாடத்தை கற்பித்து குறித்த பாடத்தில் மட்டும் தேர்ச்சியுடைவராக மாற்றுவது அல்ல. மாணவர்களை ஏனைய பாடங்களிலும் விருப்பத்தை ஏற்படுத்தி அவர்களை இணைப்பாடவிதான செயற்பாடுகளின்பால் ஈர்க்கச் செய்து வழிநடத்துவதும் செயற்படுத்துவதும் ஆசிரியரது கடமையாகும். இவ்வாசிரியர் சமூகத்திற்கு நற்பிரஜையை உருவாக்குவதற்காக இணைப்பாடவிதான செயற்பாடுகளில் அழகியல் பெரிதும் பங்களிப்புச் செய்கின்றது எனலாம்.

**உசாத்துணை நூல்கள்:**


1. ஜெயராசா.சபா (2003) அழகியற் கல்வி, தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்
2. பாலசுப்பிரமணியம் தனபாலன்(2003), கற்பிக்கும் கலை புதிய பிரவேசங்கள், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
3. முஹம்மது இப்ராஹிம் ஆலிம் சாஹிப் முஹம்மது அமீன் (2008) - முஸ்லிம்கள் வளர்த்த அறிவியல் கலைகள் - அல்ஹஸனாத் பதிப்பகம், ஹெம்மாதகம
4. லீலாம்பிகை செல்வராஜா (2002), பரத நாட்டியம் கற்பித்தல் முறைகள், கொள்ளுப்பிட்டி, கொழும்பு
5. ராஜு.மா (2012) தென்னிந்திய மரபு இசை இயல், தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி, கோவை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னூலார் நவிலும் நல்லாசிரியர்

வே.ஞானசம்பந்தன்
விரிவுரையாளர் – வ.தே.க.க

**அறிமுகம்:**

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்ற முறையில் நன்னூல் எனும் இலக்கண நூல், தமிழ் இலக்கிய வரலாற்றிலே இடைக்காலத்தில் எழுந்தது. பழங்காலத்தில் இலக்கணத்துறையில், தொல்காப்பியம் பெற்ற இடத்தினை இடைக்காலத்தில் இந்நூல் பெற்றதெனலாம்.

"முன்னூ லொழியப் பன்னூல் பலவினுள்
நன்னூ லாருக் கெந்நூ லாகும்
இணையோ வென்னுந்துணிபே மன்னுக" (இலக்கணக்கொத்து)

என்று இந்நூல் புகழப்படுகின்றது. தொல்காப்பியத்தையும், தொல்காப்பியம் இளம்பூரணர் உரையையும் முதல் நூலாகக் கொண்ட வழிநூலாக நன்னூல் விளங்குகின்றது.

இந்நூலின் ஆசிரியர் பவணந்தி முனிவன். தொல்காப்பியத்தை எழுதியவர் தொல்காப்பியர் எனப்படுவது போல் நன்னூலை இயற்றியவர் நன்னூலார் எனப்பட்டார். குலோத்துங்க சோழன் காலத்தவர்; 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்;சமணச் சான்றோன். இன்றைய கர்நாடக மாநிலத்திலுள்ள சனகை என்னும் ஊரிற் பிறந்தவர். சீயகங்கன் என்னும் அப்பகுதி அரசனால் ஆதரிக்கப்பெற்றவர்.

நன்னூல், ஐந்திலக்கணங்களுள் முதல் இரண்டுமான எழுத்தையும் சொல்லையும் குறித்த இலக்கணங்களையே கூறுகின்றது.இன்றைய கல்வி உலகில் ஆசிரியம், ஆசிரியத்துவம், ஆசிரிய வாண்மை, ஆசிரிய வாண்மைத்துவம் எனக் கல்வியியலாளர்களால் ஆசிரியர் பற்றிப் பேசப்படும் விடயங்களினை இந்நூலின்கண் காணக்கூடியதாகவுள்ளது. எனவே எக்காலத்துக்கும் பொருந்தும் நன்னூலார் உரைத்த நல்லாசிரியரின் பண்புகளை இங்கு நோக்குவது பயனுடையதாகும்.

**நல்லாசிரியர் இலக்கணம்:**

பத்துச்சூத்திரங்களில் நல்லாசிரியரின் இலக்கணம் பற்றி விரிவாகக் கூறிச் செல்கின்றார் நன்னூலார்.

குலனரு டெய்வங் கொள்கை மேன்மை
கலைபயி றெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவ னூலுரை யாசிரி யன்னே (நன்னூல் - 26)

மேற்குறித்த சூத்திரத்தினூடாக நன்னூலார் நல்லாசிரியருக்கான பண்புகளைப் பட்டியற்படுத்துகின்றார்.

| | |
|---|---|
| குலன் | - உயர் குடிப்பிறப்பு |
| அருள் | - ஜீவகாருண்யம் |
| தெய்வம் கொள்கை | - கடவுள் நம்பிக்கையும் வழிபாடும் |
| மேன்மை | - பெருந்தன்மை |
| கலைபயில் தெளிவு | - பல நூல்களிற் பயின்ற தேர்ச்சி |
| கட்டுரை வன்மை | - மாணவர்கள் எளிதிற் புரிந்து கொள்ளும்படி தொகுத்துச் சொல்கின்ற சொல்வன்மை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலம், மலை, நிறைகோல், மலர்நிகர் மாட்சி - பூமியையும், மலையையும் தராசுக்கோலையும் பூவையும் ஒத்த உயர்ந்த குணங்கள்

உலகியலறிவு - உலகத்திலுள்ள நன்மைதரும் செயல்களை அறிந்திருக்கின்ற அறிவு

உயர்குணம் இனையவும் அமைபவன் நூலாசிரியன் - இவைபோன்ற மிக உயர்ந்த குணங்கள் அனைத்தும் சேர்ந்து பொருந்தியிருக்கப் பெற்றவனே நூலினைக் கற்பிக்கும் ஆசிரியன் எனக் கூறப்பட்டுள்ளது. குலன் எனும் குடிப்பிறப்பு இன்றைய காலத்துக்குப் பொருந்தாது போகலாம். ஆனால் ஏனைய விடயங்கள் அனைத்தும் என்றைக்கும் பொருந்துவனவே.

நன்னூலார், நல்லாசிரியர் ஒருவர் நிலம், மலை, நிறைகோல், மலர் என்பவற்றுக்கு நிகராக இருக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை விளக்கிக்கூறியுள்ளார்.

1. நன்னிலமும் நல்லாசிரியரும்:

"தெரிவரும் பெருமையும் திண்மையும் பொறையும்
பருவ முயற்சி யளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பா கும்மே" (நன்னூல் 27)

என்று நன்னூல் நிலத்தின் நற்பண்புகளைக்கூறி அவை ஆசிரியருக்கும் இருக்க வேண்டுமெனக்கூறுகின்றது. பிறரால் முழுமையாகத் தெரிந்து கொள்ளமுடியாத அளவிற்கு மிக உயர்ந்த உருவப்பரப்பும் வலிமையும் பொறுமையும் தக்க பருவத்தில் மேற்கொள்ளப்படும் முயற்சியின் அளவுக்கேற்பப் பயன்தரும் குணங்கள் அனைத்தும் நிலத்தின் பண்புகளாகும். இதே போல பிறரால் தெரிந்து கொள்ள முடியாத அளவுக்குக் கல்விப் பெருமையும் தன்மேல் விழுந்த பொருள்களைக் கலங்காமல் வலிமையாகத் தாங்கும் நிலம் போலத் தன்னை நெருங்கி வந்தவரால் கலங்காத அளவு மனத் திண்மையும் தீங்கிழைத்தவருக்கும் நன்மையே செய்யும் நிலம் போல் பயன்தருதலும் ஆகிய நற்பண்புகளைக் கொண்டவராக நல்லாசிரியர் திகழ வேண்டும்.

2. நன்மலையும் நல்லாசிரியரும்:

மலைக்குரிய பண்புகளைக் குறிப்பிட்டு அவை ஓர் ஆசிரியருக்கும் இருந்தால் அவர்தான் நல்லாசிரியர் எனக்கூறுகின்றார் நன்னூலார்.

"அளக்க லாகா அளவும் பொருளுந்
துளக்க லாகா நிலையும் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையும் மலைக்கே" (நன்னூல் - 28)

அளந்தறிய முடியாத வடிவத்தால் விரிந்தும் எண்ணிக்கையில் அடங்காத அளவுக்குப் பொருள்களைத் தன்னகத்தே கொண்டிருப்பதும் உயர்ந்த தோற்றமும் அசைக்க முடியாத அளவுக்கு வலிமையும் மழையில்லாமல் வறண்டு நிற்கும் காலத்திலும் நீர்வளம் தரும் வள்ளற்பண்பும் மலைக்குரிய சிறப்புப் பண்புகளாகும்.

அளந்தறிய முடியாத அளவுக்குக் கல்வியிற் சிறந்தும் அளந்தறிய முடியாத அளவுக்குப் பல்துறை அறிவும் எவராலும் அசைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு ஆழ்ந்த பாடப்புலமையும் நெடுந்தொலைவிற்கு அப்பால் இருப்பவருக்கும் புகழால் உயர்ந்த தோற்றம் அளித்தலும் பொருள் கிடைக்காத வறண்ட காலத்திலும் கூடத் தம் மாணவருக்குக் கல்வியை வாரி வழங்கும் வள்ளற்றன்மையும் ஓர் ஆசிரியருக்கு இருந்தால் அவரே நல்லாசிரியர்.

3. நிறைகோலின் மாண்பும் ஆசிரியர் மாண்பும்:

"ஐயம் தீரப் பொருளை யுணர்த்தலும்
மெய்ந்நடு நிலை மிகுநிறை கோற்கே" (நன்னூல் - 29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தேகம் போகுமாறு தன்னிடம் வைத்து நிறுக்கப்பட்ட பொருளின் அளவைக் காட்டுதலும் இருதட்டுக்களுக்கும் நடுவில் உண்மையாக நிற்றலுமாகிய இவ்விரு பண்புகளும் நிறைகோலுக்குரிய நல்லியல்புகளாகும். அதேபோல் ஆசிரியரிடமும் இவ்விரு பண்புகளும் காணப்பட வேண்டும். மாணவனால் வினாவப்பட்ட பொருளின் இயல்பை ஐயம் நீங்குமாறு விளக்கிக் கூறுதலும் மாறுபட்ட இரு மாணவரிடத்துத் தான் நடுவுநிலைமையாக நிற்றலும் நல்லாசிரியரின் அருங்குணங்களாகும்.

4. மலரின் மாண்பும் ஆசிரியர் மாண்பும்:

மங்கலப் பொருளாகவும் எச்செயலையும் அலங்கரிப்பதற்கு மிக இன்றியமையாததாகவும் மகிழ்ந்து எல்லோரும் மேலே சூட்டிக்கொள்ளக்கூடியதாகவும் மென்மைத்தன்மையுடையதாகவும் மலரும் நேரத்தில் முகம் விரிந்து மலர்வதாகவும் விளங்குவது மலரின் இயல்பு. இவ்வாறே நல்லாசிரியரும் திகழ வேண்டும்.

"மங்கல மாகி யின்றி யமையா
தியாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே" (நன்னூல் - 30)

எனவே தொகுத்து நோக்கும் போது நன்னூல் நல்லாசிரியரருக்குரிய நற்பண்புகளாக, இலக்கணங்களாக பின்வரும் விடயங்களை முன்வைக்கின்றது.

1. மாணவரிடத்தே கருணையுடைவராக இருக்க வேண்டும்.
2. கடவுள் நம்பிக்கை, வழிபாடு என்பவற்றில் ஈடுபாடுடையவராக இருக்க வேண்டும்.
3. பெருந்தன்மையுடைவராக இருக்க வேண்டும். (Generosity)
4. பல நூல்களைக் கற்ற தேர்ச்சியுடையவராக இருக்க வேண்டும்.
5. மாணவர்கள் எளிதிலே புரிந்து கொள்ளும்படி தொகுத்துத் சொல்கின்ற சொல்வன்மை உடையவராக இருக்க வேண்டும்.
6. வாதம் செய்யும் திறனும் அதற்கான மனத்திண்மையும் இருக்க வேண்டும்.
7. தீங்கிழைப்பவருக்கும் நன்மை செய்யும் மனப்பாங்கினை கொண்டிருத்தல் வேண்டும்.
8. பொறுமையுடையவராக இருக்க வேண்டும்.
9. மாணவர்களுக்குப் பயன் தருபவராக இருக்க வேண்டும்.
10. கல்வியில் சிறந்து விளங்க வேண்டும்.
11. பல்துறையறிவினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
12. பாடத்துறையில் ஆழ்ந்த புலமை பெற்றிருக்க வேண்டும்.
13. எல்லோராலும் அறியக்கூடியவாறான தோற்றமும் உருவமும் உடையவராக இருக்க வேண்டும்.
14. கல்வியினைக் கொடையாக வழங்கும் பண்புடையவராக இருக்க வேண்டும்.
15. மாணவர்களது ஐயங்களைத் தெளிவாக விளக்கிக் கூறும் பண்புடையவராக இருக்க வேண்டும்.
16. கருத்து வேறுபட்டு நிற்கும் மாணவரிடையே நடுவுநிலைமையாக நின்று செயற்பட வேண்டும்.
17. நற்செயல்களுக்குரியவராக இருக்க வேண்டும்.
18. செயல்களைச் சிறப்பிக்க இன்றியமையாதவராக இருக்க வேண்டும்.
19. யாவரும் போற்றிடும் தன்மையுடைவராய் இருக்க வேண்டும்.
20. மென்போக்கு உடையவராக (மென்றிறன் - Soft Skill) இருக்க வேண்டும்.
21. கற்பிக்கும் வேளை முகமலர்ச்சியுடனே கற்பிக்க வேண்டும்.
22. உலகிலுள்ள நன்மைதரும் விடயங்களை அறிந்திருக்க வேண்டும். (உலகியலறிவு)

நல்லாசிரியருடைய இலக்கணங்களைக் கூற விழைந்த நன்னூலார், ஆசிரியர் ஆகாதார் இலக்கணங்களையும் வரையறை செய்துள்ளார். எத்தகைய குணங்கள் உடையவர்கள் ஆசிரியராவதற்குத் தகுதியற்றவர்கள் என்பது பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மொழிகுண மின்மையும் இழிகுண வியல்பும்
அழுக்கா றவாவஞ்ச மச்ச மாடலுங்
கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோ ரிலரா சிரியரா குதலே. (நன்னூல் - 31)

அதாவது, தான் கற்றவற்றை உள்ளபடியே பாடம் சொல்லும் குணம் இல்லாதவர், பொய் பேசுதல் போன்ற இழிந்த குணங்களை இயற்கையிலே கொண்டிருப்பவர், பொறாமை, ஆசை, வஞ்சனை என்பவற்றை உடையவர், கேட்போருக்கு அச்சம் உண்டாகும்படி பேசுபவர், கழற்குடம், மடல்களையுடைய பனைமரம், பருத்திக்குண்டிகை, முடத்தெங்கு ஆகியவற்றுக்கு ஒப்பாக இருப்பவர் ஆகியோர் ஆசிரியராகத் தகுதியற்றவர்கள்.

1.கழற்குடம்:

வழுவழுப்பான கழற்சிக்காய்கள் குடத்தினுள் இடப்பட்டதும் முன்னும் பின்னுமாக அவை குடத்தினுள் நிரம்பிவிடும். பின்னர் அவை குடத்தினுள் இருந்து வெளிப்படும் போது ஒரு வரிசை முறையின்றி முன்னால் இடப்பட்டது பின்னாலும், பின்னால் இடப்பட்டது முன்னாலும் என மாறி மாறி வெளிப்படும். அதுபோல ஆசிரியராகத் தகாதவர் தாம் கற்றுக்கொண்ட முறைப்படியன்றி முன்னால் கூற வேண்டியதைப் பின்னரும், பின்னர் கூற வேண்டியதை முன்னரும் முறை மாறி மாணவருக்குக் கற்பிக்கும் இயல்புடையவராய் இருப்பர். இவ்வாறு கற்பிப்பது முறையன்று. எனவே இவ்வாறு கற்பிப்பவர் நல்லாசிரியர் ஆகார்.

"பெய்தமுறை யன்றிப் பிறழ வுடன்றருஞ்
செய்தி கழற்பெய் குடத்தின் சீரே" (நன்னூல் - 32)

2.மடற்பானை:

கூர்மையான கருக்கு மடல்களையுடைய பனைமரமானது தானே தன்னிடமுள்ள பழங்களையும் காய்களையும் உதிர்த்தாற்றான் நாம் அதைப் பெற்றுக் கொள்ள முடியும். மாறாக அவற்றை மரத்தில் ஏறிப் பறிப்பது இயலாத காரியம். அதுபோல மாணவர்கள் நாடிச்சென்று நெருங்கிப் பழகி, உரையாடி நூற்பொருளை அறிய இடங்கொடாமல் தம்மிடமுள்ள கல்விச் செல்வத்தை தானேதான் கொடுக்க வேண்டுமென நினைப்பவர் நல்லாசிரியராகார்.

"தானே தரக்கொளி னன்றித் தன்பான்
மேவின் கொளக்கொடா விடத்து மடற்பானை" (நன்னூல் - 33)

3.பருத்திக்குண்டிகை:

வாய்குவிந்த ஒரு கொள்கலன்; குடுக்கை என்று அழைக்கப்படுவது பருத்திக்குண்டிகை. இக்குடுக்கையில் பஞ்சை உட்செலுத்தி அடைப்பது அரிய செயலாகும். பஞ்சினை சிறிது சிறிதாக எடுத்து குடுக்கையில் உள்நுழைத்துக் குச்சியால் குத்திக் குத்தி மெல்ல மெல்ல உட்புகுத்தல் வேண்டும். குடுக்கையில் இருந்து பஞ்சை வெளியே எடுக்கும் போதும் அவ்வாறே எடுக்க வேண்டும். அதே போலத்தான் ஆசிரியராகாதவர் தாம் கல்வியைக் கற்கும் போது சிறிது சிறிதாக உள்வாங்கியிருப்பார். அத்தகையவர் தாம் கற்பிக்கும் போது சிறந்த மாணவர்களுக்குக் கற்பிக்க நேர்ந்தாலும் மிக முன்று சிறிது சிறிதாகவே வெளிப்படுத்துவார். இத்தகையவர் நல்லாசிரியராகார்.

"அரிதிற் பெயக்கொண் டப்பொரு டான்பிறர்க்
கௌிதீ வில்லது பருத்திக் குண்டிகை" (நன்னூல் - 34)

4.முடத்தெங்கின் தன்மை:

வேலிக்கு அப்பால் வளைந்த தென்னைமரம் தனக்கு நீர் ஊற்றிப் பாதுகாத்து வந்தவர்களுக்குப் பயன்தராமல் மற்றவர்களுக்குப் பயன்தருகின்ற இயல்பு கொண்டது. அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் பொருள் முதலியவை கொடுத்து மரியாதை செய்கின்ற மாணவர்களுக்குத் தம்மிடமுள்ள கல்வியைத் தராமல் அடுத்தவர்களுக்கு கொடுக்கும் ஆசிரியர்கள் முடத் தெங்கினைப் போன்றவர்கள் இவர்களும் நல்லாசிரியராகார்.

"பல்வகை யுதவி வழிபடு பண்பின்
அல்லோர்க் களிக்கு மதுமுடத் தெங்கே" (நன்னூல் - 35)

ஓர் ஆசிரியரிடத்தே காணப்பட வேண்டிய நற்பண்புகளைக் கூறுகின்ற நன்னூலார் எத்தகைய குணங்கள் நல்லாசிரியர் ஒருவரிடத்தே இருக்கக் கூடாது என்பதனையும் குறிப்பிடுகின்றார். ஏனெனில் அவற்றைத் தவிர்ப்பதன் மூலமே அத்தகைய பண்புகளை நம்மிடமிருந்து விலக்குவதன் மூலம் நல்லாசிரியராக முடியும்.

இன்று ஆசிரியத்தொழில் செய்பவர்களும் நல்லாசிரியர் விருது பெறுபவர்களும் "ஆசிரியத்தொழிலுக்கு உண்மையாகவும் நேர்மையாகவும் பணியாற்றுகின்றோமா, நல்லாசிரியருக்குரிய பண்புகளைக் கொண்டிருக்கின்றோமா" என்று தம்மைத்தாமே சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். நல்லாசிரியராய்த் திகழ்ந்த-திகழ்கின்ற நன்னூலார் நவின்ற நல்லாசிரியர் இலக்கணம் பற்றிச் சிந்திப்போம்; செயற்படுவோம்.

உசாத்துணை நூல்கள்:

1. இலக்கணக்கொத்து (1956) ஆறுமுகநாவலர் (பதிப்பாசிரியர்) ஆறாம் பதிப்பு, சென்னை
2. செல்வநாயகம்.வி (1973). தமிழ் இலக்கிய வரலாறு, ஸ்ரீ லங்கா வெளியீடு, யாழ்ப்பாணம், இலங்கை.
3. நன்னூல் தெளிவுரை(1993), வித்துவான் ஆ.நாராயண வேலுப்பிள்ளை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
4. நன்னூல் விருத்தியுரை (1974) சங்கர நமச்சிவாயர் இயற்றி, சிவஞானமுனிவர் திருத்தியது, கழக வெளியீடு, திருநெல்வேலி.
5. நன்னூல், காண்டிகையுரை (2004) பகுதி-1, எழுத்ததிகாரம், ஆறுமுகநாவலர், முல்லை நிலையம், சென்னை.
6. வேலுப்பிள்ளை.ஆ (1999) தமிழ் இலக்கியத்திற் காலமும் கருத்தும், ஸ்ரீ லங்கா புக் டிப்போட், யாழ்ப்பாணம்.
7. வரதராசன்.மு(2001) தமிழ் இலக்கிய வரலாறு. பதினாறாம் பதிப்பு, சாகித்திய அக்காதெமி, சென்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் புதிய போக்கு

திருமதி.சிவலோசனி சுரேந்திரன்
விரிவுரையாளர் – வ.தே.க.க

கல்வி தொடர்பாகப் பல்வேறு தத்துவவியலாளர்கள் பல கருத்துக்களை முன்வைத்திருந்த போதும் 20ஆம் நூற்றாண்டில் விஞ்ஞான தொழில்நுட்ப உலகில் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் மாணவர் சமுதாயத்தை உருவாக்க வேண்டியது தற்போதைய ஆசிரியர்களது பாரிய பொறுப்பாகும். அந்த வகையில் உலகக் கல்வி தொடர்பான புதிய கருத்தின்படி அறிவு, திறன், மனப்பாங்கை விரிவுபடுத்தி துரிதமாக மாற்றமுறும் பல்வேறு இடர்களைக் கொண்ட உலகில் மனிதர் வாழ்வதற்கேற்ற ஆற்றலைப் பெற்றுக் கொள்வதற்கு கல்வியின் 4 தூண்களான,

1. அறிவதற்காக கற்றல் (Learning to know)
2. செய்வதற்காக கற்றல் (Learning to do)
3. சேர்ந்து வாழ்வதற்காக கற்றல் (Learning to live together)
4. நிலைத்திருப்பதற்காக கற்றல் (Learning to be)

என்பவற்றை நடைமுறைப்படுத்தப்ப வேண்டிய தேவை உள்ளது.

மேலும் கல்வியானது தாயின் கருவறையில் இருந்து மரணிக்கும் வரை தொடர்ச்சியாக செயற்படுவதாகும். அந்த வகையில் கல்வியை மூன்று வழிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

1. முறைசார் கல்வி
2. முறைசாராக் கல்வி
3. முறையில் கல்வி

ஒரு நாட்டுக்குள்ளேயே மேற்படி வழிகளில் கல்வியை பெறுவதற்கு பல்வேறு அணுகுமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

1. ஆசிரியர் மையக் கல்வி
2. சமூக மையக்கல்வி
3. மாணவர் மையக் கல்வி
4. அபிவிருத்தி மையக் கல்வி

மேற்படி அணுகுமுறைகளில் தற்போது மாணவர் மையக் கல்வியே கூடுதலாக வரவேற்கப்படுகிறது. அந்த வகையில் மாணவர் மையக்கல்வி தொடர்பாக பல தத்துவவியலாளர்கள் பல்வேறு கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

மொண்டிசூரி அம்மையாரின் கருத்துப்படி, "மாணவருக்கு சுயமாக கற்பதற்கு தேவையான சுதந்திரமும் சூழலும் உருவாக்கப்பட வேண்டும்".

புரோபலின் கருத்துப்படி, "பிள்ளைகள் விளையாட்டின் மீது காட்டும் பிடிப்பை கற்பித்தலுக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்".

மேற்படி இருவரும் குழந்தைக் கல்வி தத்துவவியலாளர்கள். அவர்களின் கருத்திற்கேற்பவே எமது நாட்டில் ஆரம்பப்பாடசாலைகளில் கற்பித்தல் இடம் பெறுகிறது.

மேலும் இம்மாணவர் மையக் கல்வியூடாக பல்வேறு சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளை அடையாளங் காணக்கூடியதாக உள்ளது. அந்தவகையில், பின்வரும் கல்வி முறைகள் தேவையாக உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தனியாள் அபிவிருத்திக் கல்வி
2. தேசிய ஒருங்கிணைப்பிற்கான கல்வி
3. பொருளாதார அபிவிருத்திக்கான கல்வி
4. சமூக நவீனமயப்படுத்தலுக்கான கல்வி
5. நிலையான அபிவிருத்திக்கான கல்வி
6. சிறப்புத் தேர்ச்சிக்கான கல்வி

இம்முறைகளினூடாக கல்வி சகல மக்களுக்கும் கிடைக்கும் வாய்ப்பு தற்போதுள்ளது. இந்தவகையில் கல்வி பெறக்கூடியதாக இருந்தாலும் அக்கல்வியை நெறிப்படுத்தி வழிப்படுத்த ஆசிரியர் ஒருவர் கட்டாயம் தேவையாக உள்ளது. அவ்வாசிரியர்கள் பின்வரும் வழிகளில் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

1. தேசிய கல்வியியற்கல்லூரிகள் (NCoE)
2. ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் (Teacher Training College)
3. பல்கலைக்கழகங்கள் (University)
4. தேசிய கல்வி நிறுவகம் (NIE)
5. திறந்த பல்கலைக்கழகம் (Open University)
6. ஆசிரிய மையங்கள் (Teacher Centers)
7. மத்திய வள நிலையம்

அந்தவகையில், தேசிய கல்விக் கல்லூரிகளுக்கு க.பொ.த (உ/த) பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டே மாணவர் தெரிவு இவ்வளவு காலமும் இடம்பெற்றுள்ளது. அதாவது பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களை விடுத்து அடுத்த படியில் உள்ள மாணவருக்கு Z புள்ளி அடிப்படையில் மாவட்ட கோட்டாவிற்கு இணங்க தெரிவு இடம்பெற்றது. இதனூடாக ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள திறமையான மாணவர் கல்லூரிக்கு அனுமதிப்பதற்கு தகைமை இருந்தது. இதன்மூலம் வெளியேறும் ஆசிரியர்கள் எங்கு ஆசிரியர் பற்றாக்குறை உள்ளதோ அங்கு நியமிக்கப்பட்டு 5 வருடங்கள் சேவையாற்றிய பின்னரே சொந்த இடத்திற்கு மீண்டும் வருவதற்கு வாய்ப்பிருந்தது. இதனை பலர் பலவாறான அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி நியமிக்கப்படும் பாடசாலைக்கு செல்லாமல் வீட்டிற்கருகில் உள்ள பாடசாலையிலேயே நியமனத்தைப் பெற்று சேவையாற்றுகின்றனர் இதனால் பல பாடசாலைகள் தொடர்ந்தும் ஆசிரியர் பற்றாக்குறையுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்நிலைமையைப் போக்க 2015இல் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவரை தெரிவு செய்வதற்கு ஒரு புதிய முறை கடைப்பிடிக்கப்பட்டது. அதாவது 2018ம் ஆண்டு ஆசிரியர் தேவைப்பட்டியலை ஒவ்வொரு வலயத்திலிருந்தும் பெற்று அதன்கேற்ப அந்தந்த மாவட்டத்தில் எந்த நிர்வாக சேவைப்பிரிவில் எத்துறை ஆசிரியர் தேவையாக உள்ளதோ அத்துறை மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதனால் பல திறமைசாலியான மாணவர் வெளியில் நிற்க திறமை குறைந்த மாணவர் கல்வியியற்கல்லூரிக்கு தெரிவாகியுள்ளனர். இதன்மூலம் எதிர்கால ஆசிரியர் மாணவர் பல இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டிய தேவை உள்ளது.

2016ஆம் ஆண்டிற்கும் இதே நடைமுறைதான் கடைப்பிடிக்கப்பட உள்ளது. இத்தெரிவால் வட பகுதி கிழக்கு பகுதி மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி நிலைமைகளைத் தவிர்த்து திறமையான மாணவர்களை ஆசிரிய சேவைக்கு இணைப்பதனூடாக புதிய கல்விச்சிந்தனைகளை விரைவாக விளங்கி மாணவருக்கு சேர்ப்பிக்கும் திறமை உடையவர்களை கல்விக்கல்லூரிகளுக்கு தெரிவு செய்தல் வேண்டும். அத்தோடு தெரிவு செய்யப்படுபவர்கள் 5 வருட சேவையின் பின் அவர்கள் விரும்பும் இடத்திற்கு இடமாற்றத்தை வழங்குவதனூடாக அவர்களது சேவையை வினைத்திறனுடையதாக மாற்றிக் கொள்ளலாம். மேலும் எமது ஆசிரிய சேவையிலேயே நியமனம் கிடைத்து ஓய்வு பெறும் வரை ஒரே இடத்தில் சேவை செய்யும் நிலை உள்ளது. இதனால் அந்நிறுவனங்களில் புதிய மாற்றங்களை ஏற்படுத்துவதும் சிரமமானதாகும். எனவே தற்கால கல்வியுலகில் விரைவான மாற்றங்களை ஏற்று நடைமுறைப்படுத்துவதற்கு புதிய சிந்தனைகளை உருவாக்கவும், உள்வாங்கவும் வேண்டிய தேவை உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழியியலும் இலக்கணமும்

ந.பார்த்தீபன்
சிரேஷ்ட விரிவுரையாளர் – வ.தே.க.க

மொழியியல் மொழி பற்றிய விஞ்ஞானம் எனப்படும். இது நூற்றாண்டு கால வளர்ச்சியைக் கொண்டுள்ளது. மேற்குலக நாடுகளில் இதன் வளர்ச்சி அதிகமாக உள்ளதோடு கற்பித்தலிலும் அதிகளவு செல்வாக்குப்பெற்று விளங்குகிறது. கடந்த முப்பது - நாற்பது ஆண்டுகளில் விவாதிக்கப்படும் தத்துவ விடயங்கள் யாவும் மொழியியலோடு தொடர்புபட்டன. இத்துறை இந்தியாவில் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. இலங்கையிலும் அண்மைக்காலங்களில் ஓரளவு வளர்ச்சி பெற்று வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

மொழியியல் என்பது மொழி பற்றிய விஞ்ஞானம் என ஆரம்பத்தில் குறிப்பிட்டதற்கமைய இது மொழி பற்றிய விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் என இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. குறிப்பாக விஞ்ஞானம் என்பது அகவயத்தன்மைக்கு அப்பாற்பட்டது. இது அவதானம், கருதுகோள் அமைத்தல், தரவுகளைப் பெறல், பகுப்பாய்வு செய்தல், கோட்பாடுகளை நிறுவுதல் ஆகிய ஆய்வு நிலைகளுக்கு உட்பட்டதாக காணப்படும்.

மொழியியல் பேச்சு மொழியை அடிப்படையாகக் கொண்டது. பேச்சு மொழி கொச்சையானது, இலக்கணமற்றது, சமூக மனப்பான்மையைச் சார்ந்தது. ஆயினும் சமூகத்தோடு இரண்டறக்கலந்துள்ளது. இந்நிலையில் மேற்கூறிய பண்புகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும் பேச்சு மொழியை ஆதாரமாகக் கொண்டு மொழியியல் ஆய்வு செய்கின்றது. ஆய்வு என்ற நிலையில் அவதானித்து, கருதுகோள்களை அமைத்து, தரவுகளைச் சேகரித்து, அவற்றைப் பகுப்பாய்வு செய்து, கோட்பாடுகளை நிறுவும் முயற்சியில் மொழியியல் ஈடுபடுகின்றது.

இந்நிலையில் மொழியியலானது பின்வரும் கோட்பாடுகளை நிறுவியுள்ளது.

- அமைப்பு அடிப்படையில் எல்லா மொழிகளும் சமமானவை:

மேலும் சமூக வளர்ச்சி என்பது அறிவு சார்ந்த வளர்ச்சியாகும். சமூகம் வளர்ச்சியடைய மொழியும் அதற்கேற்ப வளர்ச்சியடைகின்றது.

- ஒரு மொழியின் எல்லாக் கிளை மொழிகளும் தம்முள் சமமானவை:

சமூக ரீதியாக வேறுபாடு காணப்படலாம். ஆனால் இது மொழியியல் ரீதியான அம்சமல்ல. (மொழி பற்றிய தற்பெருமை கொண்டவர்களது கருத்துக்களே இவை. பாரதியார் கூட யாமறிந்த மொழிகளில் தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணேன் என்றார். மொழியில் இனிமையானது, கசப்பானது என்று ஏதும் இல்லை. இது காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு என்ற நினைப்பு மட்டுமே)

- பேச்சு மொழி எழுத்து மொழியை விட தரங்குறைந்ததல்ல
- ஒரு மொழி பிறிதொரு மொழியை விட இனிமையானதல்ல
- மொழி மாறும் இயல்புடையது.

மேற்கூறிய யாவும் மொழி பற்றிய அறிவியல் ரீதியான மனப்பாங்காகும் என்பது மொழியியலாளர்களின் கருத்தாகும்.

மொழியியலும் மரபுவழி இலக்கணமும் என்ற விடயத்தை நோக்கின் மொழி என்பது பல பரிமாணங்களை உள்ளடக்கியது. இதில் இலக்கணம் ஓர் அம்சமாகும். இலக்கணத்திற்கு எழுத்து மொழி அவசியம். பேச்சுமொழி இல்லாமல் எழுத்து மொழி இல்லை. ஆயினும் பேச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. இதற்குக் காரணம் பேச்சு மொழிக்கு வரலாறு இல்லை. எழுத்து மொழிக்கு வரலாறு உண்டு. உலகம் முழுவதிலும் எழுத, வாசிக்க தெரியாதவர்கள் அதிகம் உள்ளனர். பேச்சு இல்லாமல் எழுத்து இல்லை. உலகிலுள்ள மொழிகளில் அதிகமானவை எழுத்துருவம் பெறவில்லை. உலகிலுள்ள அதிக எண்ணிக்கையானோரின் பேச்சு மொழியை மொழியியலாளர்கள் கருத்திற் கொண்டு பேச்சு மொழியை ஆய்வு செய்ய முற்பட்டனர். அதுவே இன்று மொழியியலின் வளர்ச்சிக்கு காரணமாயிற்று.

இனி பேச்சு மொழி, எழுத்து மொழி என்பவற்றின் வேறுபாடுகளை எடுத்து நோக்குவோம். இதுவே பேச்சு மொழியில் கவனம் செலுத்திய மொழியியலுக்கும் எழுத்து மொழியில் கவனம் செலுத்திய இலக்கணத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகளைக் காட்டும்.

| பேச்சு மொழி | எழுத்துமொழி |
|---|---|
| ● பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுப்பது | ● எழுத்துமொழியையே அடிப்படையாகக் கொண்டது. |
| ● விளக்க முறையானது. பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபட்டது. அது அந்தந்தச் சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. | ● ஒரு வழக்கினை ஏற்றுக் கொண்டு மற்றையதை விட்டுவிடல் |
| ● காலந்தோறும், இடந்தோறும் சமூகந்தோறும் ஆளுக்காள் மாறும் இயல்பு கொண்டது. | ● மொழி மாறுகின்றது. இடம் மாறுகின்றது. சமூகம் மாறுகின்றது. ஆளுக்காள் மாறுகின்றது. |
| ● குறிப்பிட்ட கால இடச்சூழலிலுள்ள சமூக மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து இலக்கணம் வகுக்கப்படும். | ● முன்பு வழங்கப்பட்ட தொல்சீர் மொழியை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்திற்கு இலக்கணம் எழுதப்பட்டது. |

மரபு வழி இலக்கணத்தை எடுத்துக் கொண்டால் சில விடயங்களை முன்பு வழங்கப்பட்ட தொல்சீர் மொழியை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்திற்கு இலக்கணம் எழுதப்பட்டதற்கு பின்வரும் சான்றுகளைக் குறிப்பிடலாம்.

- வடமொழி சார்ந்த வீரசோழியத்தில் எழுவாய்க்கு உருபு கூறப்பட்டுள்ளது.
- வடமொழியில் வேற்றுமைகள் எட்டு எனக் கூறல், தமிழ் மொழியில் பல வேற்றுமைகள் காட்டல்
- ஆங்கிலத்தில் இலக்கண ரீதியான பாகுபாடு இல்லை. அது லத்தீன் மொழியை அடிப்படையாகக் கொண்டது.
- குறிப்பு வினை காலங்காட்டாது. இது இன்று பொருத்தமற்றது. தொல்காப்பியர், நன்னூலார் காலத்திற்குப் பொருந்தக் கூடியது. இன்று பொருந்தாது.
- எமது இலக்கண மரபில் பெயரடை, வினையடை என்பன காட்டப்படவில்லை. ஆனால் இன்று காலத்திற்கேற்ப இடம் பெற்றுள்ளது.

மொழியியலை எடுத்துக் கொண்டால் பின்வரும் விடயங்களை கருத்திற் கொள்ளலாம். மேலை நாடுகளில் பாணினியின் இலக்கணச் செல்வாக்கை ஆதாரமாகக் கொண்டு மொழியியல் பற்றிய கோட்பாடுகள் தோற்றம் பெற்றன. இவற்றின் அடிப்படையில்,

1. மொழியியல் கோட்பாடு - மொழி பற்றிய கோட்பாடாக அமைகின்றது.
2. ஒலியை அடிப்படையாகக் கொண்டது.
3. மொழி அடிப்படையாகக் கொண்டு எழுத்து வாக்கியமாகும்.
4. மொழி குரல் ஒலிகளால் ஏற்படும் குறியீட்டு அமைப்பு. இங்கு மொழி ஓர் ஊடகமாகத் தொழிற்படுகின்றது.
5. ஐம்பது - அறுபது ஒலிகளை அடிப்படையாக் கொண்டு முடிவில்லாத சொற்களை நாம் உருவாக்குகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் முன்னேற்ற அறிக்கை
# (Student Progress Report)

இந்திரா செல்வநாயகம்
விரிவுரையாளர் – வ.தே.க.க

கல்வியின் தரத்தை அளவிடுவதை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் மதிப்பீட்டு அறிக்கை மாணவர்களை பூரணமாக விளங்கிக் கொள்வதற்கு போதுமானதல்ல. இது மாணவர்களின் விருத்தி (உடல், உள, சமூக, மனவெழுச்சி, ஒழுக்கம்) போன்றவற்றின் உண்மையான நிலையினை எடுத்துக்காட்ட தவறி விடுகின்றது. இது மாணவனின் கல்வித்தரத்தினை பிரதிபலிக்கும் ஒரு அங்கமே தவிர மாணவனின் முன்னேற்ற அறிக்கையாகக் கருத முடியாது. எனவே இத்தகைய அறிக்கையினால் இதுவரை காலமும் அடைந்த நன்மை என்ன என்பதை சிந்திக்க வேண்டியுள்ளது.

மாணவர் முன்னேற்ற அறிக்கை என்பது கல்வித்தரத்துடன் சேர்ந்த ஏனைய விடயங்களான மாணவர் சுயவிபரம், உடல் தகைமை, சுகாதார நிலைமை, விசேட திறன்கள், விருப்பங்கள், ஆர்வங்கள், மாணவர் வரவு ஒழுங்கு, பணிவு ஆற்றுகை, உதவி செய்யும் மனப்பாங்கு, ஒவ்வொரு பாடங்களிலும் அலகு ரீதியாக தேர்ச்சி, தேர்ச்சியின்மை, பொது அறிவு, நுண்ணறிவு இலக்கு, பெற்றோரின் பங்களிப்பு,வினைத்திறன் போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடங்கியிருக்கும். எனவே ஆசிரியரின் அவதானிப்பிலும் மதிப்பீட்டிலும் மேற்படி விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பது அவசியமாகும்.

மாணவர் சுயவிபரத்தில் மாணவரின் பெயர், பெற்றோரின் பெயர், பிறந்த திகதி, சுட்டிலக்கம், உயரம், நிறை, முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலை பெயர், வகுப்பு ஆகிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உடல் தகைமை அல்லது பௌதீக நிலைமை என்னும் போது கண், காது, பேச்சு ஏனைய இயக்கச் செயற்பாடுகளின் தற்போதைய நிலைமை பற்றிய விபரங்கள் ஆகும். இதில் பார்வையில் சாதாரணம், குறும்பார்வை, நீள்பார்வை, பார்வையின்மை என்ற அடிப்படையிலும் கேட்டல் திறனில் சாதாரணம், குறைவு, மிகக்குறைவு, பூரணகேட்டலின்மை என்றும் பேச்சுத் திறனில் சாதாரணம், திக்கிப்பேசுதல், பேச முடியாமை போன்ற விபரங்களை வெளிப்படுத்தக் கூடியதாக பிள்ளையின் பௌதீக விபரங்கள் அமையப்பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஏனைய உடல், இயக்கம் சம்பந்தமான தகவல்களும் இனம் காணப்பட்டு அறிக்கைப்படுத்தல் வேண்டும்.

சுகாதாரம் பற்றி நோக்கும் போது இதுவரை அண்மையில் நோய்களின் தேவைகளுக்கு வைத்தியரை நாடியுள்ளாரா போன்ற விடயங்கள், உடல் சுத்தம் (நகம், பல், தலை(முடி) மற்றும் உடல், உடை போன்ற தகவல்களை அறிக்கைப்படுத்துவதுடன் பெற்றோருடன் கலந்துரையாடி மருத்துவ அறிக்கையினையும் இணைத்து ஆவணப்படுத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது.

விசேட திறமைகளில் மொழியாற்றல், கவிதை, சங்கீதம், விளையாட்டு, நடனம், சித்திரம், நாடகம் ஆகியவற்றில் காட்டும் திறமைகளை அவதானித்து அறிக்கையிடல் மூலம் மாணவர்களின் விசேட ஆற்றல்களை இனம் கண்டு கொள்ள முடியும்.

விருப்பங்கள், ஆர்வம் என்னுமிடத்து எந்த பாடத்தில், விளையாட்டில் கலைநிகழ்வுகளில் மற்றும் ஏனைய விடயங்களில் ஈடுபாடு ஆர்வம் அதிகமாகவுள்ளன என்பவறையும் அவதானித்து கணிப்பிடப்படல் வேண்டும். இவற்றிற்கு ஏற்ப ஒவ்வொரு தனி நபர்களையும் கணிப்பிடல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் வரவு வாராந்த மாதாந்த தவணை வருட இறுதி என்ற ரீதியில் வரவுகளை பதிவு செய்து ஒழுங்குபடுத்தி அறிக்கைப்படுத்துவதன் மூலம் மாணவர்களின் வரவு பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொண்டு வரவின்மைக்கான காரணங்களை இனம் கண்டு தீர்வுகளை மேற்கொள்ள திட்டமிடப்படுகின்றது. குறிப்பாக வரவு ஒழுங்கில் உரிய நேரத்திற்கு வருகை தருகின்றாரா? பாடசாலை தொடங்கிய பின் தாமதமாக வருகிறாரா? உரிய நேரத்திற்கு வீடு செல்கின்றாரா? போன்ற தகவல்கள் பேணப்படுதல் அவசியமாகும்.

அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், முதியோர், சக மாணவர்கள் போன்றோரிடம் பணிவு, மதிப்பு, மரியாதை போன்ற பண்புகள் எவ்வாறுள்ளது என்பதும் அவதானித்து கணிப்பிடல் அவசியம். ஆற்றுகை என்னுமிடத்து வழங்கப்படுகின்ற பொறுப்புக்கள் வேலைகளை உரிய காலத்தில் சிறப்பாக நிறைவேற்றப்படுகின்றதா? கல்விச் செயற்பாடுகளிலும் ஆற்றுகை எவ்வாறுள்ளது என்பதும் கணிப்பீடு செய்து அதிலுள்ள பலம் பலவீனங்கள் இனம் காணப்படல் பயனுடையதாகும்.

அடுத்து பாட ரீதியாக ஒவ்வோர் பாடங்களிலும் மாணவர்களின் தேர்ச்சி அடையப்பட்டுள்ளதா? எனக்கணிப்பதுடன் குறித்த பாடத்தில் எந்த அலகில் தேர்ச்சி அடைந்துள்ளார். எந்த அலகில் இடர்படுகின்றார் என்பதை அவதானித்து கணிப்பிடுவதன் மூலம் மாணவர் பாட அடைவு முன்னேற்றத்தை உயர்வடையச் செய்ய முடியும்.

வெறும் புத்தகப்பூச்சிகளாக இருப்பதை தவிர்த்து சமூகம், நாடு, சர்வதேசம் எனப் பல்வேறு விடயங்களை அவரவர் வயது, தேவைக்கு ஏற்ப அறிந்திருப்பதும் அறிய ஆர்வம் உண்டாக்குவதும் பிள்ளையின் ஆளுமை விருத்திக்கு இட்டுச்செல்லும். இந்நிலையில் பொது அறிவானது எவ்வாறுள்ளது என்பதையும் இவ்வறிவு குறைவாகக் காணப்படுவதற்கான காரணங்கள் எவை என்பதையும் அறிந்து மாணவனை முன்னேற்ற பொது அறிவு சார்ந்த கணிப்பீடும் அவசியமாகும்.

நுண்மதி ஈவு அடிப்படையில் மீத்திறன் சராசரி மெல்லக்கற்போன் மெதுவான உள வளர்ச்சியுடையோர் என பாகுபடுத்தப்படுகின்றனர். எனவே மாணவன் எவ்வாறான நுண்மதி ஈவு நிலையைக் கொண்டுள்ளான் என்பதை அவனது அனைத்து செயற்பாடுகளின் அடிப்படையிலும் இனம் கண்டு கொள்ளல் விரும்பத்தக்கது.

எந்தவொரு நபருக்கும் இலட்சியம் இலக்கு வேண்டப்படும் ஒன்றாகும். எதிர்காலத்தில் தான் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற இலட்சியம் சிந்தனை உடையவரா இருக்கின்றாரா? அல்லது எந்த இலக்குமின்றி வெறும் ஜடமாக காலத்தை வீணடிக்கின்றாரா என்பவை அவதானித்தல் அவசியம். அத்துடன் பிள்ளையின் மீது பெற்றோரின் அக்கறை அதிபர், ஆசிரியர்களுடனான தொடர்பாடல் எவ்வாறு என்பதும் அவதானித்து அறிக்கைப்படுத்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட அனைத்து விடயங்களிலும் ஆசிரியர், மாணவர் தொடர்பான முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்படல் வேண்டும். இவ்வாறு செயற்பட்டாலே மாணவர் தொடர்பான நம்பகமான கணிப்பீடாக அமையும். ஏனெனில் கல்வி பற்றிய மதிப்பீடு மட்டும் மாணவர்களின் எதிர்கால வாழ்வை தீர்மானித்துவிட முடியாது. கல்வி தவிர்ந்த ஏனைய நடவடிக்கைகளில் முன்னேற்றம் அடைந்து வெற்றிகண்ட பல மாணவர்கள் உள்ளனர். அதுமட்டுமன்றி பாடசாலை கல்வி பற்றிய கணிப்பீடு பாடசாலையை விட்டுவெளியேறிய பின்னர் அவர்களது கல்வி உட்பட்ட ஏனைய துறைகளின் விருத்தியை குறிப்பிட தவறி விடுகிறது. உதாரணமாக க.பொ.த சா.தரம் வரை மத்திமமாக உள்ள மாணவன் பின்னர் க.பொ.த உ.தரத்தில் பிரகாசிக்கின்ற நிலையையும் காணக்கூடியதாகவுள்ளது. எனவே குறித்த மாணவர்களது பாடசாலை கணிப்பீடுகள் இதற்கு எதிர்மாறானதாகவே அமைந்திருக்கக்கூடும். எனவே இது பொதுவான பாடசாலைக்கால கணிப்பீடாக அமையும். இருந்த போதிலும் கல்விசாரா ஏனைய விடயங்களை நாம் கணிப்பிட தவறிவிடுகின்றோம். ஆகவே தான் எதிர்காலத்தில் இவற்றை நிவர்த்தி செய்வது அவசியமாகும். மாணவர்களது குறைகள் மட்டுமன்றி அதற்கான காரணங்களைக் கண்டறிவது அவர்களது எதிர்கால விருத்திக்கு மிகவும் முக்கியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாராந்த/மாதாந்த/வருடாந்த மாணவர் முன்னேற்ற அறிக்கை மாதிரி

1. 1. மாணவர் பெயர் :.................................................................................................
   2. தாய்/தந்தை/பாதுகாவலர் பெயர்:................................................................................
   3. முகவரி:...............................................................................................................
   4. தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் :........................................................
   5. மாணவர் பதிவு இலக்கம் :.........................................................................................
   6. பால் :.....................................................................................................................
   7. பிறந்த திகதி :...........................................................................................................
   8. உயரம் :...................................................................................................................
   9. நிறை :.....................................................................................................................
   10. வகுப்பு/தரம் :.........................................................................................................
   11. பாடசாலையின் பெயர்:.............................................................................................

2. தனிப்பட்டது.
   பௌதீக நிலைமை
   2.1 கண்பார்வை : சாதாரணம் குறும்பார்வை, நீள்பார்வை,பார்வையின்மை
   2.2 கேட்டல் திறன்: சாதாரணம், குறைவு, மிகக்குறைவு, பூரண கேட்டலின்மை
   2.3 பேச்சுத்திறன்: சாதரணம், திக்குப்பேச்சு, பேச்சுக்குறைவு

3.சுகாதாரம்

| | | |
|---|---|---|
| சுத்தம்: | உடல் | :சுத்தம், சுத்தமின்மை |
| | உடை | :சுத்தம், சுத்தமின்மை |
| | பல் | :சுத்தம், சுத்தமின்மை |
| | நகம் | :சுத்தம், சுத்தமின்மை |
| | தலைமுடி | :சுத்தம், சுத்தமின்மை |

4. நடத்தை
   4.1 உணவுப்பழக்கம் : சராசரி, மத்திமம்
   4.2 நண்பரைக் கொண்டிருத்தல் : சராசரி, குறைவு
   4.3 பிறருக்கு உதவுதல் : சராசரி, மத்திமம்
   4.4 உணர்ச்சிக்கட்டுப்பாடு : சராசரி, மத்திமம்

5. விருப்பங்கள்
   5.1 விளையாட்டு : சராசரி, மத்திமம்
   5.2 ஆர்வமுள்ள விளையாட்டு என்ன?
   5.3 கலைகலாசார நிகழ்வுகளில் பங்குபற்றுதல் : சராசரி, மத்திமம்

6. பொழுதுபோக்கு அம்சங்கள்:

7. சமூக விழுமியம் பேணல்: சராசரி, மத்திமம்

8. குடும்பப்பின்னணி:
   8.1 பெற்றோர் கல்வி: மிக நன்று, நன்று, சராசரி, மத்திமம்
   8.2 பெற்றோர் தொழில்: வியாபாரம், கூலி, அரச தொழில், ஏனையவை
   8.3 பொருளாதாரம்: மிக நன்று, சராசரி, மத்திமம்

9. கல்வி:
   9.1 வரவு : நன்று, திருப்தி, மத்திமம்
   9.11வருகை நேரம்:திருப்தி, திருப்தியின்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுய மதிப்பீடும் வாண்மைத்துவ விருத்தியும்

திருமதி.நி.அரவிந்தன்
விரிவுரையாளர் – வ.தே.க.க

அண்மைக் காலமாகக் கல்வியானது மனித நேய அணுகுமுறையை அடிப்படையதாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. இது கற்போனை மையப்படுத்தியதாகவும் கற்றல், கற்பித்தல் செயன்முறையில் மனித நேயத்தை வலியுறுத்தியதாகவும் அமைகின்றது. இந்த வகையில் சிந்திக்கும் போது ஆசிரியர் கல்வியைப் பொறுத்த வரையில் மாணவ ஆசிரியர்கள் கற்போராக மாறுகின்றார்கள்.

ஆசிரியர் கல்வியைத் திட்டமிடுவோர் மனித நேயத்தை அடிப்படையாகக் கொள்ளும் போது மாண ஆசிரியர்களது

- விருப்பங்கள்
- ஆர்வங்கள்
- சுய கற்றல் உபாயங்கள்
- சுய முன்னேற்ற வழிகள்
- சுய நெறிப்படுத்தல் நுட்பங்கள்
- சுய ஊக்குவிப்பு நுட்பங்கள்
- சுய பிரதிபலிப்பு நுட்பங்கள்
- சுய மதிப்பீட்டு நுட்பங்கள் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டு

திட்டமிட வேண்டியுள்ளது. ஆசிரியர் கற்கை நெறி முழுவதும் மாணவ ஆசிரியர்கள் கோட்பாடுகளைக் கற்றுக் கொள்ளவும் செயன்முறைகளில் ஈடுபடவும் கற்பித்தல் பரிச்சயத்தில் ஈடுபடவும் கற்பித்தல் பயிற்சியில் ஈடுபடவும் சுயமாகத் திட்டமிட்டுச் சுயமாக செயற்படவும் சுயமாகத் தன்னை விருத்தியாக்கவும் பொறுப்பேற்றுக் கொள்வான்.

தமது செயற்பாடுகளுக்கு மாண ஆசிரியர்கள் தாமே பொறுப்பேற்றுக் கொள்ளும் பாங்கானது ஒரு முக்கியமான விடயமாக ஆசிரியர் கல்வியில் நோக்கப்படுகின்றது. ஏனெனில் மாணவ ஆசிரியர்களினது வாண்மை விருத்தியில் மேற்பார்வையாளர்கள் ஒரு சிறிதளவு பங்கினையே ஆற்ற முடியும். அதாவது வெளியக மேற்பார்வையும், வெளியக வழிகாட்டலும் ஓர் அளவுக்கு மேல் மாணவ ஆசிரியர் மீது செல்வாக்குச் செலுத்திவிட முடியாது. பல வேறுபட்ட காரணங்களினால் வெளியக மேற்பார்வையானது தொடர்ச்சித் தன்மை இல்லாமற் போய்விடுகின்றது. அத்தோடு ஒரு மாணவ ஆசிரியருக்கு பல்வேறு மேற்பார்வையாளர்கள் மாறி மாறி வழிகாட்ட முற்படும் போது பல்வேறு விதமான அணுகு முறைகள் எழலாம். எந்த அணுகு முறையைப் பின்பற்றுவதென அவர்கள் குழப்பத்தில் ஆழ்ந்து விடலாம்.

இவ்வாறான தடைகளை நீக்குவதற்கு மாணவ ஆசிரியர்கள் தம்மை சுயமாக விருத்தியாக்கும் நுட்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளல் ஆசிரியர் கல்வியின் ஒரு வினைத்திறன் மிக்க நுட்பமாக அமைகின்றது. பொதுவாக ஆசிரிய மாணவர்கள் தம்மை சுயமாக விருத்தியாக்கிக் கொள்ளும் நுட்பங்களைப் பின்வருமாறு வகுக்கலாம். அவையாவன,

- பிரதிபலிப்பில் ஈடுபடுதல்
- சுய மதிப்பீட்டில் ஈடுபடுதல்
- சகபாடி மதிப்பீட்டில் ஈடுபடுதல்
- செயற்றிட்டங்களில் ஈடுபடுதல்
- செயல்நிலை ஆய்வில் ஈடுபடுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- செயலடைவுக் கோவை பராமரித்தல்
- வாண்மைத்துவப் பங்களிப்புச் செய்தல்
- விவாதங்களில் கலந்து கொள்ளல்
- வளவாளராகப் பங்கேற்றல்

போன்றவற்றைக் குறிப்பிடலாம். இக் கட்டுரையானது மாணவ ஆசிரியர்களின் சுய விருத்தி நுட்பங்களில் ஒன்றான சுய மதிப்பீடு பற்றி எடுத்துரைப்பதாக அமைகின்றது.

சுய மதிப்பீடு என்பது பயனுறுதி வாய்ந்த ஒரு சுய அபிவிருத்தி நுட்பமாகும். மனித உயிர்த் துடிப்புடன் இருப்பதற்கான ஓர் அற்புத வழி சுயமதிப்பீடாகின்றது. அவன் முதலில் தன்னை நேசிக்கும் போது மற்றவரையும் நேசிக்கும் மாண்புமிகு மனிதாகப் பரிணமிக்கின்றான். இவனிடம் சுயமதிப்பு, சுய நம்பிக்கை என்பன உயர்வான நிலையில் காணப்படுவதுடன் அவன் நிதானமாகவும் தன்னம்பிக்கையுடனும் செயலாற்றக் கூடியவனாகவும் காணப்படுகின்றான். கற்போரைப் பொறுத்தவரை சுயமதிப்பானது தன்னம்பிக்கையை உயர்த்தும் ஓர் உளவியல் காரணியாகவே கொள்ளப்படுகின்றது. சுயமதிப்பு மிக்க கற்போர் கற்பதற்கான தூண்டுதலும், தமது பணியை சிறப்பாக மேற்கொள்வதற்கான ஆற்றலும், உடன்பாடான உணர்வுகளை வெளிக்காட்டும் திறனும், மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்திச் சவால்களை வெற்றிகரமாக எதிர்நோக்கும் பண்பும், பொறுப்புக்களை மகிழ்ச்சியுடன் ஏற்று செயலாற்றும் அர்ப்பணிப்பும் கொண்டவர்களாக இருப்பர்.

சுயமதிப்பானது முகாமைத்துவம், மருத்துவம், ஆசிரியத்துவம் போன்ற துறைகளில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. பிரதிபலிப்புப் பெறுவதற்கு சுயமதிப்பீடு ஒரு ஆரம்பகட்டமாக அமைவதால் மேற்கொண்ட துறைகளில் சுயமதிப்பீட்டின் அவசியம் வலியுறுத்தப்படுகின்றது. பொதுவாக விமான ஓட்டிகள், இராணுவ வீரர்கள் போன்றோரின் ஒழுக்கக் கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்கு சிரமமான சுயமதிப்பீடு துணைபுரிகின்றது. வாண்மை விருத்தித் தொழில்களைப் பொறுத்த வரையில் வாண்மைத்துவ ஒழுக்கத்திற்காகவும் சுய விருத்தி நோக்கத்திற்காகவும் இது பயன்படுகின்றது. குறிப்பிட்ட நபர் தமது பணி தொடர்பான சில நியமங்களைத் தெளிவாக எழுத்து மூலம் எழுதிக் கொண்டு தனது பணி நிறைவில் அல்லது ஒரு செயற்பாட்டு நிறைவில் இந்த நியமங்கள் தன்னால் எவ்வாறு எந்த அளவில் அடையப்பட்டன என்பதை மீட்டிப்பார்க்கும் ஒரு செயலாக சுயமதிப்பீடு அமைகின்றது.

ஓர் ஆசிரிய மாணவர் ஒரு சுயமதிப்பீட்டினை நிறைவு செய்யும் போது கடந்த காலத்தில் தாம் மேற்கொண்ட செயற்பாடுகளை மீட்டிப் பார்ப்பதோடு எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக தரமான மதிப்பீட்டை உருவாக்குவதற்கும் வாய்ப்பாகின்றது. ஆசிரிய கல்வியைப் பொறுத்த வரையில் மாண ஆசிரியர்கள் ஆசிரிய கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் நியமங்கள், குறிகாட்டிகளுக்கு ஏற்ப தம்மை விருத்தியாக்கிக் கொள்ள துணையாக அமைகின்றது.

மாணவ ஆசிரியர்களின் சுய மதிப்பீட்டினை மேற்பார்வை செய்யும் மேற்பார்வையாளர்கள் ஒவ்வொரு மாணவனும் தன்னைப் பற்றிக் கொண்டுள்ள சுயமதிப்பீட்டிற்கேற்ப அவர்களது பலம், பலவீனங்களை நெறிப்படுத்த முடிகின்றது. சுயமதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு மாணவ ஆசிரியர்களுடன் ஒரு சிறந்த கலந்துரையாடலை முன்னெடுக்கவும் அது தொடர்பான விளக்கங்களை தெளிவுபடுத்தவும் ஆசிரிய கல்வியியலாளர்களுக்கு சுயமதிப்பீடு அவசியமாகின்றது.

மாணவ ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் அவர்களது பாடத்திட்டமிடலின் போதும் வகுப்பறைக் கற்பித்தல் செயன்முறையின் போதும் சுய மதிப்பீடானது எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் விடயங்களில் அவர்களால் மேற்கொள்ளப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயமதிப்பானது அவனது பிரதிபலிப்பாகின்றது. பிரதிபலிப்புக்களின் ஊடாக கற்றல், கற்பித்தல் செயன்முறையானது மேம்பாடடைகின்றது. இதன் மூலம் சுயமதிப்பு உயர்வடைகின்றது. அதுமட்டுமன்றி சுயமதிப்பு உயர்வாகின்ற மணவ ஆசிரியர்களது செயற்பாடுகள் மூலம் சகபாடியும் உயர்வான சுயமதிப்பிட்டின்பால் தூண்டப்படுகின்றான். ஏனெனில் சகபாடி மதிப்பீடானது சிறந்த சுயமதிப்பை உருவாக்கும் காரணியாகின்றது. மோசமான முன்மாதிரிகளும், தவறுகளைத் தோல்வியாக எண்ணிக் குழம்புவதும், மற்றவர்களில் அதிகம் தங்கியிருத்தலும் குறைந்த சுயமதிப்பை உருவாக்கும் காரணிகளாகக் கொள்ளப்படுகின்றது.

சுயமதிப்பின் அளவுதான் மகிழ்ச்சியின் அளவைத் தீர்மானிக்கின்றது என உளவியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. சோக்கிரடீஸ் என்னும் தத்துவஞானி எதென்ஸ் நகர வாலிபர்களைத் திருத்தும் நோக்குடன் தான் "உன்னையே நீ அறிவாய்" என்ற சிந்தனையைத் தோற்றுவித்தார். அதே போன்றே "பரிசீலிக்கப்படாத ஒரு வாழ்க்கை மதிப்பற்ற வாழ்க்கை" என்று இன்னொரு சந்தர்ப்பத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார். "உன்னையறிந்தால் நீ உன்னையறிந்தால் உலகத்தில் போராடலாம் உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் தலை வணங்காது நீ வாழலாம்" என்பது கவிஞர் வாக்கு இன்றைய காலகட்டத்தில் எல்லோரிடமும் புகார் புத்தகம் இருக்கின்றதே தவிர ஒருவரிடமும் சுயமதிப்பீட்டுப் புத்தகம் இல்லை. செப்படி வித்தையால் வாழ்க்கையைச் செதுக்கிவிட முடியாது. சத்தியத்துள் சங்கமித்து உண்மைகளை உள்ளத்தினுள் புகுத்தின் அற்புத உணர்வுகளைப் பெறுவதுடன் ஏனையோருக்கும் உதவ முடிகின்றது. சுயபுத்திக்கு சுதந்திரம் கொடுத்து சாதனையாளர்களாக மாறுவோம்.

**உசாத்துணை நூல்கள்:**


1. http://www.businessdistionary.com/definition/self-evaluation.html
2. htto://www.cio.com/article/2386859/careers-staffing/careers-staffing
3. http://www.businessnewsdaily.com/5379-writing-slft-assessment.html
4. http://www.must.edu.mo/QA/microsoft%20powerpoint%20-%2oQuality%20Assurance%20session%four.pdf
5. Guidlines for intership/january2002/for national collage of education
6. தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கட்டுறுப்பயில்வுக்கான வழிகாட்டற் குறிப்புக்கள்
7. சுவர்ணராஜா.க, ஒருவனுக்குத் தன்னை நன்றாகப் பிடிக்க வேண்டும், ஆசிரியம் சஞ்சிகை, இதழ் 47-48




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்குகளும் சுயமுகாமைத்துவமும்

திருமதி.ப.ஜெயச்சந்திரன்
விரிவுரையாளர் – வ.தே.க.க

மனிதன் என்பவன் இலக்கை நோக்கிப் பயணிக்கும் ஒரு சமூகப்பிராணி. நேர முகாமை இவ் இலக்கை அடைவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இலக்கை அடைவதில் வினையாற்றலுடனான செயற்பாடும் அதனூடான செயலொழுங்கும் முகாமையாகின்றது. இம் முகாமைத்துவச் செயற்பாடுகள் வெவ்வேறு கருத்து நிலைகளிலிருந்து வெவ்வேறு நோக்குகளை வெளிப்படுத்தும் ஆளுகை கொண்டது. மனிதவள முகாமைத்துவமாக, நேர முகாமைத்துவமாக, முழுத்தர முகாமைத்துவமாக, தரமேம்பாட்டு முகாமைத்துவமாக, பொது முகாமைத்துவமாக பல் பரிமாணம் பெற்று விளங்குகின்றது. எனினும் இக் கட்டுரையானது சுய முகாமைத்துவம் பற்றிய சிந்திப்பாக அமைகின்றது.

"உண்மையை ஒரு போதும் அறிய முடியாது. அடைய முடியும். ஒருவன் எவ்வாறு தன் தோள் மீது ஏறி நிற்க முடியாதோ அவ்வாறே உண்மையும் அவனுள் ஆழ்ந்து கிடக்கின்றது" என்பது உபநிடதம் கூறும் வாக்கு இவ்வுண்மையுள் பொதிந்து மறைந்து கிடப்பனவற்றுள் சுயமுகாமைத்துவமும் ஒன்றாகும்.

உண்மையை உணரும் போது எழும் மெய்ஞ்ஞான நிலையே உண்மையின் உள்ளுணர்வாகும். அதுபோன்று எம்மில் ஆழ்ந்து மறைந்து கிடக்கும் சுயமுகாமைத்துவப் பண்புகள் ஆரம்ப காலங்களிலிருந்தே சிந்தனை பெற்று வந்துள்ளன. திருவள்ளுவர் கருத்துக்களை நோக்கும் போது

"தற்காத்து தற்கொண்டான் பேணி தகைசான்ற
சொற்காத்து சோர்விலாள் பெண்" என்ற குறட்பா சுயமுகாமைத்துவத்திற்கு சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

ஒரு மனிதன் அன்புடையவனாக விட்டுக்கொடுப்பவனாக வாழும் போதே மனிதப் பண்புள்ளவனாக மாறுகிறான்.

"the only race is human. The only god is love. The only language is language of heart. The only country is universal. The man is omnipresent" - சத்தியசாயி பாபா

இதில் மனிதனது சுயமுகாமைத்துவப் பண்புகள் பொதிந்துள்ளதை அவதானிக்கலாம்.

இதோபதேசத்தில் இடம்பெற்றுள்ள பின்வரும் கூற்றானது "ஒருவன் தன்னைத் தன் குடும்பத்திற்காக அர்ப்பணிக்க வேண்டும். தன் குடும்பத்தை தான் வாழும் கிராமத்திற்கு அர்ப்பணிக்க வேண்டும். தனது கிராமத்தை நாட்டிற்காக அர்ப்பணிக்க வேண்டும். தான் வாழும் நாட்டை தான் வாழும் உலகிற்கு அர்ப்பணிக்க வேண்டும்." என்று வலியுறுத்தியதன் விளக்கம் மனிதன் தன்னை சுயமுகாமை செய்வதனூடாக உலகை முகாமை செய்யும் ஆற்றலைப் பெறுகிறான் என்பது புலனாகின்றது.

ஒரு மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை விளக்கும் யோகர் சுவாமிகளின் கூற்றொன்று சான்றாகின்றது.

"தத்துவப் பேயோடு தான் தழுவிக் கொள்ளாதே
சுத்த பரிபூரணத்தில் - சின்னத்தங்கம்
சுகித்து நீ வாழ்ந்திடடி...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது தன்னை அறியாத அறிய முடியாத தத்துவ விசாரணைப் பேயைத் தழுவிக் கொள்வதற்கு ஒப்பானது. ஆகவே சுய விளக்கம் பெற்று ஒரு மனிதன் வாழும் வழிமுறைகளை சுய முகாமைத்துவம் கட்டியெழுப்புகின்றது.

மனிதன் வாழ்வதற்கு வாழும் வழிமுறைகளை வாழ்ந்து காட்டிச் சென்ற யேசுகிறிஸ்துவின் 1151வது வாசகம்

"உனக்காக வாழ்ந்திட யாருமில்லை

உனது காயத்தை ஆற்ற மருந்தே இல்லை

உன்னைக் குணப்படுத்தவே முடியாது. என்றெண்ணி விடாதே.

உன்னை நீ அறி

உன்னால் முடியும்".

என்ற அடிகள் ஒரு மனிதன் தன்னை அறிவதே சுய முகாமைத்துவம் என்பதைச் சுட்டி நிற்கின்றது.

பகவத் கீதையில் சன்னியாச யோகம் பகுதியிலே கூறப்பட்டுள்ள வாசகம்,

"செயலை யோகமாகச் செய்பவன் தூய மனதை உடையவன் உடம்பை தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவன் புலன்களை வென்றவன் தன் ஆன்மாவை எல்லா உயிர்களுக்கும் ஆன்மாவாக காண்பவன். செயலில் ஈடுபட்டாலும் அதனால் பந்ததத்திற்கு உள்ளாவதில்லை" இங்கு கூறப்பட்டுள்ள விடயங்களை கூர்ந்து அவதானிக்கும் போது தன்னை அறிந்து செயற்படும் மனிதனொருவரின் சுய முகாமைத்துவப் பண்புகளை காண முடிகிறது.

இவற்றினடிப்படையில் நோக்குமிடத்து சுய முகாமைத்துவம் என்பது "தன்னைத் தானே வழிப்படுத்திக் கொள்வது" எனலாம். ஒரு மனிதன் உடல், உள, சமூக மனவெழுச்சிகளை கையாளும் திறன் என்று குறிப்பிடலாம். இலக்கு இல்லாத மனிதன் வெறும் ஜடத்திற்கு ஒப்பாவான். இலக்குகள் பொது இலக்குகளாக அமையலாம். சிறப்பு இலக்குகளாக அமையலாம். தேசிய குறிக்கோள்கள் தேர்ச்சிகள் என்பவை இலக்குகளின் சுட்டிகளாகும். இங்கு ஆசிரியர்கள் தனது இலக்குகளை அடைவதில் சுய முகாமைத்துவத்தின் வகிபாகம் தொடர்பில் நோக்குவது முதன்மையாகின்றது.

பாடசாலையின் துணைச் செயலமைப்பாகிய ஆசிரியர் அணி (Team of teacher) யினர் அதிகூடிய பயன் விளைவை எல்லா கல்விச் செயற்பாடுகளிலும் சமூக நிலை சார்ந்த செயற்பாடுகளிலும் பொருளாதாரம், விழுமியம்சார் செயற்பாடுகளிலும் உறுதிப்படுத்த வேண்டியவர்களாக உள்ளனர். இதற்கு தனிப்பட்ட ஒவ்வொரு ஆசிரியரிடத்தும் சுயமுகாமைத்துவம் பற்றிய எண்ணம், விளக்கம், செயற்பாங்கு விருத்தி செய்யப்பட வேண்டியது அவசியமாகின்றது.

ஆசிரியர்கள் பாடசாலை என்ற அமைப்பின் உள்ளீடுகளில் முக்கியமானவர்கள். ஆசிரியர்களானவர்கள் மட்டுமல்ல ஆசிரியர் சேவைக்காகவே பயிற்சி வழங்கும் கல்லூரிகள், பயிற்சிக்கலாசாலை ஆசிரிய மாணவர்களும் தமது தேர்ச்சிகளை சிறப்பாக முகாமை செய்வது பாடசாலையின் செயற்பாட்டுக்கு உதவுவதோடு தனித்தனியாக வாழ்தொழில் முன்னேறுவதற்கும் உதவுகின்றது.

சுயமுகாமை பற்றி Hellrigel and Slocum ஆகியோர் கூறும் போது,

- ஆசிரியர்கள் தம் பலம்-பலவீனங்களை மதிப்பீடு செய்தல்
- தனிப்பட்ட மற்றும் தொழில்வாண்மைசார குறிக்கோளை நிர்ணயித்தல்
- வேலைக்கும் - சொந்த வாழ்க்கைக்குமிடையே சமநிலை பேணுதல்
- புதிய கற்றலில் ஈடுபடல்

என்பவற்றைக் கொண்டது சுய முகாமை என்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் சுய விழிப்புணர்வு, சுய ஊக்கம், சமூகத்திறன் என்பவற்றைக் கொண்டிருப்பதை சுய முகாமைத்துவம் குறிப்பிடுகின்றது. சுய மதிப்பீடு, சுய திருப்தி, சுய கட்டுப்பாடு, சுய பாதுகாப்பு இவை அனைத்தும் சுய முகாமைத்துவத்தின் பக்க வேர்களாகும். ஒரு வழிகாட்டற் குறிப்புக்களை வழங்குவதனூடாக ஒருவருக்குள்ளே மறைந்திருக்கும் முகாமைத்துவ ஆற்றல்களை வெளிக்கொணர்வதன் மூலம் சிறந்த முகாமையை உருவாக்க முடியும்.

கெஸ்டால்ட் பரிகார முறையின் முன்னோடியான (வழிகாட்டல் ஆலோசனைவாதி) ஜேர்மன் நாட்டவரான பேர்ன் அவர்கள் "விழிப்புணர்வு பெறுவதால் ஒருவன் தன் பிரச்சினையைத் தானே தீர்த்துக் கொள்ளலாம்". சுய விழிப்புணர்வுக்கும் சுய முகாமைத்துவத்திற்குமான இடைவினையை இது காட்டுகின்றது.

சுய முகாமைத்துவத் திறன்கள் இருவகைப்பாதிப்புக்களை ஒருவரிடத்தே ஏற்படுத்துகின்றன.

1. நேர் விளைவு
2. எதிர்விளைவு என்பனவாகும்.

நேர் விளைவுகள் நேரான, நேர்மனப்பாங்கான சிந்தனைகளுக்கான ஊக்கலை வழங்குகின்றன. சிந்தனை நேர் விளைவுகளாக அமைவதனால் ஆரோக்கியமான வர்களாகவும், தனக்குத் தானே மேலானவர்கள் என்று எண்ணுபவர்களாவும், கவனமாகவும், உண்மையான ஈடுபாட்டுடன் பணியாற்றுபவர்களாகவும் திகழ்வார்கள்.

எதிர்விளைவுகள் தனிப்பட்ட முறையில் இடைவிடாது தொடர்ந்து வரும் தேவைகளினால் துரத்தப்படுவார். முன்னுரிமையை ஒழுங்குபடுத்தத் தவறுவார். மேலதிக தகவல்கள், அறிவுறுத்தல்கள், செய்திகளால் துன்பப்படுவர். சமநிலை குலைவர். இதனால் தோல்வி, விரக்தி சூழல் மீதான வெறுப்பு ஏற்படும்.

சுய முகாமைத்துத் திறன்களின் நேர், எதிர் விளைவுகள் ஆசிரியர்களுக்கும், எதிர் காலத்தில் கல்வி உலகில் பயணிக்க இருப்பவர்களுக்கும் சவாலானதொன்றாக விளங்குகிறது. நேர் விளைவுகள் உருவாக்கப்படுவதை விட எதிர்விளைவுகளின் தாக்கம் இவர்களை அதிக தாக்கத்திற்கு உள்ளாக்குகின்றது. ஒரு சம்பவத்தை குறிப்பிடுதல் இங்கு பொருத்தமானதாகும். பயிற்சிக் கலாசாலைகள், தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயில்வோர் காலை 5.00 மணிக்கு மைதானத்திற்கு உடல் ஆரோக்கிய செயற்பாட்டுக்கு வருக என்ற அறிவுறுத்தலைக் கேட்டவுடனேயே துன்பப்படுவதும், முணுமுணுப்பதும், அதனைச் சுமையாக எண்ணும் மனப்பாங்கும் விரக்தியை உருவாக்குவதும் உண்டு. சுய முகாமைத்துவம் பற்றிய சிந்திப்பு குறித்த சிலரிடம் இல்லாமையே காரணமாகும். கல்வியின் இலக்கு கற்றற் செயற்பாடுகளுடன் சேர்ந்த இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் வினைத்திறனுடன் செயற்பட்டு முன்மாதிரியான செயலொழுங்கை கட்டியெழுப்புவதாகும். என்பதை உணரத் தவறியமையேயாகும். இவற்றைக் கல்விச் சமூகத்தின் ஒவ்வொரு தனிமனிதப் பிரதிநிதியும் சிந்தித்து சுயமுகாமை செய்யும் போது இலக்குகளை இலகுவில் அடைந்து கொள்ளலாம்.

சுயமுகாமையில் நேர்திட்டமிடலுக்கு மகாத்மாகாந்தியின் வாழ்வின் சம்பவமொன்று சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது. "வக்கில் தொழில் பொய்யர்களின் தொழில் என்று சொல்லப்பட்டமை நான் மாணவனாக இருந்த போது கேட்டிருக்கிறேன். பொய் சொல்லிப் பணத்தையோ அந்தஸ்தையோ சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கம் எனக்கு இல்லை. அவை என் மனதை மாற்றி விடவும் இல்லை" என்று கூறியுள்ள போதிலும் அவர் கல்வி கற்று வக்கீலாகவே வந்தமை அவரின் சுயதிப்பீடாகும். நேர்முறை திட்டமிடல் செயற்பாடுகளுமே காரணமாக அமைந்துள்ளமையை எடுத்துக் காட்டுகிறது. அது மட்டுமன்றி "தனிநபர் உபாயத் திட்டம்" என்பதையும் அறிமுகம் செய்தமையும் கவனத்திற்குரியது. இது சுய முகாமைத்துவத்திற்கோர் ஆதாரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரமுகாமைத்துவத்தில் ஆசிரியர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். அடிக்கடி சிணுங்கும் தொலைபேசிகள், தேவையற்ற சம்பாஷணைகள், நீண்ட நேரச் சந்திப்புக்கள், பொருத்தமற்ற விழாக்கள், கூட்டங்கள், வீணான காணொளிகள் விரும்பியே கழியும் நேரங்கள், நிமிடங்கள் கழிவது உணராத முகப்புத்தகங்கள், பார்த்த படத்தை மீண்டும் பார்க்கும் துர்ப்பாக்கியங்கள், தனிப்பட்டவர்களின் ஒழுங்கீனங்கள் இவையெல்லாம் ஒவ்வொரு மனிதனதும் சுய முகாமையை சீர்குலைக்கும் சாபக்கேடுகள். இவற்றை தவிர்க்க வேண்டும் இதற்காக,

- நிச்சயமான நடைமுறைகளைப் பின்பற்றுதலுடனான குறிக்கோள்களை இலக்குகளை தீர்மானியுங்கள்.
- செயல்சார் குறிக்கோளுடனான இலக்குகளை திட்டமிடுங்கள்.
- ஒவ்வொரு மணித்தியாலத்தையும் வினையாற்றலுடன் செயற்படுத்தவும் பயனுறுதி மிக்க வினைத்திறனைப் பெறவும் தொழிற்படுங்கள்.

இவற்றை மேற்கொள்கின்ற போது உங்கள் ஒவ்வொருவரிடத்தும் ஒரு பண்படுத்தல் நிட்சயம் நிகழும் பலவீனங்கள், இயலாமைகள் விலகி ஓடும் திறமையும் பலமும் இயலுமைகளும் வெளிக்கிளம்பும். இதனை நீங்கள் உணர்வீர்கள். அதுமட்டுமன்றி, பலத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டும். குறிக்கோள் பற்றிய தொலைநோக்கும், இலக்கு பற்றிய விழிப்பும் திட்டமிடலின் போது இருத்தல் வேண்டும். புத்தாக்க முயற்சிகளும், புதிய கற்கைகளும், புதிய திறன்களும் சமூக மாற்றத்திற்கேற்ப இற்றைப்படுத்தப்பட வேண்டும். வாய்ப்புக்களை தவறவிடலாகாது. உடல், உள, சமூக, மனவெழுச்சிகளில் ஆரோக்கியமான நிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டும். உயர்தொழில் வாய்ப்பு பற்றிய முன்னோக்கு இருக்க வேண்டும். சமூகத் தேவைகள் பற்றிய சிந்திப்புக்கள் செயல் வடிவம் பெற வேண்டும். விடாமுயற்சியும், நடுவுநிலை மாறாத நிதானமும், தொலைநோக்கும், தன்னம்பிக்கையும், ஆசிரியரொருவரால் ஒருங்கிணைக்கப்படும் போது சுய முகாமை மேம்பாட்டு எதிர்பார்த்த இலக்குகள் நிறைவேற்றப்படும். தனி மனிதர்கள் ஒவ்வொருவரும் சுயமுகாமை என்ற அணிகலத்தை தம் வாழ்நாளில் அணிபவர்களாக விளங்கின் இலக்குகள் தானாகவே அடையப்படும்.

**உசாத்துணைகள்:**


- சின்னத்தம்பி.மா, (2009), ஆசிரியரை வினைத்திறன் மிக்கவராக்குதல், சேமமடு பதிப்பகம், கொழும்பு
- ஜெயராசா.சபா, (2009), கல்வி நிர்வாகமும் முகாமைத்துவமும், சேமமடு பதிப்பகம், கொழும்பு
- வல்வை ஆனந்தராஜ்.ந,(2002), முகாமைத்துவ நுட்பங்கள், நந்மி பதிப்பகம்.
- சின்னதம்பி.மா, (2016), ஆசிரிய முகாமைத்துவம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
- சின்னத்தம்பி.மா, (2005), இலங்கையில் முகாமைத்துவக்கல்வி, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
- சண்முநாதன்.கு, (2015), கல்வி மெய்யியல், ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம், யாழ்ப்பாணம்
- விமலா.கி, (2001), வழிகாட்டலும் ஆலோசனையும், கொழும்பு
- இராமகிருஷ்ணமடத்தலைவர், 2001, ஸ்ரீமத் பகவத்கீதை, சென்னை.
- தேவராஜா ஜெயராமன்.ந, முகாமைத்துவத்திற்கோர் அறிமுகம்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைப் பாடல்களுக்குப் பொருள் காணும் உத்திகளைக் கற்பிப்பது எப்படி?

திருமதி.லிங்கேஸ்வரி துணைவன்
விரிவுரையாளர் – வ.தே.க.க

**திருமுறைகளின் சிறப்பு:**

இவ்வுலகைப் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளும் ஐவகைத் தொழிலை இயற்றும் சிவபரம் பொருளால் "பித்தா" எனவும் "தில்லைவாழ் அந்தணர்" எனவும் "உலகெலாம்........" எனவும் அடியெடுத்துக் கொடுக்கப்பட்டவை திருமுறைப் பாடல்களாகும்.

ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனித்திடும் தேனினும் இனிய திருவாசகப் பாடல்களை மாணிக்கவாசகர் அருள சிவன் அதனைச் செவிமடுத்துத் தன் திருக்கரங்களினால் எழுதிக்கையொப்பமிட்டு வைத்த பாடல்களும், பாணபத்திரனுக்கும் சேரமனுக்கும் தன் கைபட எழுதி அனுப்பிய திருமுகப்பாசுரமும் அமையப்பெற்றுள்ள சிறப்புடையது பன்னிரு திருமுறைகள்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என வாழ்ந்து சிறந்து புகழ்பெற்ற அறுபத்துமூவர் வரலாற்றையும் விரித்துரைக்கும் திருத்தொண்டர்தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி இவையிரண்டையும் இணைத்த சார்புநூலாம் திருத்தொண்டர்புராணமும் பன்னிரு திருமறைகளேயாகும்.

நவில் தொறும் நயம் பயந்து சிவன் அருள்பெற நம்மையெலாம் ஆற்றுப்படுத்தி வைக்கும் தேவார முதலிகளது ஏழுதிருமுறைகளும் தொகுக்கப்பெற்றிருப்பது பன்னிரு திருமுறைகளினுள்ளேயாகும்.

"அரன் அடிபரவும் திருத்தொண்டர்கள்" மட்டுமன்றி சித்தர் மரபினர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடல்களும் திருமுறையின் கண் அமைந்துள்ளன.

சிவபெருமானை முழுமுதற்கடவுளாகப் போற்றி வாழும் சைவமரபினர் மட்டுமன்றி வைணவ அந்தண மரபினர் அருளிச் செய்த பாடல்களையும் இத்திருமுறைகள் பெற்றுத் திகழ்கின்றன.

தேவார முதலிகள் மூவருக்கும் முன் தோன்றி திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்களை இசைத்தவரும் அறுபத்து மூவருள் ஒருவரும் திருமுறை ஆசிரியர்கள் இருபத்துஎழுவருள் ஒரேயொரு பெண்பால் புலவராகத் திகழ்பவருமான புனிதவதியாம் காரைக்காலம்மையாரின் கவின்மிகு பாடல்கள் அமையப் பெற்றதும் இத்திருமுறைகளிலேயாகும்.

தீந்தமிழ் திறம் கூறும் தெய்வீகப் பிரபந்தங்களாம் சிற்றிலக்கிய வகைகளாய்ச் சிறப்பிடம் பெற்றுள்ள "திருக்கோவையார், திருக்கைலாயஞானஉலா, திருவங்கமாலை, திருவெழுகூற்றிருக்கை" முதலான அரியவகைச் சிற்றிலக்கிய பாடல்களும் இத்திருமுறையின்கண் சிறந்து காணப்படுகின்றன.

திருமுறைப்பாடல்களிலே இறைவன் விரும்பி உறையும் திருத்தலங்களின் பெருமை, அடியார் பெருமை, புராண இதிகாசக் கருத்துக்கள், இறைவனின் தோற்றப்பொலிவு, பொது இயல்புகள், அருட்சிறப்பு, இயற்கையழகு, வேண்டுதல்கள், அஃறிணை உயிர்களின் சிறப்புப் போன்றன திருமுறைகளினுள்ளே உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சிறப்பு மிக்க திருமுறைப்பாடல்களை பாடமுன்வருவோர் தற்காலத்தில் அருகிவருவது கவலைக்கிடமானது. எம்முன்னோர்கள் தமது வேண்டுதல்களையும், சமூக வேண்டுதல்களையும் இறைவனிடம் இரந்து வேண்டிய தெய்வீகப்பாடல்களை நாம் பாடுவது சரியைத் தொண்டாக அமைகிறது. இதனையே திருநாவுக்கரசு நாயனார்

"நிலைபெறுமா எண்ணுதியே.....

..............................................

..............................................

பூமாலை புனைந்தேத்தி புகழ்ந்துபாடி" எனப் பாடிப்பரவினார். திருமுறைப் பாடல்களின் சிறப்பினை உணர்ந்த பலரும் கூட பாடல்களைப் பாட முன்வராமைக்குப் பல காரணங்களுள.

- பண்ணோடு பாட இடர்படல்
- பிழையறப்பாட மனனஞ்செய்யத்தவறல்
- பக்தியோடு பாட இடர்ப்படல்
- ஒழுங்குமுறைப்படி பாடாமை
- நிற்கும் நிலை ஒழுங்கின்மை
- பாடல்களின் தெய்வீகத் தன்மையை உணராமை
- கற்பிப்போரும் ஈடுபாடின்றி வாசித்துக்காட்டல்
- பாடற்பகுதிகளை விடுத்து உரை நடைப்பகுதியை மட்டும் கற்பித்தல்
- பரீட்சைகளிலும் திருமுறைப்பாடல்களை எழுதாமலே உயர்ந்த புள்ளிகளைப் பெற முடிகின்றமை
- திருமுறைப்பாடல்கள் உணர்த்தும் பொருளை உணர சுயகற்றல் குறைவாகக் காணப்படுகின்றமை

இவ்வாறான இடர்களைத் தவிர்த்து திருமுறைப்பாடல்களை சிவசிந்தனையோடு கற்பிப்பதற்கான இலகுவான படிமுறைகளை நோக்கினால்,

**செயற்பாடு 1:** முதலில் திருமுறைப்பாடல் செய்யுளை நன்கு மனதூன்றி வாசிக்கச் செய்யுங்கள். கடினமான செய்யுளெனின் ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகள் வாசிக்கச் செய்யுங்கள்.

**செயற்பாடு 2:** செய்யுளை பதப்பிரிப்பு செய்து கொள்ளல் வேண்டும். பதங்கள் தனித்தனியாக பிரிக்கப்படும் போது பின்வருவனவற்றைத் தனித்தனியாக அடையாளம் கண்டுகொள்ளுங்கள்.

இலகுவான / அறிமுகமான சொற்கள்

கடின/அறிமுகமில்லாத சொற்கள்

அரும்பதங்கள் - அதிகம் பாவனையில் இல்லாத சொற்கள்

உரிச்சொற்கள், உருபுகள், இடைச்சொற்கள்

வழக்கொழிந்த/அரிய வழக்குச் சொற்கள்

மரபுச் சொற்கள் - காலம் காலம்காலமாக குறிப்பிட்டதொரு பொருளில் பயன்படுத்தப்படும் சொற்கள்

**செயற்பாடு 3:** செய்யுளை கொண்டு கூட்டச் செய்யுங்கள்

**செயற்பாடு 4:** பயன்படுத்தப்பட்டுள்ள அணிகளைக் கருத்திற் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செயற்பாடு 5:** செய்யுளுடன் தொடர்புடைய பின்புலங்களைக் கருத்திற் கொள்ளுங்கள்.

- பாடல் பாடப்பட்ட சந்தர்ப்பம்
- காலப்பகுதி
- புராணக்கதை
- பொது இயல்புகள்
- பண்பாடு

மேற்குறிப்பிட்ட எல்லா உத்திகளையும் குறிப்பிட்ட ஒரு செய்யுளுக்காகப் பயன்படுத்த வேண்டுமென்பதில்லை. ஆனால் இவற்றில் சில அடிப்படையானவை.

எடுத்துக்காட்டு,

திருச்சிற்றம்பலம்
சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்தர் அல்லாராகில்
அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.
திருச்சிற்றம்பலம்.

**படி 1: வாசித்தல்**

செய்யுளை இசையோடு ஆசிரியர் பாடிக்காட்டுதல் வேண்டும் அல்லது இசைத்தட்டு மூலம் ஒலிப்பதிவு செய்து வகுப்பறையில் மாணவரை செவிமடுக்கச் செய்யலாம். மற்றுமொரு உத்தியாக பாடசாலை சங்கீத ஆசிரியையின் உதவியைப் பெற்று நன்றாகப் பாடக்கூடிய மாணவரைக் கொண்டும் பாடச்செய்யலாம். பண்ணுடன் ஆசிரியர் பாடுவதனால் பாடகரின் குரலை பாடல் மூலம் உணருவதோடு மாணவரும் ஆசிரியரைப் பின்பற்றிப் பாடுவார். செய்யுளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வர். திருமுறைச் செய்யுளை திரும்பத்திரும்ப பாடிக்காட்டும் போது மனனம் செய்வது இலகுபடுத்தப்படும்.

**படி 2:**

சங்கநிதி (சங்கம் + நிதி) பதுமநிதி (பதுமம் + நிதி) இரண்டும் தந்து தரணியொடு (தரணி + ஒடு) வானாள (வான் + ஆள)த் தருவரேனும் (மங்குவார் அவர் செல்வம் மதிப்போ மல்லோம் (மதிப்போம் + அல்லோம்) மாதேவர்க் கேந்தர் (மா + தேவர்க்கே+ காந்தர்) அல்லாராகில் (அல்லார் + ஆகில்) அங்கமெலாம் (அங்கம் + எலாம்) குறைந்தழகு (குறைந்து + அழகு) தொழுநோ யராய் ஆவுரித்துத் (ஆ + உரித்து) தின்றுழலும் (தின்று + உழலும்) புலைய ரேனும் (புலையர் + ஏனும்) கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் (சடை+ கரந்தார்க்கு + அன்பர் + ஆகில்) அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.

இங்கு பதப்பரிப்பினால் அறியக்கூடியதாக அமைந்த சொற்களைப் பார்ப்போம்.

i. இலகுவான /அறிமுகமான சொற்கள் - வான், குறைந்து, அழகு
ii. கடின/அறிமுகமற்ற சொற்கள் - காந்தர் , உழலும்
iii. அரும்பதங்கள் - எலாம், கரந்தார்க்கு
iv. உரிச்சொல் - உருபுகள், இடைச்சொல் - ஒரு, உம்
v. வழக்கொழிந்த/அரிய வழக்கச் சொற்கள்- அல்லோம்
vi. மரபுச் சொற்கள் - சங்கநிதி, பதுமநிதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படி:3 செய்யுளில் கொண்டு கூட்டல்**

மாதேவர்க் கேகாந்தர் அல்லாராகில்
சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போ மல்லோம்.

**உதாரணம் – II**

குழலினிது யாழினிது என்பர்தம் மக்கள்
மழலைச் சொற் கேளாதவர் (திருக்குறள்)

இதனைப் பின்வருமாறு கொண்டு கூட்டலாம்.
தம் மக்கள் மழலைச் சொற் கேளாதவர்
குழலினிது யாழினிது என்பர்.

**படிமுறை: 4**

திருமுறைப்பாடல்களைக் கற்பிக்கும் போது ஆசிரியர்கள் புராணச் சம்பவங்கள் பாடப்பட்ட சந்தர்ப்பம் பின்புலம் போன்றவற்றை எடுத்துரைக்கும் போது திருமுறைகளுக்கான பொருளை உணரச் செய்வது இலகுவானதாகும்.

உதாரணம் - I
"இடரினும் தளரினும் .............
...............................
................................
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடரினில் அடக்கிய வேதியனே
......................................"

"வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன்
............................................"

"ஆலந்தானுகந்து அமுது செய்தானை............"

எனும் தேவார திருமுறைப்பாடல்களில் இறைவன் நஞ்சுண்ட புராணக்கதை எடுத்தாளப்பட்டுள்ளது. இங்கு அழிவில்லாப் பெருவாழ்வு பெறவிரும்பிய தேவர்கள், அசுரர்கள் மந்திரமலையை மத்தாகவும், வாசுகிப்பாம்பை கயிறாகவும் கொண்டு திருப்பாற்கடலை கடையத் தொடங்கினர். வேதனை தாங்க முடியாத வாசுகிப்பாம்பு நஞ்சைக் கக்கியது. அந்நஞ்சு தேவர்களையும் அசுரர்களையும் துரத்தத் தொடங்கியது. தம்மைக்காப்பாற்றுமாறு அவர்கள் சிவபெருமானிடம் சரணடைந்தனர். சிவன் தேவர்களையும், அசுரர்களையும் காப்பாற்ற இரக்கங்கொண்டு ஆலகால நஞ்சை எடுத்து உண்ண அது அவரது கண்டத்திலே தங்கியது. அதனால் சிவன் ஆலமுண்டகண்டன், விடமுண்டகண்டன், நஞ்சுண்ட கண்டன் எனும் பெயர்களால் போற்றப்படுகின்றார். இத்திருமறைப்பாடல்களைக் கற்பிக்கும் போது இப்புராணச் சம்பவத்தை எடுத்துரைக்க வேண்டும்.

திருமுறைப்பாடல்களில் சிவன் நஞ்சுண்டமை, கங்கையைச் சடையில் தரித்தமை, யமனை உதைத்தமை, திரிபுரம் எரித்தமை, மன்மதனை எரித்தமை முதலான புராணக் கதைகளும் இதிகாசக் கதைகளும் இடம்பெறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுள் பாடப்பபட்ட சந்தர்ப்பத்தைத் தெளிவுபடுத்தும் போது பொருளை இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும். செய்யுளின் பின்னணி, பொது இயல்புகளை மாணவர் விளங்கிக் கொள்ளச் செய்வதன் மூலமும் செய்யுளின் பொருளை இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.

அணிகள் அழகும் பயனும் தருவனவாக அமைவதுடன் பாடுபொருளுக்கு வலிமை சேர்ப்பனவாகவும் அமைகின்றன. சில சந்தர்ப்பங்களில் அணிகளே பொருளைப் புலப்படுத்துவனவாகவும் அமைவதுண்டு.

இவ்வுத்திகளைப் பின்பற்றி திருமுறைப் பாடல்களை முன் ஆயத்தத்துடன் விடயங்களையும் கற்றல் வளங்களையும் இணைத்துக் கற்பிப்பதன் மூலம் திருமுறைப்பாடல்களின் பொருளை இலகுவாகக் கற்பிக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கைவாதமும் கற்பித்தல் முறையும்

# (Naturalism and Method of Teaching)

த.ம.தேவேந்திரன்
ஒய்வுநிலை உப பீடாதிபதி – வ.தே.க.க

இயற்கைவாதத்தின்படி கற்பிக்கும்போது பிள்ளையைப் பிள்ளையாகப் பார்க்க வேண்டும். பிள்ளையாக அவனைப் பார்க்க வேண்டுமேயன்றி மனிதனாகப் பார்க்கக்கூடாது. பிள்ளையாக வாழ வழி வகுக்க வேண்டுமெனக் கூறப்படுகின்றது. இயற்கைக்கு அமைவாகப் பிள்ளையை ஆக்குவதற்கு ஏற்ற நுட்பமுறையில் கல்வியைப் புகட்ட வேண்டும். செயற்கைத் தன்மையை விடுத்து கல்வியைச் சுற்றாடலுக்கு அமைய சூழல் சார்ந்ததாக ஆரம்பித்து நடத்திச் செல்ல வேண்டும். இயற்கைவாதத்தின்படி கல்வியைப் புகட்டுவதற்குப் பின்வரும் மூன்று ஊடகங்கள் முன்வைக்கப்படுகிறது.

1. குழந்தை மற்றும் பிள்ளைப் பருவங்களில் பிள்ளை இயற்கைச்சூழலிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டும்.
2. சூழலுக்கு ஏற்றவாறு கல்வி பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து ஆசிரியர் மற்றும் மனிதர்களிடமிருந்து கல்வி பெற வேண்டும்.
3. பண்டங்களையும் பொருட்களையும் பயன்படுத்திக் கல்வி பெற வேண்டும்.

இதன்படி நோக்கும் போது சுற்றாடல், மனிதர் பொருள்கள் ஆகிய மூன்றும் கல்விபெற வேண்டிய ஊடகங்களாகும். ஒழுங்கு முறைப்படி இந்த ஊடகங்கள் மூலம் கல்வியைப் பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

இயற்கைவாதம் புத்தகத்தை அடிப்படையாகக் கொண்ட பழைய கற்பித்தல் முறைக்கு எதிரானது. பழைய முறையில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் பிள்ளை சிறிய பங்கையே வகிக்கின்றது. ஆனால் இயற்கைவாதத்தின்படி நேரடி அவதானம் மிகவும் இன்றியமையாதது. இதன்படி நேரடி அனுபவம் அவதானத்தின் மூலம் ஆசிரியர் சிறிய பங்கை வகித்து, பிள்ளை பெருமளவில் கண்டுபிடிக்கும் வகையில் கற்றல் ஒழுங்கு செய்யப்பட வேண்டும். இதனையே ரூசோ தனது எமிலி எனும் நூலில் "அவன் கற்றவை சொற்பம் ஆனால் அறிந்தவற்றை அதிகளவில் நன்கு விளங்கிக் கொண்டான்" எனக் கூறுகின்றார். (கல்வியின் தத்துவ அடிப்படைகள் - 1 தேசியக்கல்வி நிறுவகம், மகரக Page 67)

இயற்கைவாதத்தின்கடி எல்லாக் கற்றலும் உய்த்தறிமுறையிலான கண்டுபிடிப்பிற்கு வழிவகுப்பதாக அமைய வேண்டும். வுட்லர் (Butler) என்பவரது கூற்றுப்படி "புத்திக்கூர்மையை ஏற்படுத்திக் கற்றலுக்கு உகந்த சரியான அணுகுமுறையுடன் கற்றல் வழிகாட்டப்பட்டிருந்தால், பிள்ளைகள் நேரடியாக விடயத்தை உள்வாங்குவதுடன் தாமாகவே தங்களை நிலைநிறுத்திக் கொள்வார்கள். இதற்கு உகந்த சரியான முறை நேரடி அனுபவமும் அவதானிப்புமாக அமையும்" என்கிறார். (Philosophy of Education, A.S.Seetharamu. Page 38) ரூசோ கற்பித்தல் முறை பற்றிக் கூறும் போது "உன்னுடைய மாணவனுக்கு நீ வாய்ச்சொல்லால் கற்பிக்காதே அனுபவத்தினூடாகக் கற்பி" என்கிறார். மாணவருக்கு கூறும் போது "புத்தகமெல்லாம் எரித்து சுவரை உடைத்து இயற்கையுடன் நீயாகவே கற்றுக்கொள்" என்கிறார். (Ph.of Ed.A.S.Seetharamu page 39) எல்லா அறிவும் எப்பொழுதும் நியாயமான அனுபவத்திலும் நியாயமான சந்தர்ப்பத்திலிருந்து எழவேண்டும். இது பற்றிக் கூறும் போது வெண்கட்டிக்குப் பதிலாக அவதானமும் கதைப்பதற்குப் பதிலாக பரிசோதனையும் அமையவேண்டுமென்பது ரூசோவின் கருத்தாகும். இதன்படி நூல்கற்பித்தலை விட்டு நேரடிக் காட்சி அனுவமே சிறந்த கற்பித்தல் முறையாக இவர்கள் முன்வைக்கின்றனர். இயற்கைவாதத்தின்படி அனுபவமே சிறந்த கற்பித்தல் முறையாக இவர்கள் முன்வைக்கின்றனர். இயற்கைவாதத்தின்படி பிள்ளை சுயமாகக் கற்றுக்கொள்ளல், விளையாட்டை ஊடகமாகக் கொண்டு கற்றல் போன்ற முறைகள் பின்பற்றப்பட வேண்டும். விளையாட்டினூடாகப் பிள்ளையின் சொந்தத்திறன் இயற்கைக்கு ஏற்ப விருத்தி பெறும் என்பது இவர்களது கருத்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான இயற்கைவாதியான ரூசோ பிள்ளைகளைப் பிரதான 5 பருவங்களாக பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் வேறுபட்ட கற்பித்தல் முறைகளை முன்வைத்துள்ளார்.

பிறப்பிலிருந்து இரண்டு வயது வரையான குழந்தைப்பருவத்தில் ஆசிரியர் கற்பிக்கத் தேவையில்லை. பிள்ளையின் அனுபவங்களைத் தடுத்தல் கூடாது. அதிகளவு அனுபவத்தைத் தானே இயற்கையாகப் பெற்றுக்கொள்ள சிறந்த வழிமுறை ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

பிள்ளைப்பருவக் கற்பித்தல் முறைபற்றிக் கூறும் போது நூல்களைப் பாவித்தல், வாசிப்பில் ஈடுபடுத்தல், வாய்மொழிமூலம் கற்பித்தல் போன்ற முறைகள் தவிர்க்கப்ப வேண்டும். குறித்த பொருட்களுடனான தொடர்புடன் அனுபவங்களுடாக அவனாகவே கற்பதற்கு ஆசிரியர் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். இப்பருவத்தில் உடற்தொழிற்பாடுகளுடாகக் கற்றலுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமெனக் கூறப்படுகிறது. புலனுறுப்புக்கள் மூலமும், கை, கால்கள் தொடர்பான பயிற்சிகள் மூலமும் அவற்றைச் செயலில் ஈடுபடுத்துவதன் மூலமும் கை, கால்கள் தொடர்பான பயிற்சிகள் மூலமும் அவற்றைச் செயலில் ஈடுபடுத்துவதன் மூலமும் மனதைப் பயிற்றுவித்து சிந்திக்கக் கற்றுக் கொள்ள ஆசிரியர் வழிநடத்த வேண்டும். கட்புலனாகும் பொருட்கள் மூலம் கேத்திர கணிதத்தை திறமையை விருத்தி செய்யலாமெனக் கூறப்படுகிறது. கை, கால், கண், காது ஆகிய உறுப்புக்கள் மூலம் தொடுதல் - பார்த்தல்- செய்தல் போன்ற தொழிற்பாடுகளூடாக நேரடித் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும். இதன்மூலம் பெறும் அறிவு மனதில் நிலையாக உறுதியாகப் பதிவதோடு நிலையான விவேக அடிப்படையயையும் அத்திவாரத்தையும் கட்டியெழுப்பும். இவ்வாறான கற்பித்தல் முறையில் படிப்படியாகப் பார்வை, கேள்வி, மண நுகர்ச்சி போன்ற புலன்களைப் பயிற்றுவிக்கலாம். இப்பருவத்தில் பெரும்பாலும் விளையாட்டு மூலமும் அதனையொத்த செயற்பாடுகள் மூலமும் கற்பிக்கப்பட வேண்டும். இப்பருவம் 2 வயதிலிருந்து 12 வயது வரையான நீண்டகாலப் பருவமாதலால் , கூடியளவு நேரத்தை செலவிட்டு விரும்பக்கூடிய விளையாட்டு மூலம் கற்றல் தூண்டல் அளிக்கப்பட வேண்டுமேயன்றி கட்டாயப்படுத்தல் கூடாது. கல்வி புகட்டுவதற்குப் பதிலாக கற்க வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும். கல்வி ஒரு விளையாட்டாக அமைய வேண்டுமெனக்கூறப்படுகின்றது.

பன்னிரண்டு வயது தொடக்கம் பதினைந்து வயது வரையான முன்கட்டிளமைப்பருவக் கற்பித்தல் முறையானது அறிவைப் புகட்டுதல் அன்றி, அறிவைப் பெறுவதற்கான சக்தியைப் பெற்றுக்கொடுப்பதற்கும் அறிவைப் பெறுவதன் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்குமென முறைகளாக அமையவேண்டும். எனவே, ஆசிரியர் கற்பிப்பதற்கோ அறிவை ஊட்டுவதற்கோ முயற்சிக்காது தனிப்பட்ட நேரடியறிதல், முறையைக் கையாள்வதன் மூலம் பிள்ளைக்கு அறிவைத் தேடிப் பெற்றுக் கொள்ள வாய்ப்பளித்தல் வேண்டும். இப்பருவத்தில் தொழிற்பாடுகளூடாக-செயன்முறைகளூடாக அறிவு புகட்டப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. தொழிற்பாடுகளைப் புத்தகங்களினூடாகக் கற்பித்தல் பொருளற்றதாகும். மரவேலை போன்ற வேலைகளில் ஈடுபடுத்துவதனூடாக எதிர்காலத்தில் யாதேனும் நிலைமைக்கு முகங்கொடுக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டும். இப்பருவத்தில் வாசிப்பை ஆரம்பிக்கலாமெனக் கூறப்படுகிறது. இயற்கையுடன் வாழ்ந்து புதுமைநாட்டும், ஆராய்ச்சி மூலம் அறிவைப் பெற வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும்.

பதினைந்து தொடக்கம் பத்தொன்பது வயது வரையான கட்டிளமைப்பருவத்தில் பாட விடயங்களைக் கற்பதற்கும் ஆசிரியர் வழிகாட்ட வேண்டுமெனக் கூறப்படுகிறது. கருத்துப்பொருள், பிரித்தறி சிந்தனைத் திறன் விருத்தியடைந்துள்ள பருவமாகையால் அதற்கேற்ப பாடவிடயங்களைக் கற்க ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்.

இருபது வயதின் பின்னரான வளர்ந்த பருவதில் நாடகங்கள், இலக்கிய ஆக்கங்கள் ஊடாகவும் சுற்றுப்பயணம் மூலம் கற்றல் முறையைக் கையாள வேண்டுமெனக் கூறப்படுகின்றது. சமூக வாழ்க்கைக்கு உகந்த வகையில் இக்கற்பித்தல் முறைகளூடாகச் சமூகத்தைக் கற்க வாய்ப்பளித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுத்து நோக்கும் போது இயற்கைவாதிகளது கற்பித்தல் முறைப்படி குழந்தைகளை அவர்கள் வழியே குழந்தைகளாகவே வளரவிட வேண்டும். இயற்கை, நேரடி அனுபவம், சுயகண்டுபிடிப்பு போன்றவை கல்விக்குரிய வழிகாட்டல் முறைகளாகும். ஆசிரியர் வழிகாட்டுபவராக இருக்க வேண்டுமேயன்றி கட்டளை இடுபவராக இருக்கக்கூடாது. பேச்சு முறைக்கல்வி குழந்தைக்குப் பொருத்தமல்ல. இக்கற்பித்தல் முறை மூலம் குழந்தைகள் செவிமடுத்துக் கற்கமாட்டார்கள். குழந்தைகள் காணவிரும்புபவை காட்சிகளையேன்றி கருத்தியல் அல்ல. குழந்தைப் பருவத்தில் சொற்கள் பயனற்றுப் போவதற்குக் காரணம் அச்சொற்கள் குழந்தையின் கருத்தில் பதியாததால் அவற்றால் பயனொன்றும் இல்லாமையினாலாகும். பழமொழிகள், அறநெறிகள் ஆகியவற்றைப் பிள்ளைகள் அறிவது பயனற்றது. நூல்களை ஆதாரமாகக் கொண்ட கற்பித்தல் முறை கண்டனத்துக்குரியது என்பது இயற்கைவாதிகளது கருத்தாகும்.

**இயற்கைவாதமும் பாடசாலையும்:**

பொதுவாக கட்டடங்களினுள்ளேயே வகுப்பறைகள் அமைக்கப்படுகிறது. இவ்வாறு கட்டடங்களினுள் வகுப்பறைகள் அமைக்கப்படும் பாடசாலைகளுக்கு இயற்கைவாதம் எதிரானது. இவர்கள், இப்பாடசாலைகள் உடைத்துத்தூக்கி எறியப்பட வேண்டுமெனக் கூறினர். பாடசாலை மாணவனுக்கு உகந்ததாக இருக்க வேண்டும். மாணவன் பாடசாலைக்கமைய மாறவேண்டிய நிலை இருக்கக்கூடாது. பாடசாலை பரம்பரையான ஒழுக்க நெறிகளிலிருந்து விலகிப் போக வேண்டும். மாணவர் நடமாட்டத்திற்கு பூரண சுதந்திரம் இருக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும். விழுமியம், சமயம் பாடசாலையில் புகுத்தப்படக்கூடாது. கற்றல், கற்பித்தல் செயலொழுங்கு பாடசாலையில் மாணவனின் விருப்பத்திற்கமைய அமைக்கப்பட வேண்டும். பாடசாலை வாழ்வு மாணவனது இயற்கை வளர்ச்சிக்கு முரண்படாது இசைவாக்கப்பட்டிருக்க வேண்டும். பாடசாலை மாணவனுக்கு சந்தோசத்தை உருவாக்கக்கூடிய கருவியாகவும் பல்வேறு வகையான விருப்பங்களை ஊட்டிவிடக்கூடிய ஊடகமாகவும் அமைய வேண்டும். ஒவ்வொரு தனிமனித வித்தியாசத்திற்கும் இடமளிப்பதுடன் இயற்கைச் சூழலைப் பிள்ளைக்குப் பெற்றுக்கொடுக்கும் விதமாக பாடசாலை அமைக்கப்பட வேண்டும். இயற்கைவாதமானது பெண்கள், ஆண்கள் எனப்பிரித்துப் பாடசாலை அமைக்கப்பட வேண்டுமெனும் கருத்தை எதிர்த்து ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவான பாடசாலை அமைப்பதுடன் மாணவர்களிடையே பால் பற்றிய சுகாதாரமான மனநிலை ஏற்படும் வகையில் வெளிப்படையாக அதுபற்றிக் கலந்துரையாட சந்தர்ப்பம் வழங்கும் வகையில் பாடசாலை அமைய வேண்டுமெனக் கூறுகிறது.

**இயற்கைவாதமும் ஆசிரியரும்:**

இயற்கைவாதத்தின்படி ஆசிரியருக்குரிய இடம் முக்கியமில்லை. ஆசிரியர் மறைமுகமாக வழிகாட்டுபவராகவே இருப்பர். அவரது கடமையில் மாணவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதனை அவதானிப்பதே அதிகமாக இருக்கும். போதிப்பதை விட ஆசிரியர் கற்பித்தலுக்குரிய இடம், சந்தர்ப்பம் போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஆசிரியர் பிள்ளைக்கு விரிவுரைகள் மூலமும் சொற்கள் மூலமும் கற்பிக்கும் விடயங்களிலிருந்தும் மிகச் சிறிதளவே பிள்ளையின் மனதில் நுழைகிறது. எனவே போதிப்பதை விட்டு பொருள்களைப் கையாள்வதற்கும் அவதானிப்பதற்கும் தொழிற்படுவதற்கும் வாய்ப்பளித்தே கல்வியைப் பெற்றுக் கொடுத்தல் பொருத்தமானது. இயற்கைக்கு அமைய விருத்தி ஏற்படக்கூடிய சூழலை உருவாக்கி புத்திக்கூர்மையாக இருக்கக்கூடிய அனுபவத்திற்கு இட்டுச் செல்ல மாணவருக்கு உதவி செய்ய வேண்டும். இதனால் இயற்கைவாதிகள், ஆசிரியரை ஒரு ஒழுங்கமைப்பாளரெனவும், இணைப்பாளரெனவும் கூறுகின்றனர். ஆசிரியர் தான் தனித்துவமானவராக அன்றி மாணவர் மத்தியிலுள்ள ஒருவராக இருப்பதுடன் மாணவர் தம்மத்தியில் ஆசிரியர் இருக்கிறாரென்ற உணர்வுடன் செயற்படாத வகையில் ஆசிரியர் தனது வகிபங்கை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இயற்கைவாதியான Ross என்பவர் ஆசிரியர் "தான்" என்ற பெருமிதத்தையும் தான் வித்தியாசமான ஆசிரியர் என்ற எண்ணத்தையும் விட வேண்டுமெனவும் தான் சொந்தப் பெருமை கதைக்காதவராக இருக்க வேண்டுமெனவும் கூறுகின்றார் (Philosophy of Education, A.S.Seetharaman Page 41)

எனவே இயற்கைவாதத்தின் கருத்துப்படி ஆசிரியர் முக்கியமானவரல்ல. சுற்றாடல், மனிதன், பொருள் ஆகியன கற்றலுக்கான ஊடகங்களெனவும் மனிதன் என்ற ஊடகத்தினுள் சிறிய பங்கையே ஆசிரியர் வகிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மதமும் மனித மேம்பாடும்

திருமதி.வேணி றொனால்ட்
விரிவுரையாளர் - வ.தே.க.க

"மனிதர்கள் ஆன்மீக வளம் கொண்டவர்கள். மனிதருட் புதைந்து கிடக்கும் ஆன்மீக வளத்தை, பூரணத்துவத்தை வெளிப்படுத்துவது சமயம்" என்பது சுவாமி விபுலானந்தர் கருத்து. எனவே மனிதன் மனிதனாக வாழ அவனது உயர் பண்புகள் விருத்தி செய்யப்பட வேண்டும். இந்து மதம் விரிந்த பல சிந்தனைகளை உள்ளடக்கிய மதம். சிந்தனைகள் விருத்தி செய்யப்படுமிடத்தே மனிதம் மலரும். இந்து சமயம் மனித மேம்பாட்டையே உயர் குறிக்கோளாக கொண்டுள்ளது. அன்பு, நீதி, நேர்மை, உண்மை, நன்மை, அழகு, ஆனந்தம் என்பவற்றை உயர் இலட்சியமாகக் கொண்டுள்ளது. மனித மேம்பாடு என்பது வெறும் சிந்தனைகளில் மட்டும் தங்கியிருக்கவில்லை. மனித வாழ்க்கை முறையையும் ஒழுக்கத்தையும் ஒழுங்குபடுத்தி நெறிமுறை அறிந்து வாழ்வதிலேயே தங்கியுள்ளது.

"அன்பே சிவம்" என்றார் திருமூலர்; மேலும் அன்பும் சிவமும் இரண்டென்பர்" அறிவிலார்" என்றார். "அன்பு ஈனும் அருளெனும் குழவி" என்றார் வள்ளுவர். "அன்பர் பணிக்கு என்னை ஆளாக்கிவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே" என்றார் தாயுமானவர். எனவே அன்பு என்ற அடித்தளத்திலே தான் மனித மேம்பாடு கட்டப்பட வேண்டும். இந்துசமயம் காட்டும் வழி அன்புவழி ஒன்றே மனிதநேயம், சமூக மேம்பாடு, உறுதி, ஒற்றுமை, காருண்யம், தயை, இரக்கம் எல்லாமே அன்பின் வெளிப்பாடுகள்தான். அன்புள்ள இடத்தில் பகை இல்லை, காழ்ப்பு உணர்ச்சி இல்லை. தன்னைப் போல் பிறரை நேசிக்கும் உயர்ந்த பண்புகள் உருவாகும். உலகில் அன்பின் வழி வாழ்ந்தவர்களே உள்ளத்தால் உயர்ந்த உத்தமமானவர்களாக விளங்கி உள்ளார்கள்.

இந்துமதம் என்பது இன்று நேற்று தோன்றிய மதம் அல்ல. தொன்றுதொட்டே தோற்றம் பெற்று வளர்ச்சி பெற்ற மதம். மதத்தை வளர்த்தெடுத்த தாயுமானவர், பட்டினத்தார், திருமூலர், சமயகுரவர் எல்லோருமே இந்து மத மேம்பாடுகள் பற்றியே சிந்தித்தார்கள்.

சமூகத்தால் நல்ல இறைமையுடன் வாழ வழிகாட்டுவது சமயம், சமூகத்தை நேர் வழியில் இட்டுச் செல்வது சமயம். சமயம் என்பது ஒரு வாழ்க்கை நெறி, தனி மனிதனோ, சமூகமோ எதிர்பார்ப்பது மனித மேம்பாடு. மனித மேம்பாட்டை விளக்குவது இந்து மதம். இந்து மதம் மக்களுக்கு அறிவுறுத்துகின்ற சிந்தனைகள் எல்லாமே மனித மேம்பாடு பற்றியே நோக்குவதாம்.

"கொல்லான் புலாலை மறுத்தானை கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" என்கிறது இந்து மதம். அதாவது உயிர்களை கொலை செய்யாதே; அன்பு காட்டு. உயிர்களுக்கு உறுகண் செய்யாதே. உனக்கு உற்ற நோயையும் பொறுத்துக்கொள். நீ மற்றவனுக்கு துன்பம் செய்ய நேர்ந்தால் அந்தத் துன்பம் உன்னை நோக்கித் திருப்பி விடும். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என கன்மம் பற்றியும் விதி பற்றியும் புண்ணிய பாவம் பற்றியும் வலியுறுத்துவது இந்துமதம். பஞ்சமா பாதகங்களாகிய கொலை, களவு, முதலியவற்றையும் அவற்றின் கேடுகளையும் எடுத்துக்காட்டி தீய வழியில செல்லாதே நல்ல வழியில் நட, நாம் எவ்வாறு நடக்க வேண்டும். எப்படி நடக்க வேண்டும் என்பவற்றையும் வலியுறுத்தி நிற்கின்றது. அதாவது சமூகத்தின் மேம்பாடே சமயத்தின் மேம்பாடு. மதம் என்பது மனிதனை மதம் பிடித்தவனாக ஆக்குவது அல்ல. ஒவ்வொரு இந்துவும் உயர் சிந்தனையாளனாக வாழ வேண்டும் என்பதையே இந்துமதம் எதிர்பார்க்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதரை சாமியாராக்குவது தான் சமயம் என்பது தவறான கொள்கை. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" உயர்ந்த சமரச மனப்பான்மையை இந்த மகுட வாசகம் எடுத்துக் காட்டுகிறது. அதாவது எல்லோரையும் எம்மவராக காணும் உயர்ந்த பண்பாட்டை வளர்த்தெடுக்கிறது. "தீதும் நன்றும் பிறர் தர வாரா" அதாவது எமக்கு ஏற்படுகின்ற துன்பங்களுக்கோ இன்பங்களுக்கோ பிறர் காரணமல்ல நாம் தான் காரணம் என எம்மை நல்வழிப்படுத்துகிறது. "அன்பின் வழியது உயிர்நிலை" எனவே தன்னுயிர் போல் மன்னுரையும் ஓம்ப வேண்டும்.

ஒரு சிறிய உயிருக்குக் கூட துன்பம் செய்யாதே. உணவுக்காகக் கூட உயிர்களைக் கொலை செய்யாதே. பசுவதையைக் கண்டித்த சுவாமி ஞானப்பிரகாசர், புலாலுணவை வெறுத்த எம்மவர்கள் எல்லோரும் மனித மேம்பாடுகள் பற்றியே சிந்தித்தார்கள். ஆயிரம் வேள்விகள், யாகங்கள் செய்யினும் ஓர் உயிரை கொலை செய்வது பாவம் என்பதை வலியுறுத்தினார்கள். பல்லாயிரக்கணக்கான வருடங்கள் கடந்தும் இன்றும் இந்துமதம் உயர்நிலையில் இருக்கின்றது என்றால் அதற்குக் காரணம் இந்துமதம் மனித மேம்பாடு பற்றி அதிக அக்கறை காட்டி வந்ததே மனிதன் முன்னேற வேண்டும் என்று எண்ணினர். "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்றார் கச்சியப்பர்.

சமய வாழ்க்கை ஆசார சீலங்களுடன் கூடியதாக அமைந்திருந்தமையால் அவ்வொழுக்கங்களும் மனித மேம்பாட்டுக்கே வித்திட்டன. "சுத்தம் சுகம் தரும்" என்ற கருத்தை வளர்த்தனர். புலனடக்கத்தோடு தன்னுடைய வாழ்வை தூய்மை உடையதாக வாழ, குடும்பங்கள் சீராக விளங்க, தெய்வீக அருள்நிலை, பெற மனித ஒருமைகள் பேணப்பட, அறநெறிக்குட்பட்ட வாழ்க்கையுடன் கூடியதாக மனித விழுமியங்கள் பேணப்பட இந்துமதம் வழிகாட்டியது. இந்துமதத்திலே காணப்படுகின்ற வாழ்க்கைநெறி ஒவ்வொன்றும் மனித மேம்பாட்டையே உயர் குறிக்கோளாக கொண்டவை. "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பது மனித மேம்பாட்டின் உயர்நிலை, உச்சநிலை. சமய விழாக்கள் கூட அகத்தூய்மை, புறத்தூய்மை என்பவற்றையே வலியுறுத்துகின்றன. புறத்தூய்மை நீரால் அமையும். அகத்தூய்மை வாய்மையால் அமையும். "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்" அதாவது அழுக்காறு, அவா, பொறாமை, ஆசை, கோபம், அகங்காரம், மமகாரம் ஆகிய மனித மேம்பாட்டுக்கு தடையாக இருக்கின்ற குணங்களில் விலக்க வேண்டியவற்றை விலக்கி அகத்தூய்மைக்கு வழிகாட்டுவதும் இந்துமதமே. உலகியல் ஆன்மீகம் இரண்டிற்குமிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தி ஒரு சிறந்த அமைதியான உன்னதமான சமுதாயத்தை உருவாக்குவது இந்துமதமே.

நதிகள் பல. அவைகளெல்லாம் சென்றடையும் இடம் சமுத்திரம். அதே போல் இந்து மதத்தில் கொள்கைகள், கோட்பாடுகள், வேறுபட்டனவாக இருந்தாலும் அவை முடிவில் சென்றடையும் இடம் ஒன்றே. ஆன்மாவின் இறுதி இலக்கு இறைவனை அடைதல். இறைவனை அடைவதற்கு வழி இறை சிந்தனை இறை சிந்தனை ஏற்பட புலனடக்கமும் மனக்கட்டுப்பாடும் அவசியம். புலனடக்கமும், மனக்கட்டுப்பாடும் உடையவர்களாலே எதையும் சாதிக்க முடியும். அத்தகையவர்களால் தான் சமுதாயம் மேம்படும். எனவே இந்து மதம் போதிக்கின்ற கொள்கை புலனடக்கமும் மனக்கட்டுப்பாடுமே . அதுவே மனித மேம்பாட்டுக்கு உதவுவதும் ஆகும்.

சமயம் என்பது சடங்குகளோ விழாக்களோ கொள்கைகளோ அல்ல.

"யாவர்க்குமாம் இறைவனுக்கோர் பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கு ஒரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே"

என்ற திருமூலர் காட்டிய வழி சமூக மேம்பாட்டையே எடுத்துக் காட்டுகின்றது. அப்பர் சுவாமிகள் உழவாரப்பணி முதலான பணிகளைச் செய்தார். அதன் மூலம்,

"நங்கடம்பனை பெற்றவள் பங்கினன்
தென்கடம்பனை திருக்கரக் கோயிலாம்
தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் பணிபுரி பலனை எதிர்பாராதே என்றும் வலியுறுத்தினார். அதாவது இந்து மதம் கூறும் சரியைத் தொண்டு மனித மேம்பாடு நோக்கிய மிக உயர்ந்த தத்துவத்தை தந்துள்ளது. சம்பந்தர், கிரியை வழியிலே நின்று தொண்டுகள் பல செய்தார். உடம்பால் செய்யப்படும் தொண்டுகள் உடம்பின் மீதுள்ள பற்றை அறுத்தல் வேண்டும். ஆலயங்கள் தோறும் யாத்திரை செல்லல், தூப தீபம் காட்டுதல், மலர் மாலை சாத்துதல், பக்தியுடன் இறைவனை பாடுதல், உயிர்களுக்கு அன்பு செய்தல் என கிரியைத் தொண்டுகள் மூலம் மனித மேம்பாட்டை வலியுறுத்தினார்.

சுந்தரரோ இறைவனுடன் தோழமை பூண்டு அன்பினால் இறைவனையே தம் வசமாக்கும் ஆற்றல் பெற்றர். அன்புக்கு அடிபணியாதவர் யார்? அன்பினால் ஆண்டவனையும் கூட வசப்படுத்தலாம் என்ற உண்மையை எடுத்துக் காட்டினார். மணிவாசகரோ ஒரு செயலைச் செய்வதற்கு இடைவிடாத பயிற்சி தேவை. இடைவிடாத சிந்தனை தேவை என உயர்ந்த ஞானத்தை அடைவதற்கான வழிமுறைகளை எடுத்துக்காட்டி எந்தெந்த வழிகளில் நின்றாலும் அவை எல்லாம் இறுதியில் மனித மேம்பாட்டையே நோக்கிச் செல்கின்றன என்பதை எடுத்துக்காட்டினார்.

சமயக்குரவர்கள் மட்டுன்றி பெரியபுராணம் கூறும் அறுபத்துமூன்று நாயன்மார்கள், ஒன்பது தொகையடியார்கள், அப்பாலும் அடி சார்ந்தவர்கள் ஆகியோர் மனித தன்மையுடைய மனிதர்களாக "தொண்டர் குலமே தொழு குலம்" என வாழ்ந்து காட்டினர். எல்லா உயிர்களினதும் வளர்ச்சிக்கும், விருத்திக்கும், சிறப்புக்கும், எழுச்சிக்கும் ஆன்மீக விழுமியங்கள் பேணுவது அவசியம் என்பதை வலியுறுத்தும் வகையில் தாமே வாழ்ந்து காட்டினர். ஆன்மீக பண்பாட்டுக்கு ஒழுக்க மேம்பாடுகளுக்கெல்லாம் உறுதுணையாக இருப்பன மனித விழுமியங்கள் என வாழ்ந்து காட்டினர். எனவே மனித மேம்பாட்டை மையமாக கொண்டு இந்துமதம் கூறும் வழிகளைக் கைக்கொண்டு வாழ்வாங்கு வாழ்வோமாக.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணின் நல்ல.'. துறுங்கழுமல வளர்நகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரும் கற்றல் கற்பித்தல் முறைகளும்

ஜெ.ஜனார்த்தனி
2015/VNCoE/PT/T/F/3786

பண்டைய காலம் தொடக்கம் தற்காலம் வரையில் கற்றல் எனும் செயன்முறையும் கற்பித்தல் எனும் செயன்முறையும் மனிதனுடைய வாழ்வின் ஓர் அங்கமாக பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது என்பது தெளிவானதே. அந்த வகையில் கற்றல் என்பது ஒரு மனிதனுடைய நடத்தையில் ஏற்படுகின்ற நிரந்தரமான மாற்றம் எனலாம். கற்பித்தல் என்பது இந் நிரந்தரமான மாற்றம் நடத்தையில் ஏற்படும் வகையில் மாணவர்களுக்கோ யாரேனும் நபர்களுக்கோ கூறவந்த விடயத்தைத் தெளிவாக புகட்டுதலாகும். இக்கற்றல் -கற்பித்தல் செயற்பாட்டினை கவர்ச்சிகரமான முறையிலும் வினைத்திறனான முறையிலும் மாணவரது இயங்குநிலை உயிரோட்டமானதாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் பல்வேறு உத்திமுறைகளைக் கைக்கொள்வர் இதனையே "கற்றல்-கற்பித்தல் முறைகள்" என்று கூறுகின்றோம்.

அந்த வகையில் கற்றல்-கற்பித்தல் முறைகள் அவை நடைமுறைப்படுத்தப்படுகின்ற விதத்திற்கமைவாக இரண்டு வகைப்படுத்தலாம்.

01. ஆசிரியரை முதன்மையாகக் கொண்ட முறைகள்
02. மாணவரை முதன்மையாகக் கொண்ட முறைகள்

அந்த வகையில் ஆசிரியரை முதன்மையாகக் கொண்ட முறை என்பது கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டின் போது ஆசிரியர் செயற்பாட்டிற்கு மாத்திரம் முதன்மை அளிக்கப்படும். மாணவர் செயற்பாட்டிற்கு இடம் கொடுக்காது அவர்கள் வெறுமனே செவிமடுப்பவர்களாக மாத்திரம் காணப்படுவர். அவ்வாறான கற்பித்தல் முறைகள் சிலவற்றை நோக்குவோம்.

- விரிவுரை முறை
- கலந்துரையாடல் முறை
- சிந்தனைக்கிளறல்
- அணிமுறை
- செய்து காட்டல் முறை
- போலச் செய்தல்
- வினாக்கேட்டல்
- சிகிச்சை முறை

அதே போன்று மாணவரை முதன்மையாகக் கொண்டமுறை என்பது கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டின் பொழுது மாணவர்களது செயற்பாடு முதன்மையானதாகவும் ஆசிரியரது செயற்பாடு குறைவாகவும் அதாவது அவர்கள் ஒரு வழிகாட்டியாக மாத்திரம் இருக்கும் முறையே எனலாம். அந்த வகையில்,

- குழுமுறை
- ஒப்படைமுறை
- செயற்றிட்டமுறை
- நடித்தல்
- அவதானிப்புமுறை
- கண்டறிமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விளையாட்டுமுறை
- தேடல்/பிரச்சினை தீர்த்தல் முறை என்பவற்றைக் குறிப்பிடலாம்.

மேலும் இக் கற்றல்-கற்பித்தல் முறைகளைச் சற்று மேலோட்டமாகப் பார்ப்போமானால் கற்பிக்க வந்த விடயத்தை ஆசிரியர் கூறவருவதை மாணவர்கள் கேட்டுக்கொண்டிருப்பது விரிவுரைமுறை எனலாம். அடுத்து ஆசிரியரானவர் மாணவர்களுடன் இணைந்து யாதேனுமோர் தலைப்பில் பல்வேறு கண்ணோட்டத்தில் நோக்கியும் ஒப்பிட்டும் பகுப்பாய்வு செய்தும் கற்பிப்பது கலந்துரையாடல் முறை எனலாம். யாதேனும் செயன்முறையை பாவனை செய்து செயற்பட்டு எதிர்பார்க்கும் நிலையை அடைவது போலச் செய்தல் எனலாம்.

மேலும் மாணவனின் சுயாதீன சிந்தனையைத் தூண்டும் வகையில் வினாக்களைக் கேட்டுக் கற்பிப்பது என்பது சிந்தனை கிளறல் முறை என்றும் ஆசிரியர் மாணவரிடம் வினாக்களைக் கேட்டு மாணவர்கள் விடையளிப்பதன் மூலம் அறிவைக் கடத்தும் ஒரு முறை வினாக்கேட்டல் முறை என்று கூறப்படும். அதுமட்டுமன்றி முழு வளங்கள், ஆர்வங்கள், நிபுணத்துவம், ஆகியவற்றைக் திரட்டி அதன் மூலம் உச்ச பயன் பெறச் செய்யும் முறை அணிமுறை என்றும் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட தரத்தை ஒன்று சேர்த்து ஏககாலத்தில் கற்பிப்பது பல் தரக்கற்பித்தல் எனவும் வரையறை செய்து கூற முடியும்.

மேலும் ஓர் ஆசிரியரால் மேற்கொள்ளப்படும் கற்பித்தல் செயற்பாட்டிற்கும் அதற்காக அவர் கையாளும் கற்பித்தல் முறைக்கும் இடையே பரஸ்பர தொடர்பு காணப்படும் அந்த வகையில் இக்கற்பித்தல் முறையானது ஒரு சந்தர்ப்பத்தில் கற்பித்தல் உத்தியாகவும் மற்றொரு சந்தர்ப்பத்தில் கற்பித்தல் முறையாகவும் பயன்படுத்தப்படும். அதனை வினாக்கேட்கும் போது அவதானிக்க முடியும்.

ஓர் ஆசிரியர் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் போது ஏதாவதுதொரு கற்பித்தல் முறையைக் கொண்டே கற்பித்தலில் ஈடுபட வேண்டும். அவ்வாறாக ஒரு முறையை தெரிவு செய்யும் போது பல்வேறு விடயங்களை கருத்திற்கொண்டு திட்டமிட்டு ஒழுங்குப்படுத்தியே தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறு தெரிவு செய்தால் மாத்திரமே கற்றல் கற்பித்தல் செயற்பாடானது வினைத்திறனான முறையில் வெற்றிகரமானதாக மாணவரைச் சென்றடையும். கற்பித்தலின் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் சில,

- மாணவர் எண்ணிக்கை
- தேர்ச்சி மட்டம்/தேர்ச்சி/பாடத்தின்
- குறிக்கோள்/கணிப்பீட்டு மதிப்பீட்டு நியமங்கள்
- மாணவரது வயது
- பாடத்திற்கான நேரம்
- விடய உள்ளடக்கம்
- முன்னனுபவம்
- ஆசிரியர் திறன் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவற்றைக் கருத்திற் கொண்டு கற்பித்தல் துறையை தெரிவு செய்து கற்பிப்பதால் மாணவரது ஊக்கலையும் ஆர்வத்தையும் அதிகரிக்கலாம். மாணவரது கவனத்தை ஈர்க்கலாம். நேரடி அனுபங்களைப் பெறலாம், கற்றல் செயன்முறையை அதிகரிக்கலாம், அறிவாற்றலை விருத்தி செய்யலாம், மாணவரை மலர்ச்சியுடன் கற்றலில் ஈடுபடுத்தலாம். எனவே இம்முறைகளை ஆசிரியர்கள் கையாண்டு மாணவர்கள் சுயமாகக் கற்கும் திறன், உயிரோட்டமாக கற்கும் தன்மை இடைத் தொழிற்பாட்டுக்கற்றல் போன்ற சந்தர்ப்பங்களை வெளிக்கொணர்வதற்கான முயற்சிகளை வகுப்பறையில் மேற்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய வகுப்பறைகளில் கற்பித்தல் நுட்பமுறைகளின் முக்கியத்துவம்

B.F.நஸ்ரின்
2015/VNCoE/Mat/T/F/3826

கற்றல்-கற்பித்தல் செயன்முறைகளை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு உதவியைப் பெற்றுக் கொள்ளக்கூடிய உபாயவழி முறைகள் கற்பித்தல் நுட்பமுறைகள் என அழைக்கப்படுகின்றன.

கதைகூறல், நடித்தல், பொருட்காட்சி, முன்மாதிரி விவாதங்கள் காரணங்கள் கூறுதல், அவதானம், களச்சுற்றுப் பிரயாணம், கலந்துரையாடல், வினாக்கள் வினாவுதல் முதலியன அன்றாடம் வகுப்பறையில் பயன்படுத்தக் கூடிய சில பயனுள்ள நுட்பமுறைகளாகும். ஒவ்வொரு பாடத்தினதும் பகுதிகளைக் கற்பிப்பதற்கு பொருத்தமான நுட்பமுறைகளை தெரிவு செய்து கொள்ளவும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் உபயோகித்துக் கொள்ளவும் ஆசிரியர் என்ற முறையில் நீங்கள் அறிவு பெற்றிருத்தல் பல்வேறு கற்பித்தலிலும் நுட்பமுறைகளினால் உச்சப்பயனைப் பெற்றுக் கொள்ளவும் உதவும். ஜோன் மென்டர் என்பவர், கற்றல்-கற்பித்தல் செயன்முறையில் பல்வேறு நுட்பமுறைகளையும் பயன்படுத்துவதற்கு ஐந்து காரணிகளைச் சமர்ப்பித்துள்ளார்.

1. மாணவர்கள் கற்பிக்கும் பாட விடயங்களை நன்கு கிரகித்து கொள்வதற்கும் நன்றாகக் கற்றுக் கொள்ளுவதற்கு இயலுமானதாக இருத்தல்.
2. குறிப்பிட்டவைகளைத் துரிதமாகக் கற்பிப்பதற்கு, நிச்சயிக்கப்பட்ட காலவரையறைக்குள் பாடவிதானத்தைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு முடியுமாக இருத்தல்.
3. ஊக்கலைத் தொடர்ச்சியாக பேணிக்கொள்ள முடியுமாக இருத்தல்.
4. இதற்கு முன் வேறு முறைகளினால் கற்றுக் கொண்டவைகளைச் சீராக்கம் செய்து கொள்ள முடியுமாக இருத்தல்.
5. மாணவர்களுக்கு ஏதேனுமொரு புதியவைகளைப்பற்றி அனுபவமும் விளக்கமும் பெறக்கூடிய ஒரு முறையாக இருத்தல். சில சந்தர்ப்பங்களில் வளர்ந்தவர்களால் மட்டும் விளக்கிக் கொள்ளும் பாட விடயங்களை மாணவர்களுக்கு இலகுபடுத்திச் சமர்ப்பிக்கும் ஒரு முறையாகவும் கருதப்படும்.

மாணவர்களைக் கற்றலில் ஈடுபடுவதற்கும், பல்வேறு கற்றல் அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்களைக் உருவாக்கிக் கொள்ளும் கற்றலை ஒரு விருப்புக்குரிய செயலாக மாற்றவும் ஆசிரியருக்கு கற்றல் நுட்பமுறைகள் அவசியமாகின்றன என்பதை மேற்குறிப்பிட்ட காரணங்களால் விளங்கிக் கொண்டிருப்பீர்கள். இதனை உதாரணங்கள் மூலம் மேலும் தெளிவுப்படுத்திக் கொள்ளலாம்.

மாணவனை சுய கற்றலில் ஈடுபடுத்துவதற்கு ஒப்படைமுறையைப் பயன்படுத்தும் போது பாட நூல்களை ஆசிரியர் பயன்படுத்திக் கொள்ளமுடியும். மேலும் கதைகூறல் மூலம் கற்றலை விருப்புக்குரியதாகவும் உயிரோட்டம் உள்ளதாகவும் ஆசிரியர் மாற்ற முடியும். விசேடமாக ஆரம்ப வகுப்புகளில் மாணவர்களை கவர்ந்து கொள்வதற்கும் அவதானத்தைப் பெற்றுக் கொள்வதற்கும் இந்நுட்பமுறைகள் பெரிதும் உதவுகின்றன. அத்துடன் கற்றலை புதுமையாக மேற்கொள்ள முடியும்.

மேலும் வினாமுறையானது பிரபல்யமான கற்பித்தல் முறையாகும். இதனை ஒரு கற்பித்தல் முறையாகவும், கற்பித்தல் வினைத்திறனை வெளிப்படுத்தும் ஒரு நுட்ப முறையாகவும் பயன்படுத்தலாம். மாணவர்களின் முன்னறிவினைப் பரிசோதனை செய்யவும், ஆர்வத்தையும், விருப்பத்தையும் ஏற்படுத்திக் கொள்ளவும் பாடத்தை மீளவலியுறுத்திக் கொள்ளவும் வினாமுறையை ஒரு நுட்பமுறையாக கொள்ள முடியும். மாணவர்களுக்கு கல்விச் செயற்பாட்டை மிகவும் துல்லியமாகவும் வினைத்திறன் உடையதாகவும், நீண்டகால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவில் வைக்கும் நோக்கோடும் இத்தகைய கற்பித்தல் நுட்பமுறைகள் ஆசிரியர்களுக்கு இன்றி அமையாததாக உள்ளது. மாணவர்களுக்கு இத்தகைய கற்றல் கற்பித்தல் நுட்பமுறைகளை பயன்படுத்துவதனூடாக ஒவ்வொரு மாணவரும் கற்றல் செயற்பாடுகளால் உச்சப்பயனை பெறுகின்றனர். இலங்கையின் கல்விச் செயற்பாடுகளை நோக்கின் தற்போது எம் ஆசிரியர்கள் வகுப்பறையில் பல்வேறு தொழினுட்ப சாதனங்களைத் துணை கொண்டு கற்பித்தற் செயற்பாட்டினை முன்னெடுத்துச் செல்வது குறிப்பிடத்தக்கது.

**இலத்திரனியல் வழிக் கற்றலும் கற்பித்தலும் (E - Learning and Teaching)**

இன்று எல்லோராலும் மின் இலத்திரனியல் தொழிநுட்பம் கணினி, இணையம், செய்மதி தகவல்கள் பரிமாற்றம் போன்றவை பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றமையால் இன்றைய உலகம் தொடர்பாடல் ஊடாக அறிவை மையமாகக் கொண்ட உலகளாவிய சமூகமொன்றில் பிரவேசித்துள்ளது. முழு உலகமும் ஒரு தனிக்கிரமமாக மாத்திரமின்றி ஒரு தனி வீடாகவும் மாற்ற மடைந்த வண்ணமுள்ளது.

இலத்திரனியல் வழிக் கற்றல் என்பது கணினி, இணையம், தொலைக்காட்சி போன்ற இலத்திரனியல் ஊடகங்கள் வழி நேரடியாகவோ, களஞ்சியப்படுத்திய இறுவெட்டுக்கள் மற்றும் காட்சிப்படுத்தல்கள் (Power Point Presentation) ஊடாகவோ நிகழும் கற்றல் கற்பித்தல் செயன்முறையே இதுவாகும். கற்பவர் மற்றும் குறைநிரப்பலாக வலுவூட்டும் தர உள்ளீடாகவும் இக்கற்றல் முறையைப் பயன்படுத்தலாம். இதனை "உருவாக்கப்பட்ட ஓர் ஆசிரியர்" எனவும் கூறலாம்.

தகவல் தொழினுட்பம், தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் போன்ற புதிய விடயங்கள் பாடசாலைக் கலைத்திட்டத்தில் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள நிலையில் இலத்திரனியல் வழிக்கற்றல் போன்ற புதிய கற்றல்-கற்பித்தல் பயன்பாடு இன்று காலத்தின் தேவையாகக் காணப்படுகின்றது. இது கற்றல் மைய சமூகமொன்றுக்கு இன்றியமையாத ஒரு காரணியாகவுள்ளது.

இலத்திரனியல் வழிக்கற்றல் காரணமாக மாணவர் தேடலின்பால் ,ட்டுச்செல்லப்படுவார் தமது விடயத்துக்கு அமைவாக தகவல்கள், வரைவிலக்கணங்களை இணையத்தினூடாகப் பெறும் பரிச்சயத்தைப் பெறுவார். அத்தோடு வானொலி, தொலைக்காட்சி, நிகழ்ச்சித் திட்டங்களைச் செவிமடுத்தும் பார்த்தும் கேட்டும் விடயங்களை திரட்டிக் கண்டறிந்து செயற்படுத்துவர்.

இக்கற்றல் முறையானது நன்கு திட்டமிட்டு போதிய முன்னாயத்தத்துடன் நிகழ வேண்டிய ஒன்றாகும். தேவையான வன்பொருள்களையும், மென்பொருள்களையும் ஆசிரியரின் வழிகாட்டலுடன் நேர காலத்துடன் தயாரித்துக் கொள்வது அவசியமாகும். மாணவர்கள் இரத்திரனியல் ஊடகத்தை கையாள்கையில் ஆசிரியர் ஓர் இணைப்பாளராகக் குறைந்த அளவு தலையீட்டுடன் செயற்பட்டு அம்மாணவருக்கு பாடச் செயற்பாடுகளில் மாணவர் ஈடுபட்டிருக்கும் வகையில் பாடம் விருத்தியடையும். குறைநிரப்புதல், பொழிப்பாக்கல், கணிப்பீடும் மதிப்பீடும் போன்றவற்றுக்காகவும் இலத்திரனியல் ஊடாக நுட்பமுறைகளைப் பயன்படுத்தலாம்.

**பயன்கள் (Advantages)**

01. இலரத்திரனியல் வழிக் கற்றல் காரணமாக தொடர்பாடல், திறன் சார்ந்த கற்பனை, சந்தத்துக்கு அமைவான பேச்சு, நடிப்பு, எழுதுதல், ஊடாக சாதனங்களைக் கையாளுதல் போன்ற ஊடகத் துறைசார்ந்த பல்வேறு வகைப்பட்ட அனுபவங்களைப் பெற வாய்ப்புக் கிடைக்கும்.
02. வானொலி, தொலைக்காட்சி, இணையம்போன்ற இலத்திரனியல் பொதுசனத் தொடர்பு ஊடகங்கள் மூலம்
    - i. செய்திகள், தகவல்கள், அறிவித்தல்கள்
    - ii. கல்வி
    - iii. களிப்பூட்டல். பொழுதுபோக்கு ஆகிய பிரதான மானுடத் தேவைகள்

நிறைவேற்றப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்து காட்டல் முறை
# -ஓர் அறிமுகம்-

D.ஜெயசித்ரா
2015/VNCoE/BAC/T/F/3994

கலைத்திட்ட மாற்றங்கள் கலைத்திட்ட மறுசீரமைப்புக்கள் காரணமாக கற்பித்தல் முறை, கற்பித்தல் மதிப்பீடு, கற்றல்முறை,கற்றல் வளம்,பாடசாலை அமைப்பு, நிர்வாகம் போன்றவற்றில் துரித கதியில் மாறி வரும். அரசியல், பொருளாதார, சமூக முறைகளுக்கு அமைவாக புதிய அணுகுமுறைகள் தோன்றியுள்ளன. அந்த வகையில் கல்வியில் அடைய எதிர்பார்க்கும் இலக்குகளை சிறந்த முறையில் அடைந்து கொள்ள ஆசிரியர்- மாணவர் கற்றல்-கற்பித்தல் முறைகள் பற்றி அறிந்திருப்பது அவசியம் கற்பித்தல் என்பது பல்வேறு திறன்களில் கூட்டுமொத்தமான தொகுதி ஆகும். ஆசிரியருக்கு இருக்க வேண்டிய திறன்களில் பொருத்தமான கற்பித்தல் முறையை தெரிந்தெடுத்து மிக நுணுக்கமாக ஆராய்ந்து செயற்படுதலும் முக்கியமான தொன்றாகும். பாடப்பொருளை கருத்திற் கொண்டு மாணவரின் உளவியல் இயல்பை கருத்திற் கொண்டும் கற்பித்தல் முறையை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். அவ்வாறான கற்பித்தல் முறைகளுள் செய்து காட்டல் முறையை பற்றி சற்று சிந்தித்துப்பார்ப்போம். "மாணவர்கள் பல்பரிமாண திறன்களை பெற்றுக்கொள்வதுடன் ஒரு பரிசோனையை, ஒரு சிறந்த உபகரணத்தை ஒரு முறையியலை செய்து விளங்கவைக்கும் ஒரு முறையே செய்து காட்டல் முறையாகும்."

செய்து காட்டல் முறையானது ஒரு பரிசோதனையை, ஓர் உபகரணத்தை, ஒரு முறையியலை செய்து காட்டும் போது அவ்வடைவு வினைத்திறனாக அமையும் காட்டுதல், விளக்குதல், கூறுதல், காணுதல், அவதானித்தல் போலச்செய்தல் போன்ற கற்றல் செயற்பாடுகள் ஒரே நேரத்தில் நிகழக்கூடிய முறையாகவும் ஒரே நேரத்தில் பலருக்கு ஒரே விடயத்தை தெரிவிக்கக்கூடிய பயன்மிக்க ஒரு முறையாக இது அமைகின்றது.

இச் செய்து காட்டல் முறையின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய முறைகள் பலவுள்ளன. அவற்றை ஓர் ஆசிரியர் அவதானிக்க வேண்டும். இம்முறை ஆசிரியரின் வினைத்திறனான கற்பித்தலுக்கு அவசியமானதாகும். யாதேனுமொன்றினை ஏககாலத்தில் பலருடன் தொடர்பாட முடியுமாகையினால் இம்முறை கற்றல்-கற்பித்தல் செயன்முறையில் முக்கியத்துவம் பெறுகின்றது. "செய்து காட்டல் மூலம் சிந்தனையைக் கட்டியெழுப்புவோம்"

**கல்வி அளவீடும் மதிப்பீடும் : தேவைப்பாடு**

மாறிவரும் உலகிற்கேற்ப அதாவது "மாற்றம்மொன்றுதான் மாறாதது மாற்றமானது நிரந்தரமானது" எனும் கூற்றிற்கு இணங்க இன்றைய கல்வி உலகிலும் பல வகையான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இன்று கல்வியானது ஒரு வரையறை கூறமுடியாத அளவிற்கு பல்வேறு புதுமைகளுக்கு உட்பட்டு வருகின்றது. இதற்கு ஏற்ற வகையில் கல்வியானது வளர்ச்சி அடைந்துள்ளது பாடசாலை கலைத்திட்டங்களிலும், கற்பித்தல் முறைகள், கற்றல் வளங்கள், கற்றல் கற்பித்தல் மதிப்பீடு, அளவீடு, நிர்வாகக் கட்டமைப்பு என்பவற்றில் புதிய அணுகுமுறைகள் ஏற்பட்டுள்ளன.

கல்வியின் நோக்கங்களும் குறிக்கோள்களும் எந்த அளவிற்கு அடையப்பட்டன என்பதனை பரசீலிக்கும் செயன்முறையே மதிப்பீடாகும். மதிப்பீடு என்பது பரீட்சை நடாத்தி தரமும் சான்றிதழும் வழங்கும் ஒரு சாதாரண செயன்முறையாக அதனைக் கொள்ள முடியாது. சோதனை, கணிப்பீடு, அளவீடு ஆகிய எல்லா எண்ணக்கருக்களையும் உள்ளடக்கும் வகையில் முழுமையாக அர்த்தம் தரும் பதமாக மதிப்பீடு காணப்படுகின்றது மாணவரின் விருத்தியுடன் தொடர்பான பல்வேறு பண்புகள் அளவீட்டில் காணப்படுகின்றது. அளவீட்டின் மூலம் மாணவரின் அடைவு, திறமை, மனப்பான்மை என்பவற்றை மேம்படுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளலாம். கற்றல் - கற்பித்தல் செயன்முறையை மேம்படுத்துவதற்காக மாணவனுடனிருந்து கற்றலில் மாணவனது வலிவு மெலிவுகளை இனங்காணல் கணிப்பீடு ஆகும். கணிப்பீட்டுக்கருவிகள் முறைகள் மூலம் இதனை இனங்கண்டு கொள்ளலாம்.

மாணவனின் பலம், பலவீனம் என்பவற்றை தேடியறியும் பணியை ஆசிரியர் மேற்கொள்ள வேண்டும். இத்தேடியறியும் பணியானது அறிதல் சார் ஆட்சி என்பவற்றிற்கு உட்பட வேண்டும். அடைவுச் சோதனைகளை திட்டமிடுவதன் மூலம் மாணவர் அடைவர் என எதிர்பார்க்கும் கற்றல் பேறுகள் எந்த அளவிற்கு அடையப் பெற்றுள்ளன என்பதனை ஆசிரியர் அறிந்து கொள்ளலாம். நம்பகத்தன்மை, தகுதி, நடைமுறைச்சாத்தியம், புறவயத்தன்மை, பிரித்துணரும் தன்மை, உயர்நிலைகள் என்பவற்றின் மூலம் அறியலாம்.

தரப்படுத்தப்பட்ட சோதனைகள், புறவயச் சோதனைகள், நுண்ணறிவுச் சோதனைகள், நுண்ணறிவு பரம்பல் வளையி, உளச்சார்பச் சோதனைகள், ஆளுமைச் சோதனைகள், மனப்பாங்குகளும் அவற்றை அளக்கும் வழிமுறைகள் என்பவற்றின் மூலம் மாணவர்களின் அடைவுமட்டங்களை அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். அதேபோல் எண்ணுருவில் காணப்படும் தரவுகளை சேகரித்தல் அவற்றினை பகுப்பாய்வு செய்தல். அவற்றுக்கு விளக்கமளித்தல் என்பன புள்ளிவிபரவியல் மூலம் நிகழ்த்தப்படும் மாணவர் சார்பாக பெறப்படும் புள்ளி தொகுதியில் இருந்து விஞ்ஞான ரீதியான முடிவை பெற துணைபுரியும் நுட்பமாக கல்வி புள்ளி விபரவியல் காணப்படுகின்றது. புள்ளிவிபரவியல் ஆனது வினைத்திறனாக தகவல்களை சேகரித்து ஆய்வுக்கு உட்படுத்த உதவியாக அமையும். இதில் காணப்படும் நுட்பங்களாக தரவுகள், ஈட்டு, மீடிறன், வீச்சு, இடை, ஆகாரம், இடையம், மாறல்திறன், நியம விலகல், காலணைகள், தசமணைகள், வரைபுகள், வளையிகள், இணைப்பு, சிதறல் அளவைகள், செவ்வெண் பரம்பல் என்பன காணப்படுகின்றன.

எனவே கல்வி அளவீடும் மதிப்பீடும் என்பதும், கல்வி புள்ளிவிபரவியல் என்பதும் இன்றைய மாணவர் கல்வியில் சிறப்பாக இலக்குகளை அடைந்துள்ளனரா? என்பதனை அறிவதற்கு மிக முக்கியமாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் கற்பித்தலில் வினைத்திறன் அடைய...

J.T.பிரவீன்
2015/VNCoE/PE/3901

கற்றல் என்பது ஓர் உயிரி இடத்தே அனுபவங்கள் வாயிலாக ஏற்படும் நிரந்தரமான நடத்தை மாற்றம் என்றவாறாக வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது. கற்றல் என்னும் செயற்பாடு ஆசிரியர் மாணவர்களிடையேயோ பல்வேறு அனுபவங்களின் ஊடாகவோ ஏற்படும்விடயமாய் அமைகின்றது. இது வகுப்பறைக் கற்றல் ஆகும் போது ஆசிரியர் என்னும் அற்புதமான ஆத்மாவின் செயற்பாடுகள் இடம் பெற்றிருத்தல் அவசியமானது. மாணவர்களிடையே அறிவு, திறன், மனப்பாங்குகள் என்பவற்றுடன் சிறப்பான பண்புகளை உடைய மாணவர்களை அல்லது சமூகத்தை படைப்பவர்கள் இவ்வாறான ஆசிரியர்களேயாவர். இவர்களது கற்பித்தல் செயற்பாடுகள் மிகவும் வினைத்திறன் உடையதாய் அமைய வேண்டுமாயின் பல்வேறு அம்சங்களை அவர் கவனத்தில் கொள்ள வேண்டும். நல்ல ஆசான் ஒருவராலேயே சிறப்பான கற்பித்தல் நுட்பங்களைப்பயன்படுத்தி அவற்றை முகாமை செய்து கற்பித்தல் கற்றலை முன்னெடுத்துசெல்ல முடியும் ஆசிரியரானவர் தன்னுடைய பாடம் தொடர்பான பூரணத்துவம் உடையவராகவும் தன்னுடைய பாடத்தில் மிகவும் விருப்பு உடையவராகவும் கற்பித்தலை மேற்கொள்ளும் போது அது வினைத்திறனுடையதாய் அமையும் அதேவேளை மாணவர் படிப்பில் ஆசிரியர் மிகுந்த கருணையுடையவராய் கற்பிப்பதுடன் மாணவர்களது மனோநிலையை புரிந்து கொண்டு கற்பித்தலை மேற்கொள்பவராய் இருத்தல் வேண்டும் அதாவது காலத்திற்கு ஏற்ப ஆசிரியரானவர் தன்னை இற்றைப்படுத்திக் கொள்வதுடன் அவ்விடயங்களை எவ்வாறு மாணவர்களிடம் நுணுக்கமாய் மாணவர்களிடம் கொடுக்கலாம் என்பது தொடர்பாக ஆலோசித்து செயற்படுபவராய் இருத்தல் வினைத்திறனுடைய கற்பித்தலுக்கான வழிவகையாக அமையும். மாணவர்களுடைய முதிர்ச்சிநிலை, இலக்கு போன்ற விடயங்களினூடாக மாணவர்களை வழிப்படுத்தும் செயற்பாடுகளை ஆசிரியர் மேற்கொள்ளுதல் வினைத்திறனுடைய கற்பித்தலுக்கு துணை செய்யும்.

ஆசிரியரானவர் மாணவர்களை அன்புடனும் கவனத்துடனும் கையாண்டு அவர்களது ஆற்றல்களை இனங்கண்டு அவர்களின் வசதிகளை கருத்திற் கொண்டு மாணவர்களை வகுப்பறையில் மகிழ்ச்சியுடையவராக கற்கும் படியான சூழலை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மாணவர்களது சுத்தம் சுகாதாரம், ஒழுக்கம், போன்றவற்றைக் கவனத்தில் கொண்டு மாணவர்களிடம் கூட்டுமனப்பாங்கு நட்புறவை வளர்த்தல் மாணவரது நேரான பண்புகளை தட்டிக்கொடுத்து மாணவர்களுக்கு போதுமான ஊக்கங்களை வழங்குவதுடன் மாணவர்களுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது ஆசிரியரது வினைத்திறனான கற்பித்தலுக்கு பக்கபலமாய் அமையும். மேலும் ஆசிரியர் தன்னுடைய மாணவர்கள் மட்டில் பல்வேறு வகிபாகங்களை வெளிக்காட்டிக் கற்பிப்பவராயும் செயற்படுபவராயும் இருக்க வேண்டும். பாடம் கற்பிப்பதில் நல்ல ஆசானாகவும் சிறந்த தலைமைத்துவம் உள்ள தலைவனாகவும் சிறப்பாய் நீதிவழங்கும் நீதிபதியாகவும் அமைதியை நிலைநாட்டும் நல்லசமயத் தலைவராகவும் ஆதரவு வழங்கும் பெற்றோராகவும் அறிவுரைகூறும் நல்ல நண்பனாகவும் வழிகாட்டியாகவும் பல்வேறு வகிபங்குகளை வெளிக்காட்டிச் செயற்படும் போது மாணவர்களது கற்றல் கற்பித்தல் செயற்பாடானது வினைத்திறன் வாய்ந்ததாய் அமையப்பெறும்.

எவ்வளவு அறிவுடையவரானாலும் அவர் தான் கற்பிக்கும் விடயம் தொடர்பாக சிறப்பான தயார்ப்படுத்தல் ஏலாது போனால் அவரால் வினைத்திறனுடைய கற்பித்தல் இடம்பெறாது. எனவே ஒவ்வொரு ஆசிரியரும் தமது பணியை உணர்ந்து கற்றல் கற்பித்தல் மேற்கொள்வது அவசியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளின் பண்புசார் விருத்தி

**A.K.பயாஸ் முஹம்மட்**
**2015/VNCoE/BAC/T/M/3975**

மனித மூலதனத்தை மேம்படுத்துவதற்கு கல்வியின் பண்பு சார் விருத்தி அடிப்படையாகின்றது பாடசாலை கல்வியின் ஊடாக மனித மூலதன மேம்பாட்டுக்குரிய தேர்ச்சிகளை வளர்த்தல். பாடசாலை கல்விமுடிவில் உயர் கல்வியை அல்லது தொடர் தொழில்களில் இணைதல் என்பவற்றுக்கான செயற்பாடுகளை வினைத்திறனுடன் முன்னெடுத்தல் பண்பு சார் விருத்தி நடவடிக்கைகள் ஆகின்றன. எமது கல்வி வளங்கள் தொகுதியின் மனித உள்ளீட்டினரான ஆசிரியர், அதிபர், கல்வி நிர்வாகிகள், மற்றும் கல்வியியலாளர்களின் தரமேம்பாட்டுக்குரிய பாரம்பரியமான நடவடிக்கைகளை நவீனப்படுத்த வேண்டியுள்ளது. பாரம்பரியமான கடமைப்பட்டியல் (Duty list) பணி விபரங்கள் (Job Description) முதலியவற்றுடன் மட்டும் திருப்திப்படாது இருத்தல், கடமை கூறுகளை வினைத்திறன்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்தல். முதலியவற்றில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. கல்வியின் தரவிருத்தி பயன் நுகர்வோராகிய மாணவர்களின் திறன்களை மேம்படுத்த, மனித உள்ளீட்டினரும், பௌதீக உள்ளீடுகளும் முன்னரிலும் கூடிய வளப்படுத்தலுக்கு பொருத்தமான உள்ளீடுகளை தேர்ந்தெடுத்தல், ஆளணியினருக்கு பயிற்சி அளித்தல், செயலமர்வுகளை மேற்கொள்ளல் முதலியவை முன்னெடுக்கப்பட வேண்டும். மானிட உள்ளீடுகள் மற்றும் பௌதீக உள்ளீடுகள் கடந்த காலங்களில் கணிசமான அளவு அதிகரிக்கப்பட்டு வந்துள்ளன. போட்டி நிலவரங்களால் மனித பண்புகள் உதிர்ந்து விடுதலும், மாணவர்களிடத்து ஒழுக்கவீழ்ச்சிகள் ஏற்படுத்தலும் பண்பு சார் விருத்தியின் பின் அடைவுகளையே எடுத்துக்காட்டுகின்றன.

கல்வியின் தரவிருத்தி அத்தியாவசிய மட்டத்திலிருந்து மேதகு மட்டம் (Excellence) வரை நீண்ட வீச்சுக் கொண்டது மட்டங்களையும் உயர்வகுப்புச் சிந்தனைகளையும் மட்டும் கட்டளைகளாகக் கொண்டு நியமன ஒழுக்கங்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டியுள்ளன.

ஆளணியினரது ஆற்றுகை தேர்ச்சிகளையும் (Performance Competencies) முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. பொருத்தமான கலைத்திட்ட செயற்பாடுகளும், பயனுறுதிமிக்க மதிப்பீட்டு திட்டங்களும் தரமேம்பாட்டுக்கு துணைபுரியும் 2001 ஆம் ஆண்டிலிருந்து ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் செயற்படுத்தப்பட்டு வரும் இரண்டாம் நிலைக்கல்வியை நவீனப்படுத்தும் திட்டம், 2004 ஆம் ஆண்டிலிருந்து கல்வி அமைச்சில் உருவாக்கம் பெற்ற முகாமைத்துவ மற்றும் தர உறுதிப்பாட்டுக்கான அலகு, அதிபர், ஆசிரியர், திறன்தகவு, மதிப்பீட்டு திட்டங்கள் முதலியவை பாடசாலைகளின் பண்புசார் விருத்தியை முன்னெடுக்க அறிமுகம் செய்யப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித பாடம் கற்பித்தலின் அவசியம்

S.வதன்றாஜ்
2015/VNCoE/MAT/T/M/3816

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்" என்ற ஆன்றோர் மொழிக்கிணங்க எண்ணுதலை அடிப்படையாகக் கொண்டு கணித பாடமும் எழுத்தை அடிப்படையாகக் கொண்ட மொழிப்பாடமும் பாடசாலைக்கல்விப் பாடத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன. அவற்றுள் கணித பாடம் மிக முக்கியத்துவம் பெறுகின்றது என்பதை நடைமுறை வாழ்க்கையிலிருந்து நாம் நன்கு உணர்ந்து கொள்ளலாம்.

உயர்கல்விக்கு செல்லும் மாணவர்கள் கணித பாடத்தில் திறமையாக இருக்க வேண்டியுள்ளனர். விசேடமாக விஞ்ஞான துறையில் கல்வியை பெறவிரும்புவோர் கணிதத்தை நன்கு விளங்கி செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும். இரசாயனம், உயிரியல், பௌதீகவியல் போன்ற பாடங்களை ஆழமாகக் கற்போர் கணிதத்தில் திறமை பெற்று இருப்பவராக காணப்படுவார்.

எனவே கணிதம் கற்பதால் புத்திக்கூர்மை, நிதானப்பண்பு ஆகியன விசேடமாக வளர்ச்சியடைகின்றன. எனவே தான் கணிதப்பாடம் சகல பாடங்களிலும் கட்டாய பாடங்களாக கற்பிக்கப்படுகின்றன. உண்மையில் கணிதபாடம் ஒரு தொடர்ச்சியான செயற்கிரமம் ஆதலால் தொடரில் ஏதாவது குழப்பம் ஏற்பட்டால் கணிதம் கசப்பானதாக மாறுகின்றது. பிழைகள் ஏற்படுவதனால் மனத்தளர்ச்சி ஏற்படுகின்றது. அதனால் கணித பாடத்தில் ஆர்வம் குன்றிவிடலாம் இவ்வாறு ஏற்படாது சரிவர பாடத்தை கற்று விளங்கிக் கொள்ள வசதிகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். இது ஆசிரியர்களின் கடமையாகும்.

கணித அறிவை ஒருவர் சரியாக பயன்படுத்தி வாழ்க்கைப்பிரச்சினைகளை விடுவிக்க முயற்சி செய்ய வேண்டும். உதாரணமாக வீடுகட்டும் போது கணிதத்தின் பல அம்சங்கள் தேவைப்படுகின்றன. வீட்டுப்புற அமைப்பு வரையும் போது கோணம், நீள்சதுரம், சதுரவட்டம், அரைவட்டம் போன்ற அறிவுகள் தேவைப்படுகின்றன. செலவுகளை மதிப்பீடு செய்யும் போது கூட்டல், கழித்தல், பிரித்தல், பெருக்கல் அறிவு அவசியப்படுகின்றது எனவே பாடசாலைகளில் மாணவர்கள் கணித பாடத்தை கற்கும் போது வாழ்க்கைப் பிரச்சினைகளை தீர்க்கும் சாதனமாக அது அமையும் படி கற்க வேண்டும். கணித விதிகளை கற்பிக்கும் போது இலகுவாக கணக்குகளையே பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும். அப்போது தான் அவர்கள் செய்முறை மூலமாக விதிகளை மனதிற் பதித்து கொள்வார்கள். பிள்ளைகளுக்கு கணக்குகளை தயாரிக்கும் போது அவர்களின் சூழலையும் பிரச்சினைகளையும் அடிப்படையாகக் கொண்டே கணக்குகளை அமைக்க வேண்டும்.

குறிப்பாக பாலர் வகுப்பில் கணிதம் கற்பிக்கும் போது அனுபவங்கள் சுயமுயற்சிகள் மூலமாகவே அப்பாடம் கற்பிக்கப்பட வேண்டும். கணிதத்தில் முதலில் எழுத்துவேலையை செய்விக்கக் கூடாது ஆரம்பத்தில் வாய் மொழி மூலமாகவே கணக்குகளை மாணவரிடையே வழங்க வேண்டும். இதன் விளைவாக எதனையும் மனதில் பதித்து கொள்ள வேண்டும். என்ற சிந்தனை ஏற்படுகின்றது.

பொதுவாக நோக்குமிடத்து மனக்கணிதத்துக்குதான் சிறுவயதில் முக்கிய இடம் அளிக்கப்பட வேண்டும் மனதால் செய்யமுடியாத வேலையினையே எழுத்து மூலம் செய்ய வேண்டும். எவ்வாறாயினும் மாணவர்கள் கணக்குப் பார்க்க பேனாவையும் கடதாசியையும் நம்பியிருக்கக் கூடாது. அத்துடன் கணிதத்தில் சுருக்க முறைகளை மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் அதன் விளைவாக விரைவும், நுட்பமும் கிடைக்கும்.

எனவே பாடசாலைக்கல்வியில் சிறந்த முறையில் கற்பிக்க வேண்டும் என்பது உணரப்பட்டு அதற்காக வசதிகள் வழங்கப்பட்டு விரிவாக்கப்படுதல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்

செ.சோபனா
2015/VNCoE/PT/T/F/3768

தரணியிலே எட்டாத கனிகளையெல்லாம்
எட்டிப்பறிக்க வைத்த உயர்ந்த தொழில்
ஒழுக்கத்தின் விளைநிலமாய் கல்வியின் ஆணிவேராய்
கல்விக் களஞ்சியமாய்
கற்பவர் பலரை தாங்கியதாய்
பாடசாலைகள் பலதனில் இது ஒரு புதுப்பொலிவு
ஏணியென்று பெயர்பெற்று
ஏட்டினிலே உள்ளத்தை
ஊட்டுபவரல்ல நீங்கள்
தேனி போலிருந்து தானும் கற்று
தரமானவர்களை
உருவாக்குவதே உங்கள் இலக்கு

அறிவொளி வீசும் ஞானவிளக்காம்
அவனியை ஆளும் ஒளிச்சுடராம்
மாணாக்கர்களின் விடியலே
கால ஓட்டத்தின் கலங்கரை விளக்கே
நாளைய சமூகத்தின் அத்திவாரமே
நாட்டிடுவாய் உனக்கென்று ஒரு கல்வெட்டை
எழுதிடுவாய் உனக்கென்று ஒரு வரலாற்றை

வாழ்வாங்கு வாழ்வதற்கு எனக்கு கற்றுத்தந்த
வங்கக்கடலாம் வற்றாத நதியாம்
வண்ணத்தமிழ் அன்னை பெற்ற மழலையே
ஐயம் தெளிவுற அறிவினைப்புகட்டி
செய்யும் சேவைதனை சிரத்தையாய் ஏற்று
ஆற்றிடு உன்தொழிலை கடமை உணர்வோடு
காலமெல்லாம் உன்புகழ் பரவட்டும்
மாண்பு மிகு ஆசான்களே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகம்

பி.மோகனதாஸ்
2015/VNCoE/M/PT/3784

எட்டாம் அறிவையும்
கொட்டித்தரும் நல்ல
பெட்டகம் தனை சிந்து பாடி
சூட்டின. புகழ் சொல்லும் கவி

ஆயிரமாயிரம் நீ தோன்றினாலும்
பாயிரம் உன்னில் ஏந்துவதாலும்
தாயின் புகழுக்கு நேர் புகழ் உன்
தீயின் நிகரான சொல்லுத்தானே!

காலத்தின் உறைவிடமே!
ஞாலத்தின் இருப்பிடமே! பல
கோலத்தை காட்டி நிற்கும்
பாலமே! சொற் பதனிடமே!

சேர்த்து வைத்த முத்தையெல்லாம்
கோர்த்து பொருளாக்கும் கருவறையே!
பார்த்து பார்த்து வியந்திடவே கவி
வார்த்து வைத்த பொற்குடமே!

பற்பல விடயங்களை கூறிடும்
கற்கால யுகத்தையும் பாடிடும்
முற்கால செய்யுளையும் முழங்கிடும்
தற்பெருமை இல்லாத்தங்கமே!

நின்னை புகழ்ந்துசொல்ல வார்த்தையில்லை
கண்ணைவிட மேலான பொருள் நீயே!
உன்னை போன்றவர் இல்லை என்றால்

எண்ணம் சொல்ல யாரும் இல்லை
உன்னையே சரணடைந்தேன்
என் ஓவியமே!
புத்தகமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிப்பயணம்

கம்சவதனி சுப்பிரமணியம்
2015/VNCoE/PT/F/3790

கல்வி பாய்ந்தோடும் கல்லூரியாம்
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில்
கவி எழுத வந்துள்ளேன்
வடிக்கின்றேன் என் இனிய தமிழ்மொழியில்
வன்னிவள நாடாம் முல்லை மாநகரிலே
வற்றாத நீர்வளமாய் நிலவளமும்
முக்கனிகளும் செறிந்த
விசுவமடு என்வாழ்விடம்
என்னை அன்புசெய்த என்பெற்றோர்
என்னை வளர்த்த என் பள்ளித்தாய்
அறிவை அள்ளி வழங்கிய ஆசான்கள்
இங்கு அவர்களின் நினைவுகளுடன்
கல்லூரித்தாய் எமக்கு வழிகாட்டி
அவள்பாதம் பதித்தேன் கல்லூரியிலே-என்
மனதில் திருப்தி கிடைத்தது
என்னையும் உயர்த்திடுவாள் என்று......
புதிய சூழல் புதிய நண்பர்கள் -எம்மை
நேசக்கரம் நீட்டி மெலேற்ற தலைவர்கள்
எம்மை கண்கலங்க விடாமல்
கண்டிக்கும் கல்வியியலாளர்கள்.......
எம்மை உள்ளே அழைத்துச்செல்ல
கல்லூரி இருமருங்கிலும்
காத்திருந்த எம்அருமை
சகோதர சகோதரிகள்.......
வகுப்பறை செயற்பாட்டை
வதனம் மிளிரச் செய்யும் என் நண்பர்கள்
சூழல் பார்ப்பதற்கு பயம்காட்டினாலும்
நல் உள்ளங்கள் இருப்பதனால்
நம்பிக்கையோடு கல்லூரியிலே........
என்றுமே அதிகாலை விழித்திடாத என் கண்கள்
நீண்ட நாட்களின் பின் சூரியோதயம் கண்டது
எம் கல்லூரி முதல் நாள் விடியல்தான்
எத்தனையோ கனவுகளைச் சுமந்தபடி.......
கல்லூரியில் கால் பதித்த என் மனதில்
அத்தனை நற்பழக்கங்களும் - என்
முன்னே வந்து சேரும் - நாம்
வாழும் காலந் தோறும்......
உயர்ந்த ஒரு சமூகம்
உயிர்பெற்று எழுவதற்கு
எமை உருக்கி உழைப்போம்
எதிர்காலம் மிளிர...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாங்கும் தெய்வம்

க.தனோஜன்
2015/VNCoE/T/M/CH/3879

மலையணை இருந்தும்
உன் கரமே மலையணையானது
எனக்கு
போர்வைகள் இருந்தும்
என் உடல் மூடும்
கிழிஞ்சல் புடவைகளே
போர்வையானது எனக்கு
சொகுசுக்காக ஏங்கியதில்லை
உன் மடியில் இதமான
உறக்கம் கொண்டதனாலேயே
சொந்தம் தேடவில்லை
சொர்க்கமே நீயானதால்
செருப்பின்றி சுமந்து சென்றாய்
செங்குருதிகள் மண்ணை முத்தமிட்டு
ஒப்புக்கொள்ள கருவறையில் மட்டுமா
தாங்கினாய்?
கைகளாலும் தாங்குகின்றாய்
இருந்தும் ஏந்தினாய்
இறைவனிடம் எனக்காக
அவனிடம் அதிகம் கேட்டுவிட்டாய்
போலும்
அயலவரின் அலர்தூற்றுதலால்
உன் இதயமதில்
எதிர்த்து நிற்க முடியாமலா?
என்னை விட்டு சென்று விட்டாய்?
நீ எங்க அம்மா?
விழிகள் திறந்து பார்த்தவேளை
என் அருகில் இருந்த நீ
இதய அறைகள் தெரிந்த பின்
கனவாய் மறைந்ததேனோ?
உனக்காக இதயமதில்
நான்கு அறைகள் உள்ளபோது
கல்லறை நோக்கி
உன் கால்கள் போனதேனோ?
படுத்திருக்கின்றேன் கல்லறையில்
பார் அம்மா.....
நான் உனக்குப் பாரமா?
இல்லையென்று சொல்லிக் கொண்டே
இதமான உறக்கம்
கொடுக்கின்றாய்
இனியவளே இதயம்
கடந்து சென்ற
உனக்கு இறப்பு
இருக்கிறதா?
என்றும் எனைத் தாங்கும் தெய்வம்
நீ அம்மா..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியல் அணுகுமுறைகள்

**சி.கலைவாணி,**
**2015/VNCoE/BAC/T/F/3984**

சிறு பராயத்தில் இயற்கையில் வளரும் பிள்ளைக்கு அபிவிருத்தி செய்தலே கல்வியாகும். வாழ்க்கைக்கு பொருந்தாத பயனற்ற கருத்துக்களையும் கேட்பாடுகளையும் மனனஞ் செய்தல் அன்றி அன்றாட வாழ்க்கைக்கு தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை திரட்டிக் கொள்ளுதல் வேண்டும். அந்த வகையில் நீண்டகாலம் நிலைத்து நிற்கக் கூடிய நடத்தை மாற்றம் அத்தோடு கற்றல் இடமாற்றம் இடம்பெற அனுபவம், முதிர்ச்சி என்பன அவசியம். இத்தகைய கற்றல், கற்பித்தல் என்பன ஆசிரியர் மையம், மாணவர், சமூக மையம் மற்றும் அபிவிருத்தி மையம் என்பவற்றை மையமாக கொண்டு அமைந்திருக்கும்.

கல்வியின் நோக்கங்கள், குறிக்கோள்களை தீர்மானித்தல் கலைத்திட்டம், கற்றல் சூழல் ஒழுங்கமைப்பைத் தெரிவு செய்தல் மற்றும் அமுல்படுத்தல் போன்ற ஒட்டுமொத்த செயன்முறையின் நெறிப்படுத்தல் நாட்டுக்கு நாடு, ஒரே நாட்டுக்குள்ளும் காலத்துக்கு காலம் வேறுபடுவதற்கும் இக்கல்வியியல் அணுகுமுறைகள் ஏதுவாய் அமையும்.

கல்வியியல் அணுகுமுறையில் ஆசிரியர் மையக் கல்வி முறையானது கற்றல் கற்பித்தல் செயன்முறையைத் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நடைமுறைப்படுத்தல், தீர்மானம் எடுத்தல் போன்ற சகல செயற்பாடுகளும் ஆசிரியரால் நெறிப்படுத்தப்படும். இக் கல்வி முறை சம்பிரதாயக் கல்வி முறையாகும். அறிவை வழங்குவதற்காக ஆசிரியர் கொண்டுள்ள பாட அறிவானது ஆசிரியரின் குரலுக்கு பிரதான இடமளிக்கும் கற்பித்தல் முறையாகும். மாணவர்களின் பலங்கள், பலவீனங்கள் தொடர்பாக கருத்திற் கொள்ளப்படமாட்டாது. தூண்டலுக்கான சந்தர்ப்பங்கள் குறைவாக இருக்கும். இதன் காரணமாக இவ்வாசிரியர் மையக் கற்பித்தல் ஆனது கடுமையான விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இருபதாம் நூற்றாண்டில் பழைய ஆசிரியர் மையக் கல்விக்குப் பதிலாக மாணவர் மையக் கல்வி முறை தோற்றம் பெற்றது மாணவர்கள் சுயமாக கற்பதற்கும் கற்றலுக்காக தூண்டப்படுவதற்கும் ஆகும். அறிந்தவற்றைத் தக்கவாறு மாற்றியமைத்தல், இதுவரை கண்டு பிடிக்காதவற்றைக் கண்டாய்தல், எதிர்காலத்திற்கு தேவையானதை கட்டியெழுப்புதல் போன்றன எமது கல்வியின் எதிர்கால நிலை ஆகும்.

மாணவர் மையக் கல்வியின் போது ஓர் ஆசிரியரின் கடத்தல் வகிபாகம், பரிமாற்று வகிபாகம், நிலைமாறும் வகிபாகம் போன்ற மூன்று வகிபாகங்களினை ஆசிரியர் ஏற்றுக் கொள்கின்றனர். இங்கு ஆசிரியர் ஒரு ஆசிரியர், ஒரு வசதிப்படுத்துநராக மட்டும் செயற்படுவார். மாணவர் அறிகை சார் ஆற்றல்களை விருத்தி செய்தலே இவ்வகையான கற்பித்தலின் இலக்காகும்.

சமூகத்தேவைகைகள், சமூக எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்டு, கல்வியை ஒழுங்கமைத்து நடைமுறைப்படுத்துவது சமூக மையக் கல்வியாகும். வாழ்க்கை நீடித்த கல்வியை ஓர் அத்தியாவசிய கல்வி செயன்முறையாக ஏற்றுக் கொள்வதனால் அதனை பயனுள்ள ஓர் எண்ணக்கருவாக்கிக் கொள்ள சமூகம் ஒன்றிலே தான் முடியும். சமூக மையக் கல்வியில் கல்வி வெறும் செயல் காலவரையறைக்குட்பட்டதோ, பிரமாணத்துக்கு உட்பட்டதோ அன்று. எனினும் இது பகுதி நேரம், ஓய்வு நேரம், அரைநேரம் எனச் செயற்படுவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை நீடித்த கற்றலுக்காக மனதை ஈடுபடுத்தினால் கிடைக்கும் சகல சந்தர்ப்பங்களையும் கல்விக்காக செலவழிக்கும் ஒரு சமுதாயம் உருவாகும். தனக்கு தேவையான நேரத்தில் தேவையான விதமாக கற்றுக்கொள்ள வசதிகள் கிடைக்கின்றன.

"சப்பாத்து தைப்பவன் எந்தவகையிலும் விவசாயம் கைத்தொழில், கட்டடநிர்மாணம், வேறெந்த தொழிலும் ஈடுபட முடியாது" மனிதனது தேவைகளும் கருத்திற் கொள்ளப்பட்டு கல்வியை ஒருமுதலீடாகக் கருதிச் செயற்படல், மனிதனின் முழுமையான வளர்ச்சியை ஏற்படுத்தல் என்பன அபிவிருத்தி மையக் கல்வியின் மூலம் விளக்கப்படுகின்றது. ஒரு தனிநபரின் நோக்கத்துடன் சமூக நோக்கமும் சம அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இவ் அபிவிருத்தி கல்வி முறையில் மனிதனின் தொழிற்றிறமையினை அதிகரித்து, உற்பத்தி திறன் விருத்தி மூலம் மனிதனின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படல் வேண்டும் எனக் கருதப்படுகின்றது.

எனவே நுண்மதி, மனவெழுச்சிகள் மற்றும் உடல், உள ரீதியில் முன்னேறியுள்ள மனிதன் தான் வாழும் சமூகத்தில் தனக்கு கிடைக்க வேண்டிய இடத்தை பெற்றுக் கொள்வதற்காக உரிய அனுபவங்களுடன் புதிய கல்வியியல் அணுகுமுறைகளையும் கையாளப் பழகிக் கொள்ள வேண்டும். புதிய அணுகுமுறைகளை இனம்கண்டு அதன்பால் மனதை ஈடுபடுத்தினால் கிடைக்கும் சகல சந்தர்ப்பங்களையும் கல்விக்காக செலவழிக்கும் ஒரு சமுதாயம் ஒன்றை கட்டியெழுப்பலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரும் கட்டுரை வகைச் சோதனையும்

யே. அனிஸ்ரிக்கா
2015/VNCoE/AG/T/F/3934

கற்றல், கற்பித்தல் செயற்பாடு ஒன்றின் போது ஆசிரியர் ஒருவர் தான் கற்பித்த கற்றலின் இலக்குகளை எவ்வளவு மாணவர்கள் அடைந்துள்ளனர் என்பதனை அறிவதற்காக மாணவர்களின் அடைவை அளவீடு கருவிகளை சோதனை பிரதான இடத்தைப் பிடிக்கின்றது. அந்த வகையில் கட்டுரை வகைக் சோதனை பற்றியும் அதன் நன்மை தீமை பற்றியும் இச்சோதனைகளை அமைப்பது பற்றியும் புள்ளி வழங்குதல் பற்றியும் சற்று உற்று நோக்குவோம்.

கட்டுரை வகைச் சோதனை பழைய முறைச்சோதனை என்றும் மரபு வழிச்சோதனை என்றும் அழைக்கப்படுகின்றது. கட்டுரை வகைச் சோதனை வினாக்களை வழங்கி சோதனைக்கு உட்படுத்தப்பட்டவரிடமிருந்து நீண்ட விடையை எதிர்பார்க்கின்றது என றொபேர்ட் எல் எபெல் மற்றும் டேவிட் ஏ ப்றிஸ்பீ ஆகியோர் குறிப்பிடுகின்றனர். அத்துடன் கட்டுரை வகை தனி வகை, அது நீண்ட எழுதப்பட்ட விடைகளை வேண்டுகிறது என வில்லியம் வியர்ஸ்மா மற்றும் எஸ் ஜி ஜர்ஸ் ஆகியோர் குறிப்பிடுகின்றனர். மேலும் கட்டுரை வகைச் சோதனை பல சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளன. அவையாவன: மாணவன் தனக்கு விருப்பமான முறையில் துலங்க சுதந்திரமுண்டு, வினாத் தெரிவுக்கு வாய்ப்பு வழங்கப்படும், வினாக்களை தயாரிப்பது இலகுபடுத்தி அதிக புள்ளியை பெற வாய்ப்புண்டு, விடைகளை மதிப்பிடுபவருக்கு ஆழமான அறிவு இருத்தல் வேண்டும்.

நன்மைகளாக, எல்லாப்பாடங்களுக்கும் பயன்படுத்தலாம், பாடவிடயத்தை மாணவர்கள் விளங்கிக் கொண்டனரா என்பதை அறியலாம், மாணவரின் இலக்கண அறிவு, மொழிநடை, கற்பனைத் திறன் என்பவற்றை அறியலாம். இவற்றின் தீமைகளை நோக்குகின்ற போது பாடப்பரப்பு முழுவதையும் இவ்வகைச் சோதனை பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை, புள்ளி வழங்குபவரின் அகவயத்தன்மை செல்வாக்கு செலுத்தும், அதிக நேரம் விடை அளிக்கத் தேவை, எழுத்துப்பிழை, கையெழுத்தின் தன்மை ஆகியவற்றால் மதிப்பெண் குறையும் வாய்ப்பு உள்ளது.

கட்டுரை வகைச் சோதனையின் குறைபாடுகள் அதன் நம்பகத் தன்மையையும் தகுதியையும் பாதிப்பதால் இச்சோதனை உருப்படியை அமைக்கும் போது பல்வேறு விடயங்கள் குறித்துக் கவனம் செலுத்த வேண்டும். அவையாவன பிரதான குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு வினாக்கள் தயாரிக்கப்பட வேண்டும், சோதனையில் வினாத்தெரிவு வழங்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும் ஒவ்வொரு வினாவும் ஒரு பிரச்சினையை மையமாக வைத்து தயாரிக்க வேண்டும். நேரம் நியாயபூர்வமாக அமைய வேண்டும். அறிவுறுத்தல்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

கட்டுரை வகை வினாக்களுக்கு புள்ளி வழங்குவதில் புள்ளி வழங்குனரின் அகவயத்தன்மை செல்வாக்கு செலுத்துவதால் புள்ளி வழங்கும் போது பல்வேறு விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட விரிவான ஒரு புள்ளி வழங்கற் திட்டம் இருக்க வேண்டும். குறிப்பிட்ட ஒரு வினாவுக்கான விடையை திருத்தி புள்ளி வழங்கிய பின் அடுத்த வினாவைத் திருத்துதல், ஒன்றுக்கு மேற்பட்ட தேர்வாளர்களை தெரிவு செய்து புள்ளி வழங்க ஒழுங்கு செய்தல் போன்றன இங்கு குறிப்பிடத்தக்கது.

மாணவர்களிடம் பாட அடைவை அளவிடுவதற்கு சோதனைகளை ஆசிரியர்கள் பயன்படுத்துகின்றனர். அந்த வகையில் கட்டுரை வகைச் சோதனைகள் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. இது மாணவர்கள் சுயாதீனமாக இயங்க வழிவகை செய்கின்றது. கட்டுரைவகைச் சோதனையில் பல நிறைகள் காணப்படுகின்ற போதும் பல குறைபாடுகளும் காணப்படுகின்றன. ஆகவே இவற்றை நிவர்த்தி செய்ய இச்சோதனையை தயாரிக்கின்ற போதும் புள்ளி வழங்குகின்ற போது பல்வேறு நுட்பங்களைக் கையாள வேண்டும். இவற்றை பின்பற்றுகின்ற போது கட்டுரை வகைச் சோதனையின் நம்பகத்தை உயர்த்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்ட கணிப்பீட்டு வேலைத்திட்டம்

T.பரஹுல் ஹஸ்ஸானி,
2015/VNCoE/Sci/T/F/3805

இலங்கைப் பாடசாலை முறைமையில் நடைமுறைப்படுத்தப்படும் கற்றல் கற்பித்தல் செயன்முறையை மேம்படுத்துவதில் பங்களிப்புச் செய்யத்தக்க வகையில் பாடசாலை மட்ட கணிப்பீட்டு வேலைத்திட்டம் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. மாணவரது கற்றலின் வலிவு - நலிவுகளை இனங்கண்டு கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை மேம்படுத்துவதற்குக் கைகொடுப்பதே இவ் வேலைத்திட்டத்தின் எதிர்பார்ப்பும் நோக்கமும் ஆகும்.

பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டம் அறிமுகம் செய்யப்படுவதற்கு சில காரணங்கள் ஏதுவாக அமைந்தன.

01. பாடசாலையிலிருந்து வெளியேறி, சமூகத்தைச் சென்றடைவோர், வெளிக்காட்டும் திறன்கள் மனப்பாங்குகள், ஆற்றல்கள் தொடர்பாக திருப்தியடைந்து விட முடியாத நிலை காணப்படுகின்றது.
02. பாடசாலை முறைமையில் இறுதியில் காட்டப்படும் பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக திருப்தியடைந்து விட முடியாத நிலை காணப்படும்.
03. சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களால் ஆற்றப்படும் பணிகள் தொடர்பாக பொது மக்கள் நிதமும் தேடிய முனைப்புக் காட்டுகின்றமை.
04. பாடசாலையில் இடை விலகுவோரின் தொகை அதிகரித்துச் செல்லல்.
05. மாணவரது அடைவை மதிப்பிடுவதற்காகப் பயன்படுத்தும் பெரும்பாலானவை அறிகை ஆற்றலுடன் மாத்திரம் வரையறைப்படுத்தப்பட்டிருத்தல்.
06. அரசும் பெற்றோரும் கல்விக்காகச் செய்யும் செலவுக்குப் போதுமானவாறு இறுதி விளைவுகள் கிடைக்காமை

கற்றல் கற்பித்தல் மதிப்பீடு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒட்டு மொத்த செயன்முறையின் வினைத்திறனை மேம்படுத்தத்தக்க வகையில் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துவது அவசியமா கியுள்ளது.

பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டத்தின் குறிக்கோள்கள்

1. மாணவரது கற்றல் செயன்முறையை மேம்படுத்தல்.
2. ஆசிரியரது கற்பித்தற் செயன்முறையை மேம்படுத்தல்
3. கற்றல் கற்பித்தலை மேலும் வினைத்திறனுடையதாக்குவதற்கு வழிகோலத்தக்க வகையில் மாணவர் தொடர்பாக தேடியறியும் செயன்முறையை மேம்படுத்தல்.

மாணவரிடத்தே நிலைத்திருக்கத்தக்க நடத்தை மாற்றம் ஏற்படத்தக்க வகையில் வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயன்முறையொன்றினை உருவாக்க வேண்டியுள்ளது. தற்போது பெரும்பாலும் மாணவர்கள் மனனஞ் செய்து கற்பவர்களாக, வெறுமனே செவிமடுத்துக் கற்பவர்களாக, அறிவைப் பெறுபவர்களாக மாறியுள்ளனர். எனினும் பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டத்தினூடாக உயிரோட்டமான கற்றல் மூலம் வகுப்பறையில் கற்கும் மாணவர்கள்.

- உயிரோட்டமாகக் கற்பவராக
- பொருளுள்ள வகையில் கற்பவராக
- தேடியறிந்து கற்பவராக மாற்ற முயற்சி செய்தல் வேண்டும்.

ஆசிரியர் மையத்தன்மையை முதன்மைபடுத்திச் செயற்படும் ஆசிரியர், பாடசாலை மட்டக் கணிப்பீட்டு வேலைத்திட்டத்தின் மூலம் மாணவர்மையக் கற்றலின்பால் வழிப்படுத் தப்படுவார். அறிவைக் கடத்துபவர் எனும் நிலையிலிருந்து விலகி, இடைத் தொடர்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியெழுப்பப்படும் வகையில் கற்றல் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி ஒவ்வொரு மாணவனும் கற்றுக் கொள்ளத்தக்கவாறு மாணவரது தேவைகள், திறன்களை இனங்கண்டு மாணவரது தேவைகளை இனங்கண்டு அவர்களது கற்றல் வேகத்துக்குப் பொருத்தமானவாறு கற்றல் சந்தர்ப்பங்களை வழங்கி, வசதி செய்து கொடுப்பவராகப் செயற்படுதல் வேண்டும்.

## கல்லூரி தின வெள்ளி விழா வருடத்தை முன்னிட்டு பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டியும், போட்டி முடிவுகளும் 2017

**வலைப்பந்து**

வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம் (Winners)

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி (1st Runner up)

**உதைபந்து**

வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயம் (Winners)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் (1st Runner Up)

**பூப்பந்தாட்டம் (ஒற்றையர் பிரிவு) Boys**

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் (D.ஆகாஸ் - 1ம் இடம்)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் (R.தராதரன் - 2ம் இடம்)

**பூப்பந்தாட்டம் (ஒற்றையர் பிரிவு) Girls**

இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம் (J.அலெக்சியா - 1ம் இடம்)

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் (U.சன்சிகா, N.கிசானி - 2ம் இடம்)

**வன்பந்துத் துடுப்பாட்டப் போட்டி (Boys)**

வவுனியா மடுகந்த தேசிய பாடசாலை (winners)

வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயம் (1st Runner up)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள இயக்கம் சார் ஆட்சி கல்வி இலக்குகளின் பகுப்பியல்

கலைச்செல்வன் றெபேக்ஷாழினி
2015/VNCoE/T/F/AG/3971

உள இயக்கம் சார் ஆட்சி என்பது எதிர்பார்க்கும் பயிற்சியைச் சிறப்பாகச் செய்வதற்கு ஒருவர் உடற்தசைகளை வினைத்திறனுடன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக ஒரு முகப்படுத்தி உள அமைப்புடன் இணைக்கப்படும் வகையில் நெறிப்படுத்தும் ஆற்றல்" என M.U.சேதா 1984 இல் இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார். தசை இயக்கம், நரம்பு தசை இணைவால் உண்டாகும் இயக்கம், இவற்றால் தோன்றும் நடத்தை இந்த வகையில் தொகுக்கப்பட்டுள்ளது.

சிம்சன் என்பவர் ஏழு பிரதான பிரிவுகளைக் கொண்ட ஒரு பகுப்பியலையும் கில்பட் என்பவர் ஐந்து பிரதான பிரிவுகளைக் கொண்ட பகுப்பியலையும் மற்றும் ஹரோ என்பவர் ஆறு பிரதான பிரிவுகளைக் கொண்ட பகுப்பியலையும் உருவாக்கினார்.

சிம்சனின் பாகுபாடு:

1. புலக்காட்சி
2. ஆயத்தம்
3. வழிகாட்டல் சார்ந்த துலங்கல்கள்
4. பொறிமுறை
5. சிக்கலின் துலங்கல் வெளிப்பாடு
6. இசைவடைவு
7. ஆக்கம் புரிதல்

கில்பட்டின் பாகுபாடு:

1. போலச்செய்தல்:
   - 1.1 உணர்ச்சி வசப்பட்ட போலச் செய்தல்
   - 1.2 வெளிப்படையான மறுபடி செய்தல்
2. கையாளுதல்
   - 2.1. திசையில் செல்லல்
   - 2.2 தெளிவு செய்தல்
   - 2.3 நிர்ணயித்தல்
3. துல்லியம்
   - 3.1 மீண்டும் ஆக்குதல்
   - 3.2 கட்டுப்பாடு
4. தெளிவான பேச்சு
   - 4.1 படிமுறை
   - 4.2 இசைவு
5. இயற்கையாகச் செய்தல்
   - 5.2 சுயமாக இயங்குதல்
   - 5.2 முக்கியத்துவம் குறைந்த இயக்கம்

ஹரோ என்பவரின் பாகுபாடு:

01.தெறிவினை அசைவுகள்
02.மூலாதார அடிப்படை அசைவுகள்
03.புலக்காட்சி ஆற்றல்கள்
04.உடல்சார் ஆற்றல்கள்
05.திறன்மிகு ஆற்றல்கள்
06.பகுத்தறிவு சாரா தொடர்பாடல்

மேற்படி விடயங்கள் உள இயக்கம் சார் ஆட்சி இலக்குகளில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அனைத்து உயிரிகளுக்கும் அசையும் ஆற்றல் உண்டு. அனைத்து அசைவு ஆற்றல்களையும் உள இயக்கம் சார் ஆட்சி ஆற்றல்கள் என்ற வகைக்குள் அடக்க முடியாது. நரம்பு தசை இணைவு இயக்கத்தை மேம்படுத்த உதவும் செயல்களையே ஆசிரியர் வழங்குதல் வேண்டும் என்பதையே உள இயக்கம் சார் ஆட்சி கல்வி இலக்கியம் புலப்படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் ஆளுமையும் அளவீட்டின் முக்கியத்துவமும்

அ.சிவாஜினி
2015/VNCoE/F/T/BAC/3993

ஆளுமை என்பது ஒருவருடைய உடலமைப்பு நடத்தைக் கோலங்கள், கவர்ச்சி, மனப்பாங்குள், உளத்திறன்கள் என்பன இணைந்த வடிவமாக வெளிப்படுத்தப்படுவதாகும். இது உயிரியல் ரீதியாக ஒருவருடத்தில் இடத்தில் வேறுபாட்டிற்கேற்ப காலத்தைக் கருதிக் கொண்டு வளர்த்துக் கொள்ளும் குணங்கள், மனநிலைகளின் முழுமையான தொகுப்பு எனலாம்.

இலத்தீன் மொழிச் சொல்லான (Personare) என்பதிலிருந்து (Personality) எனும் ஆங்கிலச் சொல் உருவானது. ஆளுமை குறித்து பல உளவியலாளர்கள் கருத்துகளை முன்வைத்துள்ளனர்.

கில்பேர்ட், ஒருவனது தனித்தன்மை வாய்ந்த அமைப்பு ஆளுமை எனக் கூறுகின்றார்.

கட்டெல் என்பவர் "ஒரு குறிப்பிட்ட சூழலில் ஒருவர் எவ்வாறு நடந்து கொள்வார் என்பதை முன்கூட்டியே தெரியப்படுத்துவதாகும்" எனக் கூறுகின்றார்.

மூரே என்பவர் "பிறப்பிலிருந்து இறப்பு வரை உள்ளத்தின் இயக்கங்களும் விசைகளும் தொடரியலாக நடத்தைகளின் வடிவில் வெளிப்படுத்தும் கட்டமைப்பு" என்கின்றார்.

சிறில்பேட், "ஒரு சமுதாய சந்தர்ப்ப சூழ்நிலையில் ஒருவர் துலங்கும் போது வெளிப்படுத்தும் உடல்உள செயற்பாடுகளின் ஒழுங்கமைப்பாகும்" என்கின்றார்.

ஆல்பேட் என்பவர் "சூழலுக்குப் பொருத்தமான விதத்தில் உண்டாகும் தனிச்சிறப்புகளுடன் கூடிய சீராக்கம் அல்லது சீராக்கத்தைத் தீர்மானிக்கும் தனிப்பட்ட ஒருவரிடமிருக்கும் உளவியல் முறைகளின் செறிவான ஒழுங்கமைப்பாகும்" எனக் கூறியுள்ளார்.

பாடசாலையில் காணப்படும் எல்லா கலைத்திட்ட இணைப்பாடவிதான செயற்பாடுகளும் மாணவரது ஆளுமை விருத்தியை ஏற்படுத்துவதுடன் ஆசிரியர் அதற்கான முயற்சியை ஏற்படுத்துவது அவசியமாகும். இவ்வாறான ஆளுமையை அளப்பதற்கு கணிப்பீடு செய்வது ஆசிரியர் பின்பற்றும் பண்பாகும். இதனால் ஆசிரியர் ஆளுமையை சுய மதிப்பீடு செய்ய வேண்டும். இதற்காக, பாடசாலைக்கு தொடர்ச்சியாக செல்லுதல், நேரமுகாமைத்துவத்தை கருத்தில் கொள்ளுதல், நம்பகத்தன்மையுடன் செயற்படல் பொறுப்புக்களை முன்வந்து ஏற்றல், என்றும் மலர்ச்சியுடன் இருத்தல், எப்பொழுதும் நியாயமாக நடத்தல் என்பவை ஆசிரியர் ஆளுமையை கணிப்பீட்டுக் கொள்ள உதவியாக அமைகின்றது.

ஆளுமை அளவீட்டு முறைகளை சுய அறிக்கை அணுகுமுறை உற்று நோக்கல் அணுகுமுறை என இரு வகையாக நோக்கலாம். சுய அறிக்கை அணுகுமுறையில் பேட்டி காணுதல், ஆளுமையைப் பதிவேடு, கவர்ச்சிப் பட்டியல், மனப்பாங்கு வினாக்கொத்து, புறத்தேற்ற நுண்முறைகள் என்பன சில முறைகளாகும் உற்று நோக்கல் அணுகுமுறையினுள் அளவுச் சட்டங்கள், சம்பவப் பதிவேடுகள், சமூகமான முறைகள் என்பன பிரதான நுட்பங்களாகும்.

இவ்வாறான நுட்பங்களை கொண்டு ஆசிரியர் ஆளுமையை அளவீட்டுக் கொள்ள முடியும். சிறந்த அளவீட்டின் மூலம் மாணவரது ஆளுமை விருத்திச் செயற்பாடுகளுக்கு உதவி புரிய முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்க வீழ்ச்சி நம்பிக்கையின் பலவீனத்தையே காட்டும்

ந.பாத்திமா ஷஹானா
2015/VNCoE/FT/T/F/3924

நல்ல ஒழுக்கம் இல்லையேல் நம்பிக்கை இல்லை என்றே பொருள். இறை நம்பிக்கை மனிதனை கீழான நடத்தைகளிலிருந்தும் கேவலமான செய்கையிலிருந்தும் அப்புறப்படுத்திடும் ஆற்றல் மிக்கது. மனிதன் தன் இயல்போடு இணைந்து நிற்கும் உயர்ந்த பண்புகளை நோக்கி உயரவும். தூய்மையான வாழ்க்கையை நோக்கி நடக்கவும் செய்யும் ஆற்றலும் இறை நம்பிக்கைக்கு உண்டு.

இதனால் தான் அல்லாஹ் மனிதர்களை நன்மையின் பக்கமும், நற்குணங்களின் பக்கமும் அழைத்திடும் போது, தன்னுடைய அடியார்களைத் தீமையிலிருந்து தடுத்திடும் போது இவையெல்லாம் நம்பிக்கையின் பகுதிகள் எனப் பிரகடனப்படுத்துகின்றான். எடுத்துக் காட்டாக, தௌபா என்ற திருமறை அத்தியாயத்தில் மனிதர்களை நேர்வழியின்பால் செல்லுமாறு சொல்லுகின்ற போதும் உண்மையே பேசுமாறு பணிக்கின்ற போதும் நம்பிக்கை கொண்டவர்களே! என்றே அழைத்துப் பேசுகின்றனர்.

"விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து (சொல்லிலும், செயலிலும்) உண்மையாளர்களுடன் இருங்கள்.

இறைவனின் இறுதித் தூதர் நபி(ஸல்) அவர்களும் இதனை மிகவும் தெளிவான விளக்கியுள்ளார்கள். ஈமான் என்ற நம்பிக்கை பலம் வாய்ந்ததாக இருந்தால் நல்ல ஒழுக்கம் வளரும் பண்பாகும். பலம் வாய்ந்ததாக இருக்கும். ஒழுக்கம் அல்லது பண்பாடு தரத்தில் குறைந்ததாக இருந்தால் நம்பிக்கை பலவீனமானதாகவே இருக்கின்றது என்ற பொருள்.

"நல்லொழுக்கமும், நம்பிக்கையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவையாகும். ஒன்றை விட்டு விடுபவன் அடுத்ததையும் விட்டு விட வேண்டியது வரும்"

தன்னுடைய அண்டை வீட்டாருக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருப்பவன், அண்டை வீட்டாருக்கு நஷ்டத்தை ஏற்படுத்துபவர்கள், இவர்களை இஸ்லாம் கல் நெஞ்சக்காரர்கள் என்றும், கொடுமையாளர்கள் என்றும் வர்ணிக்கின்றது.

"அல்லாஹ்வின் மீதும் மறுமையின் மீதும் நம்பிக்கை கொண்ட ஒரு மனிதன் நல்லதையே பேச வேண்டும் இல்லையேல் மௌனமாக இருந்திட வேண்டும்" (புஹாரி)

இப்படி நம்பிக்கை, நற்குணங்களையும், நல்ல ஒழுக்கங்களையும் வளர்ப்பதற்காக இருக்கின்றது. நம்பிக்கை இவற்றை வளர்ப்பதோடு மட்டுமன்றி இறுதிவரை இவற்றைக் கட்டிக் காக்கவும் உதவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லாஹ்வின் குடும்பத்துடன் ஒன்றிணைந்திருப்போம்

ஜ.சப்னாஸ் பேகம்
2015/VNCoE/BAC/T/F/3988

தன்னையும் குடும்பத்தையும் சமூகத்தையும் குறித்து சிந்தித்து தங்களை நரக நெருப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ள துடிதுடித்து கொண்டிருக்கும் உள்ளங்களை நோக்கி ஒரு ஞாபகப்படுத்தல். அல்லாஹ்வின் குடும்பம் குறித்தான ஞாபகப்படுத்தல், அல்லாஹ் "ரப்" ஆக இருந்து ஆதரிக்கும், அருள்பாலிக்கும் மொத்த மனிதர்களையும் மனித சமூகங்களையும் குறித்த ஞாபகப்படுத்தல், அல்லாஹ்வே அனைத்து மனிதர்களினதும் பிரபஞ்சத்தினதும் ஒரே எஜமான். அல்லாஹ் தனது ரூஹிலிருந்து மனிதனுக்குள் ஊதி ஒவ்வொரு மனிதனுக்கும் கௌரவத்தையும் அந்தஸ்த்தையும் பூரணமாக வழங்கியிருக்கிறான். அல்லாஹ்வின் குடும்பத்தில் மனிதர்களுக்கிடையில் அந்தஸ்து வேறுபாடு கிடையாது.

அவன் கறுப்பனோ, வெள்ளையனோ, அமெரிக்கனோ, ஆபிரிக்கனோ, அரசனோ, ஆண்டியோ, ஆணோ, பெண்ணோ, செல்வந்தனோ, ஏழையோ அல்லாஹ்வின் பார்வையில் அனைவரும் சமமானவர்களே மனிதர்கள் பூமியின் பல பாகங்களில் பரவியிருப்பது அவனது அத்தாட்சிகளில் உள்ளதாகும்.

"மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண் மற்றும் பெண்ணிலிருந்து படைத்தோம். இன்னும் ஒருவருக்கொருவர் நீங்கள் அறிமுகமாகிக் கொள்வதற்காக உங்களை கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். நிச்சயமாக அல்லாஹ்விடத்தில் கண்ணியம் மிக்கவர் உங்களில் மிகவும் பயபக்தியுடைவர்தாம்" (49:13)

மனிதப் பல்வகைமையை குர்ஆன் எவ்வளவு ஆழமாக அடையாளப்படுத்துகிறது.

"மேலும் அல்லாஹ் நாடியிருந்தால் உங்களை ஒரே சமுதாயத்தினராக அவன் ஆக்கியிருப்பான்" (16:93)

ஆனால், அல்லாஹ் அவ்வாறு நாடவில்லை. அல்லாஹ்வோ மனிதப் பல்வகைமையை நாடியிருக்கிறான். ஒரே மனிதப் பல்வகைமையை நாடியிருக்கிறான். ஒரே மனிதக் குடும்பத்திற்குள் பல்வகைமையான ஆளுமைகளை, அவன் நாடியிருக்கிறான். குலம், கோத்திரம், இனம், மொழி, தேசியம் என்ற வகையில் மனிதர்கள் வேறுபட்டிருப்பது மனிதர்கள் ஒருவரையொருவர் அடையாளம் கண்டு கொள்வதற்காகவே! மனிதக்குடும்பம் மென்மேலும் சிறப்பிக்கப்படுவதற்காகவே! ஒருவரால் மற்றொருவர் வளமாக்கப் படுவதற்காகவே! அதனால் தான் போலும்" "மனிதர்களில் சிறந்தவர் மனிதர்களுக்கு அதிகம் பயனளிப்பவரே" என்று நபி(ஸல்) அவர்கள் கூறிச் சென்றுள்ளார்கள் நபியவர்களின் மதீனாச் சமூகத்தில், மனிதர்கள் வேறுபாடுகளுக்கு மத்தியிலும் ஐக்கியப்பட்டு ஒற்றுமையாக வாழ வில்லையா? உண்மையில் அல்லாஹ்வின் குடும்பத்தில் மனிதர்களுக்கிடையில் வேறுபாடு என்பது யதார்த்தமான ஒன்று ஆகும்.

" உங்களுக்கு உங்களது மார்க்கம் எனக்கு
எனது மார்க்கம்" (19:06)

"மார்க்கத்தில் நிர்ப்பந்தம் இல்லை (2:256)

அல்லாஹ்வின் குடும்பத்தினர் குறித்து சிந்திக்க கடமைப்பட்டுள்ள முஸ்லிம்கள் பொதுவான மனித நலன்சார் விடயங்களிலும் அதிக அக்கறை காட்ட வேண்டியவர்களாய் உள்ளனர். அந்த வகையில் மனிதர்களில் பொதுத் தேவைகளான ஊண், உடை, உறையுள், உயிர், மானம், கல்வி, ஆரோக்கியம், நாகரிகம் ஆகியவற்றை சகலருக்கும் உறுதிப்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களிலும் கவனம் செலுத்த வேண்டியவர்களாகின்றனர். நீதியை நிலைநிறுத்துவதிலும் சாந்தியும் சமாதானமும் நிலவும் சூழ்நிலையைத் தோற்றுவிப்பதிலும் இரட்டிப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

"யாருடைய கரங்களில் இருந்தும் சாவிலிருந்தும் அயல் வீட்டான் பாதுகாப்புப் பெறவில்லையோ அவன் ஈமான் கொண்டவனாக மாட்டான்." என்கின்ற எச்சரிக்கை கூற்றை அடிக்கொரு தரம் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்.

வாழ்க்கை என்பது புனிதமானது. அல்லாஹ்வினால் அல்லாஹ்வின் குடும்ப அங்கத்தவர்களுக்காக வெகுமதியாக வழங்கப்பட்டது. ஆகவே வாழ்க்கை, பூரணமாக வாழப்பட வேண்டும். நிம்மதியாகவும், சாந்தி, சமாதானமாகவும் ஆரோக்கியமானதாகவும் இணக்கமாகவும், வாழப்பட வேண்டும். அப்படிப்பட்ட வாழ்க்கையை மனிதக் குடும்பத்துக்குள் மனிதர்களாகிய நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

அல்லாஹ்வின் குடும்பம் குறித்து இன்னும் அதிகமாகச் சிந்திப்போம். அல்லாஹ்வின் குடும்பத்துடன் ஒன்றியமைந்து வாழ உறுதி கொள்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையில் கல்வி வழிகாட்டல் ஆலோசனையின் வளர்ச்சி

கணேஷமூர்த்தி கவிதா
2015/VNCoE/Ag/T/F/ 3969

மனித வரலாற்றில் முற்பட்ட யுகங்களில் பிரச்சினைக்கு முகங்கொடுத்த மக்கள் மனங்களை அமைதிப்படுத்தி ஒரு வகையான ஆலோசனையும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்த ஒரு வகையான ஆலோசனையும் வழிகாட்டலும் நிலவின. தொடர்ந்து வந்த காலப்பகுதியில் பர்ணசாலை கோவில், பள்ளி, என்பவற்றில் இவ்வழிகாட்டல் ஆலோசனைச் சேவையானது பாடசாலைக் கல்வியுடன் இணைந்த ஓர் அம்சமாகக் கருதப்பட்டது. அக்கால வாழ்க்கை முறை எளிமையாகவும், பாடசாலையில் பயிலும் மாணவர்தொகை குறைவாகவும் காணப்பட்டமையால் ஆசிரியர், பெற்றோர், முதியோர், மதகுருமார் இத்தேவையைப் பெருமளவு பூர்த்தி செய்தனர்.

19ம் நூற்றாண்டில் கைத்தொழில் புரட்சியின் பின் சமூக பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் வழிகாட்டல் என்ற எண்ணக்கருவை தோற்றுவித்தது. இதன் விளைவாக இவ் எண்ணக்கருவை வளப்படுத்துவதில் உளவியல், உளவைத்திய விஞ்ஞானம், உடல் அமைப்பியல், சிகிச்சை உளவியல் என்பன பங்களிப்பு செய்தன. ஐக்கிய நாடுகள் கல்வி, கலாசார, விஞ்ஞான ஸ்தானத்தின் (Unesco) அறிவுறுத்தலின் படி, சகல கல்வி நிலையங்களினதும் முக்கிய நோக்கம், மாற்றம் பெற்று வரும் சூழலுக்கேற்ப மாணவர்களும் தம்மை இயைபாக்கிக் கொள்ள வழிகாட்டல் என்பதாகும். 1920ம் ஆண்டின் பின் இச்சேவை பற்றிய எண்ணக்கரு மேலும் விரிவு பெற்றதனால், கல்விச் செயற்பாட்டில் வழிகாட்டலானது பயன்பாடுடைய ஓர் செயன்முறையாகவும் ஏற்றுக்கொள்ளப்படலாயிற்று.

வழிகாட்டல் தொடர்பாக வில்லியம் புறொக்டர்( 1925)என்பவர் "மாணவர்கள் பாடசாலையிலும் வாழ்க்கையிலும் எதிர்கொள்ளும் சவால்களை வெற்றிக் கொள்ளப் பயன்படும் செயற்பாடு" என எடுத்துக் காட்டியுள்ளார். இலங்கையில் பாடசாலைக் கல்வி வரலாற்றினை நோக்கும் போது, 1940ம் ஆண்டுக்கு முன் வழிகாட்டல் ஆலோசனைச் சேவை நடைபெற்றதற்கான சான்றுகள் எவையும் காணப்படவில்லை. 1960ம் ஆண்டளவில் கல்வியியாலளர்கள் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் தேவைபற்றிப் பல அறிக்கைகள் வெளியிட்டனர். ஆயினும் இவை நடைமுறைக்கு வரவில்லை இதனையடுத்து 1981ஆம் ஆண்டு வெளிவந்த கல்வி வெள்ளை அறிக்கையில் 34 தொடக்கம் 50 வரையிலான பந்திகளில் வழிகாட்டலின் முக்கியத்துவம் வலியுறுத் தப்பட்டிருந்தது. 1982ல் யொவுன் மித்திரோ எனும் ஆலோசனைச் சேவை நிலையங்கள் மாணவருக்கென 26 பாடசாலைகளிலும் பொது சனங்களுக்கென 5 நிலையங்களிலும், களனிப்பல்கலைகழகத்திலும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இன்று வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் பரப்பு மேலும் விரிவுபடுத்தப்பட்டுக் கல்வி நிலையங்கள், பயிற்சி நிலையங்கள், மருத்துவ நிலையங்கள், பயிற்சி நிலையங்கள், தொழில் நிலையங்கள், தொழில் நிறுவனங்கள், புனர்வாழ்வு காட்டும் நிலையங்கள், குடும்ப அமைப்புக்கள் ஆகியவற்றில் இது பயனுள்ளதாக இருந்து வருகிறது. பிரச்சினைகளுக்கு தீர்வு காணவோ அதனை சமாளிக்கவோ முடியாமல் துன்பப்படும் அனைவருக்கும் வயது, பால் மற்றும் சமூக வேறுபாடின்றி வழிகாட்டல் ஆலோசனைச் சேவை பெரிதும் பயனுடையதாக அமைந்துள்ளது.

மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு பாடசாலைகள் தொழிற்படவேண்டும். இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாவிடின் அதன் பிரதிபலிப்பு அவர்களின் கற்றல் செயற்பாட்டை பாதிக்கும். அத்துடன் அவர்களின் ஆளுமை விருத்தியிலும் சீர்கேடு ஏற்படக்கூடும். பாடசாலைகளில் ஆலோசனை தேவைக்குரிய காரணங்களாக குடும்ப அமைப்பு, பலவீனமடைந்து வருதல், சமூக கலாசார மாற்றங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறி, மனித விழுமியங்களின் செல்வாக்கு அருகி வருதல், உள்ளூர் யுத்தம், இயற்கை அனர்த்தங்கள், கற்கைநெறி சார்பான தேவைகள், தொழில்வாழ்க்கைக்கான வழிகாட்டலின் தேவை இவ்வாறான பல காரணிகள் மாணவர்களின் முன்னேற்றத்தை நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கின்றன. ஆகவே மாணவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்த்தல் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனை வழங்கவென ஆலோசனை நிபுணர்களின் உதவியும், இத்துறையிற் பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் உதவியும் இக்காலக்கட்டத்தில் இன்றியமையாததாகும்.

மேலைத்தேய நாடுகளில் ஆலோசனைச் சேவை பல தசாப்தங்களாக சகல கல்வி நிலையங்களிலும் தொழிற்பட்டு வருகின்றது. இலங்கையிலும் மற்றைய ஆசிய நாடுகளிலும் இச்சேவையின் தேவை பற்றிய விழிப்புணர்வு அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ளது. அத்தோடு சகல பாடசாலைகளிலும் இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்கான முயற்சிகளையும் கல்வியமைச்சு மேற்கொண்டு வருகிறது.

மாணவர்கள் தமது வாழ்வை சிறப்புற அமைத்துக்கொள்ளவும், தமக்கும் சமுதாயத்திற்கும் நற்பயனை நல்கக் கூடிய ஆளுமையுடையோராக உருவாகவும், கல்வி வழிகாட்டல் ஆலோசனை அவசியமானது. தற்காலத்தில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகளுக்கும், சீர்கேடுகளுக்கும் கல்வி நிலையங்களே முக்கிய பங்கினை ஏற்றுக் கொள்ள வேண்டுமென சமூகம் சுட்டிக் காட்டுகின்றது.

எனவே தற்காலத்தை பொறுத்தவரை ஆரம்ப காலக்கட்டங்களிலிருந்ததை விட ஆலோசனை வழிகாட்டற்றுறையின் வளர்ச்சியானது பல்வேறு வகையிலும் விருத்தியடைந் துள்ளதுடன் தமது சேவையையும் செவ்வனே மிகச் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியத்துவத்தின் வெற்றிக்கு கல்வி வழிகாட்டல் ஆலோசனைகளின் பங்களிப்பு

சோ.கோகிலஜெகனி
VNCoe/2015/PT/T/F/3995

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

ஆம், பழையன கழிதலும், புதியன புகுதலும் கால மாற்றம் கால மாற்றத்திற்கேற்ப தேவைகளும் மாறுபடுகின்றன. தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படும் போது மனிதனும் தன்னை மாற்றிக் கொள்ள முற்படுகின்றான். கால மாற்றத்திற்கேற்ப மாறும் மனிதனை "மனிதனாக மாற்றுவது, வாழவைப்பது கல்வி"

எனவே மாணவர்களுக்கு கல்வியை வழங்குவதிலும் அவர்களது தேவைகள், விருப்பு, வெறுப்புக்கள், மனப்பான்மைகள் போன்றனவும் மாணவர்கள் எவ்வாறு கற்கின்றார்கள், மாணவர்களுக்கேற்ப போதனைகள் எவ்வாறு ஒழுங்குபடுத்தப்படுகின்றன போன்ற சகல நடவடிக்கைகளும் கல்வி வழிகாட்டல் ஆலோசனையில் இன்றியமையாதவையாக உள்ளன.

அந்தவகையில் வழிகாட்டல் ஆலோசனை என்பது " வாழ்க்கையைச் சீரமைத்துக் கொள்வதற்கு உதவி தேவைப்படும் ஒருவருக்கு அதற்கான தகைமையுள்ள ஒருவரினால் அளிக்கப்படும் உதவி என்றும், " ஒருவருக்கு அவரைப் பற்றிய சுயவிளக்கத்தை ஏற்படுத்தி அதன் அடிப்படையில் அவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அவரே தீர்த்துக்கொள்ளுமாறு வழங்கப்படும் உதவி" என்றும் விளக்கம் கூறப்படுகின்றது.

ஆசிரியத்துவத்தின் வெற்றி எனும் போது ஆசிரியர் பணியில் வழிகாட்டல் ஆலோசனை நோக்கப்பட வேண்டும். ஆசிரியரின் பணி மாணவர்களை அறிந்து அவர்களிடம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவது ஆகும். ஓர் ஆசிரியர் தனது மாணவர்களை அறிந்து கொள்வதற்கு புத்தகத்தை வாசித்து விளங்கிக்கொள்வது போன்று முழுமையாக விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

மேலும் கல்வி வழிகாட்டல் ஆலோசனையின் துணையின்றி ஓர் ஆசிரியரினால் தம் மாணவர்களிடையே நற்பண்புகளையும் நன்னடத்தையையும் உருவாக்குவதில் வெற்றி பெற்றுள்ளனரா அல்லது பெறவில்லையா என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்..

ஓர் ஆசிரியரின் கடமை அல்லது பொறுப்பு மாணவர்களின் மீது செல்வாக்குச் செலுத்துவதாக இருக்கும் போது அவர் கல்வி வழிகாட்டல் ஆலோசனை பற்றி அறிந்திருப்பதும் அதனூடாக தான் கற்பிக்கும் மாணவர்களின் குணாதிசயங்கள், அதன் வளர்ச்சி விதிகள், மனவெழுச்சி, சிக்கல் நிலை, மாணவர் மீது செல்வாக்கு செலுத்தும் சூழலியற் தாக்கம் பண்புகளில் உருவாக்கம் என்பவற்றை விளங்கிக்கொள்ள முடியும்.

அவற்றின் துணையுடனேயே அவ்வாசிரியரினால் எவ்வாறு ஒருவரின் ஆளுமை விருத்தி மற்றவர் மீது செலுத்தப்படுகின்றது. எவ்வாறு பாடசாலைகளில் கற்றல் இடம்பெறுகின்றது. எவ்வாறு அறிவுரை கட்டியெழுப்பப்படுகின்றது. மாணவர்கள் எவ்வாறு சிந்திக்கின்றார்கள். மாணவர்களின் ஆற்றல்கள் திறன்கள் என்பன எவ்வாறு கணிப்பீடு செய்யப்படுகின்றது. பாடசாலையில் மாணவர்களின் உளநலன் எவ்வாறு பேணப்படுகின்றது. சமூக விருத்திக்கு ஏற்ற வகையில் மாணவர்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றார்கள். எவ்வாறு மாணவர்களை ஊக்குவிக்கப்படுகின்றனர் போன்ற பல விடயங்களை அறிந்து கொள்ள முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து
"நீ உன் பிள்ளையை என்னிடம் ஒப்படைத்து விடு
நான் நற்பிரசையாக ஆக்கி தருகின்றேன். பயனைப் பெற்றுக் கொள்"
என ஒரு ஆசிரியருக்கு சமூகம் சவால் விடுவதாக இன்றைய கல்வித்திட்டம் அமைகின்றது. ஆகவே இருபத்தோரம் நூற்றாண்டு ஆசிரியர் தன்னிடம் ஒப்படைக்கும் மாணவர்களை நற்பிரஜையாக்கி, சமூகத்திற்கு பயன்பாடுடையவனாக்குவேன் என்ற சவாலை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றும் பாரிய பொறுப்புடையவராகிறார்.

எனவே பாடம் தொடர்பான அறிவு, திறன்கள், மனப்பான்மைகள் தீர்மானங்கள் மேற்கொள்ளுதல், சூழலுடன் இயைபாக்கம் காணுதல் என்பவற்றை மாணவர்களுக்கு அளிக்க வேண்டிய பொறுப்புக்களை சுமந்துள்ள ஆசிரியருக்கு கல்வி வழிகாட்டல் ஆலோசனை துணை நிற்கின்றது. ஆகவே பூரணமாக ஆசிரியராக நாம் திகழ்வதற்கு ஆசிரியத்துவத்தின் வெற்றிக்கு கல்வி வழிகாட்டல் ஆலோசனை துணைபுரிகின்றது என்பதில் சந்தேகமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியும் விழுமியங்களும்

இராஜமாணிக்கம் தீபிகா
2015/VNCoE/BAC/T/F/3992

"கல்வியின் மூலம் உலகம் விழுமியப் பயனைக் காணுதல் வேண்டும்" என்பது தத்துவஞானிகள் பலரினதும் கருத்தாகும். விழுமியங்கள் என்றால் என்னவென்று நோக்குமிடத்து அறவழி ஒழுக்கம், சத்தியம், சாந்தி, அகிம்சை என்று பொருள் கொள்ளப்படும். ஒவ்வொருவரதும் அறவழி ஒழுக்கமானது இப்பிரபந்தத்தின் ஒழுங்கான செயற்பாட்டுக்கு இன்றியமையாது வேண்டப்படுகின்றது.

கல்வி சிறந்த ஒரு குடிமகனை உருவாக்குதல் வேண்டும். குடிமக்களால் நாடு வளம் பெறும். நாடுகள் வளம் பெறுகின்ற போது முழு உலகமும் வளர்ச்சியடையும். கல்வியினூடாக ஒருவன் சிறந்த உளப்பயிற்சி பெறுதல் வேண்டும். ஒழுக்கம், கட்டுப்பாடு, அகிம்சை, பணிவு, இன்சொல், தியாகம் ஆகிய பண்புகளையும் கற்றல் வேண்டும். ஒவ்வொரு மனிதனும் அறவழியில் நின்று ஒழுக்கத்தையும், ஒப்புரவையும் பேண கல்வி துணை புரிய வேண்டும்.

மனிதனிடமுள்ள உயர்ந்த குறிக்கோள்களையும், இயற்கையான வெற்றிகளையும், சமூக விழுமியங்களையும் பரிணாமிக்கச் செய்வதே கல்வியாகும். தனிமனிதனிடமுள்ள உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொண்டுவரச் செய்து அவனைச் சமுதாயம் காண்கின்ற சான்றோனாக்குவதே கல்வி "மனிதன் ஒரு சமூகப் பிராணி" என்பது ஒன்று கூடி வாழுகின்ற செயற்பாட்டினைக் குறித்து நிற்கும் ஒன்றாகும். சமூக அமைப்பிலே வாழத் தொடங்கிய மனிதன் அச்சமூகத்தின் மரபுகள், வழக்குகள், விழுமியங்கள் என்பவற்றுக்கேற்ப வாழ்வை அமைத்துக் கொள்கின்றான். தான் பிறந்து வளர்ந்த சமூகத்தின் எல்லைக்குள் கட்டுப்பட்டு வாழ்வதோடு அதன் நோக்கங்களைப் பரப்பும் கடமையையும் கொண்டுள்ளான். அத்தகைய கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்கு அவனுக்கு கல்வி இன்றியமையாததாகின்றது. கல்வியால் மலர்ச்சியடைந்த புதிய சிந்தனைகள் சமூகத்தில் பரப்பப்பட்டு செயற்படுத்தப்பட்டால், சமூக விழுமியங்கள் ஒளிவீசும் சமூகத்தின் பண்பாடு மேம்பாடடையும்.

இன்றைய கால கட்டத்தில் சமூகத்தின் விழுமியங்கள் பற்றிச் சிந்திக்க வேண்டியதொன்றாகவே அமைகின்றது. ஏனெனில் கல்வி இன்று பரீட்சையை நோக்கமாகக் கொண்டு இயங்குகின்றது. மாணவர்களின் நிலை அறிவை மட்டும் தேடுகின்ற ஒரு செயற்பாடாக அமைந்து விட்ட இந்நிலையில் விழுமியங்கள் பேணப்பட வேண்டுமென்ற சிந்தனை கற்றோர் மத்தியில் மேலோங்கிக் காணப்பட்டு வருகின்றது. அதனால் விழுமியங்கள் சில நாடுகளின் கலைத்திட்டத்தில் ஒழுக்கக் கல்வியாகவும் போதிக்கப்பட்டு வருகின்றது.

பொதுவாகப் பின்பற்றப்படும் விழுமியங்கள் குடும்பங்களையும், சமூகங்களையும், நாடுகளையும், உலகத்தையும் இணைக்கின்றன. நீதி, சமாதானம், சுதந்திரம், சமத்துவம், பிறரை மதித்து வாழுதல் போன்ற மனித விழுமியங்கள் மக்கள் குழுவினருக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துகின்றன. எனவே பல்வேறு அணுகுமுறைகளைக் கொண்ட விழுமியக் கல்வி பிள்ளைகளுக்கு வழங்கப்படுவது அவசியமானது. இதனால் அவர்கள் மற்றவர்களுடன் இணங்கி வாழ்வதற்கான வழிமுறைகளை அறிந்து கொள்வர். பல்வேறு வேறுபாடுகளைக் கொண்ட பல்லின, பன்மொழிச் சமூகங்களிலே சிறந்த உறுப்பினராகும் மனப்பாங்கைப் பெறும்போது உலகமே அமைதியின் வடிவமாக மாறும் என்பதில் சந்தேகமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோன் டூயியும் தற்காலக் கல்வி முறைகளும்

சல்மியா கச்சுமுஹைதீன்
2015/VNCoE/SCi/T/F/3799

உலகில் வாழும் ஒவ்வொரு தனிமனிதனும் தனது தனிப்பட்ட வாழ்க்கையில் வெற்றியும் மனநிறைவும் காண்பது அரிது எனவே நோக்கங்கள் வெற்றிபெறுவதற்கு நன்கு திட்டமிட்டு செயற்படுத்துவதற்கான கல்வியறிவு இன்றியமையாததாகின்றது. எனவே தான் மனிதன் தோன்றிய நாளிலிருந்து கல்வி கற்பித்தல், கற்றல் போன்றன ஏதோவொரு விதத்தில் மக்கள் சமூகத்தில் காணப்பட்டு வருகின்றது. கல்வியெனும் பதத்தின் பொருளை வரையறுப்பதென்பது முடியாத காரியமாகின்றது.

பிளேட்டா, அரிஸ்டோட்டில், ஜோன்லொக், ரூஸோ, பெஸ்டலாசி , மார்க்ஸ், டூயி, காந்தி, அல்லாமா இக்பால் போன்ற பெரிய சிந்தனையாளர்களின் கருத்துக்களை முறையாகப் பயன்படுத்தினால் இதற்கான விடையைத் தேடுவது எளிதாகின்றது.

அந்த வகையில் தற்காலக் கல்வி முறையுடன் ஒத்துப்போவதான கருத்துக்களை முன்வைத்தவர் அமெரிக்க கல்வியியலாளர் ஜோன்டூயி ஆவார். இவர் சமூகவியல் கோட்பாட்டினை வலியுறுத்தினார். ஜோன் டூயின் "பாடசாலையும் சமுதாயமும்" "அனுபவமும் கல்வியும்", "பிள்ளையும் கலைத்திட்டமும்" போன்ற நூல்கள் இன்றைய கால கல்வித்தத்துவங்களில் பெரிய பங்களிப்பைச் செய்கின்றன. போதனைக் கல்விக்கு முரணாக செயற்பாட்டுடனான கல்விக்கொள்கையை முன்வைத்தார். செய்தும் சிந்தித்தும் மாணவர்கள் கற்க வேண்டும் என்பதனையே டூயி வலியுறுத்தினார். குழந்தைகளின் இயல்பான கவர்ச்சி, செயற்பாடுகளினின்றும் பிரச்சினைகள் எழக்கூடியவாறு பாடசாலை அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும், அப்பிரச்சினைகளுக்கான தீர்வை பிள்ளைகளே தேடிக்கண்டுபிடிக்க தூண்டப்பட வேண்டும் என்ற முறையை முன்வைத்தார். பாடநூல், ஆசிரியர், மாணவர் எனும் விடயங்களுள் மாணவரையே ஜோன்டூயி முதன்மைப்படுத்தினார். அதாவது அமெரிக்காவில் பிள்ளைமையக் கல்வித்திட்டத்தை அறிமுகம் செய்தவர் இவரேயாவார். இம்முறையே தற்காலத்தின் கல்வித்திட்டத்தில் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அனுபவத்தினூடாகவே கல்வி வளர்கின்றது. செயல்கள்தான் கல்வியாகின்றது. குழந்தையின் இயல்பு வாழ்க்கை என்பவற்றுடன் இணைந்ததே கல்வி ஏற்பாடு என்று கருத்துத் தெரிவிக்கின்றார். இத்தகைய முற்போக்கும் கல்வித் தத்துவங்களே இன்றைய கல்வி உலகில் அதிகம் காணப்படுகின்றது.

ஜோன்டூயியின் கல்விக்கருத்துக்களின் செல்வாக்கின் விளைவாக விஞ்ஞான மயமாகிய தற்காலக் கல்விச் சமுதாயத்தில் காணப்படும் வாழ்க்கை நிலைமைகட்கு ஏற்ப கல்வி முறையானது திருத்தியமைக்கப்பட்டுள்ளது. விளையாட்டு, ஆக்கச் செயல்கள், கருவிகளைப் பயன்படுத்தல், இயற்கையுடன் தொடர்புற்றுக் கற்றல் போன்றன பாடசாலைக் கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆசான்களின் போதனையைக் கேட்டுக் கொண்டிருத்தல் மட்டுமல்ல என்று டூயி குறிப்பிடுகின்றார். அந்தவகையில் இன்று முன்பள்ளி தொடக்கம், உயர்கல்வி வரை செயற்பாட்டுடன் கூடிய கற்றல், கற்பித்தலே நடைபெறுகின்றமையை அவதானிக்க முடிகிறது.

டூயியின் கருத்துக்களின் விளைவாக, கல்வியில் சமூக நோக்கம் நடுவிடம் பெற்றது. பள்ளிச் செயல்கள் உண்மை வாழ்க்கைச் செயல்களுடன் இணைக்கப்பட்டன. அந்த வகையில் வெளிச் சமூகத்தைப் பிரதிபலிப்பதாக பாடசாலை அமைந்தது. செய்து கற்றல், வாழ்ந்து கற்றல், செயன்முறைகள் ஆகியன கல்வியில் முக்கிய இடம் பெற்றிருக்கின்றன.

அந்த வகையில் வரைவிலக்கணப்படுத்தப்பட முடியாத கல்வி எனும் பயிரை சிறந்த முறையில் வளர்க்க, ஜோன்டூயியின் கல்வி கருத்துக்களை ஆராய்ந்து எமது மாணவர் சமுதாயத்திற்கு சிறப்பான அறிவினை வழங்கவும், அவர்கள் எதிர்கால வாழ்க்கைக்கு ஏற்ற வகையில் தம்மைத் தயார்படுத்தவும் ஏற்ற வழிவகைகளை மேற்கொண்டு சிறந்த கல்விச் சமூகத்தை கட்டியெழுப்புவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Google

கர்மராஜா நிரோஷன்
2015/VNCoE/Hin/T/M/4004

இன்றைய உலகம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை அடிப்படையாக கொண்டே இயங்குகின்றது. எனக் கூறினால் அது மிக பொருத்தப்பாடுடையதாக இருக்கும். இணையம் என்ற ஒரு விடயம் அறிமுகப்படுத்தப்பட்டு தசாப்த காலங்கள் கடந்து விட்ட போதிலும் அண்மைக் காலகட்டத்தில் இணையத்தின் மீதான நாட்டம் மக்களிடையே அதிகமாக காணப்படுகின்றது. இணையப் பாவனை இல்லையென்றால் உலகத்தின் சகல நடவடிக்கைகளும் முடங்கிவிடும் என்ற நிலைக்கு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் இணையதளம் எனக்கூறும் போது சகலருக்கும் மனதில் தோன்றும் ஒரு விடயம் (கூகுல்) Google தசாப்த காலத்தைக் கூட இன்னும் கடத்தாத Google நிறுவனம் இன்று இணையத்தை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ள பிரதான பங்கு Google நிறுவனம் காணப்பட்டுள்ளது. கூகுள் நிறுவனம் தனது சேவையை ஆரம்பிக்கும் போது தகவல் தேடு இயந்திரமாகவே காணப்பட்டது.

தமது நிறுவனம் மூலம் புதுப்புது விடயங்களை அறிமுகம் செய்த வண்ணமே தொடர்ந்து இயங்கிக் கொண்டு வந்தது. 2003 ம் ஆண்டு கூகுள் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்றைய காலகட்டம் வரை கூகுள் நிறுவனம் அடைந்துள்ளதை நோக்குவோமானால் உலக அளவில் கூகுள் மூலம் நிகழும் தேடல்களில் சராசரி எண்ணிக்கை மாதத்துக்கு முப்பத்தெட்டு கோடி. உலகின் மிகப்பெரிய இணையத் தேடல் இயந்திரம், இணையத்தில் நிகழ்த்தப்படும் தேடல்களின் பாதிக்கு மேல் கூகுள் வழியே நடைபெறுகின்றன. 112 நாடுகள் 116 மொழிகளுக்கான சிறப்புத் தேடல் தளங்களில் கூகுள் இயக்கிவருகின்றது.

தமிழிலும் கூகுள் தேடல் உண்டு. அதாவது திரையில் காண்பிக்கப்படும் மெனு உத்தரவுகள் தமிழிலேயே இருக்கும். அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா, ஆர்ஜென்டினா, பெல்ஜியம், பிரேஸில், கனடா, டென்மார்க், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, மெக்ஸிகோ, ஸ்பெயின், சுவீடன், சுவிஸ் ஆகிய நாடுகளில் பெரும்பான்மையினரால் பயன்படுத்தப்படும் தேடல் இயந்திரம். இணையத்தின் மிகப்பிரபல்யமான ஐந்து தளங்களில் ஒன்றாகும்.

அத்தோடு தனது ஆதிக்கத்தை Android துறையில் பல வசதியினை ஏற்படுத்தி வருகின்றது. பாவனையாளர்களுக்கான சகல Apps வசதிகளையும் வழங்கி வருகிறது. உதாரணமாக Play Store trjp Google Map வசதி G mail வசதி உட்பட்ட சகல விதமான அடிப்படை வசதிகளையும் இன்று பாவனையாளர்களுக்கு வழங்கி வருவதை காணலாம்.

இவ்வாறு உலக நாடுகளை தன் பக்கம் இழுத்த கூகுள் நிறுவனம் கடந்த சில ஆண்டுகளாக தென்கிழக்காசியாவில் தனது ஆதிக்கத்தை செலுத்தி வருகின்றது. அந்த வகையில் அண்மைய காலங்களில் இதனை விளம்பரம் செய்யும் வகையிலாக இலங்கை இராட்சத கூகுள் பலூன் ஒன்றை பறக்கவிட்டு தனது சேவையினை விளம்பரப்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது. இலங்கை போன்ற சிறிய நாடொன்றில் இவ்வாறான விளம்பரத்தை ஏற்படுத்தியமை உலக நாடுகளில் வரவேற்கப்பட்டது.

இவ்வாறு தனது புதிய நுட்ப அம்சங்களையும் பாவனையாளர் வசதி கருதியும் செயற்பட்டு வருவதை நாம் வரவேற்பதோடு எதிர்வரும் காலங்களில் இவ் உலகின் சகல நடவடிக்கைகளும் இணையத்தை மையமாக கொண்டே இயங்கும் நிலை காணப்படுகின்றது. இக்காலப்பகுதியில் கூகுள் நிறுவனம் தனது உன்னத சேவையினை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் தகவல் தொழில்நுட்பம்

திரு.த.கவிராஜ்
2015/VNCoE/HIN/T/M/4006

தகவல் தொழில்நுட்பம் இன்று அனைத்து துறைகளிலும் தனது செல்வாக்கையும், ஆதிக்கத்தையும் செலுத்தி வருகின்றது. அவ்வாறு தகவல் தொழில்நுட்பம் செல்வாக்கு செலுத்தும் துறைகளாக மருத்துவம், வணிகம், கல்வி, பொறியியல் முதலியவற்றைக் குறிப்பிடலாம். இவற்றில் குறிப்பாக கல்வித் துறையில் தகவல் தொழில்நுட்பம் தனது ஆதிக்கத்தை முழுமையாக செலுத்துகிறது எனக் கூறலாம்.

இன்றைய நவீன உலகில் தகவல் தொழில்நுட்பமானது ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாத ஓர் ஏழாம் அறிவாக அமைகின்றது. இவ்வாறு முதன்மை பெறுகின்ற தகவல் தொழில்நுட்பமானது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது என பின்வருமாறு கூறலாம்.

ஒரு சிறப்பான கற்பித்தல் கற்றல் செயற்பாடு நடைபெற வேண்டுமாயின் அங்கு ஆசிரியர்களும் மாணவர்களும் உற்சாகமாக செயற்பட வேண்டும். அவ்வாறு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உற்சாகத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் அவ் கற்பித்தல் கற்றல் செயற்பாட்டிற்கு தகவல் தொழில்நுட்பம் கற்பித்தல் வளமாக பயன்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு பயன்படுமாயின் இயல்பாகவே உயிரோட்டமுள்ள கற்பித்தல் கற்றல் செயற்பாடு நடைபெறும்.

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டுமாயின் அவ் ஆசிரியருக்கு தகவல் தொழில்நுட்பம் பற்றிய பூரண அறிவு அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. இதனலேயே தகவல் தொழில்நுட்பத்தை ஏழாம் அறிவு எனக் குறிப்பிடுகின்றார்.

தகவல் தொழில்நுட்பம் பற்றிய பூரண அறிவு ஆசிரியர் பெற்றிருப்பினும் அதனைப் பொருத்தமான வகையில் பயன்படுத்துகின்ற திறனும் ஒரு ஆசிரியருக்கு ,ன்றியமையாத ஒன்றாகும். இத்திறன் ஓர் ஆசிரியரிடத்தே காணப்படுமாயின் அவரால் மேற்கொள்ளப்படுகின்ற கற்றல் கற்பித்தல் செயற்பாடு அவருக்கும் மாணவர்களுக்கும் வெற்றியளிக்கக் கூடியதாக அமையும். அவ்வாறு இல்லாது பொருத்தமற்ற முறையில் அதனைக் கையாண்டால் மாணவர்களுக்கு கற்றலின் பால் ஆர்வம் ஏற்படாமல் வெறுப்பே தோன்றும். இதனால் இக் கற்றல் கற்பித்தல் செயற்பாடு தோல்வியடையக் கூடும். இதனாலேயே இத்திறன் ஆசிரியருக்கு மிக முக்கியத் திறனாக இன்று கருதப்படுகின்றது.

தகவல் தொழில்நுட்பம் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு ஏன் என்பதனையும் அவ்வாறு தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கற்பிப்பதனால் கிடைக்கும் நன்மைகளையும் பின்வருமாறு கூறலாம். வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதனால் மாணவர்களை ஆர்வமாக கற்றலில் ஈடுபட வைக்க முடியும். அதனுடன் இணைந்த கற்பிக்கின்ற பாடத்திற்கான கிட்டிய உண்மையான அனுபவத்தையும் மாணவர்களுக்கு ஏற்பட வைக்க முடியும். மாணவர்கள் கற்ற விடயங்களை நீண்டநாள் ஞாபகம் வைத்திருக்கவும் இலகுவில் விளங்கிக் கொள்ளவும், மகிழ்ச்சிகரமான கற்றல் கற்பித்தலுக்கும் இத்தகவல் தொழில்நுட்பம் உதவுகின்றது.

மேற்கூறியவை மாணவர் சார்பாகக் கிடைக்கும் நன்மைகளே. இதேபோன்று ஆசிரியரும் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கற்றல் கற்பித்தலில் ஈடுபடும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நன்மைகளை அடைகின்றார். அதிக எண்ணிக்கையைக் கொண்ட மாணவர்களுக்கு ஒரே தடவையில் கற்பிக்க முடியும். உதாரணங்களை இலகுவாகக் காட்சிப்படுத்த, விளக்க முடியும். ஆசிரியருக்கான தேடல் திறன் அதிகரிக்கும். இவ்வாறு ஆசிரியரும் பல வழிகளில் நன்மை அடைகின்றார்.

இவ்வாறு தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கற்பதனால் பல நன்மைகளும், பெறுபேற்றில் எழுச்சியும் கிடைக்கின்றது. இருப்பினும் இத்தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கற்பிப்பது என்பது நகர்புற அபிவிருத்தியடைந்த பாடசாலைகளுக்கே பொருத்தப்பாடுடையதாக அமைகின்றது. குறிப்பாக மின்சார வசதி, கட்டிட வசதி, தொழில்நுட்ப உபகரண வசதி கொண்ட பாடசாலைகளுக்கே இக் கற்பித்தல் பொருத்தமானது எனலாம்.

இருப்பினும் கிராமப்புற பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்கள் வினைத்திறனுடனும், ஆர்வமாகவும், ஊக்கத்துடனும் கல்வி கற்று தமது பெறுபேற்றினை உயர்த்திக் கொண்டுதான் இருக்கின்றனர். இதற்குக் காரணம் அவ் மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களின் திறனே எனக் கூறலாம்.

அனைத்தையும் தொகுத்து நோக்கும் போது தகவல் தொழில்நுட்பம் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு தனது முழுமையான ஆதிக்கத்தைச் செலுத்தினாலும் மாணவர்களின் பெறுபேற்றினையும் வினைத்திறனையும் வளர்க்கும் பணி கற்பிக்கும் ஆசிரியரின் கையிலேயே தங்கியுள்ளது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனும் சமூகமும்

பெ.ரூபிகா
2015/VNCoE/PT/T/F/3778

மனித சமுதாயத்தின் இயல்புகளை மனித வாழ்வில் நடைமுறைக்கு கொண்டு சென்று ஒப்பிட்டு பார்க்கையில் தனிமனிதன் ஒருவன் குடும்பமாக தன்னை ஆக்கிக் கொண்டு பலமுள்ளவனாக இருக்க முயற்சிக்கிறான். அப்படிப்பட்ட தனது முயற்சியில் வெற்றி கண்ட மனிதன் பல குடும்பங்களுடன் தனது குடும்பத்தினை இணைத்து சமூகமாக மாறுகின்றான். இவ்வாறு சமூகத்துடன் சேர்ந்த மனிதன் ஒழுங்கினைப் பேண தன்னுடைய பற்கிற்கு தேவையானவற்றை செய்கின்றான்.

சமூகம் ஒன்றில் குடும்பங்கள் பல காணப்படுவதனால் அவர்கள் தங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு என சமூகத்தின் உறுப்பினரின் வாழ்க்கை நெறி தலைமுறை தலைமுறையாக பேணப்பட்டும், கையளிக்கப்பட்டும் பின்பற்றப்பட்டும் வந்த கொள்கைகள், பழக்கவழக்கங்கள் போன்றவற்றின் தொகுப்பாக காணப்படும் கலாசாரம் என்று "றல்ப் லின்டன்" கூறியதனை பின்பற்றி வந்தனர். இவ்வாறு இவர்களால் பின்பற்றப்பட்டு வந்த கலாசாரத்தில் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மொழி, சமயம், பண்பாடு, நடை, உடை பாவனைகள் என்பவற்றுடன் கல்வி என்பதும் மனிதனை சமூகத்தில் ஏற்படும் நன்மை தீமைகளை எதிர்கொள்ள உதவுவனவாகும்.

சமூகம் ஒன்றில் மனிதன் எவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றான் என நோக்கினால் தமது வாழ்க்கையை வாழ்வதற்கு தேவையான கல்வியை பெறுவதிலும் வரியின் ஆதாரமான ஒன்றாக காணப்படுகின்ற பொருளாதாரத்தை ஈட்டிக்கொள்வதற்கும் மனிதன் முயற்சிக்கின்றான். மனிதன் சமூகத்துடனான இணக்கம் கொண்டு காணப்படுவதனால் அதற்குள் ஏற்படும் மாற்றங்களை ஆதரிக்கவும் சில சமயங்களில் அதற்கு எதிராக புரட்சிகளையும் மேற்கொள்ளவும் செய்கிறான். இதனை மனித சமுதாயமானது, சமூகவியலாளர்களின் கருத்துப்படி கலாசார கோலம், சமூக அமைப்பு, சமூக நடத்தை என்பவற்றில் ஏற்படும் அடிப்படை மாற்றங்களை சமூகமாற்றம் என்று கூறுகின்றது. இச் சமூக மாற்றத்தினால் இன்றைய காலத்தில் மனிதன் பல்வேறு சூழ்நிலைகளில் தன்னை கொண்டு செல்ல தயாராக மாறுகின்றான்.

தற்கால சமூக அமைப்பும் சமூக சூழலில் ஏற்படும் மாற்றங்களும் பல்வேறு சிக்கல் தோன்றக் காரணமாகின்றன. அவை கைத்தொழில்மயமாக்கம், நகரமயமயாக்கல், வணிக செயற்பாடுகளின் விரிவாக்கம், சுற்றாடல் மாசாக்கம் போன்ற விடயங்கள் பிரச்சினைகள் தோன்றுவதற்கு அடிப்படையாக விளங்குகின்றன. இப்பிரச்சினைகளை விளங்கிக் கொண்டு தீர்வுகளை முன்வைப்பதற்கு புதிய அணுகுமுறைகளை கையாள வேண்டி ஏற்படுகின்றது. மனிதன் சமூகத்தின் அபிவிருத்தியில் பங்கு கொள்ளும் துறைகளாகிய பொருளாதாரம், சமூகம், கலாசாரம், கல்வி என்பவற்றின் முக்கியத்துவம் உணரப்படுகையில் நாட்டின் முக்கியத்துவம் விளக்கப்படுகின்றது.

சாதாரண மனிதன் ஒருவன் கலாசாரத்தினை பின்பற்றி சமூக மாற்றத்திற்கு உள்ளாகி தனது குடும்பத்தில் பல்வேறு வகிபங்கினை பெறுகின்றான். அவற்றை பார்க்கையில் தனிமனிதன் ஒருவன் குடும்பம் ஒன்றின் மகன், கணவன், தந்தை எனவும் சமூகத்தில் மதிப்பு பெறும் போது அவன் தன்னை இயல்பாக வெளிப்படுத்திக் கொள்கின்றான்.

குடும்பம் என்பது பல உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவாகும். இவ்வுறுப்பினர்கள் உறவுமுறையால் தொடர்புடையவர்கள் ஆகின்றனர். இதனைப் போல மனிதன் சமூகத்துடன் இணையும், ஒர் உறுப்பினர் ஆகின்றான். சமூகத்தினை விட்டு அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிந்து வாழ்வது என்பது நடைமுறைக்கு சாத்தியம் ஆகாது என கூறினால் அது மிகையாகாது. சமூகத்தில் மனிதன் சம அந்தஸ்துடன் மதிக்கப்படுகின்றான் அவன் தாழ்ந்தவன் உயர்ந்தவன் என பேதம் பார்க்கப்படுவதில்லை. மனிதன், குடும்பம், சமூகம் என செல்லுகின்ற இவ்வமைப்பு பல்வேறு விதமாக அமைப்பாக மாறுகின்றது. மனிதன் சமூகத்தில் தனது வாழ்வை சீர் செய்து கொள்ள அவன் சமூகம் பற்றிய கல்வியையும், சமூகம் பற்றிய அனுபவங்களை பெற வேண்டிய ஏற்படுகின்றது. இவ்வாறு பெறுகின்ற சமூக கல்வியானது உயர்வானதோர் இடத்திற்கு கொண்டு செல்லும் என்பதனை குறிப்பிடலாம்.

சமூக இயைபினை மனிதன் ஏற்றுக் கொள்கின்றான் சமூகத்துடன் தன்னை இணைத்து அதனுள் ஒரு அங்கத்தவர் ஆகின்றான். இவ்வாறு அங்கத்தவர் ஆகையில் அவன் தனக்காக ஓர் சமூக பாதுகாப்பு, சமூக மதிப்பு, அந்தஸ்து என்பவற்றை பெறுகின்றான்.

சமூகத்தில் இணைகின்ற மனிதன் பலவகைப்பட்ட சமூக சூழலை காணுகின்றான். பாடசாலைச் சமூகம், பல்கலைக்கழக சமூகம், தொழில், சமூகம், மாணவர் சமூகம், ஆசிரியர் சமூகம், இளைஞர் சமூகம் என பலவகைப்பட்டன.

மனிதனின் சமூக நகர்வில் மனிதன் தனது ஒவ்வொரு செயற்பாட்டினையும் தனிப்பட்டதாக இருந்தாலும் குடும்பம் சார்பானதாக இருந்தாலும் சமூகத்துடன் அவை ஒத்ததாக அமைகின்றதா? அல்ல முரண்பாடாக அமைகின்றதா? என நன்றாக சிந்தித்தே செயற்படும் அளவு தெளிவானவனாக விளங்குகிறான்.

எனவே மனித சமுதாயத்தில் ஒவ்வொரு மனிதனும் சமூகத்துடன் ஒன்றி சமூகத்தில் ஒரு முக்கியமானவனாகவும் பிரிக்க முடியாதவனாகவும் விளங்குகின்றான் என்பது திண்ணமாகும். மனிதனும் சமூகமும் ஒன்றாக காணப்படுகின்றது. என்பது இன்றைய காலம் வரை தொடர்ந்து கொண்டு வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியும் சமூக நகர்வும்

ஜெ.சிந்துஜா
2015/VNCoE/PE/T/F/3908

சமூக நகர்வு என்றால் என்ன? கேள்வி எல்லோரினது மனதிலும் தோன்றும் ஓர் எண்ணமாகும். அந்தவகையில் சமூக நகர்வு என்பது பற்றி

"சொரக்கின் (Sorokin 1927) கூறுகையில்" "தனியாள் ஒருவர் ஒரு சமூக நிலையிலிருந்து இன்னொரு சமூக நிலைக்கு மாறுதல் சமூக நகர்வு" என்கிறார். மேலும் சமூக நகர்வு பற்றி பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களை கூறியிருந்த போதும், சமூக நகர்வு பற்றிய பொதுவான வரைவிலக்கணமாக,

"ஒரு சமூக வகுப்பிலிருந்து இன்னொரு வகுப்பிறகு அசைவடையும் சமூகமானது திறந்த தன்மையினதாக இருத்தல். இதனை அரசியல், சமயம், மற்றும் சட்டரீதியான ஒழுங்குகள் தடுத்து விட முடியாது. ஆயினும் உயர் சமூக வகுப்பில் சேர்ந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் ஒன்றினை கல்வியினால் மட்டுப்படுத்தப்படும் நிலையே சமூக நகர்வாகும்"

சமூக நகர்வின் பண்புகளாக தனியாட்களில் ஏற்படும் மாற்றம், முன்னேற்றம் என்பது மனிதனின் அடிப்படை இயல்பு. இலட்சிய பூர்வமான முன்னேற்றம் என்பன பண்புகளாக காணப்படுகின்றன. ஒரு தலைமுறையில் நிகழும் நகர்வு, இரு தலைமுறைகளுக்கு இடையிலான நகர்வு என இரண்டு வகையில் சமூக நகர்வு காணப்படுகிறது. கல்வி, ஊக்கல், தொழில் அமைப்பு, வாய்ப்புக்களின் பரம்பல், குடும்பப் பருமன், திருமணம் என்பன சமூக நகர்வில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

பாடசாலையில் சமூக நகர்வானது ஒரு சமூகத்தின் கல்வித்தேவை, கல்விக் கொள்கை மற்றும் சமூக வகுப்பு என்ற அடிப்படைகளில் பல்வேறு பரிணாமங்களை பெற்றுள்ளன. கல்வி நிறுவனங்களில் பங்குபற்றும் வாய்ப்புகளுக்கும் சமூக நகர்வுக்கும் இடையேயுள்ள தொடர்பு பற்றி பெரிய பிரித்தானியாவில் ஆய்வுகளை மேற்கொள்ளும் "டேவிட் கிளாஸ்" குறிப்பிடுகையில் இலக்கணப்பாடசாலைகளில் கல்வி கற்றோர் கூடுதலாகச் சமூக நகர்வுக்கு உட்படுகின்றனர் என எடுத்துக் காட்டியுள்ளார்.

மேலும் தேசிய பதிவாளர் நாயகத்தின் அறிக்கையை அடிப்படையாக கொண்ட 10,000 பேருக்கு ஒருவர் என்ற வகையில் 18 வயதுக்கு மேற்பட்ட 140,000 பேரைக்கொண்ட ஆய்வில் பெரும்பாலான நகர்வுகள் தந்தைமாருடைய நகர்வுக்கு அண்மிய முறையில் அமைந்துள்ளது என்கிறார்.

கல்விக்கும் சமூக நகர்வுக்குமுள்ள தொடர்பினைத் தீர்மானிப்பில் சமூகவகுப்பு செல்வாக்கு மிக்க காரணி என ஆய்வுகள் கூறுகின்றது. சமூக வகுப்புகளிடையே காணப்படும். நெகிழ்ச்சியற்ற தன்மைகளை திறந்துவிடும் ஆற்றல் அல்லது சமூக வகுப்பின் அடிப்படையிலுள்ள தடைகளை அகற்றும் சக்தி கல்விக்கு உண்டென அந்த ஆய்வு கூறுகின்றது.

உலகில் காணப்படும் ஏனைய நாடுகளைப் போலவே இலங்கையிலும், கல்விக்கும் சமூக நகர்வுக்குமான தொடர்புகள் இனங்காணப்பட்டுள்ளன. ஒவ்வொரு கால கட்டத்திலும் கடைப்பிடிக்கப்பட்ட கல்விக்கொள்கைகளும் அவற்றின் நடைமுறைகளும் இருந்துள்ளன. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆங்கிலமொழிக்கொள்கையும், 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து கன்னங்கரா குழுவினரால் விதந்துரைக்கப்பட்ட கல்வி வாய்ப்புக்களில் சமசந்தர்ப்பம் மற்றும் கல்வி முறைகளும் இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் சமூக நகர்வுக்கு வழிகோலின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இலவச கல்வி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் மத்திய வகுப்பைச் சேர்ந்த உயர்தொழிலை வகித்தோரும் அனுபவித்தனர். காலப்போக்கில் இலவசக் கல்வி வாய்ப்புக்களை பின்தங்கிய சமூக வகுப்பினர்களும் பயன்படுத்தக்கூடியதாக இருந்தது. சமூக நகர்வுக்கான அடிப்படைகளை இலவசக்கல்வி வகுத்துக் கொடுத்தது எனலாம்.

இலங்கையில் உயர்கல்வியின் விரிவாக்கத்துடன் ஏற்பட்ட வாய்ப்புகளும் சமூகநகர்வுக்கான இன்னொரு முக்கிய அடிப்படையாக இருந்துள்ளது. உயர் தொழில்களைத் தெரிவு செய்வதற்கு கல்வித்தகைமை முக்கியமான நியதியாக கொள்ளப்பட்ட வேளையில் பல்கலைக்கழகக் கல்வித் தகைமைகள் அவசியமாக இருந்தன.

1972 இன் பின்னர் பொதுக்கல்வி முறையின் கீழ் யாவருக்கும் விஞ்ஞானக் கல்வி, அறிமுகப்படுத்தப்பட்டதால், ஒரு காலகட்டத்தில் விஞ்ஞானக் கல்வி சாதாரண மக்களாலும் அடைந்துகொள்ளத்தக்க அபிலாசையாக மாறியிருந்தமை முக்கியமானதொரு மாற்றமாகும். பூகோள மயமாக்கம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விருத்தி என்பன புதிய வகை தொழில்களை உருவாக்கி வருகின்றன. இவ்வகைத் தொழில்களைச் செய்யக்கூடிய திறனும் ஆற்றலும் கொண்ட மனிதவளத்தினை உருவாக்கும் அடிப்படைகள் எமது கல்வி முறைமையில் இடம்பெறுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகமயமாக்கலின் குடும்பத்தின் பங்கு

க.டனுஜன்
2015/VNCoE/AG/T/M/3947

சமூகமயமாக்கல் என்பது ஒரு நபர் தனது சமூக சூழலின் உள்ள நிலைமைக்கு ஏற்ப இசைவாக்கமடைதல் எனலாம். இங்கு ஒரு நபர் சமூகத்தில் செய்ய வேண்டியவை செய்யக்கூடாதவை எவை என்பது பற்றி கற்றுக் கொள்வார். ஒரு சந்ததியிலிருந்து இன்னொரு சந்ததிக்கு கலாசாரம் கையளிக்கப்படுவதும் சமூகமயமாக்கலின் ஊடாகவே ஆகும். சமூகமயமாக்கலை சமூக இசைவாக்கம் சமூக உரித்தாக்குதல் எனவும் அழைப்பர். மனித சமுதாயத்தின் சமூகமயமாக்கலின் அடிப்படை அலகு குடும்பம் ஆகும். இதுபற்றி சமூக சிந்தனையாளர்கள் பல கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

"சமூகத்தில் ஏற்கப்பட்ட உறுப்பினர் ஆவதற்கு செய்ய வேண்டியவை, செய்யக்கூடாதவை அறிய வேண்டியவை என்பன பற்றி கற்றலே சமூகமயமாக்கல் ஆகும்" (Havinghurest Neugarten)

சமூகமயமாக்கலின் குடும்பம் பாரிய பங்கினை ஒரு நபருக்கு கற்றுக் கொடுக்கின்றது. குடும்பம் என்பது இரத்த உறவாலோ அல்லது (திருமணம், சுவீகாரம்) போன்ற வேறு சட்டபூர்வமான முறைகளிலோ தொடர்புபட்ட ஒரு உறைவிடக் குழுவாகும். அனைத்துலக மனித உரிமைகள் சாசனத்தின் 16(3) ஆவது சரத்து அடிப்படையானதுமான அலகாகும். சமூகத்தாலும் தேசத்தாலும் பாதுகாக்கப்படுவதற்கு தகுதி பெற்றுள்ளது. குடும்பத்தின் வகையினை இரண்டாக நோக்க முடியும்.

நெருங்கிய குடும்பம் என்பது பெற்றோர், மகன்,மகள் ஆகியோரை உள்ளடக்கியதான கருக்குடும்பமாக காணப்படும். மேலும் இவர்களுடன் பெற்றோரின் உடன்பிறப்புக்கள், ஒன்றுவிட்ட உடன் பிறந்தோர் மருமக்கள் போன்றோரும் சேர்ந்து விரிந்த குடும்பத்தின் உறுப்பினர்கள் ஆகின்றனர். பெரும்பாலான சமுதாயங்களில் பிள்ளைகள் சமூகமயமாக்கத்திற்கான முதன்மை நிறுவனமாக குடும்பம் விளங்குகின்றது. உயிரியல் மற்றும் சமூகவியல் அடிப்படையில் நோக்குகையில் குடும்பத்தின் முக்கியமான தொழிற்பாடுகளில் ஒன்று புதிய உறுப்பினர்களை உருவாக்குவதற்கு ஒரு கட்டமைப்பை வழங்குவதாகும். பராமரிப்பு, பேணிவளர்ப்பு, பெற்றுக்கொடுத்தல். ஒழுக்க நல உரிமைகள், உணர்ச்சி பூர்வமான பிணைப்புக்கள் ஆகியவற்றினை பெற்றுக்கொடுப்பதாக அமைகின்றன. மேலும் இரு நபர்களுக்கிடையில் பிணைப்பின் மூலம் பொருளியல் அடிப்படையில் ஓர் ஆக்க பூர்வமான அமைப்பைக் உருவாக்குவதுமாகும்.

பிள்ளைகளைப் பொறுத்தவரையில் குடும்பமானது குடும்ப அமைப்புக்கான ஒரு அறிமுகத்தையும், வழிகாட்டுதல்களையும் வழங்கும் இடமாக இருக்கின்றது. அவன் சமூகத்தோடு சேர்ந்து வாழவேண்டிய கட்டாயத்தன்மையை கொண்டுள்ளான். மனிதன் தனது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் சமூகத்தோடு இடைவினை கொண்டவனாக காணப்படுகின்றான். இதனால் மனிதனை அரிஸ்டோட்டில் சமூகபிராணி என்கின்றார். ஓர் மனிதனை சமூகமயமாக்குவதில் குடும்பம், நண்பர் குழு, உறவுமுறை, பாடசாலை, பல்கலைக்கழகம், திருமணம், ஊடகத்துறை ஆகியன சமூகமயமாக்கலின் நிறுவனமாக காணப்படுகின்றன. ஒரு மனிதனின் சமூகமயமாக்கலின் ஆரம்ப சமூக நிறுவனமாக குடும்பம் காணப்படுகிறது. ஒரு பிள்ளைக்கு முதல் பாடசாலை பெற்றோர்கள் இவர்கள் தான் முதல் ஆசிரியர்கள், ஒரு குடும்பத்தின் கட்டமைப்பானது சீரான முறையில் ஒழுங்கமைக்கப் படாதவிடத்து குடும்பத்தினால் சிறந்த சமூகமயமாக்கலை வழங்கமுடியாது. மனிதனின் வாழ்வை சீராக நெறிப்படுத்துவதற்கு ஆரம்ப சமூகமயமாக்கல் நிறுவனமான குடும்பத்தின் பங்களிப்பு முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம் சிறந்த சமூகமயமாக்கலை வழங்குவதன் மூலம் ஒரு குழந்தையின் ஆளுமை விருத்தி அறிவு, வளர்ச்சி நிலை, நல்ல மனப்பாங்கினை தோற்றுவித்தல், நல்ல ஒழுக்க விழுமியங்களை வளர்த்தல் போன்ற விடயங்களை மேம்படுத்த முடியும். மனிதவாழ்வு சிறப்புற்று சீர்மையடைய குடும்பத்தின் பங்களிப்பானது அவசியமானதாகும். சிறப்பான குடும்பங்கள் நல்ல சமூகத்திற்கான அத்திவாரமாக அமைகின்றன. எனவே ஒரு சமூகத்தின் சமூகமயமாக்கலும் மனிதவாழ்வும் பல்வேறு பிணைப்பினை கொண்டள்ளது. சமூகமயமாக்கல் நிறுவனத்தின் மூலம் மனிதன் நற்பிரஜைகளாக வாழக் கற்றுக்கொள்கின்றான். அதே நேரம் சமூகத்திலுள்ள சமூக நிறுவனங்களும் மனிதனுக்கும் வாழக் கற்றுக்கொடுக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநபர் கணினி என்பது என்ன?

**S. டிலக்ஷன்**
**2015/VNCoE/AG/T/M/4014**

தனிநபர் கணினி எனப்படுவது ஒரு சிறு கணினி P.C.யின் விரிவாக்கம் தனிநபர் கணினி (Personal Computer) இதனை ஒரு தனிநபர் உபயோகிக்கத்தான் உருவாக்கினார். ஆனால் இந்தியா போன்ற நாடுகளில் ஒரு வீட்டில் 4 கணினிகளைப் பயன்படுத்துவது இயலாத காரியம் அதற்கான தேவையும் இல்லாத போது இது வீண்செலவாக தோன்றும் ஆக இன்று ஒரு தனிநபர் கணினியைப் பலரும் பயன்படுத்தலாம். ஆனால் ஒரு தனிநபர் கணினியை ஒரே சமயம் அனைவரும் பயன்படுத்த இயலாது. அதுபோல் ஒரே சமயம் ஒரு தனிநபர் கணினியை பல கணினிகள் தொடர்பு கொண்டு இயக்கலாம். இதைத்தான் லான் மற்றும் வான் இணைப்புக்கள் (LAN AND WAN CONNECTION) என்று கூறுவார்.

**லான் அமைப்பு**

Lan (Local Network) ஒரு குறுகிய தூரத்திற்குள் உள்ள பல கணினிகளை ஒன்றாக இணைத்துச் செயற்படுத்துவது. ஒரே கட்டிடத்தில் உள்ள கணினிகளை ஒன்றாக இணைத்துச் செயற்படுத்துதல்.

**வான் அமைப்பு**

WAN (Wide area Network) வெவ்வேறு இடங்களில் உள்ள பல கணினிகளை இணைத்துச் செயல்படுத்துவது ஓர் வங்கியின் பல கிளைகளில் உள்ள கணினிகளை எல்லாம் ஒன்றாக இணைப்பது.

இவ்வகை லான் அமைப்பு மறறும் வான் அமைப்பு போன்றவற்றை வலை அமைப்புக்குள் உட்படுத்தப்பட்ட கணினிகள் என்று கூறுவார்.

தனிநபர் கணினி என்பது ஒரு திரை ஒரு விசைப்பலகை (கீபோர்ட்), ஒரு சிபியு (சென்டரல் ப்ராஸஸிங் யுனிட்- டவர்) ஒரு கையுருட்டி (மௌஸ்) ஆகிய சாதனங்களைக் கொண்டது. இச் சாதனங்கள் அனைத்தும் ஒரு கணினியின் அடிப்படைப்பகுதிகள் ஆகும். மேலும் தேவைக்கேற்ப பிற சாதனங்களை இணைக்கலாம்.

திரை அல்லது Monitor பல வகைகளில் இன்று கிடைக்கின்றன. இவை அடிப்படையில் கறுப்பு, வெள்ளைத் திரை மற்றும் வண்ணத்திரை என இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மேலும் அளவைப் பொறுத்து ஒவ்வொரு கணினித் திரையின் வலையும் மாறுபடும். ஒரு திரையில் என்பது பத்திகள் (Column) மற்றும் முப்பது வரிகள் (Row) இருக்கும். தனிநபர் கணினித் திரையின் உதவியாலலர்கள் நாம் கணினியின் பயன்களைப் பெறமுடியும். திரையை வெளியீட்டுச் சாதனம் (அவுட்புட்யூனிட்) என்றும் குறிப்பிடுவர். அதாவது நாம் கணினிக்கு அளிக்கும் கட்டளைகளை கணினி நிறைவேற்றி அதன் பதிலை நமக்குத் திரை மூலம் அளிக்கிறது.

வெளியீட்டுச் சாதனம், திரை எனில் உள்ளீட்டுச் சாதனம், விசைப்பலகை, கையுருட்டி ஆகும். இவை பல அளவுகளில் வடிவங்களில் இன்று கிடைக்கின்றன. விசைப்பலகையில் நாம் இழுத்தும் ஒவ்வொரு விசையும் கணினி தனக்கு அளிக்கப்படும் கட்டளைகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்படுகின்றது.

இதைத்தான் "ஆஸ்கிகோடிங் (Asci codeing) என்று குறிப்பிடுவார். ஆஸ்கி என்பது அமெரிக்கன் ஸ்டான்டாடு கோடு பார் இன்பமேஷன் இன்டர்சேன்ஞ்சின் (American Standard code bar information inter change) சுருக்கமாகும். கணினிக்கு நாம் செய்திகளை விசைப்பலகை மூலம் தட்டச்சு செய்கிறாம். இச்செய்திகளுக்குப் பதிலை கணினி நமக்கு உடன் அளிக்கிறது. எடுத்துக்காட்டாய் கணினியிடம் டாஸ் தளத்தில் (Dosmode) இன்றைய தேதி என்ன என்பதை C:/>DATE என்று தட்டச்சு செய்து கேட்கிறோம். ஒவ்வொரு ஆங்கில வார்த்தைகளும் ஏன் விசைப்பலகையில் உள்ள அனைத்து விசைகளுக்கும் (Non Functional Keys) பிரத்தியேக பைனரி சங்கேதங்கள் உள்ளன. ஆக ஆங்கில் மொழியையும் கணினி பைனரி மொழி மூலம் புரிந்து கொள்ளலாம். இந்த மையச் செயற்பாட்டுச் சாதனம் தான் கணினியைச் செயற்படுத்தும் பகுதி ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன தொடர்பியலும் ஊடகங்களும்

ப.சிந்துஜன்
2015/VNCoE/PT/T/M/4015

உலகம் இன்று இயங்குவதற்கே அடிப்படைத் தேவையான விடயம் "தகவல் தொடர்பு" என்பது மறுக்க முடியாத உண்மையாகும். செய்திகளைக் கொடுத்தலும் பெறுதலும் மாத்திரம் தகவல் என்ற எண்ணக்கருவிலிருந்த காலம் சென்று இன்று மனிதனுடைய வாழ்விலே பல பரிமாணங்களில் தகவல் தொடர்பியல் பின்னிப்பிணைந்து விளங்குகின்றது என்ற வகையில் ஊடகங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தன. தகவல் தொடர்பு என்பது இருவழிப்பாதை, பொதுசனத் தொடர்பு சாதனமாக ஊடகங்கள் மக்கள் மத்தியிலே பெரும் வரவேற்பை பெற்ற பின்னர் தகவல் தொடர்பியல் துறை புதிய பரிமாணம் பெற்றிருக்கின்றது.

பொதுவாக தகவல் தொடர்பு என்பது செய்திகளையோ, எண்ணங்களையோ, கருத்துக்களையோ ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொள்ளுவதே ஆகும். அச்செய்தியை அனுப்புபவரும் பெறுபவரும் அதில் முக்கியமானவர்கள். அத்தோடு தகவல்களை அனுப்ப நமக்குப் பயன்படும் ஊடகங்களும் முக்கியமானவையாகும். எனவே இதனை மக்கள் தகவல் தொடர்பியல் என்ற பெயரில் கூறுவர்.

மனிதனானவன் தன்னைப் பற்றிய தகவல்களை மற்றவர்களுக்குத் தெரிவிக்கவும், தனக்கு வேண்டிய தகவல்களை அவ்வவ்போது பெற்றுக் கொள்ளவும் வேண்டிய நிலையில் வாழ்கின்றான். தகவல்களை மனிதன் வார்த்தைகளால் மட்டுமன்றி, தன் செயல்களின் மூலமும் தெரிவிக்கிறான்.

எட்வின் எமதி, அவுட்வோரன், அகி என்பவர்கள் "தகவல்கள், எண்ணங்கள், நடத்தைகள் ஒரு மனிதர் பிறருக்குத் தெரிவிக்கும் கலையையே "தகவல் தொடர்பு" என்கின்றனர். "கம்யூனிஸ்" என்ற இல்லத்தீன் மொழிச் சொல்லிருந்து தான் தகவற்தொடர்பு என்ற சொல் உருவானது. கருத்துக்களைப் பொதுவாக்குவதே தொடர்பியலாகும். இருவர் அல்லது இரு அமைப்பக்களுக்கிடையே நடைபெறுகின்ற செய்திப் பரிமாற்றமும் அதனால் ஏற்படம் தெளிவும் தகவல் தொடர்பு மூலம் கிடைக்கின்றது. தகவல் தொடர்பு என்பது ஒருவழிப் பாதையல்ல அது இருவழிப்பாதை ஆகும். தகவல் தொடர்பில் பங்குகொள்பவர்களைப் பொறுத்து, அதனை நேரடித்தகவல் தொடர்பு- கிசுகிசுத் தொடர்பு வதந்தித் தகவல் தொடர்பு, பொதுமக்கள் தொடர்பு என்ற பல பெயர்களால் வகைப்படுத்தலாம்.

நவீன மக்கள் தகவல் தொடர்பு என்பது ஏனைய பரிமாற்ற முறைகளை விட வலிமை வாய்ந்ததாகும். பிற தகவல் தொடர்புகளில், தகவலானது தனிமனிதருக்கோ, அல்லது சிறு குழுவினருக்கோ மட்டும் அனுப்பப்படுகின்றது. ஆனால் மக்கள் தகவல்தொடர்பில் ஓரே நேரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு தகவல் தெரிவிக்கப்படுகின்றது. ஒரு செய்தியை தகவல்தொடர்பு சாதனங்கள மூலம் ஒரே நேரத்தில் தெரிவிக்கும் போது அதன் தாக்கம் மிகப் பெரியதாக பரிணமித்து எல்லாவற்றையும் சென்றடையச் செய்கின்றது. இன்று முன்னேறியுள்ள உலகத்தில் தொழில்நுட்பத் தகவல் சாதனங்களாக பத்திரிகைகள், வானொலி, திரைப்படம், தொலைக்காட்சி போன்றவற்றின் வழியாக தகவல்களை மிகவிரைவாகவும், எளிதாகவும் மக்கள் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டு விட்டது.

தொழில்சார்ந்த சமுதாயத்தில் நிறுவனமயமாக்கப்பட்ட தொழில்நுட்பத் திறனின் உதவியுடன் பொதுமக்களுக்கு வழங்கும் நோக்கத்தோடு பொதுத் தகவல்களைத் தயாரிக்கும் முறைமையான மக்கள் தகவல் தொடர்பியல், கருத்துப் புரட்சிக்கும் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் தொடர்புகளுக்கு இன்றியமையாததாக விளங்குவதால் இதனை பொருத்தமாகக் கையாள அனைவரும் கற்கின்றனர்.

மக்கள் தொடர்பு சாதனங்களின் இன்று உலகமே ஒரு குடையின் கீழ் சுருங்கிப் போயுள்ளது. வானத்துக்கும் வையத்துக்குமிடையே இணைப்பு ஏற்பட்டுள்ளது. இலங்கையிலும் மக்கள் தகவல் தொடர்பியல், வேலைவாய்ப்புக்கான கல்விகளுள் ஒன்றாக மாறிவருவதால் அனைவரும் இத்துறையில் ஆர்வம் காட்டி வருகின்றனர். பல்கலைக் கழகத்திலும், கல்லூரிகளிலும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் தகவல்தொடர்பியல் ஒரு பாடத்துறையாக விளங்குகின்றது.

எனவே நாம் கண்ட மக்கள் தொடர்பியல் சாதனங்கள் நம்மிடையே விளங்கும் காரணிகளுள் மிகச்சக்தி வாய்ந்தனவாக விளங்குகின்றது என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பறை முகாமைத்துவ உளவியல் நுட்பம்

த.ரினிசாந்தினி
2015/VNCoE/AG/T/F/3953

மனிதப் பண்புகளும் நடத்தைகளும் வேண்டத்தகாத வகையில் மலிந்து காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படும் நிலைமைகளை மாண்புமிக்கதாக மாற்றுவது என்பது இலகுவான காரியமல்ல ஆயினும் இவ்வாறு விட்டு விடவும் முடியாது. சமூகத்தில் ஒரு மாற்றம் ஏற்படுத்த வேண்டுமனால் சமூக நிறுவனமான பாடசாலையினது நிர்வாக முகாமைத்துவ செயற்பாடுகளின் ஊடாகவே மேற்கொள்வது சாத்தியமாகும் என்பது கல்விமான்களின் நம்பிக்கையாகவுள்ளது.

கற்பித்தல் நடவடிக்கைகளில் வகுப்பறை முகாமைத்துவம் மிகவும் முக்கியமானதாகும். இல்லாவிடின் எந்தவொரு சிறந்த ஆசிரியராலும் உரியமுறையில், உரிய காலத்தில்,உரிய பாடத்தினை நடாத்தி முடிக்க இயலாது அத்துடன் மாணவர்களையும் கட்டுப்படுத்த இயலாது போகும். இந்த வகையில் வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பாக "ஸ்டோனர் சிறிமன்" மற்றும் "கில்பா" 1990இல் முகாமைத்துவம் என்பது அமைப்பு ஒன்றின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அந்த அமைப்பிலுள்ள மனித மற்றும் ஏனைய வளங்களைத் திட்டமிடுதல் ஒழுங்கமைத்தல், வழிநடத்துதல் மற்றும் நிருவகித்தல் போன்ற விடயங்கள் அடங்கிய செயற்பாடுகள் எனக் குறிப்பிட்டார்.

வகுப்பறையில் மாணவர்களிடையே உறவு வலிமை பெறவேண்டுமானால் தெளிவான நோக்கமும் திடமான வழிகாட்டுதலும் வினைத்திறனான அறிவுறுத்தல்கள் நிறைவான கூட்டுறவு, மாணவர் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றுதல் மாதிரியமைத்தல் போன்ற அம்சங்களைக் கடைபிடித்தல் முக்கியமாக எதிர்பார்க்கப்படுகின்றன. வகுப்பறையில் மாணவர் தொடர்பான வீட்டுப்பாடம், கற்பித்தல் முறைகள் வழங்கப்படும் வெகுமதிகள் புதிய மாற்றங்களை உள்வாங்குதல், வகுப்பறை வேலைகள் அர்ப்பணிப்புடன் செயற்படுதல் வரவேற்கப்படுகின்றன.

வகுப்பறையில் பல்வேறு உளவியல் உபாயங்களை பயன்படுத்துவதன் மூலம் மாணவர்களை அரவணைத்து இலகுவாக கற்றலையும் சீரான மேம்பாட்டினையும் ஏற்படுத்த முடியும். மாணவர்கள் செயன்முறையில் கற்பதற்கும் வலிந்து கற்கின்றோம் என்ற உணர்வின்றி மகிழ்ச்சியுடன் விளையாடிக் கற்கின்றோம் என்ற நவீன கற்பித்தல் முறைகளே மிகவும் அவசியமானது இன்றைய காலகட்டத்தில் வன்சொற்களையும் மாணவர்கள் விரும்புவதில்லை என ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. இன்று சட்டமும் இதனையே வலியுறுத்துகின்றது.

இன்று பாடசாலை வகுப்பறைகளிலும் ஏனைய நிறுவனங்களிலும் வன்மையான உறவு முறைகளே காணப்படுகின்றன. உதாரணமாக வாடா, போடா, போடி, வாடி, நாயே, சனியனே. முன்பள்ளி முதல் உயர்தரம் வரை மாணவர்களை பன்மையில் பண்புடன் அழைத்து உறவாடும் போது உறவு மேம்படும்.

மாணவர்களை வழிநடத்துதற்காக பயன்படுத்தப்படும் சமூகமயமாக்கல் நுட்பங்களைக் கூட நேரானவை, எதிரானவை என பிரிக்கலாம் ஆலோசனை, மதித்தல், பணிதல் ஏற்புடையதாதல் சம்மதித்தல், அறிமுகம் செய்தல் என்பன நேரான நுட்பங்கள் ஆகும். இவையே பொருத்தமானவை என கூறப்பட்டுள்ளன. மற்றும் எச்சரிக்கை செய்தல், குறைகூறல், உடனுக்குடன் தண்டனை, அனுதாபம் போன்றவை எதிரான நுட்பங்கள் எனவும் பொருத்தமானவை எனவும் கருதப்படுகின்றன.

மேலும் எதிர்மறையான தூண்டல்கள், ஊக்குவிப்புக்கள், வழிகாட்டல்கள் எதிர்காலத்தில் அவர்களை சமூக விரோதச் செயல்களில் ஈடுபட ஊக்குவிக்கின்றன.

சமூக விரோதச் செயல்களாக களவு எடுத்தல், கொலை செய்தல், கடத்தல்களை மேற்கொள்ளல், டைனமற் பயன்படுத்தி மீன் பிடித்தல், ஆபாசப்படத்தயாரிப்பில் ஈடுபடுதல் போன்ற சட்டத்துக்கு முரணான குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கின்றனர். இன்று இது போன்ற நபர்களால் சமூகம் சீரழிந்து செல்கிறது. முன்பள்ளி முதல் பாடசாலை காலம் வரையான முதல் மாணவர்களை அவதானித்து வழிநடத்தல்களை மேற்கொள்ள வேண்டும். ஆகவே வகுப்பறை முகாமை என்பது பரந்து பட்ட பல்வேறு உளவியல் உபாய நுட்பங்களால் நடாத்தப்பட வேண்டியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு உளவியல்

G.கௌசல்யாதேவி
2015/VNCoE/PE/PE/T/F/3904

உடலில் நடைபெறும் ஒவ்வொரு உயிரியல் செயற்பாடும் மனிதனால் வழி நடத்தப்படுகின்றன. உளச் செயற்பாட்டுத்திறன்களுடன் இணைக்கப்பட்ட உடற் செயற்பாடுகள் அவற்றின் முக்கியத்துவம் காரணமாக வளமாகக் கொண்டு எல்லா விளையாட்டுச் செயற்பாடுகளையும் விளக்க உதவுகின்றன. உளத்தின் இயற்கையான சுபாவமானது பலவிதமான எண்ணங்களினால் நிறைந்திருத்தலாகும். இப்படியான உளமானது விளையாட்டு செயற்பாடுகளுக்கு ஆபத்தானதாகும். ஆகையால் நிலையான உளம் மிகவம் அவசியமானதாகும். உளச் சமனிலை என்றால் விளையாட்டின் மூலமாக ஒரு மனிதனுடைய உள்ளத்தில் ஏற்படுகின்ற நடத்தை மாற்றங்களை ஆராய்வதே ஆகும். ஒரு விளையாட்டு வீரர் விளையாட்டு செயற்பாடுகளின் போது அவரது நடத்தையில் ஏற்படும் மாற்றங்களை விஞ்ஞான ரீதியாக ஆராயும் ஓர் இயல் என்பது எனது கருத்தாகும்.

உடற்கல்வி ஆசிரியர்கள் பூரணமாக விளையாட்டு உளவியல் பற்றி அறிந்து கொள்ளல் மிகவும் அவசியமானது. விளையாட்டு உளவியல் பற்றி உடற்கல்வி ஆசிரியர் மட்டுமல்ல விளையாட்டு வீரர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள், பார்வையாளர்கள், நடுவர்கள் போன்றோர் அறிந்து வைத்திருத்தல் மிகவும் கட்டாயமானதொன்றாகும்.

விளையாட்டு வீரர் ஒருவர்க்கு விளையாட்டு உளவியல் ஏன் அவசியம் என்பது பற்றி நோக்குவோம். வெற்றி தோல்விகளை சகித்தும், தனது திறன்களை மேலும் விருத்தி செய்து கொள்ளுவதற்கும், சுயமாக தன்மை மதிப்பீடு செய்வதற்கும், ஏனைய போட்டியாளர்களுடன் சுயமாக தன்னை மதிப்பீட்டு செய்வதற்கும், ஏனைய போட்டியாளர்களுடன் சுமூகமாக ஒற்றுமையாக தொடர்புகளை பேணுவதற்கும், பயம், பதகளிப்பு, போன்ற தன்மைகளை நீக்குவதற்கும், குழுவாக இணைந்து செயற்படுவதற்கும், மனப்பாங்கு விருத்திக்கும், ஆளுமை விருத்திக்கும் பிரச்சினை தீர்வு காண்பதற்கும் இது அவசியமாகின்றது.

ஒரு பயிற்றுவிப்பாளனுக்கு விளையாட்டு உளவியல் பற்றி அறிவு அவசியமாகின்றது, ஏன் எனின் விளையாட்டு வீரனது பலம் பலவீனங்களை அறிந்து அதற்கு ஏற்ப பயிற்றுவிப்பதற்கும், சரியான நேரத்தில் சரியான முடிவினை எடுப்பதற்கும், விளையாட்டு வீரனது மன அழுத்தத்தை குறைப்பதற்கும், கவனக்குறைவுகளை திருத்துவதற்கும், சரியான பயிற்சி ஆலொசனை வழங்குவதற்கும், ஒரு பயிற்றுவிப்பாளன் விளையாட்டு உளவியலை அறிந்து இருப்பது சிறந்ததாகும்.

இவ்வாறு தீர்ப்பாளர் ஒருவரும் விளையாட்டு உளவியல் பற்றிய அறிவினைப் பெறுவது சிறந்ததாகும், அதாவது திறமையான விளையாட்டு வீரர்களை இனங்கண்டு அவர்களுக்கான வாய்ப்புக்களையும், சரியான முடிவுகளையும் வழங்குவதற்கும், நடுநிலையாகவும் பக்கச்சார்பு இல்லாமல் விளையாட்டு செயற்பாடுகளில் செயற்படு வதற்கும், சகிப்புத் தன்மையை ஏற்படுத்துவதற்கும் மட்டுமல்லாது தன்னம்பிக்கை ஏற்படுத்துவதற்கும் தேவைப்படுகின்றது. இதுபோன்று பார்வையாளர்களும் விளையாட்டு உளவியல் பற்றி அறிந்து இருத்தல் வேண்டும். அமைதியாகவும், பொறுமையாகவும் விளையாட்டுக்களை பார்ப்பதற்கும் தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களை பிரயோகிக்காமல் இருப்பதற்கும், போட்டியாளர்களை ஊக்குவிப்பதற்கும் வெற்றி தோல்விகளை ஏற்று கட்டுபட்டு நிகழ்வினை பார்ப்பதற்கும், மனவெழுச்சிகளை கட்டுப்படுத்து வதற்கும் அதனை வெளிக்காட்டுவதற்கும், எதிரணியினரின் திறன்களை மதிப்பீடுவதற்கும் விளையாட்டு உளவியல் அவசியமாகின்றது. இவ்வாறு இவர்கள் மட்டுமல்லாது அனைவரும் விளையாட்டு உளவியல் பற்றி அறிந்து இருப்பது சிறந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்லாது உளத்தகைமையை விருத்திச் செய்து கொள்ள விளையாட்டு உளவியல் அவசியமாகும். செஸ், டாம் போன்ற விளையாட்டுக்களில் பங்குபற்றல் தியானம் செய்தல், யோகப் பயிற்சிகளில் ஈடுபடுதல் போன்றவை மூலம் உளத்தகைமையை விருத்தி செய்துக் கொள்ளலாம். விளையாட்டுக்களில் விரைவாக எடுக்கும் சரியான தீர்மானங்கள் மிக முக்கியமானவையாகும். இவ்வாறான நல்ல பண்புகளை மாணவர் அடைவதற்கென சிறுசிறு விளையாட்டுக்கள் சில உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுத்தல் மற்றும் மனவெழுச்சிக்கு கட்டுப்பாடு நோய் நொடிகளிலிருந்து பாதுகாப்பு போதுமான அளவு ஓய்வு நித்திரை சிறப்பான உளநிலை என்பன கிடைக்கும்.

வகுப்பறைகளில் பல்வேறு விளையாட்டுக்கள் ஊடாக கற்பிப்பதன் மூலம் அனுபவரீதியான கற்றல் மேற்கொள்ளப்படுகின்றன. விளையாட்டு செயற்பாடுகளில் ஈடுபடும் போது குறிப்பிட்ட நாள் முழுவதும் உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் காணப்படுவதனால் ஏனைய செயற்பாடுகளில் தாமதமின்றி சிறப்பாகவும் வித்தியாசமாகவும் சிந்திக்க முற்படுவார்கள் மேற்படி விடயங்களை கருத்திற் கொண்டு உடற்கல்வி ஆசிரியர் செயற்படுவாரானால் சிறந்த விளையாட்டு சமூகத்தை உருவாக்க வழி சமைக்கும்.

"ஆர்வம் வெற்றியின் நுழைவாயில் வெற்றி பெற வேண்டுமென்ற பதற்றம் இல்லாமல் இருப்பது தான் வெற்றி பெறுவதற்கான சிறந்த வழி" - அப்துல்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்மனதும் பழக்கவழக்கங்களும்

## (Subconscious Mind and Habits)

தே.நிரோசியா
2015/VNCoE/CH/T/F/3875

நாமெல்லாம் வெற்றிகரமாக வாழவே பிறந்திருக்கின்றோம். ஆனால் நமது வளர்ப்புமுறை நம்மைத் தோல்வியைத் தழுவுமாறு செய்து விடுகிறது. நாம் வெற்றி பெறவே பிறந்திருக்கின்றோம். ஆனால் தோல்வியடையவே வளர்க்கப்படுகின்றோம். இவர் அதிஷ்டசாலி, இவர் தொடுவதெல்லாம் விளங்குகின்றது அல்லது இவர் தொடுவதெல்லாம் நாசமாகிப் போகின்றது. என்று நாம் அடிக்கடி பிறர் சொல்லிக் கேட்டிருக்கின்றோம். ஆனால் இது உண்மையில்லை. நீங்கள் ஆராய்ந்து பார்த்தால், வெற்றிகரமாக மனிதன் ஒவ்வொரு முறையும் அதே தவறை மீண்டும் மீண்டும் செய்கின்றான். பயிற்சி மட்டுமே எதையும் முழுமையடையச் செய்து விடாது என்பதை மறந்து விடாதீர்கள். சரியான முழுமையான பயிற்சியே எதையும் முழுமையடையச்செய்யும். நீங்கள் எதை மீண்டும் மீண்டும் செய்கின்றீர்களோ அதைப் பயிற்சி நிரந்தரமாக்கி விடுகிறது. சிலர் தவறுகளைப் பயிற்சி செய்து கொண்டிருப்பதால் அவற்றில் அவர்கள் முழுமையடைந்து விடுகிறார்கள். ஆகவே அவர்கள் தவறுகள் முழுமையாகவும்,தன்னியல்பாகவும் ஆகிவிடுகின்றன.

ஒரு பழக்கத்தை வளர்ப்பது என்பது நிலத்தை உழுவது போன்றது அதற்குச் சிலகாலம் பிடிக்கும். இது உள்ளிருந்து வளர வேண்டும். இந்தப் பழக்கங்கள் மற்றப் பழக்கங்களை உருவாக்கும். ஒரு மனிதனை துவங்க வைப்பது அகத்தூண்டுதலாகும். அவனைச் சரியான பாதையில் செலுத்துவது செயல் தூண்டுதலாகும். தன்னியல்பாய் அதைச் செய்ய வைப்பது பழக்கமாகும்.

துன்பமான காலங்களில் தைரியத்தைக் காட்டும் திறனும், இச்சைப்படும் போது சுயகட்டுப்பாட்டைக் காட்டும் திறனும், தடைகள் ஏற்படும் போது வாய்ப்புக்களைப் பார்க்கும் திறனும் தற்செயல் நிகழ்வுகள் இல்லை.

இவை மனரீதியிலும், உடல்ரீதியிலும் தரப்பட்ட நிலையான, மாறாத, இடைவிடாத பயிற்சியின் பயனே ஆகும். துன்பத்தை எதிர்கொள்ளும் போது, நமது நடத்தை நாம் பயிற்சி செய்தது போலத்தான் இருக்கும். அது நல்லதாக இருந்தாலும் சரி அல்லது. தீயதாக ,ருந்தாலும் சரி அற்பமான சிறுசிறு விடயங்களுக்கு எல்லாம் கோழைத்தனம் அல்லது நேர்மையின்மை போன்ற எதிர்மறைத் தன்மைகளைப் பயிற்சி செய்து விட்டு, பெரிய விஷயங்களை நல்லவிதமாகச் செய்துவிடலாம் என்று எண்ணினால், அது நடக்கவே நடக்காது, ஏனெனில் அதைத்தான் நாம் பயிற்சி செய்யவே இல்லையே.

ஒருமுறை நாம் பொய் சொல்ல ஆரம்பித்து விட்டால், அதே பழக்கமாகி, இரண்டாவது மூன்றாவது முறை அதைச் சொல்வது மிகச் சுலபமாகி விடும். வெற்றி என்பது நீடித்துத் தாக்குபிடித்தல், விலகி இருத்தல் என்ற தத்துவத்தில் இருக்கிறது. பழக்கமாகும் வரை, எதைச் செய்ய வேண்டுமோ அதை நீடித்துத் தாக்குப் பிடிக்க வேண்டும். எது தீங்கானதோ அதிலிருந்து விலகி இருக்க வேண்டும். அதுவே பழக்கமாகி விடும். மனிதப்பிறவி அறிவுபூர்வமாக இருக்கிறது என்று சொல்லலாம். சேர்மை, நாணயம் ஆகிய இரண்டும் நமது நம்பிக்கை அமைப்புக்களின் பலனும், நமது பயிற்சிகளின் பலனும் ஆகும். பல நாட்களாக நாம் பயிற்சி செய்கிற எதுவும் நமது அமைப்பில் ஆழமாகப் பதிக்கப்பட்டு பழக்கமாகி விடுகிறது. எப்போதும் உண்மையே பேசவும் ஒருவர் முதல் முறையாக ஒரு பொய்யைச் சொல்லும் போது பிடிபட்டு விடுவார். அதேபோல், எப்போதுமே நேர்மையில்லாமல் பொய்பேசும் ஒருவர் முதல் முறையாக உண்மை பேசும்போது தெரிந்து விடுகிறது. தன்னிடமும் பிறரிடமும் சொல்லும் உண்மையோ பொய்யோ பழக்கமாகி விடுகின்றன.

நமது சிந்திக்கும் முறையே பழக்கமாகி விடுகின்றது. நாம் பழக்கவழக்கங்களை உருவாக்குகிறோம். பழக்கவழக்கங்கள் பண்பை உருவாக்குகின்றன. நீங்கள் ஒரு பழக்கத்தைப் பெற்றிருக்கிறீர்கள் என்று நீங்கள் அறியும் முன்னமேயே அந்தப்பழக்கம் உங்களிடம் குடிபுகுந்து விடுகிறது. சரியாகச் சிந்திக்கும் பழக்கத்தை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

நமது எண்ணங்கள் செயல்களைச் செய்ய வைக்கின்றன. செயல்கள் தங்கள் பங்கிற்குப் பழக்க வழக்கங்களை உருவாக்குகின்றன. பழக்க வழக்கங்கள் பண்பை உருவாக்குகின்றன. பண்பே நமது தலைவிதியை நிர்ணயிக்கின்றது. எனவே நமது மனதில் நல்ல சிந்தனைகளை வளர்ந்த நற்பண்புகளை விருத்தி செய்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரின் சுழற்சி

**M.K.M சவ்ஜான்**
**2015/VNCoE/AG/T/M/3929**

நீரின் சுழற்சி பற்றி நிகழ்கால மனிதன் அறிந்திருக்கும் கோட்பாட்டை "பெர்னார்டு பாலிஸி" (Bernard palissy) என்பவர்தான் முதன் முறையாக கி.பி 1580 இல் விளக்கிச் சொன்னார்.

சமுத்திரத்திலுள்ள நீர் எவ்வாறு ஆவியாக மாறிக் குளிர்ந்து கருமுகிலாய் உருவெடுக்கின்றது என்பதை அவரே விளக்கி கூறியுள்ளார்.

உருண்டு திரண்ட வெண்முகில்கள் நிலத்தை நோக்கி மெல்ல நகர்கின்றன. கடலிருந்து உயர எழுந்து குளிர்ந்து கெட்டியாகி நிலத்தில் மழைத்துளிகளாய் விழுகின்றன.

இவ்வாறு நிலம் நோக்கி விழுந்த மழைத்துளிகள் ஏரிகளாய், நதிகளாய் மாறி மீண்டும் சமுத்திரத்திற்கே திரும்பிச் செல்கின்றன. இவை தொடர் சுழற்சியை நிகழ்த்தி வருகின்றன.

கி.பி 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த மிலடஸ் நகரைச் சேர்ந்த தேல்ஸ் (Thales of miletus) என்பவர் சமுத்திரத்தின் மேற்பரப்பில் உள்ள நீர்த்திவலைகள் காற்றின் வாயிலாக எடுத்துச் செல்லப்பட்டு நிலம் நோக்கி மழைத்துளியாய் விழுகின்றது என்று நம்பினார்.

ஆரம்ப காலங்களில், நிலத்தடி நீரின் நிலை குறித்த அடிப்படை அறிவை மக்கள் அடைந்திருக்கவில்லை.

காற்றின் விளைவால், சமுத்திரத்தின் நீர் நிலம் நோக்கி பாய்ச்சப்படுகின்றது என்றே மக்கள் எண்ணினார் மேலும் நீரானது ஓர் இரகசியப்பாதை வழியே அல்லது பெரும் படுகுழிவழியேதான் மீண்டும் சமுத்திரம் நோக்கி திரும்பிச் செல்கின்றது என்று நம்பினர்.

சமுத்திரத்தை இணைத்து நிற்கும் இந்த இரகசியப் பாதையைப் அறிஞர் பிளேட்டோவின் (Plato) காலம் தொட்டு "டார்ட்டாஸ்" (Tartarus) என்று மக்கள் அழைத்து வந்தனர்.

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் சிந்தனையாளரான டெக்கார்ட் (Descoates) கூட இக்கருத்தினையே ஆதரித்து நின்றார். பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை அரிஸ்டோட்டில் (Aristole) எடுத்துரைத்த நீரியல் கோட்பாடே நின்று நிலவியது.

இந்நிதியில் கோட்பாட்டில் நீரானது குளிர்ந்த மலைப்பொதும்புகளில் உறைந்து நிலத்தடி நீர் நிறைந்த ஏரிகளாய் உருவாயின. அந்த ஏரிகளோ நீரூற்று பொங்கிப் பாய உதவின என்று கருதப்பட்டது.

ஆனால் பூமியின் பிளவுகளில் கசிந்து உட்புகும் மழை நீரே ஏரிகளும் நீரூற்றுக்களும் தோன்றக் காரணமாய் உள்ளது. பின்வரும் திருக்குர் ஆன் வசனங்களில் நீரின் சுழற்சி குறித்து விளக்கப்பட்டுள்ளது.

நீர் பார்க்கவில்லையா, அல்லாஹ் வானத்திலிருந்து நீரை இறக்கி அதனை பூமியில் ஊற்றுக்களில் ஓடச் செய்கின்றான். அதன்பின் அதைக் கொண்டு வெவ்வேறு நிறங்களை உடைய பயிர்களை வெளிப்படுத்துகின்றான். அப்பால் அது உலர்ந்து மஞ்சள் நிறமுடையத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ாகிறதை நீர் பார்க்கிறீர் பின்னர் அதைக் கூளமாகச் செய்து விடுகின்றான் நிச்சயமாக அதில் அறிவுடையோருக்குப் படிப்பினை இருக்கிறது. (சூரா: அஜ்ஜிம்மா வசனம் 21)

"அச்சமும் ஆசையும் ஏற்படும்படி அவன் உங்களுக்கு மின்னலைக் காட்டுவதும் பிறகு வானத்திலிருந்து மழை பொழியச் செய்து அதைக் கொண்டு பூமியை - அது (வரண்டு) இறந்த பின்னர் உயிர்ப்பிப்பதும் அவன் அத்தாட்சிகளினின்றும் உள்ளன. நிச்சயமாக அதில் சிந்தித்துண்டும் சமூகத்திற்கு அத்தாட்சிகள் இருக்கின்றன. (சூரா: அர்ரூம் வசனம் 24)

'மேலும் வானத்திலிருந்து நாம் திட்டமான அளவில் (மழை) நீரை இறக்கி அப்பால் அதனைப் பூமியில் தங்க வைக்கிறோம். நிச்சயமாக அதனைப் போக்கிவிடவும் நாம் சக்தியுடையோம்" (சூரா: அல்மு.்.மினூன் வசனம் 18)

ஆயிரத்து நானூறு (1400) ஆண்டுகளுக்கு முன்னர் நாமறிந்த வகையில் எந்த ஒரு மூல நூலும் (Text) நீரின் சுழற்சி குறித்து அவ்வளவு துல்லியமாக குறிப்பிடவில்லை எனக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்றாட வாழ்வில் உளவளத்துணை

இராஜரட்ணம் சகாயதேவி
2015/VNCoE/T/F/CH/3874

வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் மனிதன் ஏதோ ஒரு உளம்சார் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டி உள்ளது. அவ்வாறு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் போது மனதில் ஏற்படும் எண்ணங்கள், உள்ளத்தில் உண்டாகும் போராட்டங்கள் ஏராளம். புறக்காரணங்களால் உண்டாக்கப்படும் பிரச்சினைகள் மட்டும் அல்லது தனிமனித உள்ளத்துள் உருவாகும் தனிமை எனும் நிலையும் கடினமானது.

முப்பது வருடங்களுக்கும் மேலாக கொடூரமான யுத்தத்திற்குள் சிக்குண்டு பலவிதமான இழப்புகளுக்கும் இழிவுகளுக்கும் கசப்பான அனுபவங்களுக்கும் முகம் கொடுத்து வெந்து நொந்து போன உறவுகளுக்காக மீண்டும் வெந்தபுண்ணில் வேல்பாய்ச்சிய அனுபவம் சுனாமி தந்த உளப்புண்களால் வாழ்வே ஊனமாய் மாறிவிடும் அபாயம். இழப்புக்களை ஏற்றுக்கொண்டு மீண்டும் எழுவோம் என்ற மன உறுதியுடன் எம் உறவுகள் வாழ உளவளத்துணையயே அவசிய சேவை என பலரும் உணருகின்றனர். இப்போது மட்டுமல்ல எப்போதுமே எம் மக்களுக்குத் தேவையானது உளவளத்துணை.

தமிழ் சமுதாயத்தைப் பொருத்தமட்டில் கூட்டுக்குடும்ப வாழ்வு சில மட்டங்களில் சவால்களுக்குள் சிக்குண்டாலும் அதிகமாக கட்டிக்காக்கப்பட்டு வருவதால் இழப்புக்களுக்கு உட்பட்டு மனமுடைந்திருக்கும் உறவுகளுக்கு உறுதுணையாகவும், ஏற்படும் இழப்புக்களை ஏற்றுக் கொள்ளவும் ஆற்றுப்படுத்தல் இடம்பெறுகின்றது. இழப்புக்களில் இருந்து வெளியேறுவதற்கான வழிப்படுத்தல்களைச் செய்வதற்கான வாய்ப்புகள் அதிகம் நிலவுகின்றதெனக் கூற முடியாது.

"உளவளத்துணை என்பது ஆலோசனை கூறுவதல்ல மாறாக பாதிப்பிற்கான காரணிகளைக் கண்டு அவற்றுக்கு முடிவு காண நபரையே வழிப்படுத்தல் ஆகும்" இது யுத்தத்தால், சுனாமியால் பாதிப்புற்று வாழ்வின் விரக்தியில், மீள முடியாத துயர்களோடு துயில் கொள்ளவும் முடியாமல் துன்பப்படும் எம் உறவுகளுக்கு வாழ்வில் நம்பிக்கையும், மகிழ்ச்சியும், அமைதியும் கொடுக்கும் சிறந்த கலையாக உளவளத்துணை விளங்க முடியும். அத்தோடு தேவை ஏற்படும் போது சிறந்த உளச்சிகிச்சையும் வழங்க முடியும்.

இவ் உளவளத்துணையானது யாருக்கு தேவை? மனநோயாளிகளுக்கும், உளப்பாதிப்புற்றோருக்கும், பைத்தியகாரருக்கும் தான் தேவை. இப்படியா எண்ணுகிறீர்கள், அப்படித்தான் நானும் எண்ணினேன். ஆனால் உளவளத்துணை உணர்ச்சிசிக்கல்களுக்கும் அவசியமானது என்பதை பலரும் பல மட்டங்களில் உணருகிறார்கள்.

துன்பமில்லா மனிதன் மண்ணகத்தில் இல்லை சாவில்லா வீடு சரித்திரத்தில் இல்லை, நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு கட்டத்தில் விரக்தி, வேதனை, மனச்சிக்கல், கவலை, இழப்பு, பொருளாதார நெருக்கடி என்பவற்றை சந்திக்கின்றோம்; அனுபவிக்கின்றோம். எம் ஆளுமையின் வளர்ச்சியை எந்தளவிற்கு இவை பாதிக்கின்றன என்பதை நாம் உணர்வதில்லை.

பாடசாலையில் மாணவன் ஒரே நித்திரை
மற்றப்பிள்ளைகளுடன் அவள் சண்டை பிடிக்கின்றாள்
அவள் பெற்றோரை இழந்த கவலையில் இருக்கின்றான்.
அவருக்கு யாருமே இல்லை.
பதினெட்டு வயதுப்பிள்ளை நித்திரையில் ஒடுகின்றாள்
பிள்ளைகளையும் மனைவியையும் பறிகொடுத்த நிலையில் சோகமே அவர் வாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் வேலை முடிந்து குழப்பத்துடன் வருகின்றார்.
காலையில் கவலையுடன் மனைவி எழுகின்றார்.
பாடசாலைப் பையை பிள்ளை தூக்கி எறிகிறது.
கணவனுக்கு மனைவியின் உறவில் நாட்டமில்லை.

இப்படியான குழப்ப நிலைகளை நாம் அன்றாடம் காண்கின்றோம், அனுபவிக்கிறோம். இவர்களுக்கு உளவளத்துணை தேவை, ஆரோக்கியமான சூழலை அவர்களுக்கு அமைத்துக் கொடுக்க வேண்டும்.

உளவளத்துணையின் முக்கிய மூன்று பண்புகள் செல்வாக்கு செலுத்துகின்றன. எம்மில் இருப்பதை, நாம் செய்வதை சில சந்தர்ப்பங்களில் தவறுவதை, அழுத்தம் திருத்தமாக அழகிய மொழிநடையில் அனைவருக்கும் விளங்கும் விதமாக அவற்றை முக்கியப்படுத்திக் கூறுகின்றார். உளவியலாளர் கால்றொஜர். எதுவும் புதிதாக இவர் கூறவில்லை. பல பண்புகளை இவர் முன்வைத்துள்ளபோதும் இம்மூன்று பண்புகளும் எமக்கு அவசியமானதாய், அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டியதாய் அமைகின்றது. அவையாவன.

1. நிபந்தனையற்ற மதிப்பு
2. உண்மைத்தன்மை
2. ஒத்துணர்வு

1. நிபந்தனையற்ற மதிப்பு:

நாம் சந்திப்பவர் அல்லது எம்மிடம் வருபவர் யாராக இருந்தாலும் அவர்களை மதிக்க வேண்டும். ஆண் - பெண், ஏழை- பணக்காரர், தாய் -தந்தை, சிறுவர் - பெரியவர், படித்தவர் - படிக்காதவர், பிள்ளைகள் - மாணவர்கள், நண்பன் - நண்பி, முதலாளி - தொழிலாளி யாராயினும் மதிக்க கற்றுக் கொள்ள வேண்டும். ஒரு பிள்ளையின் பலம், பலவீனம் நிறைந்த ஆளமையை பெற்றோர், ஆசிரியர் மதிக்காது விட்டால் அவர்களால் பெற்றோரை, ஆசிரியரை அணுகமுடியாது. சில பெற்றோர் தம் பிள்ளைகளை நிபந்தனையுடன் மதிக்க முற்படுகின்றார்கள். தாங்கள் சொல்வதை பிள்ளைகள் செய்ய வேண்டும் என நினைத்திறார்கள். நிலைமை மாறி அமைகின்ற போது ஆத்திரமடை கின்றார்கள், மனமுடைந்து போகின்றார்கள் வேண்டாத வார்த்தைகளால் திட்டுகிறார்கள்.

எமது சமுகத்தைப் பொறுத்தமட்டில் சிறப்பான உறவுப்பாலம் கூட்டுக்குடும்ப கட்டமைப்புக்குள் இருப்பதனால் ஒருவரை ஒருவர் நிபந்தனையற்ற விதமாக அன்பு செய்யவும், கவலைகளை பகிர்ந்து கொள்ளவும் ஏதுவான சூழல் அதிகமாக உண்டு. அத்துடன் வீட்டிலும், அயலிலும் இழப்புக்கள் ஏற்படும் போது, விபத்துக்களை சந்திக்க நேரிடும் போது ஒருவரை ஒருவர் தாங்கிக் கொள்ளும் விதமாக ஓடிச் செல்கிறோம். கரிசனையுடன் விசாரணைகள் செய்கின்றோம். பாதிக்கப்பட்டவர் மனப்பாரங்களை பகிரும் சூழல் உருவாக்கப்படுகின்றது.

எம்மிடம் வருபவர் யாராயினும், எம்மிடம் தொடர்பு கொள்பவர் எவராயினும் எதுவித நிபந்தனைகளும், எதிர்பார்ப்புக்களும், தடைகளும் இன்றி மதிக்கப்பழகிக் கொள்வது முக்கியமாகும்.

**2. உண்மைத்தன்மை:**

நம்மிடம் தம் மனவடுக்களை வாழ்க்கைப் பிரச்சினைகளை உள நெருக்கீடுகளை பகிர்ந்து கொள்பவர்களுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். சிலர்தம் வாழ்க்கைப் பிரச்சினைகளை மனக்கவலைகளை நம்பிக்கைக்குரியவரிடம் மாத்திரமே கூறுவர். யார் இரகசியத்தைக் காத்துக் கொள்பர்கள் தமக்கு யார் உண்மையுள்ளவராய் இருப்பார்கள் என எண்ணுபவர்களிடம் மாத்திரமே எதையும் பகிர்ந்து கொள்வர்.

சில குடும்பங்களின் கணவன், மனைவி இருவரும் மனம் திறந்து பேசி தம் விருப்பு வெறுப்புக்களை உளச் சிக்கல்களை வாழ்க்கைப் பிரச்சினைகளை ஒருவர் ஒருவருடன் பகிர்ந்து ஒருவர் ஒருவருக்கு துணையாக வாழ்கிறார்கள். ஆனால் பல குடும்பங்களில்? சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் பெற்றோரிடம் தம் எதிர்பார்ப்புக்களை தம் வாழ்க்கைப் பிரச்சினைகளை கதைக்கின்றார்கள். பெற்றோரும் தம் கஷ்டங்களை பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்கிறார்கள். இது ஒரு மகிழ்ச்சிக்குரிய போற்றுதலுக்குரிய ஆரோக்கியமான நிலை. இதற்கு அடிப்படையில் அமைவது அவர்களிடையே நிலவும் உண்மைத்தன்மை. இது இருக்கும் போது தான் நபர்களிடையே நம்பிக்கை உருவாகும் எனவே எந்த நிலையிலும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**3.ஒத்துணர்வு:**

ஒருவர் சோகமாக கதைக்கும் போது நாம் சிரித்துக் கொண்டிருந்தால் அவரின் மனநிலை என்ன பாடுபடும். ஒரு பிள்ளை பரீட்சையிலே சித்தியடையவில்லை என்ற கவலையை பெற்றோருடன் பகிரும் போது பெற்றோர் கடுமையானவார்த்தைகளால் பேசினால் மனம் எப்படி வேதனைப்படும். வீட்டுப்பாடம் செய்யாத மாணவன் தன் வீட்டுக் கஷ்டத்தை, சுனாமியின் கொடூரத்தை, பரிதாபமான நிலையை, தான்படும் அவஸ்தையை மனக்குழப்பத்தைக்கூறியும் ஆசிரியர் தண்டிப்பது போன்ற நிகழ்வுகள் ஆரோக்கியமற்ற அணுகுமுறைகள், இவை ஒருவரின் ஆளுமையை வெகுவாக பாதிக்கும், பாரிய மன உளச்சலை, நிம்மதியின்மை, மனவிரக்தியை மனவடுக்களை ஏற்படுத்தும்.

ஒருநபர் தன் மனக்குழப்பங்களை, பிரச்சினைகளை, இழப்புக்களால் ஏற்பட்ட மனவடுக்களை உறவுகளால் உண்டான கசப்பான உணர்வுகளை கவலையோடும் கண்ணீரோடும் வெளிப்படுத்தும் போது அதைக்கேட்பவர் இத்தனை நிகழ்வுகளும், அனுபவங்களும் தனக்கு ஏற்பட்டதாக உணர்ந்து செவிமடுக்க வேண்டும். பாதிக்கப்பட்ட நபர் பகிர்வு செய்பவை எமக்கு ஏற்பட்டவையாக உணர்ந்து செவிமடுப்பதே ஒத்துணர்தல் ஆகும்.

எனவே மீண்டும் எழுவோம் என்ற மனவைராக்கியத்துடன் விடுதலையை மனநிம்மதியை, சந்தோசத்தை, புதிய வாழ்வை, ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க, அனைவரையும் வழிப்படுத்த காலம் எம் ஒவ்வொருவரையும் அழைக்கின்றது. நாம் நல்ல உளவளத்துணையாளராய் செயற்பட்டு சமூகத்தை கட்டியெழுப்புவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்பீடு
## -ஒரு சுருக்க அறிமுகம்-

ஆதம்பாவா சஜானா பர்வின்
2015/VnCoE/Mat/T/F/3830

மதிப்பீடு என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட நோக்கங்களையும், குறிக்கோள்களையும் அடையும் எதிர்பார்ப்புடன் பாடத்திட்டம், பாடநூல். கற்றல்- கற்பித்தல் சாதனங்கள் போன்ற பலவற்றைப் பயன்படுத்தி ஆசிரியர்களும், மாணவர்களும் கற்றல்- கற்பித்தல் செயன்முறையில் ஈடுபடுகின்றனர். இந்த நோக்கங்களும் குறிக்கோள்களும் எந்த அளவு அடையப்பட்டன. அடையப்படுகின்றன. என்பதை இடையிடையே முறைமையாகப் பரிசீலிக்கும் செயன்முறையாகும்.

**மதிப்பீட்டு அணுகுமுறையின் படிமுறைகள்**

1. மதிப்பிடப்பட வேண்டிய பாடத்தின் பகுதியை நிர்ணயித்துக் கொள்ளல்
2. ஒவ்வொரு பாடத்திற்கும், வகுப்புக்கும் ஏற்ப மதிப்பீட்டு நுட்பங்கள், கருவிகளைக் தேர்ந்தெடுத்தல்.
3. மதிப்பீட்டுக் கருவிகளை வடிவமைத்து உருவாக்கல்
4. மதிப்பீட்டுக் செயல்களை வரிசைப்படுத்தல்
5. மதிப்பீட்டு செயல்முறைகளை நடைமுறைப்படுத்தல்.
6. மதிப்பீட்டு முடிவுகளை பதிவு செய்தல்
7. மதிப்பீட்டு முடிவுகளைக் கொண்டு கற்றல்சார் முடிவுகளை எடுத்தல்.

**மதிப்பீட்டு வகைகள்**

1. அமைப்பு மதிப்பீடு
   (உருவாகுநிலை மதிப்பீடு, வளர்நிலை மதிப்பீடு, இடையிட்ட மதிப்பீடு)
   கற்பித்தல் நடவடிக்கை நிகழும் போதே இடைக்கிடையே நடத்தும் மதிப்பீடாகும்.
2. கூட்டு மதிப்பீடு
   (தொகுதி நிலை, மதிப்பீடு, திரள், மதிப்பீடு, இறுதி மதிப்பீடு)
   ஒரு பாடநெறியின் முடிவில் /வருட முடிவில் தவணை முடிவில் நடாத்தப்படும் மதிப்பீடாகும்.
3. தகுதி நிலைகாண் மதிப்பீடு
   பாடசாலை/ கலைத்திட்டம் சார்பான நிர்வாகத் தேவையின் பால் பெரும்பாலும் இவ்வகை மதிப்பீடு பயன்படுத்தப்படுகிறது.

அம்மதிப்பீடு 2 வகைப்படும்.

   1. நியம மதிப்பீடு (Norm Related Evaluation)
   2. நியதிசார் மதிப்பீடு (Criterion Related Evaluation)

4. ஆய்ந்தறி மதிப்பீடு
   உருவாகு நிலைமதிப்பீடு ஒன்றினால் கண்டறிந்த தீர்க்க முடியாத வகையில் மாணவரிடத்தே நீண்ட காலமாக இருந்துவரும் கற்றல் பிரச்சினைகளை ஆராய்வதற்கு இம்மதிப்பிடு உதவும். மதிப்பீடு

1. மாணவரின் நிலை, நடத்தையில் ஏற்படும் மாற்றங்களை அளவிடுகிறது.
2. மாணவரின் தேவைகள், செயற்திறமைகளை நிறைவேற்றுகிறது.
3. ஆசிரியர் மாணவருக்கான திட்டமிடலுக்குத் துணை புரிகிறது.
4. ஆசிரியரின் கற்பித்தல் திறனை அளவிடுகிறது.
5. சுய மேம்பாட்டிற்கான முறைக்கு வழிவகுக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கல்வி வரலாறு
## -சுருக்க அறிமுகம்-

ம.விஜுஜன்
2015/VNCoE/PT/T/M/3764

இலங்கையின் கல்வி முறை நீண்ட வரலாற்றைக் கொண்டது. பௌத்த தர்மம் கொண்டுவரப்பட்டதுடன் பௌத்த சம்பிரதாயங்களுடன் கட்டியெழுப்பப்பட்டது புராதன தேசிய கல்வி முறை அந்த யுகத்தில் தேசிய கல்வியை நிறைவு செய்வதற்குரிய கல்வி முறை எனக் கூறலாம். இலங்கையின் கல்வி வரலாறானது பல பகுதிகளாகக் காணப்படுகின்றது.

1. இலங்கையின் புராதனக் காலக் கல்வி
2. போர்த்துக்கேயர் ஆட்சிக்காலக் கல்வி
3. ஒல்லாந்தர் ஆட்சிக் காலக் கல்வி
4. பிரித்தானியர் ஆட்சிக் காலக் கல்வி
5. கன்னங்கராவின் கல்வி மறுசீரமைப்பு
6. சுதந்திரத்தின் பின்னரான கல்வி வரலாறு

இவ்வாறாக இலங்கையின் கல்வி வரலாறானது பகுதிகளாக பிரித்து கூறப்பட்டுள்ளது. அதை நாம் நோக்கும் போது இலங்கையின் புராதன தேசிய கல்வி முறையானது 16ம் நூற்றாண்டு காலப்பகுதியில் நடைபெற்றது. இக்கல்வி முறையானது சமயமும், ஒழுக்கவியல் தொடர்பான கல்வி, கைத்திறன் கலைகள், கட்டடக்கலை, நீர்ப்பாசனத் துறை, வைத்தியம் ஆகியன காலத்துக்கும் பொருத்தமான பொருளாதார, சமூகத் தேவைகளை நிறைவேற்றுவதை அடிப்படையாகக் கொண்டிருந்தது. புராதன கல்வி முறையானது மூன்று பிரதான கல்வி நிறுவனங்களின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. அதாவது கிராமப்பாடசாலை, குருகுலப் பாடசாலை, பிரிவெனா என வகைப்படுத்திக் காணப்பட்டது.

தொடர்ந்து 1505 இல் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் தமது சமயத்தைப் பரப்பும் நோக்குடன் மேலைத்தேய சம்பிரதாயத்துடன் கட்டியெழுப்பப்பட்ட கல்வி முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. இங்கு கல்வி நிறுவனங்களாக பங்குப் பாடசாலைகள், கல்லூரிகள், பரிஷ் பாடசாலைகள், கொலிக் மொன்ஸ்டறி, ஆதுலர்சாலை என வகைப்படுத்தி மேற்கொண்டார்கள். இக் காலத்தில் யுத்த நிலைமைகள் அதிகமாகக் காணப்பட்டமையால் கல்வி நடவடிக்கைகள் விளைதிறனுடன் நடைமுறைப் படுத்தப்படவில்லை.

பின்பு கி.பி 1656 இல் இலங்கை வந்த ஒல்லாந்தர் இலங்கையில் கல்வியை முன்னேற்றுவதற்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அன்றிலிருந்து கட்டாயக் கல்வி முறையானது நடைமுறைக்குக்கொண்டுவரப்பட்டது. இக்காலத்திலே காணப்பட்ட கல்வி நிறுவனங்களாக பரிஷ்பாடசாலைகள், பொலிஜ் மிஷனரி, அநாதைப் பாடசாலை, நோபல் பாடசாலைகள் போன்றன காணப்பட்டன.

பின்பு 1796 இல் இலங்கை வந்த பிரித்தானியர் கல்வியை 04 பிரதான கட்டங்களாகப் பிரித்தனர்.

1801 இலிருந்து 1832 வரை
1832 இலிருந்து 1865 வரை
1865 இலிருந்த 1931 வரை
1931 இலிருந்து 1947 வரை

இவர்கள் பரிஷ் பாடசாலைகள், கொழும்பு அக்கடமி, அநாதைப் பாடசாலைகள் போன்றவற்றை நிறுவி கல்விப்பணியை மேற்கொண்டனர். இவர்களது காலத்தில் 1865 மோர்கன் குழுவின் ஆலோசனைகள் போன்றன முன்வைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னங்கராவின் சீர்திருத்த ஆலோசனைகளில், இலவசக் கல்வி அறிமுகம், தாய்மொழிக் கல்வி, கட்டாயக் கல்வி மத்திய மகாவித்தியாலங்கள் நிறுவுதல் போன்ற பல வகையான நன்மைகள் இலங்கை கல்வி வரலாற்றிலே இடம் பெற்றது. தொடர்ந்து சுதந்திரத்தின் பின்னரான கல்வியை நோக்கினால், 1948 இல் இலங்கை சுதந்திரமடைந்தது என்பது யாம் அறிந்த ஒன்றே. அக்காலத்தில் இலங்கையின் கல்வித்துறையில் சில முக்கியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதாவது

1980 கல்வி வெள்ளையறிக்கை

பாடசாலை கலைத்திட்டம் தேசிய மயமாக்கப்பட்டது.

1961 உதவி பெறும் பாடசாலை அரசின் கீழ் கொண்டு வரப்பட்டது.

1964 இலங்கையின் எல்லா பாகத்திலும் மகாவித்தியாலயம் நிறுவப்பட்டது.

1992 தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை

2003 மனிதவிருத்தி எதிர்கால நோக்கு பற்றிய தேசிய ஆணைக்குழு அறிக்கை

இவ்வாறாக ஆரம்பகாலத்திலே சிறு விதைபோன்று காணப்பட்ட இலங்கையின் கல்வி முறையானது இன்று பெரு விருட்சமாகி பல துறைகளிலும் பல மடங்காக பெரு விருட்சமாக வியாபித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரும் கணினியும்

சி.டிசாந்த்
2015/VNCoE/PT/T/F/3794

"ஆசானின் பணியில் அறிவைப் பெற்றிருப்பதை விட
ஆராய்ச்சியில் திளைத்து அனுபவத்தைப் பெற்றிருப்பதே ஆசானுக்கு சிறப்பு"

இன்றைய நவீன உலகத்தின் போக்கிற்கிணங்க தொழில்நுட்பத்துறைகள் பல்கிப் பெருகி வளர்ச்சியடைந்து வந்துள்ளதனை ஆசிரியர்களாகிய நாம் அறிந்துள்ளோம். அந்த வகையில் ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாட்டுக்கு மெருகூட்டியாகக் காணப்படும் கருவிகளில் ஒன்றாக கணினி காணப்படுகின்றது. கணினி என்பது தகவல்களைப் பரிமாறிக் கொள்கின்ற சாதனமாகக் காணப்படுகின்றது. இலங்கைப் பாடசாலைகளில் கல்வி முறைமையில் கணினிக் கல்வி 1983 ஆம் ஆண்டிலேயே தொடங்கிவிட்டது. எனினும் கல்வி அமைச்சின் நோக்கில் தகவல் தொழினுட்பத்தின் விருத்தியானது ஏனைய நாடுகளை விட இலங்கையில் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. ஒரு நாட்டின் வளர்ச்சி தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி மட்டத்திலேயே தங்கியுள்ளது. எனவே எமது நாடு வளர்ச்சியடைய வேண்டுமாயின் எல்லா சமூகமும் தொழிநுட்ப அறிவைப் பெற்றிருக்க வேண்டும். இந் நோக்கத்தை அடைந்து கொள்ள வேண்டுமாயின் பாடசாலையிலிருந்தே கணினிக் கல்வி ஆரம்பிக்கப்பட வேண்டும்.

1983 அம் ஆண்டுக்குப் பின்னர் ஆசிரிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் கணினி வள நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு இன்று நாடளாவிய ரீதியில் 100 க்கும் மேற்பட்ட நிலையங்கள் இயங்குகின்றன. இவை பாடசாலை மாணவர்களுக்குப் போதுமான அளவில் உதவுதாக இல்லை. இதனால் இன்று பாடசாலைகளில் புதிய கல்வி சீர்திருத்தத்தின் படி பயிற்சிகள் இடம்பெற்று வருகின்றன. அத்தோடு இன்று வசதி வாய்ப்பிலுள்ள பாடசாலைகளில் கணினி வகுப்புக்கள் தனியார் நிறுவனங்கள் போன்று மாணவரின் நிதியுதவியுடன் நடைபெற்று வருகின்றன. இது எவ்வாறு இருப்பினும் இந்தக் கணினியைக் கற்பிப்பதற்கு ஆசிரியருக்கு கணினி அறிவு அவசியமாகும். மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும் கருவிகளில் ஒன்றாகிய கணினி பற்றி பூரண அறிவு, அனுபவம் ஆகிய இரு திறன்களையும் ஆசிரியர் கொண்டிருக்க வேண்டும்.

கணினி மயப்படுத்தப்பட்ட இன்றைய நவீன உலகிலே பல்வேறுப்பட்ட நிலையில் எமது சமூகம் முன்னோக்கிச் செல்கின்றது. அதாவது ஏடும் கையுமாக இருந்த மனிதன் இன்று கணினியிலேயே காலத்தைக் கழிக்கின்றான். குறிப்பாக "புத்தகப்பூச்சியாக கிணற்றுத் தவளையாக" உலக நடப்புக்களை அறியாது இருந்த மனிதனின் வாழ்க்கை மலையேறிவிட்டது என்றே கூறலாம். இன்றையமனிதனின் வாழ்வு கணினியிலேயே தங்கியுள்ளது. நீரின் குமிழ் போல் நிலையற்றதாகிய வாழ்விலே நிலைபேறுள்ளது கணினி என்று கூறுமளவிற்கு கணினியுடன் மனிதன் பின்னிப்பிணைக்கப்பட்டுள்ளான். இவ்வாறிருக்கையில் ஆசிரியராகப் பாடசாலைக்கு நுழைய இருக்கும் நாம் கணினியின் அறிவைப் பெற்றிருக்க வேண்டியது இன்றியமையாத ஒரு விடயமாகும்.

இன்று பாடசாலையை எடுத்து நோக்குவோமானால் ஒரு சில பின்தங்கிய கிராமப்புறங்களில் அமைந்துள்ள பாடசாலையை தவிர ஏனைய பாடசாலைகளில் கணினிக் கல்வி ஒரு முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது. விரும்பியோ, விரும்பாமலோ ஒவ்வொரு மாணவனும் கணினியைப் பயில வேண்டிய நிலைக்கு நிர்பந்திக்கப்பட்டுள்ளான். அநேகமான பாடசாலைகளில் ஒரு பிள்ளை 5ம் தரத்தைக் கடக்க முன்னரே கணினிக்கு கல்வியைக் கற்கத் தொடங்கி விடுகின்றது. இவ்வாறான நிலையில் ஆசிரியர்களாகிய நாம் பாடசாலைக்குள் நுழையும் போது எமது பாடப்பிரிவில் மட்டும் அறிவுடையவர்களாகவோ, திறனுடையராகவோ செல்வது எமது ஆசிரியப் பணிக்கு பொருத்தமுடையது அன்று.

ஏனெனில் கணினி மயப்படுத்தப்பட்ட இன்றைய உலகில் ஒவ்வொரு இளைஞனின் உள்ளத்திலும், நூற்கல்வியை விட கணினியாகிய பிரயோகக் கல்வியே ஆழப்பதிந்துள்ளது. இதனால் ஒவ்வொரு மாணவர் நெஞ்சங்களும் பல்வேறுப்பட்ட விடயங்களை ஆசிரியரிடமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய முற்படுகின்றது. இதற்கு ஆசிரியர் ஒரு வழிகாட்டியாகவும், தேர்ச்சியடையுவராகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறு இருந்தால்தான் மாணவர்களின் ஆராய்ச்சி பூர்வமான வினாக்களுக்கு விடையளிக்க முடியும். மாறாக ஆசிரியர் புத்தகப் பூச்சியாக மட்டும் இருப்பாரானால் மாணவர்கள் மத்தியிலும் சரி, ஆசிரியர்கள் மத்தியிலும் சரி, பாடசாலை சமூகத்திலும் சரி தன்மதிப்பினைப் பெற முடியாது.

அடுத்து ஓர் இலக்கை நாம் அடைய வேண்டுமாயின் பல்வேறுப்பட்ட படிகளை ஒவ்வொரு குறிக்கோள்களினூடாகத் தாண்டிச் செல்கின்றோம். அதே போல வளர்ந்து வரும் இவ்வுலகிலும் பல்வேறு விதமான படிநிலைகளைப் படிப்படியாகத் தாண்டியே கணினி உச்ச நிலை பெற்றுள்ளது. இவ்வாறான இச்சூழலில் மாணவர்கள் சங்கமித்து இருப்பதனால் கணினி பற்றிய அறிவும், அனுபவமும் இருக்கும், ஆனால் தற்போதைய ஆசிரியருக்கு கணினி பற்றிய பூரண அறிவு இல்லாமல் இருக்கக் கூடும், ஆகவே இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்து மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமான, கவர்ச்சிகரமான கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு கணினி அறிவு இன்றியமையாதது.

ஆசிரியர் ஒரு வகுப்பறையில் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற போது அதற்கு மீத்திறனுடைய மாணவர்கள், மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு கருத்து நிலைப்படுத்திய ஒரு விடயத்தை காட்சி நிலைக்குக் கொண்டு செல்வது சிரமமாகக் காணப்படும். இச்சந்தர்ப்பத்தில் கணினியைப் பயன்படுத்தி இம்மாணவருக்கு இலகுவான முறையில் ஒரு விடயத்தைக் காட்சிப்படுத்திக் கொள்ள முடியும். ஆகவே கற்றலை இலகுபடுத்துவதற்கு ஆசிரியருக்கு கணினி அறிவு அவசியமாகும்.

வளர்ந்து வரும் இவ்வுலகில் பல்வேறு விதமான கண்டுபிடிப்புக்கள் நிமிடத்திற்கு நிமிடம் மின்னல் வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே இவற்றை அடுத்த கணமே ஆசிரியர் அறிந்து செயற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். இவர் இதனை பத்திரிகை போன்ற தொடர்பாடல் சாதனங்களால் மட்டும் அறிந்து கொள்ள முடியாது. எனவே கணினி அறிவானது பாரிய பங்களிப்பை ஆற்றுகின்றது. ஆகவே கணினி பற்றிய அறிவை நாம் பூரணமாகப் பூர்த்தி செய்ய வேண்டிய ஓர் கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் என்பதுடன் காலத்தின் கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோர் என்பதுடன் காலத்தின் கட்டளையாகவும் மாறியுள்ளது என்றால் அது மிகையாகாது.

மேலும் ஆசிரியர் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் போது கணினியை பயன்படுத்துவதனால் வினைத்திறனுடைய மாணவர்களையும், விளைதிறன் மிக்க மாணவர்களையும் உருவாக்கிக் கொள்ளலாம். அத்துடன் மாணவர்களிடத்தில் சிறந்த நடத்தை மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள முடியும் அதாவது

1. சிறந்த ஆளுமைத் திறனுடைய மாணவர்களை உருவாக்க முடியும். கணினிமயப்படுத்தப்பட்ட இன்றைய உலகின் போக்கிற்கு அமைய தம்மை திசை திருப்பிக் கொள்வார்கள்
2. தகவல் தொழினுட்ப தொடர்பாடல் சாதனங்களின் பயன்பாடு பற்றியும், கையாளும் திறன் பற்றியும் பூரண அறிவைப் பெற்றுக் கொள்வார்கள்.
3. உயர்கல்வி பெறும் வாய்ப்பு மாணவர் மத்தியில் அதிகரிக்கும்.
4. பிறநாடுகளுக்குச்சென்று கல்வியைத் தொடர வாய்ப்பளிக்கின்றது.
5. வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கின்றது.
6. ஒட்டு மொத்தமாகக் கூறப்போனால் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் கணினியானது ஊன்று கோல் போல துணைபுரிகின்றது.

மனிதனுடைய ஞாபக சக்தியைக் கூட கணினி கொள்வனவு செய்து விட்டது, ஏனெனில் எந்தவொரு விடயத்தினையும் தானே பகுத்து ஆராய்ந்து மனனஞ் செய்து, ஞாபகப்படுத்தி இன்று கணினிமயமாக்கப்பட்டமையினால் எந்தவொரு சிறிய விடயத்திற்கும் கணினியையே தட்டிப்புரட்ட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான். குறிப்பாகச் சொல்லப்போனால் கணினிக் கள்வன் மனித இதயங்களில் குடி கொண்டு நாளும் பொழுதும் அபிவிருத்தி அடைகின்றான். ஆகவே ஆசிரியராகிய எமது ஒவ்வொருவரது உள்ளங்களிலும் இந்தக் கணினிக் கல்வி கரை புரண்டோட வேண்டும். இதற்கு நாம், "முயற்சி திருவினை ஆக்கும்", முற்சியுடையார் இகழ்ச்சி அடையார்" என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க முயன்று முன்னேறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீன் பியாஜேயின் அறிவு வளர்ச்சிக் கொள்கையும் வகுப்பறைப் பிரயோகமும்

A.W.றுக்கையா
2015/VNCoE/Sci/T/F/3798

கற்றல் கற்பித்தல் செயன்முறையில் மாணவர்களின் அறிவு வளர்ச்சி என்பது பிரதான இடத்தை வகிக்கின்றது. குறிப்பாக எந்தவொரு விடயத்தையும் வெற்றிகரமாக முன்னெடுத்து செல்வதற்கு அறிவு என்பது இன்றியமையாததொன்றாக காணப்படுகின்றது. பொதுவாக அறிவு வளர்ச்சிப் படிகளில் நுண்மதி எழுதுதல் 130ற்கு மேலாக இல்லாது இருக்குமிடத்து அவர்கள் மீத்திறன் கொண்டவர்களாக கருதப்படுவதில்லை. இவ்வாறு கணிப்பீடு அறிவுப்புல விருத்தி தொடர்பாக பியாஜேயின் ஆய்வுக்கு அல்பிரட்பீனே என்பவரின் நுண்ணறிவு சோதனை அடிப்படையாக அமைந்தது எனலாம். சோதனைக்குரிய வினாக்களில் தவறாக அளிக்கப்பட்ட விடைகளைப் பரிசீலித்துப் பியாஜே சமவயதினரிடம் அவதானித்தார். மரபு வழி அடிப்படையிலான இத்தகைய அறிவு வளர்ச்சி ஒருவரின் உள்ளார்ந்த அறிவுத் திறன்களை அளவிடும் போது தோன்றும் வேறுபட்ட முறையில் அறிவு வளர்ச்சியை நோக்குதல் வகுப்பறை கற்றல் கற்பித்தலை முன்னெடுத்து செல்ல உறுதுணையாக அமையும் என்பதை தனது அறிவாற்றல் விருத்தி கொள்கை மூலம் பியாஜே உறுதிப்படுத்தினார்.

ஆசிரியர் மாணவர்களுக்கிடையிலான இணைப்புப் பாலமாக அறிவு வளர்ச்சி பற்றி அடிப்படைத்திறன்கள் காணப்படுகின்றன. அத்தோடு ஆசிரியர்கள், மாணவர்களின் பன்முக நுண்மதி தொடர்பான அடிப்படைகளை அறிந்து செயற்படுவதால் தமது கற்பித்தலை மேம்பாடடையச் செய்ய முடியும். அத்தோடு வயது மாற்றத்திற்கேற்ப அறிவின் அமைப்பு மாறுபடுவதாக பியாஜே கூறுவதற்கேற்ப வெவ்வேறு பருவங்களில் வெவ்வேறு கலைத்திட்டங்களும், கற்பித்தல் நுட்ப முறைகளும் பயன்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். மாணவர்களின் அடைவுமட்டம் தொடர்பாக பியாஜே குறிப்பிடும் போது அறிவு, திறன் மனப்பாங்கு, என்பவற்றினால் ஒருவரில் ஏற்படக்கூடியதுமான மாற்றத்தை வகுப்பறையில் முன்னெடுத்து செல்ல வேண்டுமெனவும் வரையறை செய்கின்றார். அத்தோடு நல்லறிவு பெறுதல், நற்பழக்கவழக்கங்கள், மொழியறிவு வளர்ச்சி போன்ற மனித நடத்தைக் கோலங்களை விருத்தி செய்ய கூடியவராகவும் ஆசிரியர் வகுப்பறை செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டுமெனவும் தனது கருத்து மூலம் பியாஜே தெளிவுபடுத்தினார்.

எனவே பியாஜேயின் அறிவு வளர்ச்சிக் கொள்கை கோட்பாடானது மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் அதிகமுக்கியத்துவத்தை எடுத்து காட்டுகிறது. வகுப்பறை கற்றல்- கற்பித்தலுக்கு பியாஜேயின் அறிவு வளர்ச்சி கொள்கையானது பின்வரும் சந்தர்ப்பங்களுக்கு பயன்படுத்தப்படுவதை அவதானிக்க முடியும்.

1. பாடசாலை மட்டக்கலைத்திட்டத்தை தயாரிப்பதற்கு
2. உள வளர்ச்சிப் படிகளின் வயதிற்கேற்ற கற்றல் கற்பித்தலை விருத்தி செய்வதற்கு.
3. பொது நோக்கங்களையும், குறிக்கோள்களையும் எய்துவதற்கு
4. பொருத்தமான கற்றல்-கற்பித்தல் துணைச் சாதனங்களைப் பயன்படுத்துவதற்கு
5. முகாமைத்துவ மேம்பாட்டினை விருத்தி செய்வதற்கு.
6. வகுப்பறையை மகிழ்ச்சிகரமான கற்றல்-கற்பித்தல் சூழலாக மாற்றுவதற்கு
7. விரைவாக மாறிவரும் உலகிற்கேற்ப மாணவர்களை தயார் படுத்துவதற்கு.
8. பொருத்தமான கற்றல் நுட்ப முறைகளை பின்பற்றுவதற்கு
9. சமூக கட்டமைப்பினை விருத்தி செய்வதற்கு.

மேற்கூறப்பட்ட விடயங்களை வைத்து பார்க்கும் போது பியாஜேயின் அறிவு வளர்ச்சி கொள்கையின் மூலம் எதிர்பார்க்கின்ற நடத்தை மாற்றத்தை வகுப்பறையில் ஏற்படுத்த முடியும் என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது. எனவே வகுப்பறைச் செயற்பாடுகளை பாடசாலையில் முன்னெடுத்து செல்வதற்கு பியாஜேயின் அறிவு வளர்ச்சி கொள்கையானது பெரும் பக்கபலமாக ஆசிரியருக்கு உதவும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A See through on the Performance of Candidates Obtained at the G.C.E O/L, A/L Examinations at Provincial and District Level.

**Mr.S.Kuhananthan**
**Lecturer, VNCoE.**

The G.C.E (O/L) Examination-the first milestone, in school education, is held at the end of Grade 11 as a subject examination. This examination is based on the syllabi of Grade 10 and 11. Applicants have the option of sitting subjects which comprises 6 compulsory subjects and 3 subjects from the three subject groups.

**The Table given below indicates the Performance of those candidates who had sat the G.C.E (O/L) Examination from 2011 up to 2016 as their first attempt is shown and Ranked Provincialvise.**

| Province | YEAR | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
| Northern | 9 | 8 | 6 | 9 | 9 | 9 |
| Eastern | 6 | 5 | 5 | 5 | 8 | 8 |
| Sabaragamuwa | 4 | 4 | 4 | 4 | 3 | 3 |
| Western | 1 | 1 | 1 | 2 | 2 | 2 |
| Sothern | 2 | 3 | 3 | 1 | 1 | 1 |
| UVA | 8 | 9 | 8 | 8 | 7 | 6 |
| Central | 5 | 6 | 7 | 6 | 5 | 5 |
| North Western | 3 | 2 | 2 | 3 | 4 | 4 |
| North Central | 7 | 7 | 9 | 7 | 6 | 7 |

The performances in the **Northern Province** in comparison with all other Provinces occupies, the **last position** while the **Sothern,** remaining constant throughout the consecutive 3 years shining as the **first.**

**The following table denotes the number of candidates qualified for G.C.E (A/L) from 2011 to 2016 in the Northern Province and all Island- wide given in percentage. Here the first attempt is duly considered.**

| Year | Northern Province Qualified for G.C.E. A/L | All Islands Qualified for G.C.E. A/L |
|---|---|---|
| 2011 | 54.26% | 60.80% |
| 2012 | 59.99% | 64.74% |
| 2013 | 65.33% | 66.67% |
| 2014 | 64.19% | 69.02% |
| 2015 | 60.38% | 69.33% |
| 2016 | 60.66% | 69.94% |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The process of obtaining success in the G.C.E (O/L) Examination in the **Northern Province** though appears to be in its **ups and downs** the all **Island wide performance** doesn't indicate no slowing down but shows a **gradual increase yearly** in percentage.

**About 40%** of the Students sitting for G.C.E (O/L) examination yearly **do not get to G.C.E (A/L)**, a Problem the remains **unsolved till to date** in the Northern Province.

**Taking into account of those successful candidates in the G.C.E (O/L) Examination, the following table indicates the percentage of Students successfully completing 3 subjects in A/L Examination Island wide in the years 2012 to 2016.**

| Year | All Candidates | Number of sat | Passed in 3 Subjects | |
|---|---|---|---|---|
| | | | Number | % |
| 2012 | 234069 | 207910 | 128809 | 61.95 |
| 2015 | 277395 | 241629 | 140993 | 58.35 |
| 2014 | 290517 | 247376 | 149489 | 60.43 |
| 2015 | 302501 | 255191 | 155447 | 60.91 |
| 2016 | 310613 | 258193 | 160520 | 62.17 |

**An analysis of the performance of the candidates successfully completing 3 subjects in A/L at the Provincial level, from 2011 to 2016 is given below. Position indicated in Ranks.**

| Province | 2012 | | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | % | Rank | % | Rank | % | Rank | % | Rank | % | Rank |
| Northern | 61.12 | 7 | 62.23 | 1 | 61.71 | 2 | 62.43 | 3 | 61.87 | 5 |
| Eastern | 58.22 | 9 | 58.35 | 5 | 57.31 | 9 | 57.28 | 9 | 57.17 | 9 |
| Sabaragamuwa | 64.89 | 1 | 61.66 | 2 | 64.63 | 1 | 64 | 1 | 66.46 | 1 |
| Western | 61.51 | 6 | 56.81 | 7 | 59 | 7 | 60.99 | 5 | 62.72 | 3 |
| Sothern | 63.85 | 2 | 60.9 | 3 | 62.91 | 2 | 62.63 | 2 | 64.27 | 2 |
| UVA | 63.57 | 3 | 58.99 | 4 | 61.65 | 4 | 61.6 | 4 | 62.56 | 4 |
| Central | 60.23 | 8 | 56.25 | 8 | 58.94 | 8 | 59.65 | 6 | 61.02 | 7 |
| North westtern | 61.94 | 4 | 56.94 | 6 | 59.74 | 5 | 59.62 | 7 | 61.14 | 6 |
| North Central | 61.92 | 5 | 56.21 | 9 | 59.23 | 6 | 58.82 | 8 | 58.37 | 8 |
| ISLAND | 61.95 | | 58.35 | | 60.43 | | 60.91 | | 62.17 | |

In **Sabaragamuwa Province** the performance of the students remains constant in its rank as first **continually for the last 3 years**; where else the **Northern Province Ranked the first in the year 2013**, and a slow-down is noted, indicating the gradual backward move occupying the **5th position in year 2016**. A check up on this decline will prove fruitful.

**The performance of candidates in the Northern Province at the G.C.E. A/L Examination with 3 passes is analysed at District levels and Ranked.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| District | 2013 | | 2014 | | 2015 | | 2016 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | % | Rank | % | Rank | % | Rank | % | Rank |
| Vavuniya | 61.99 | 3 | 62.14 | 7 | 60.53 | 17 | 57.34 | 23 |
| Jaffna | 61.24 | 9 | 61.37 | 10 | 63.64 | 3 | 63.27 | 10 |
| Mannar | 63.82 | 2 | 59.68 | 17 | 62.52 | 7 | 62.52 | 11 |
| Mullaitivu | 62.46 | 4 | 61.41 | 9 | 59.06 | 20 | 60.62 | 18 |
| Kilinochchi | 67.41 | 1 | 66.04 | 1 | 60.7 | 13 | 61.12 | 16 |

In the year 2013, all districts in the NP were occupying the 1st ,2nd, 3rd, 4th and 9th position but in the year 2016, a gradual slow down is apparent as the position is push downwards to 10th, 16th,18th and 23rd rankedvise.

In the analyses of the data obtained for the past 4 years, clearly shows about 40% of the candidates are unable to proceed further with their studies so as to follow up, in the G.C.E. A/L classes.

**Summary**

In going through the above facts as indicated in the tables could be assign to negligence on the part of teachers in putting through the subjects in an understandable manner and student's incapability to grace what is taught.

In considering the performances of the Northern Province it remains the last, among all other provinces in the island, in its performance at G.C.E. O/L examination. Further about 35% of the candidates in the G.C.E. A/L classes are faced with difficulty of obtaining 3 passes at one sitting in the provincial level. There is an increase in the failure of the attainment in the percentage at the G.C.E. O/L, A/L classes as the students are found in capable of completing their studies in comparison with the other Provinces in Srilanka.

This may be attributed to varies other reasons. But it deems essentials the higher authorities in the educational field should devote them self in finding an efficient solution by which this problem. The slowdown could be eliminated and a better attainment level in the educational field restored.

**Reference :**

**G.C.E. O/L,A/L Performance of the candidates, National Evaluation and Testing Service, Department of Examination.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வவுனியா கல்வியியற் கல்லூரியின்**
**25ஆவது ஆண்டு நிறைவு விழாவும்**
**வித்தியா தீபமும் சிறப்புற**
**எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்**

# மல்ரிவிசன் அச்சுக்கலையகம்

இல: 77, 1ம் குறுக்குத்தெரு,
வவுனியா.
தொ.பே: 024 - 2223669
மின்னஞ்சல்: multivition@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா கல்வியியற் கல்லூரியின்
25ஆவது ஆண்டு நிறைவு விழாவும்
வித்தியா தீபமும் சிறப்புற
எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்

# தரங்க ஸ்ரோர்ஸ்

சில்லறை விற்பனை
முகவர்

இல: 54,
சந்தை சுற்றுவட்ட வீதி,
வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வவுனியா கல்வியியற் கல்லூரியின் 25ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வித்தியா தீபமும் சிறப்புற எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்**

# வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ/து)

**பொதிமண்டப வீதி, வவுனியா.**

**விசேட விற்பனை நிலையங்கள்**

- மெகா கோப்சிற்றி
- வன்னிக் கோப்சிற்றி
- மினி கோப்சிற்றி நிலையங்கள்
- கலாசார மண்டப வசதி
- வாகன வாடகை சேவை, அரிசி ஆலை
- எரிபொருள் விற்பனை முகவர்
- விவசாய உற்பத்திக் கொள்வனவு (நெல், உழுந்து. எள்ளு)

**உற்பத்திப் பொருட்கள்**

- சுத்தமான நல்லெண்ணெய்
- கையால் வறுத்த சுத்தமான அரிசிமா
- பொதி செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்கள்

**எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் நுகர்ச்சிப் பொருட்களையும் உற்பத்திப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளலாம்.**

**கிராமிய வங்கிச் சேவைகள்**

- சிறுவர் சேமிப்பு - 5% வட்டி
- முதியோர் சேமிப்பு - 5.5% வட்டி
- சாதாரண சேமிப்பு - 4.5% வட்டி
- நிலையான வைப்பு (1 வருடத்திற்கு) - 12.5% வட்டி
- நிலையான வைப்பு ரூபா 500,000/- இற்கு மேற்பட்ட 05 ஆண்டு காலத்திற்கு மேல்- 15% வட்டி
- சாதாரண கடன் வழங்கல்
- விவசாய கடன் வழங்கல்
- வாழ்வாதாரக்கடன் வழங்கல் - 4% வட்டி
- மின்சாரக்கட்டணம் இலகுவான முறையில் செலுத்துதல்
- வாகனங்களுக்கான காப்புறுதியினை மேற்கொள்ளல்
- தங்க நகை அடைவுச் சேவை - 1.5%

**"மேற்படி சேவைகளைப் பெற்று கூட்டுறவை வளப்படுத்தி தாங்களும் பயன் பெறுக"**

**தொ.பே: 024 – 2222384, 024 – 2222784**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா கல்வியியற் கல்லூரியின்
25ஆவது ஆண்டு நிறைவு விழாவும்
வித்தியா தீபமும் சிறப்புற
எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்

# அம்மன் ரேடர்ஸ்

தரமான மரக்கறி வகைகளை
இங்கே பெற்றுக் கொள்ளலாம்.

மன்னார் வீதி, குருமன்காடு
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா கல்வியியற் கல்லூரியின்
25ஆவது ஆண்டு நிறைவு விழாவும்
வித்தியா தீபமும் சிறப்புற
எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்

# மதார் மொஹிதீன் சன்ஸ்

சகல விதமான பான்சி பொருட்கள்,
இலத்திரனியல் சாதனங்கள்,
வீட்டு உபயோக பொருட்கள்
மற்றும் பரிசுப்பொருட்களை
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இல: 178, பசார் வீதி, வவுனியா.
தொ.பே: 024 222412, 071 6903319
தொ.நகல்: 024 2221103
மின்னஞ்சல்: mms2222412@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MASTHAN TRADERS

## Inland Railside Depot

Dealer: Ceylon Petroleum Corporation

No:15, Goodshed Road, Vavuniya.| TP: 024 -2221123, 2221140




# TRANSPORT AGENT

## (Vavuniya - Colombo)

110, Kandasamy Kovil Rd, Vavuniya. | TP: 024 - 2222738

140, Dam Street, Colombo - 12 | TP: 011 2331926

# LANKA FILLING STATIONS

## Ceypetco Dealer

- Kandy Road, Irattaiperiyakulam, Vavuniya. Tel: 024-2224739
- Kandy Road, Ramanoor, Puliyankulam, Tel: 024-4925546
- Andiyapuliyankulam Junction, Mannar Road, Cheddikulam. Tel: 024-4924807
- Anuradhapura Road, Minuwangatte. Tel: 037-4936314

akaram printers - 024 222 3772


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org